அகிலத்திரட்டு

உரைநடை



அகிலத்திரட்டு

ஆய்வு - உரைநடை நூல்

கவிஞர் சுரதா
அவர்களுக்கு
அன்புடன்
பொன். தெ. தர்மராசன்
15-9-2001.

ஆக்கியோன்

புலவர். பொன். தெ. தர்மராசன்,

M.A., M.Phil., B.Ed.,

அச்சிட்டோர்

நியூ வீனஸ் பிரிண்டர்ஸ்,

30, ராஜாபாதர் தெரு, தி. நகர், சென்னை 17

வெளியிடுவோர்:

பொன் பதிப்பகம்

2 எம்.ஜி.ஆர். தெரு, பெரியார் பாதை,

சூளைமேடு, சென்னை-600 094

மதிப்புரை

புலவர் பொன். தெ. தர்மராஜன் அவர்கள் தன் சிந்தனையென்னும் சிறந்ததோட்டத்தை அகழ்ந்து, பக்திப்பயிர் வளர்த்து, அதில் மின்னிமிளிரும் வாசனைமிகுந்த வண்ண மலர்களை அழகுமிகு ஆரமாகத்தொடுத்து ஆன்மீக உலகத்திற்குக் கொடுத்து அய்யாவின் தளிர்பூங்கழுத்தை அலங்கரித்திருக்கிறார்கள். அது பக்தி மணம்பரப்பும் பாயிரமாக பலமொழிகளில் பிறந்து இந்தப்பாருலக மக்களுக்கு பயன்பட வேண்டுமென அய்யாவின் பொன்னடியைப் பணிகிறேன்.

பத்தாம் அவதார வித்தகனாகிய அய்யா வைகுண்டப்பரம் பொருளின் வானளாவிய வரலாற்றுப் பெருமைகளை எடுத்தியம்பும் அகிலத்திரட்டு அம்மானை யென்னும் ஆகமம், மண்ணகத்து மனித முயற்சியால் எழுதப்பட்டதல்ல. விண்ணகத்து வேதநாயகனால் அருளப்பட்டது.

பிரபஞ்சத்தின் துவக்கம் முதல் எட்டு யுகச் செய்திகளையும் வெட்ட வெளிச்சமாகக் கூறும் அகிலத்திரட்டு அம்மானையென்னும் அருட்காவியத்தில் எழுதப்பட்ட எழுத்துக்குள்ளேயே எழுதப்படாத இன்னும் பலகோடி கருத்துப் புதயல்களைக் காணலாம். ஒப்பு,உவமை சொல்ல இயலாத அந்த அமுத அருட்புனலை புலவர் தெ.தர்மராஜன் அவர்கள் பயபக்தியோடு அள்ளிப் பருகியிருக்கிறார்கள்.

புலவர் தெ. தர்மராஜன் அவர்களின் இந்த அகண்ட ஆராய்ச்சிப்பணிக்கு அவருடைய ஆக்கபூர்வமான உழைப்பும் இதிகாச, புராண சரித்திர புலமைகளும் அய்யாவழி ஆன்மீகப் பேரறிவாளர்களின் பேட்டியும், எல்லாவற்றிற்கும் மேலாகவல்லாத்தான் வைகுண்டப்பரம்பொருளின் பேரருளும் அணிகலமாகத் திகழ்வதை இந்நூலில் ஆங்காங்கே ஆழமாக உணரமுடிகிறது.

அதுமட்டுமல்லாமல் கற்றுணர்ந்த ஆன்றோர்களால் பந்நூற்சாரமென பாராட்டுமளவுக்கு பரிணமிக்கப் பட்டிருக்கும் இந்த அகிலத்திரட்டு ஆய்வுநூல் பாமரர்களும் தங்கு தடையின்றி மடை திறந்து பாயும் அமுதமென அள்ளிப்பருகும் வண்ணம் தொடக்கம் முதல் நிறைவுரை பக்திப்பரவசமூட்டும் அமுதசுரபியாக அமைவதற்கு ஏற்ற வண்ணம் அவருடைய எழுதுகோல் முனையில் நின்று கன்னித் தமிழன்னை நர்த்தனம் புரிந்திருக்கிறாள் என்றால் மிகையாகாது.

அவர் இந்நூலில் குறிப்பிட்டுள்ள சில கருத்துக்களில் அடியேனுக்கு உடன்பாடில்லை யென்றாலும், நிறைவான சீரிய பல கருத்துக் குவியல்களைக் கண்டு வியந்ததினால் உடன்பாடற்ற அக்கருத்துக்களை சூரியனின் நிர்வாணம் போல் நினைக்கத் தோன்றுகிறது. இவர் இந்நூல் போல இன்னும் தொடர்ந்து பல நூல்களை அய்யாவழிக்கும், தமிழ் மொழிக்கும் தந்து நற்றொண்டு புரிய என்றென்றும் அவருக்கு அய்யா அருள் பாலிக்க வேண்டுமென நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அன்புடன்

ஆ. மணிபாரதி.

ஆசிரியர்–யுகமுழக்கம்.

முன்னுரை

கிறித்துவர்களின் வேத நூல் பைபிள். இசுலாமியரின் வேதநூல் குரான். வடமொழியில் ரிக், யஜூர், சாம, அதர்வண நூல்களும் கண்ணன் உரைத்த பகவத் கீதையும் இந்து மத வேத நூல்களாக கருதப்பெறுகின்றன. தமிழில் உள்ள வேத நூல்களுள் ஒன்று அகிலத்திரட்டு என்பதாகும்.

கொல்லம் ஆண்டு 984, அதாவது கி.பி. 1809–ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 'பூவண்டன் தோப்பு' என அழைக்கப்பெற்ற இன்றைய 'சாமித்தோப்பு' என்னும் ஊரில் தோன்றியவர் முடிசூடும் பெருமாள் என்பவர். இவர் முத்துக்குட்டிசுவாமி என்றும், வைகுண்ட சுவாமி என்றும் பின்னர் அழைக்கப்பெற்றார்.

இவர் தமது இருபத்து நான்காம் வயதில் திருச்செந்தூர் கடலினுள் சென்று மூன்று நாள் தங்கினார். முப்பரம் பொருளினால் விஞ்சை பெற்று கடவுளின் தோற்றமாய் வைகுண்டர் என வந்தார் என்று கருதப்பெறுகின்றது.

இவ்வாறு தோன்றிய வைகுண்டர் கூற, அவருடைய சீடர்களில் ஒருவராகிய அரிகோபாலன் என்பவர் எழுதிய நூலே 'அகிலத்திரட்டு' என்பதாகும்.

அகிலம் பற்றிய பல ஊழிக்காலங்களின் வரலாற்றையும், உலகமக்கள் அனைவரும் ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கான வழிமுறைகளையும் கூறுவதால் இந்நூல் 'அகிலத்திரட்டு' எனப் பெற்றது.

தேவர் உலகில் திருமால் இலட்சுமியிடம் கூறுவதுபோல் அமைந்து, பல இடங்களில் அம்மானை என்ற சொல் கொண்டு செய்யுளடிகள் முடிவுறுகின்றன. இதனால் இந்நூல் 'அகிலத் திரட்டு' என்றும் கூறப்பெறுகிறது.

அகிலத் திரட்டில் உலகில் பல்வேறு யுகங்களில் திருமால் எடுத்த அவதார வரலாறுகள், இந்த யுகத்தில் திருமால் வைகுண்டராகப் பிறப்பதற்கு முன்னால் பூவுலகத்திலும், தேவர் உலகத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள், வைகுண்டரின் மானிட வரலாறு, கலி எனப்படும் பாவத்தின் கொடுமைகள், அக்கொடுமைகளை களைவதற்கான அறநெறிக் கருத்துகள் ஆகியவை இதனுள் கூறப்பெறுகின்றன.

இவ்வுலகின் எதிர்கால நிகழ்வுகள் மறைபொருளாகப் பல்வேறு இடங்களில் கூறப்பெற்றுள்ளது. அவற்றில் பல நிறைவேறி உள்ளன என்றும் மக்களால் கருதப்பெறுகிறது.

நூலைப்பற்றி

'வினையினீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூல்'

என நன்னூல் கூறுகிறது.

அகிலத் திரட்டு இறைவனாகக் கருதப்பெறும் வைகுண்டரால் அருளப்பட்ட நூல். எனவே இது முதல்நூல் ஆகும்.

தேவர்கள் கூடிய அவையில் அன்னை இலக்குமி திருமாலிடம்,

"யுகத்துக்கு யுகம் பிறந் துலகிடத்திலே யிருக்க
அகத்து வந்த ஞாயம் அருளுமென்று" – கேட்க

திருமால் இலக்குமிக்குக் கூறியதாகக் கருதப்பெறுவதே அகிலத் திரட்டு நூலாகும். இலக்குமிக்கு உரைத்ததை, வைகுண்டராகத் தோன்றிய திருமால், தனது சீடராகிய அரிகோபாலன் என்பாருக்குக் கூற அவரால் ஓலையில் வடிக்கப்பெற்ற நூலே அகிலத் திரட்டு நூலாகும்.

இதனை அகிலத் திரட்டின் தொடக்கத்தில்

இராத்திரித்தூ க்கம் நான்வைத்திருக்கையிலே
ஆண்டான ஆண்டு ஆயிரத்துப் பதினாறில்
கண்டானைக்கண்டேன் கார்த்திகை மாதமதில்
தெய்தியிருபத்தேழில் சிறந்தவெள்ளி நாளையிலே
சுருதியுடன் நித்திரையில் சுபக்கியானலக்கினமதில்
நாதனென்னருகில் நலமாக வந்திருந்து
சீதமுடனெழுப்பிச் சொன்னாரே காரணத்தை
காப்பிலொருசீர் களிவாய் மிகத் திறந்து
தார்ப்பிரியமாகச் சாத்தினாரெம் பெருமாள்.

என்று நூலை எழுதிய அரிகோபாலர் எழுதியதிலிருந்து அறியலாம்.

மேலும் கொல்லம் ஆண்டு 1016 (கி.பி 1841) கார்த்திகை மாதம்27ஆம் தேதி வெள்ளிக் கிழமை இந்நூல் இறைவனால்'ஏரணியும்மாயோன்' என அடியெடுத்துக் கொடுத்து தொடங்கப்பெற்றது எனவும் அறிகிறோம். 'ஏரணியும்மாயோன்' எனத்தொடங்கும் பாடல் வெண்பா சாயலில் அமைந்த வெண்தாழிசை ஆகும்.

அவையடக்கம் கூறும் வேளையில் அரிகோபாலர்,

அய்யாவுரைக்க அன்போர்கள் தங்கள்முன்னே
மெய்யாயெழுதி விதிப்பேனா னென்பதெல்லாம்

என்று கூறியுள்ளதிலிருந்தும், காப்புப் பகுதியில்,

ஆண்டவர் அருளிச் செய்ய
அம்மானை எழுதலுற்றேன்

என்று கூறியுள்ளதிலிருந்தும், இந்நூல் இறைத் தோன்றலாகிய வைகுண்டர்கூற, அவரது சீடராகிய அரிகோபாலரால் எழுதப்பெற்றது என ஐயத்திற்கு இடமின்றிப் புலனாகிறது.

கண்ணனால் உரைக்கப்பட்ட கீதைக்கு கண்ணனே ஆசிரியராகக் கருதப்பெறுகிறார். அதுபோல வைகுண்டரால் உரைக்கப்பெற்ற அகிலத் திரட்டுக்கு வைகுண்டப் பரம்பொருளே ஆசிரியர் என்பதே பொருத்தமுடைய கூற்றாகும்.

எனினும் அய்யா உரைக்க அதை எழுதி நூலாக்கிய சீடர் அரிகோபாலரின் பெருமையும், புலமையும் போற்றற்குரியதே ஆகும்.

இதனை 'வைகுண்டர் திருக்குடும்பம்' வெளியிட்டுள்ள அகிலத் திரட்டுபதிப்பின் பதிப்புரையில்,

> "அரிகோபாலர் புராண இதிகாசங்களைக் கசடறக் கற்றவர்; இலக்கிய இலக்கணத் திறமிக்கவர்; ஆன்மீகத்தில் ஆழ்ந்த மெய்ஞானி; குருவருள் வாய்க்கப்பெற்ற சீடர்; வைகுண்டர் தம் வரலாற்றை எழுத அவரே தேர்ந்தெடுத்த பாத்திரம்"

என மிக உணர்ந்து குறிப்பிட்டுள்ளதிலிருந்து அறியலாம்.

"புலன் உணர்வுகளால் வாழ்கின்ற உலகியலை விலக்கி, அதற்கு அப்பாற்பட்ட அனுபூதி நிலையில் அரிகோபாலர் இறைவனுடன் கலந்து நூலை எழுதியிருக்கிறார்" என வைகுண்டர் திருக்குடும்ப வெளியீடு கூறுகிறது.

அகிலத் திரட்டை ஓசை நயத்துடன் பாடிப் பொருள் விளங்க சொற்பொழிவாற்றும் முறை நடைமுறையில் உள்ளது. இதனைப்'பாராயணம் செய்தல்' என்று கூறுகிறார்கள். பாராயணத்தில் பாடுவதற்கு ஏற்ற சந்தங்களுடன் அகிலத் திரட்டு செய்யுட்கள் அமைந்துள்ளன.

“அம்மானை” எனப்பெறுவது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. மூன்றுபெண்கள் அம்மானை என்னும் பெண்கள் விளையாட்டை விளையாடியபடி தங்களுக்குள் வாதம் செய்து பாடுவது அம்மானை பாடலாகும்.

அம்மானையில் ஒருத்தி பாட்டுடைத் தலைவனின் புகழைப் பாடுவாள். மற்றொருத்தி அதனை மறுத்து வினா எழுப்பிப் பாடுவாள். மூன்றாவது பெண் தலைவனின் புகழ்ச் செயலைப் பாராட்டி முடிப்பாள். இவ்வாறு பாடப் பெறுவதே அம்மானை இலக்கியமாகும்.

அகிலத் திரட்டு திருமால் இலக்குமிக்கு உரைத்ததாகக் கருதப்பெறுகிறது. இந்நூலில் அம்மானை இலக்கியத்திற்கு உரிய இலக்கணம் அமையவில்லை. எனினும் இடையிடையே ‘அம்மானை’ என்ற சொல்லோடு செய்யுளடிகள் முடிவுறுகின்றன. மேலும் பெரும்பாலான செய்யுளடிகள் அம்மானை ஓசை பெற்றுள்ளன. எனவே இஃதை ‘அகிலத் திரட்டு அம்மானை’ எனவும் கூறலாகும்.

வெண்கலிப்பாவில் விரிவாக விளக்கப்படும் சம்பவங்கள், அதனை அடுத்து செய்திச் சுருக்கமாக விருத்தப்பா ஒன்றிற்குள் அடக்கி கூறப்பெற்றுள்ளன.

மற்ற தமிழ் இலக்கியங்கள் போலவே அகிலத் திரட்டிலும் பாயிரம், காப்பு, நூற் சுருக்கம், அவையடக்கம், நூற்பயன்,தெக்கணத்தின் புதுமை, சீமை இயல்பு, தெய்வ நீதம், பெண்கள்நிலைமை ஆகிய பகுதிகள் அமைந்துள்ளன.

புராணங்கள் உலக வரலாற்றை நான்கு யுகங்களாகப் பிரித்துக் கூறுகின்றன. அவை : 1. கிறேதா, 2. திரேதா, 3. துவாபர, 4. கலிஎன்பதாகும். அகிலத் திரட்டில் இந்நான்குடன் நீடிய, சதுர, நெடிய யுகங்கள் என்ற மூன்று யுகங்களையும் சேர்த்து மொத்தம் ஏழு யுகங்கள் கூறப்பெறுகின்றன. அவை, 1.நீடிய யுகம், 2. சதுரயுகம், 3. நெடிய யுகம், 4. கிறேதா யுகம், 5. திரேதா யுகம், 6.துவாபர யுகம், 7. கலியுகம் என்ற வகையில் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

யுகங்களின் வரலாறு – அவ்யுகங்களில் பிறந்த அரக்கர்கள், அவர்களை அழித்த திருமால் ஆகிய வரலாற்றைக் கூறுகின்றது. கலியன் பிறப்பு என்னும் பகுதியில் தேவருலகில் நடைபெற்ற நிகழ்ச்சிகளும்,

பூவுலகில் நடந்த நிகழ்ச்சிகளும் விவரிக்கப்பட்டுள்ளன. பூ உலகில் கலியன் பிறப்பையும், கலியனால் உலகில் ஏற்பட்ட மாற்றங்களையும் கலியன் கொடுமைகளையும் அப்பகுதி விரிவாக விளக்குகிறது.

கலியை அழிப்பதற்காக வைகுண்டர் பிறப்பதையும், கலி நீசர்கள் என்ற பாவச் செயலைப் புரிவோருடன் வைகுண்டர் போராட்டம் நடத்துவதையும் வைகுண்டரின் வரலாறாக அகிலத்திரட்டு கூறுகிறது.

அகிலத்திரட்டு செய்யுட்களின் நடை எளிமையானது. இனிமையானது. ஓசை நயமுடையது.

ஏறத்தாழ நூற்று ஐம்பது ஆண்டுகட்கு முன்னால் தமிழில் வடமொழிச் சொற்களும், பிறமொழிச் சொற்களும் ஏராளமாக கலந்து மணிப்பிரவாள நடையே ஓங்கியிருந்தது. ஆனால் அக்கால கட்டத்தில் எழுதப்பெற்ற அகிலத் திரட்டில் தனித்தமிழ் நடையே எடுத்தாளப் பெற்று இருப்பது இன்புறுவதற்குரியதாகும்.

இந்நூலில் இன்று வழக்கிழந்த பல பழந்தமிழ்ச் சொற்களும் காணப்பெறுகின்றன.

அகிலத் திரட்டில் ஆங்காங்கே பல இடங்களில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மறைபொருளாகக் கூறப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக,

'ஆயிரத்தெட்டான திருமண்டபத்தில்
வாயிதமாயாண்டொன்றில் வாய்த்த மண்டபங்களிலே
நூற்றிப் பன்னிரெண்டில் நொடிப்பேனோராண்டதிலே'

'உள்மூப்புயர்மூப்பா யுல்லாசமே தருவேன்
பின்னூ ப்பில்லாமல் பெரியோனின் நாமமதாய்
அடக்குடக்கெல்லாம் மன் றுனக்கு நான்தருவேன்'

இத்தகைய செய்யுட்களின் பொருளைப் புரிந்துகொள்வது பலருக்கும் சற்று கடினமாகவே உள்ளது. ஆசாரிபள்ளம் என்னும் ஊரில் பதிப்பகம் நடத்திவரும் என். விவேகானந்தன் அவர்களின்விளக்கங்கள் சற்றுப் பொருத்தமாக உள்ளன. எனினும் முழு நிறைவு ஏற்படவில்லை.

அகிலத் திரட்டில் இவ்வாறு மறைந்து கிடக்கும் மறைபொருள்களை ஆன்மீக யோக நூல் வல்லார்களைக் கொண்டு ஆய்வு செய்தால் நல்ல பல கருத்துக்கள் கிடைக்கக் கூடும்.

அகிலத் திரட்டில் அய்யா வைகுண்டர் கையாண்டுள்ள பல தமிழ்ச்சொற்கள் இன்பம் தருவன. அய்யாவின் தமிழ்ப் பற்றைக்காட்டுவன.

அய்யா (கடவுள்), இனிமம் (பிரசாதம்), உண்பான் (அன்னம்), நிழல்தாங்கல் (ஆலயம்), வழிபாடு, பணிவிடை (பூசை) என்பன சில எடுத்துக்காட்டுகளாகும். அய்யாவழி வழிபாட்டுத் தலங்களில் இச்சொற்களே இப்பொழுதும் பயன்படுத்தப் பெறுகின்றன.

அகிலத் திரட்டின் பல பகுதிகள் திருமால் நேரடியாகப் பேசுவதுபோல உள்ளன. மற்றும் பல பகுதிகள் காவியப் போக்கில் எழுதிய அரிகோபாலரின் கூற்றாகவும் அமைந்துள்ளன.

பல்வேறு செய்யுளடிகள் மேற்போக்காக ஒரு பொருளையும், ஆழச் சிந்தித்துப் பார்க்கும் போது மிக அருமையான ஆன்மீகக் கருத்துக்களையும் தருகின்றன.

எடுத்துக்காட்டாக, "துள்ளாத யானை துடியானை" என்ற அடிவெறும் விகடத் தொடராகத் தோன்றுகிறது. உட்பொருளாகஊக்கம் உடையான் அடக்கமுடையவனாக இருக்க வேண்டும் என்றபொருளைத் தருவது இன்பம் தருவதன்றோ!

ஆயிரத்து எட்டாம் ஆண்டு என்று கூறுவதற்குப் பதிலாக அகிலம்," ஆண்டாம் ஆயிரத்தில் அவ்வென்ற லக்கமதில்" என கூறுவது பலரையும் புருவங்களை உயர்த்திப் புரியாமல் திணறச் செய்யும் அடியாகும்.

விடை அறிந்த பின் விகடமாகும். நூல் முழுவதும் பெரும்பாலான பாக்கள் கலியோசை பெற்று வெண்கலிப்பாக்களாக அமைந்துள்ளன. பெரும்பாலும் கண்ணிகளாகவே அமைந்துள்ளன. அவற்றில் அம்மானை ஒசை விரவி காணப்பெறுகிறது. இடையிடையே கலிவிருத்தப்பாக்கள் அமைந்துள்ளன. அவை அறுசீர்உடையன.

திருக்கல்யாண நிகழ்ச்சியின் போது அய்யாவும், தெய்வகன்னிமாரும் பாடும் பாடல்கள் சிந்துப் பாக்களாக அமைந்துள்ளன.

அகிலத் திரட்டில் ஐந்து இடங்களில் திருவாசகம் என்னும் பகுதிகள் அமைந்துள்ளன. அவை செய்யுள் வடிவிலும், உரைநடையாகவும் அமைந்துள்ளன. திருவாசகங்களில் சரசுவதி கூறியனவும், திருமால் கூறியனவும் உள்ளன.

பொதுவாக பின் கூறப்படும் செய்திச் சுருக்கமாக திருவாசகங்கள் அமைந்துள்ளன. அகிலத் திரட்டு முழுமையும் இனிய ஓசை நயத்துடன் அமைந்துள்ளதால் பாடவும், மனப்பாடம் செய்யவும் எளிமையாய் உள்ளது.

அகிலத் திரட்டு நூற்பொருளை எல்லோரும் அறியும் வண்ணம் எளிமைப் படுத்துவதும், உலகம் முழுவதும் அறியச் செய்வதுமே இந்நூல் எழுதப்பட்டதின் நோக்கமாகும்.

வைகுண்டர் காட்டிய வாழ்க்கை நெறிகளையும், வழிபாட்டு முறைகளையும் பின்பற்றும் மக்கள் தென்னாட்டில் பல இலக்கம்பேர் உள்ளனர். அவர்கள் அய்யா வழியினர் என்றும், அன்புக்கொடி மக்கள் என்றும் அழைக்கப் பெறுகிறார்கள்.

எனவே இவ் எழுத்துப் பணி அகிலத் திரட்டில் கூறப்படும் செய்திகளோடு தர்மயுக நாயகனாகிய வைகுண்டர் காலச் சமுதாய நிலை, அவர் காட்டிய வாழ்க்கை நெறி, வழிபாட்டுமுறை, சமுதாய சீர்திருத்தம் ஆகியவற்றையும் பற்றி ஆராய்வதாக உள்ளது.

நூல் சிறப்புற அமைய வேண்டும் என்னும் நோக்குடன் வைகுண்டர் வாழ்ந்த இடங்களிலும், அவரது வழிபாட்டுத் தலங்கள் உள்ள இடங்களிலும், அன்புக் கொடி அறிஞர்களிடமும் கள ஆய்வு செய்தும், அய்யா வழி பற்றிய நூல்கள் பலவற்றைப் படித்தும் கருத்துக்களை திரட்டியும் இந்த நூல் எழுதப்பெற்றுள்ளது.

இவ்வுரை நூல் ஏழு பகுதிகளாக அமைக்கப் பெற்றுள்ளது. அவை:

1. முன்னுரை
2. ஆறு யுகங்களின் வரலாறு
3. கலியன் பிறப்பு
4. வைகுண்டர் காலத்துச் சமுதாயம்
5. வைகுண்டர் வரலாறு
6. வைகுண்டர் நெறி
7. முடிவுரை

என்பனவாகும்.

அகிலத் திரட்டு நூலோடு வைகுண்டரால் அளிக்கப் பெற்ற 'அருள்நூல்' எனப்படும் வழிபாட்டு நூல் பற்றியும் இங்கு குறிப்பிடப் பெற்றுள்ளது.

இந்த நூல் உருவாக துணை புரிந்த அன்பர்களைப் பற்றி குறிப்பிடுவது எனது கடமையாகும். சாமித் தோப்பில் உள்ள 'அன்பு வனம்' என்னும் ஆசிரமம் நடத்திவரும் புனிதகுரு பாலபிரசாபதி அடிகளார் முதலில் எண்ணத்தக்கவர். இந்த நூலை எழுத ஊக்கப்படுத்தியும், பல தகவல்களைத் தந்தும், அகில திரட்டின் பல பகுதிகளுக்கு விளக்கம் அளித்தும் அவர்கள் உதவியது என்றும் நினைவிற் கொள்ளற்குரியது.

அன்புக்கொடி வழித் திங்களிதழ் 'யுகமுழக்கம்' பத்திரிக்கையின் ஆசிரியர் ஆ.மணிபாரதி அவர்களும், நாகர்கோவிலிலிருந்து வெளிவரும் 'பஞ்சபதி இனிமம்' என்ற திங்கள் இதழின் ஆசிரியர் த.தினகரன் அவர்களும், ஐயா வைகுண்டர் பற்றி எனக்கு அறிவித்த ஆசான்களாவார். அவர்தம் பாதங்கள் அவர்தம் இறைபணியால் போற்றற்குரியன.

குமரி மாவட்டம் ஆசாரி பள்ளம் விவேகானந்தா பதிப்பகத்தின் உரிமையாளரும், கடிதங்கள் மூலம் எனக்குப் பல விளக்கங்கள் அளித்தவருமான திருவாளர் என். விவேகானந்தன் அவர்கள் ஒரு தத்துவ நூலறிஞர். அவர்களது விளக்கங்கள் அகிலத் திரட்டின் கடுமையான பல பகுதிகளை தெளிவுபடுத்தியதோடு, பொருத்தமான கருத்துக்களையும் தந்தன. அவருக்கு மிக்க நன்றி.

அகிலத் திரட்டு பற்றி சொற்பொழிவு ஆற்றுவதையே தன் இறைபணியாகக் கொண்டிருக்கும் சாமித்தோப்பு – தேரிவிளை, தா.நாராயணப்பெருமாள் ஆசிரியர் அவர்கள் உடன் பிறவா சகோதரனாக இருந்து தகவல்களைத் தந்தும், புத்தகங்கள் வாங்கித் தந்தும், அரிய பல விளக்கங்கள் அளித்தும் உதவி புரிந்தது என்றும் நெஞ்சில் நிற்கும் நினைவுகளாகும்.

மற்றும் வாய்மொழியாக பல தகவல்களைத் தந்து உதவிய அரசம்பதி ஜி. என். சிவச்சந்திரன் அவர்களுக்கும், வாத்தியார் விளை. சி. முத்துநாடார் அவர்களுக்கும், தமிழாசிரியர் திரு.தங்கத்துரை அவர்களுக்கும் இங்கு என் நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் எழுத தூண்டுதலாகவும், துணையாகவும் இருந்து எழுத்துப்பணியும், மற்ற துணைப் பணிகளும் செய்து நூலுக்குப் பேருதவி புரிந்த என்னுடைய துணைவியார் புலவர் பா. செயலக்குமி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி ஒய்வு பெற்ற டாக்டர். சொ. பரமசிவம் அவர்கள் பலகாலம் அறிவுரை அளித்தும், படிகள் திருத்தியும் உதவிபுரிந்தமைக்கு என் வாணாள் முழுமையும் நன்றிக் கடன்பட்டுள்ளேன்.

படிகளைப் பலமுறை பார்வையிட்டும், நான் சேகரித்த தகவல்களை ஆய்வு செய்ய துணை புரிந்தும், செம்மை பொருந்திய நூலாக வெளிவர துணை புரிந்த எனது வழிகாட்டி ஆசிரியரும் சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியருமான டாக்டர். மன். இரா. செயராமன் அவர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இவ் எழுத்துப் பணியில் ஈடுபட என்னை ஊக்கப்படுத்தியதோடு, அனுமதி அளித்து பல உதவிகள் புரிந்த சென்னை, தியாகராயநகர் மேல்நிலைப் பள்ளியின் செயலாளர் திரு. சிவ. தெய்வமணி அவர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பல ஆய்வுத் தகவல்கள் தந்தும், அறிவுரைகள் அளித்தும் உசவிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறை தலைவர் பேராசிரியர் டாக்டர். பொற்கோ அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரித்தாகுக.

தட்டச்சு செய்தும், மற்றும் பல வகைகளில் உதவி செய்தும் உதவியநண்பர் திரு. எஸ்.சி. மணி அவர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றி உரித்தாகுக.

இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட பேருதவி புரிந்த தி. நகர் 'நியூ வீனஸ் பிரின்டர்ஸ்' உரிமையாளர் திரு. எஸ். வீரப்பன் அவர்களுக்கும் என் ஆழ்ந்த நன்றி உரித்தாகுக.

பொன். தெ. தர்மராசன்

ஆறு யுகங்களின் வரலாறு

நீடியயுகம்

வைகுண்டரின் மானிட வரலாற்றைக் கூறவரும் அகிலத் திரட்டு முதலில் யுகங்களின் வரலாற்றையும், ஒவ்வொரு யுகங்களிலும் இறைவனின் பிறப்புகளையும் கூறுகிறது.

இந்துமதப் புராணங்களில் கிறேதா, திரேதா, துவாபர, கலி என நான்கு யுகங்களே கூறப்படுகின்றன. அகிலத் திரட்டில் மேற்கண்டவற்றோடு நீடிய, சதுர, நெடிய என்னும் மூன்று யுகங்களையும் சேர்த்து மொத்தம் ஏழு யுகங்கள் கூறப்பெறுகின்றன.

இந்த ஏழு யுக வரலாற்றையும் அன்னை இலக்குமிக்குத் திருமால் உரைத்ததாக அகிலத் திரட்டு கூறுகிறது.

இந்து மதப் புராணங்களில் கூறப்பெற்ற வரலாற்றுச் செய்திகளை அகிலத்திரட்டில் உள்ளடக்குவதற்காக, இந்த யுகங்களின் வரலாறு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இறைவன், படைப்பின் படிப்படியான பரிணாம வளர்ச்சியைக் காட்டுவதற்காகவும் யுகங்களின் வரலாறு எழுதப்பட்டிருக்கவேண்டும்.

குமரி மாவட்டம் சாமித்தோப்பில் 'அன்புவனம்' என்னும் ஆசிரமம் நடத்திவரும் புனிதகுரு. பாலபிரசாபதி அடிகளார் ஏழுயுகங்களிலும் அரக்கர்களின் பிறப்பு பற்றி கூறும்போது,

> **ஏழுயுக அரக்கர்களின் வரலாறு மானிடத்தின் படிப்படியான ஆன்மீக வளர்ச்சியைக் குறிப்பிடுவதாகும்**

என்று கூறுகிறார்.

எடுத்துக்காட்டாக முதல் யுகத்தில் வரும்குறோணிகுறிப்பிட்டுக் கூற முடியாத உருவம் அற்றவனாகவும், கண்ணில் காண்பவைகளை எல்லாம் விழுங்கவேண்டும் என்ற ஆசையைத் தவிர வேறு அறிவு இல்லாதவனாகவும் காணப்படுகிறான். அடுத்துவரும் குண்டோமசாலியின் வடிவம் மிகப் பெரியதாக வருணிக்கப்பட்ட போதிலும் அவனுக்கென ஒரு வடிவம் தெரிகிறது. இது முன் பிறப்பைக் காட்டிலும் வளர்ச்சி உள்ளதாகும்.

“மூன்றாம் நெடிய யுகத்தில் படைக்கப்பட்ட மல்லோசி வாகனன், தில்லை மல்லாளன் ஆகியோர் இறைவனிடம் வரம்பெற்று உயர்ந்த மேடைகளும், மாடமாளிகைகளும், கோட்டைக் கொத்தளங்களும் அமைத்து, படை, குடி, சூழ வாழ்ந்திருந்தார்கள்.

இது முன் யுகத்தைக் காட்டிலும் அறிவு வளர்ச்சியும், நாகரீக உயர்வும் பெற்றிருந்ததைக் காட்டுகிறது. இப்படியே அடுத்தடுத்துவரும் சிங்கமுகாசூரன், இரணியன், இராவணன், துரியோதனன், ஆகியோரிடையேயும் யுகத்துக்கு யுகம் அதிக அறிவுவளர்ச்சியையும், நாகரீக, ஆன்மீக உணர்வையும் காண முடிகிறது.

கடைசி ஏழாவது யுகத்தில் வரும் கலி நீசனோ எல்லோரைக் காட்டிலும் அறிவு வளர்ச்சியும், ஆன்மீக வளர்ச்சியும் மிக்கவனாக காட்டப்படுகிறான்.

எனவே, “ ஏழுயுகவரலாறு கூறப்பட்டதன் நோக்கம் இறைவனின் படைப்பான மானிட சமுதாயத்தின் படிப்படியான அறிவு வளர்ச்சியையும், ஆன்மீக வளர்ச்சியையுமே காட்டுவது ஆகும்” என்னும் புனித குரு பாலபிரசாபதி அடிகளாரின் கூற்று முற்றிலும் சரியானதே ஆகும்.

இனி யுகங்களின் வரலாற்றைக் காண்போம். ஆதித்தன், வாயு, அண்டபிண்டங்கள் தோன்றிய பின்பு முப்பெரும் பரம்பொருளான இறைவனைப் போற்றித் தேவர்கள் அனைவரும் கைலையில் இருந்தார்கள். அமுதுண்டு அகம்களித்து இருந்த தேவர்கள் தங்களுக்குத் துக்கமும், மரணமும் இல்லையென்று ஆணவம் கொண்டார்கள். ஆணவத்தினால் ‘எங்களை எதிர்ப்பவர்கள் யாரும் உண்டா?’ என இறைவனிடம் கேட்டார்கள்.

தேவர்களின் ஆணவத்தைக் கண்ட இறைவன் (சிவன்) வேள்வி ஒன்றை வளர்த்தான். வேள்வியிலே ‘குறோணி’ என்னும் அரக்கன் தோன்றினான். சிவனும், திருமாலும், பிரம்மாவும் வேதங்களைப் புரட்டி ‘குறோணி’ பிறந்த காலத்திற்கு ‘நீடியயுகம்’ எனப் பெயரிட்டார்கள்.

தேவர்களின் மனமாசு ஆகிய ஆணவமே குறோணியாகப் பிறந்தது என ‘அகில அறிமுகம்’ என்னும் நூலில் த. தினகரன் அவர்கள் கூறுகிறார்.

அந்த குறோணி பெரும்பாவி. அண்ட சராசரங்கள் அறிய அவன் பிறந்தான். கோடிக்கணக்கான கண்களையும், கைகளையும், கால்களையும் பெற்றிருந்தான். அவன் தவம் பற்றி அறியாதவன். நாள்தோறும் பாவங்களையே செய்யக்கூடியவன். அவன் உயரம் நான்கு கோடி முழம், அவன் எழுந்து நின்றால் கயிலையே ஆடும். அகிலமெல்லாம் நடுங்கும்.

ஒருநாள் அவன் தூங்கி விழித்தான். கடல் நீர் முழுவதையும் குடித்தான். பசிதாங்காமல் உலகம் முழுவதையும் அவன் விழுங்க நினைத்த பொழுது கயிலாய மலையைக் கண்டான். அதனை விழுங்க அவன் முயன்ற பொழுது சிவனும், திருமாலும் கயிலையிலிருந்து தப்பி ஓடினார்கள்.

திருமால், பூ உலகில் சென்று சிவனை நினைத்துத் தவம் இருந்தார். அங்கு சிவன் தோன்றினார். அப்பொழுது திருமால் கயிலையையும், தேவர்களையும் காப்பாற்ற அசுரனை ஆறு துண்டுகளாக வெட்டிப்போட வரம் தரவேண்டுமென சிவனிடம் கேட்டார்.

சிவன் திருமாலை நோக்கி, "நீ குறோணியை ஆறு துண்டுகளாக வெட்டிப் போட வேண்டும். அவனுடைய இரத்தம் அசுரகுலங்களாக உதிக்கும். அவனுடைய உடலின் ஆறு துண்டுகளும், வரவிருக்கும் ஆறு யுகங்களிலும் அரசர்களாகப் பிறந்து, ஒவ்வொரு யுகத்திலும் உனக்குப் பகையாக இருக்கும். நீ ஒவ்வொருயுகத்திலும் உத்தமனாகப் பிறந்து அசுரர்களை அழிக்க வேண்டும். கடைசிக் காலத்தில் நடுத்தீர்ப்பு கேட்டு அவனை நரகக் குழியிலே தள்ளிப் புதைக்கும் நாள் வரும்" என்று கூறினார்.

நாராயணர் சினம் கொண்டு குறோணியை ஆறு துண்டுகளாக வெட்டிப் போட்டார். தேவர்கள் அசுரனின் ஆறு உடல்துண்டுகளையும் பூமியிலே கொண்டு போய் போட்டார்கள். குளம்போன்ற பெருங்குழி வெட்டி அசுரனின் இரத்தத்தை அதிலிட்டு பீடம் அமைத்தார்கள். இவ்வாறாக முதல் யுகமான நீடிய யுகம் முடிவுற்றது.

"அகில அறிமுகம்" என்னும் நூலில் த. தினகரன் அவர்கள், "இறைவன்வளர்த்த ஞான வேள்வியில் தேவர்களின் ஆணவ அழுக்கு குறோணி என்ற அசுரனாக பிறவி செய்யப்பட்டது" என்று கூறி "நான் என்னும் எண்ணம் உதிக்குமிடம் இதயம் எனப்படும். அதற்கு வடிவம் வகுத்தல் கற்பனையே" என்ற இரமண மகிரிஷிகளின் கருத்தையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறோணியின் வரலாற்றையும், ஆன்றோர்களின் கருத்துக்களையும் ஒப்பு நோக்கிச் சிந்திக்கும் போது நமது மன மாசுகளே பாமரமக்களுக்குப் புரியும் வகையில் அசுரர்களாக அகிலத் திரட்டில் வருணிக்கப்பட்டுள்ளது என எண்ணத் தோன்றுகிறது.

மேலும், 'பஞ்சபதி இனிமம்' பத்திரிக்கையின் ஆசிரியர் திரு.த.தினகரன் அவர்கள் தமது 'அகில அறிமுகம்' என்ற நூலில் அறியாமையால் வரும் விளைவுகளை 1. ஆசை, 2. கோபம், 3.ஈயாமை, 4. மயக்கம், 5. செருக்கு, 6. பொறாமை என வரிசைப்படுத்தியுள்ளார்கள். இந்த ஆறு மனக்குற்றங்களுமே குறோணியின் ஆறு துண்டங்களாக வருணிக்கப்பட்டுள்ளன'' என்பது அவரது கூற்று.

மேலும் த.தினகரன் அவர்கள், "ஆறு குற்றங்களையும் விட்டவன் ஞானி. தோசங்களையே உடலாகக் கொண்டவன் குறோணி என்று கூறியுள்ளது இதனை உறுதிப்படுத்துகிறது.

சதுர யுகம்

"இரண்டாம் யுகமான சதுர யுகத்தில் குறோணியின் உடல் துண்டு" குண்டோமசாலி'' என்ற அரக்கனாக பிறவி செய்யப்பட்டது. அவன் நானூறு ஆயிரம் முழங்கள் உயரமும், பல நூறு கால்களும், யானைத் துதிக்கை போன்ற கைகளும் உடையவனாய் இருந்தான்.

'உடை தோளுடம்பு உருவறியா மாபாவி' என குறிப்பிடுவதிலிருந்து அவனுடைய உருவத்தையே அவன் அறியாதவனாக இருந்தான் எனத்தெரிகிறது.

படைத்தோன் தனை அறியான் பாரியென்றும் அறியான்
அட்டைபோல் சுருண்டு அம்மிபோல் கிடப்பான்
மட்டை போல திரிவான் வயிறு மிகப்பசித்தால்
அன்னுலகத்திலுள்ள அசுரக்குலங்களையும்
தன் வயிற்றுக்கிட்டுத் தடிபோலுருண்டிடுவான்

என்று கூறுவதிலிருந்து அவனுடைய பயங்கரத் தோற்றமும், கொடுமையும் விளங்குகிறது.

குண்டோமசாலி கொடிய பசியுடன் இட்ட கூக்குரல் கயிலாயத்திலும் கேட்க, சிவனது ஆணைப்படி திருமால் குண்டோமசாலியை அழிக்க வந்தார்.

குண்டோமசாலியை அழிப்பதற்காக, தேவர்களை தூண்டில் புழுவாகவும், மலைகளைத் தூண்டிலாகவும், வேதங்களைக் கயிறாகவும், வாயுவைத் தோணியாகவும், வருணனை மிதப்புக்கட்டையாகவும் கொண்டு சென்றார் இறைவர்.

இவை யாவும் உருவகங்களாகவே கூறப்படுவதிலிருந்து குண்டோமசாலி என்பது மனமாசுகளின் கற்பனை ஆக்கமே என எண்ணத் தோன்றுகிறது.

இவ்வாறு திருமால் குண்டோமசாலியை அழிக்கச் செய்ய அவருக்குத் துணையாக சிவன், பிரம்மா, உருத்திரன் என்ற முப்பரம் பொருளும் சென்றார்கள். தூண்டில் புழுவைக் கண்டகுண்டோ மசாலி இரையென விழுந்து, தூண்டிலில் சிக்கி அழிந்தான்.

இவ்வாறாக 'சதுர யுகம்' முடிவுற்றது.

நெடிய யுகம்

தேவர்கள் சிவனை நாடி, "முன்னால் தாங்கள் வகுத்த இரண்டு யுகங்களிலும் சூரர்கள் வரம் கேட்டு வாழவில்லை. கோட்டைக் கொத்தளங்கள், படைகள் இவற்றோடு வாழவில்லை. பயிரிட்டு பயிரால் பசி தீர்ந்து வாழும் வாழ்க்கையுடன் இந்த யுகவாழ்க்கை அமைய வேண்டும்" என்று கேட்டார்கள்.

அதன்படி திருமால், பிரம்மா, ஈஸ்வரன் மற்றும் தேவர்கள் கூடி குறோணி உடலின் இரண்டாவது துண்டத்தை இரண்டு கூறுகளாக்கி அவற்றிற்கு உயிரூட்டி இரண்டு அசுரர்களாக படைத்தார்கள்.

திருமால், "இவர்களுக்கு என்ன பெயரிடலாம்" என்று கேட்க சிவன், "நானொரு உபாயம் செய்கிறேன்" என்ற கூறி ஆதி கைலாசத்தில் தியானத்தில் இருக்கும் சுருதி முனியின் தவத்தை அழித்துவரும்படியாக அசுரர்களை அனுப்பினார். அசுரர்கள் இருவரும் சுருதி முனியின் தவத்தை அழிக்கச் சென்றார்கள்.

பயங்கரத் தோற்றமுடைய அசுரர்கள் சுருதி முனியைத் தூக்கிகடலில் எறிய ஆர்ப்பரித்தபோது சுருதிமுனி, 'வீணாக எனது தவத்தைக் கலைத்தீர்கள். என்னை தூக்கி கடல் மேல்போட்டாலும், ஓர் அம்பாய் உருவெடுத்து, பின்னர் உங்கள் இருவரையும் அறுத்து அழிப்பதுடன் உங்கள் ஊர்களையும் அழித்து வைகுண்டம் சேர்வேன்' என்று சாபமிட்டார்.

முனிவர் கூறியதைக் கேட்டும் கலங்காது சூரர்கள் அவரைத் தூக்கிக் கடல்மீது எறிந்தார்கள். சிவபெருமானின் அருளால் சுருதி முனிவன் 'மந்திரபுரக்கணை' என்ற அம்பாக மாறி பாற்கடலில் சேர்ந்தார்.

முனிவரைக் கடலில் எறிந்த அசுரர்கள் சிவபெருமானிடம் சென்று இறைஞ்சி நின்றார்கள். சிவபெருமான் உங்களுக்கு என்ன வரம்வேண்டும் என்று கேட்க, அவ்வரசுரர்கள், "உலகில் உள்ள ஆயுதங்களாலும், மலை மீதுள்ள முனிவர்களாலும் இறைவனாகிய தங்களாலும் அழிக்க முடியாத வரங்கள் வேண்டும். மேலும் அதிகபலமும், தேவர்கள் எங்களைத் தொழுகின்ற நிலையும் வேண்டும்" எனக் கேட்டனர்.

அவர்கள் கேட்ட வரங்களைக் கொடுத்த சிவபெருமான் அவர்களுக்கு, 'மல்லோசி வாகனன்', 'தில்லை மல்லாளன்' எனப் பெயரிட்டு அனுப்பி வைத்தார்.

இறைவன் படைத்த உலகில் அசுரர்கள் இருவரும் வந்தார்கள். குண்டோமசலியின் இரத்த அணுக்கள் சூரப்படைகளாகத் தோன்றி மல்லோசிவாகனன், தில்லை மல்லாளனுடன் சேர்ந்தனர்.

சூரர்கள் உயர்ந்த மேடைகளும், மாடமாளிகைகளும், கோட்டைக் கொத்தளங்களும் அமைத்துப் படை, குடி, சூழு நல்ல அமைச்சர்களுடன் மகிழ்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

தம் குறைவற்ற வாழ்வின் நிலை கண்டு அச்சூரர்களுக்கு ஆணவம் உண்டாயிற்று. அந்த ஆணவத்தால் இறைவனை மறந்து தாமே பெரிதென்று எண்ணி, தேவர்களை அடிமையாகக் கொண்டு, அவர்களுக்குப் பலவிதமான கொடுமைகளை இழைத்தார்கள். கொடுமைகளைப் பொறுக்க முடியாத தேவர்கள் சிவனிடம் முறையிட்டார்கள்.

ஈசன் அசுரர்களை அழிக்க உமையம்மையிடம் ஆலோசனை கேட்டார். உமையம்மை, "அலைமேல் துயில்கின்ற ஆண்டியாகிய திருமாலும், கடலினுள் அம்பாக வளர்கின்ற சுருதி முனியும் உண்டு" என்று கூறினாள்.

சிவபெருமான் திருமாலை வரவழைத்து அசுரர்களை அழிக்கும்படி ஆணையிட்டார். திருமால் கடலில் கிடந்த சுருதி முனியாகிய 'மந்திர புரக்கணையை' எடுத்து வில்லை வளைத்து ஏவ திருமாலின் பகையாலும், சுருதி முனியின் பகையாலும், சூரர்களின் ஊர் எரிக்கப்பட்டு, சூரர்களின் சிரசும் அறுக்கப்பட்டு கடலிலே எறியப்பட்டன. சுருதி முனி அம்பு சிவனடி சேர்ந்து வைகுண்ட பதம் பெற்றது."

இவ் யுகத்தில் தில்லை மல்லாளனும், மல்லோசி வாகனனும் மானிட உருவம் பெற்று, ஒரு பேரரசை நிறுவி அமைச்சு, படை, குடிகளுடன் ஆட்சி செய்து, பயிரிட்டு வாழும் வாழ்க்கை பெற்ற பரிணாம வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும்.

கிறேதா யுகம்

திருமாலால் வெட்டப்பட்ட குறோணி உடலின் மூன்றாம் துண்டத்தை இரண்டு துண்டுகளாக்கினார் சிவபெருமான். அவைகளுக்கு உயிர் கொடுத்து சிங்கமுகாசூரன் என்றும்,

சூரபத்மன்என்றும் பெயரிட்டார். சூறோணியின் இரத்த அணுக்களை சூரப்படைகளாக்கி அசுரர்களுக்குத் துணையாக அனுப்பினார்.

பூவுலகில் அசுரர் இருவரும் ஆட்சி புரிந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தார்கள். இறைவனாகிய சிவபெருமானைப் பார்க்க விரும்பிய சூரபத்மன் அவர் வரவை வேண்டி, பிரம்மனை வணங்கி, 'ஓம்' என்னும் மந்திரம் சொல்லி, செப்புக்குடம் நிறுத்தி, வேள்வி வளர்த்து தவம் செய்தான்.

தவத்தினால் சிவனாகிய நெடியோனைக் காணமுடியாமல் அக்னியில் சூரபத்மன் விழுந்தான். சூரபத்மன் அக்னியில் விழுந்து இறந்ததால் மனம் வருந்திய சிங்கமுகாசூரன் தன் தலையைக் கொய்து தீயிலெறித்தான். அசுரர்களின் கடுமையான தவத்தைக் கண்ட சிவனும், அம்மை பார்வதியும் மனம் இரங்கிச் சிங்கமுகாசூரனை அடைந்து, "என்ன வரம் வேண்டும் ?" என்று கேட்டார்கள்.

சிங்கமுகாசூரன் பாசமுடன், "இறந்த சூரபத்மனை எழுப்பித் தரவேண்டும்" என்று கேட்டான். சிவபெருமான் மகிழ்ச்சியுடன் ஓம பர்பத்தைப் பிடித்து சிவஞான வேதத்தைச் சிந்திக்க சூரபத்மன் மீண்டும் பிறந்தான்.

சிவபெருமான் இரண்டு சூரர்களையும் பார்த்து, "உங்களுக்குத் தேவையான போர் வரங்களைக் கேளுங்கள்" என்றார். சூரன் மனம் மகிழ்ந்து, "சிவபெருமானே! உம்மாலும் ஐந்து முகங்கள் உடையவர்களாலும், உலகில் செய்யப்பட்ட ஆயுதங்களாலும், அரசர்களாலும், இந்திரனாலும் கொல்ல முடியாத வரம்வேண்டும். வல்லோனே! மேலும் நீ வாழும் கைலைமலையில் உள்ளவர்கள் அனைவரையும், மற்றும் தேவேந்திரன், தேவகன்னியர்கள் அனைவரையும் எனக்கு ஊழியங்கள் செய்யும் ஏவலர்களாக நியமிக்க வேண்டும்" என்று கேட்டான்.

ஆதிபரம்பொருளான இறைவன் மனமகிழ்ந்து உடனேயே கேட்டவரமெல்லாம் தந்தோம் என்று கூறினார். பின்னர் உமையம்மையுடன் கைலைமலைக்குச் செல்லாமல் பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த திருமாலுக்கு அருகே சென்று அமர்ந்தார்.

சூரர்கள் கைலை மலைக்கு காவலிட்டார்கள். தேவருலகம், பூவுலகம் அனைத்தையும் அடக்கி அரசாண்டார்கள்.

யுகம் முடியும் காலம் வந்தது. அசுரர்கள் தேவர்களையும், இந்திரன் முதலானோர்களையும் துன்புறுத்தினார்கள். தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டார்கள். திருமால் ஈசனிடம்சென்று, சூரர்களுக்கு என்னென்ன வரம் கொடுத்தீர்கள்? என்றுகேட்டார். சிவன் தான் கொடுத்த வரங்கள் பற்றி விளக்கிக் கூறினார். திருமால்,

பேயனுக்கு என்னுடைய பிறப்பைக் கொடுத்தல்லவோ
தேயமதில் யானும் திரிந்தலையக் காரணந்தான்

என்று கூறி மனம் வருந்தினார். பின்னர் காக்கும் கடவுளான பெருமாள் ஆறுமுகம் உடைய கந்தனாக வேடம் கொண்டார். திருமாலே கந்தனாக வடிவம் கொண்டதாகக் கூறுவது அகிலத்திரட்டின் புதுமை. இறைவன் ஒருவனே என்ற கருத்து இங்கே உறுதிபடுத்தப்படுகிறது.

"சிவன், சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விட்ணு, பிரம்மா ஆகிய ஆறு தெய்வங்களின் கூட்டு வடிவமே ஆறுமுகன்" என்பது கதிரைவேற்பிள்ளையின் தமிழ் அகராதி கூற்றாகும். இதனால் கந்தனை விட்ணுவின் வடிவாகக் கொள்ள முடிகிறது.

> கந்தசாமி ஆகிய திருமால் சக்தியை வேலாயுதம் ஆகவும் சிவபெருமானை நந்தீசுரராகவும், திக்கு பாலர்களை வீரர்களாகவும் கொண்டார். மற்றும் சந்நியாசிகளைப் படைகளாகக் கொண்டார். போருக்கு புறப்பட்ட நாராயணர் கனத்த சடையுடனும், கந்தல் துணியுடனும், திருநீரும், உருத்திராட்சமாலையும், காதுகளில் பொற் – குண்டலங்களும் அணிந்தார். படைகளுடன் கூடாரமிட்டுத் தங்கினார்.

தூதன் ஒருவனை அழைத்து, "நீ சூரபத்மனிடம் சென்று கயிலை மலையையும், தேவர்களையும் விடுதலை செய்து நல்லாட்சி செய்திருங்கள் அல்லது இன்றிலிருந்து எட்டாவது நாள் கந்தனுக்கும், சூரர்களுக்கும் சண்டை என்று சொல்லிவா" என்று கூறிஅனுப்பினார்.

கந்தசாமி கூறியவற்றைத் தூதன் சூரனிடம் சென்று கூறினான். அதைக் கேட்ட சூரன், " என் வலிமையை நீ அறியாய். சிவனே கயிலையை விட்டுவிட்டுப் பாற்கடல் சென்று வாழுகிறார். யமலோகம், பரலோகம் முதலான ஒன்பது கோள்களுக்கும் நானே தலைவன் என்பது உனக்குத் தெரியாதா? முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்து

நான்கு கோடி முனிவர்களும் எனக்கு அடிமைகள் என்பது உனக்கு தெரியாதா? இவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளாமல் அந்த ஆண்டியான கந்தனுக்குத் தூதுவனாக வந்திருக்கிறாய். நான் சிறுவன் என்று எண்ணாதே. என்னுடைய தலைகளையும் பெரும் உடலையும் பார்த்தாயா? கந்தனின் பலத்தை நானறிவேன். காட்டில் வாழும் கந்தனுக்கு நான் கூறியவற்றைச் சென்று சொல்வாயாக'' என ஆணவமுடன் பதிலுரைத்தான்.

அசுரனின் ஆணவப் பேச்சைக் கேட்ட தூதன், ''நீ எங்களுடைய தலைவனான கந்தபெருமானுக்கு எதிரியாக முடியாது. பேய்களும், நாய்களும், நரிகளும், கழுகுகளும் உன்னைப் பிடுங்கித்தின்னும் படியாக கொன்றுபோட எங்கள் கந்தன் வேலாயுதம் கொண்டு வந்திருக்கிறார். தேவர்களையும், தேவகன்னியர்களையும், முனிவர்களையும் உனது சிறையில் இருந்து விடுவித்து உன்சேனைகளை அழித்து, உன் கோட்டைகளைச் சாம்பலாக்கி எங்களுடைய ஆறுமுக வேலவனார் அரசராள்வார்'' என்றுரைத்தார் தூதுவர்.

தூதனின் உரையைக் கேட்ட அசுரன், ''உனது கந்தனாகிய ஆண்டியை நான் நன்கு அறிவேன். அவனைப் போர் செய்ய வரச்சொல்'' என்று துணிவுடன் கூறினான். தூதன் சென்று கந்தசுவாமியிடம்ந டந்தவற்றைக் கூற கந்தசாமி படைகளுடன் புறப்பட்டார். சூரர்களும் எதிர்த்து வந்தார்கள்.

கந்தன் அவர்களைக் கண்டு, ''வீணாக உனது உற்றம், சுற்றம், கோட்டை தளம் ஆகியவற்றை இழந்து அழிந்து போகாதே. தேவர் முதலானோரை விடுதலை செய்து விடு. மரணம் வரும்போது நல்வினைகளே துணைவரும். தீவினைகள் துணைவராது. மூடச் செயலை விட்டு வைகுண்ட வீட்டிற்கு வழி தேடு''என்று அறிவுரை கூறினார்.

''யாசித்து திரியும் ஆண்டிக்குரிய புத்தியை அரசர்க்குச் சொல்வதா? என்னை அழிப்பேன் எனச் சொன்ன ஆண்டியும் நீதானோ'' என எள்ளி நகையாடி போரைத் தொடங்கினான் சூரன். சூரனின் படைகள் வெட்டுண்டு அழிந்தன. கந்தசுவாமி சிவனைச் சிந்தித்து வேலாயுதத்தை எடுத்து எறிந்தார். சூரன்பட்டு வீழ்ந்தான். வேலாயுதம் பாற்கடலில் சென்று மூழ்கியது.

சூரன் உயிர் போகும் நிலையில் கந்தபெருமான், “ எனது புத்தியைக் கேளாமல் வீணாக அழிந்தாயே” எனக் கூற, சூரன், “வேலாயுதத்தால் அல்லாமல் ஆண்டியாகிய உன்னால் என்னைக் கொல்ல முடியுமோ?” என்றான். ஆறுமுகனார் கோபம் கொண்டு சூரனைக் கொன்று குறை உயிரைப் போக்கினார். இவ்வாறாக, சூரபத்மன், சிங்கமுகாசூரன் ஆகியோர் அழிய திறேதா யுகம் முடிவுற்றது.

இங்கு நாம் சிந்திக்க வேண்டியது ஒன்று உண்டு. யுகங்கள் தோறும் அசுரர்கள் பிறப்பதையும், அவர்களை விட்ணுவாகிய திருமால் அழிப்பதையும் தசாவதாரமாக வைணவ நூல்கள் கூறும்.

சூரர்களை முருகப் பெருமானாகிய ஆறுமுகன் அழித்ததாகச் சைவநூல்கள் கூறும். அகிலத் திரட்டில் திருமாலே கந்தனாகி சூரர்களையும் அழித்ததாக கூறப்பட்டதிலிருந்து சைவம், வைணவம் என்ற இரு பிரிவுகளையும் ஒரே இயக்கமாக மாற்றும் அகிலத்திரட்டின் நோக்கை நாம் உணர முடிகிறது.

‘வேலாயுதத்தால் தான் கொல்ல முடிந்தது’ என சூரன் கூறியமையால் அதே யுகத்தில் அச்சூரன் இரணியனாக படைக்கப்பெற்றான். திருமால் நரசிம்ம வடிவம் கொண்டு, வாயில் நடையில் மடியில் வைத்து, சூரனின் மார்பை நகங்களால் கிழித்து, “வேலாயுதத்தினால் தான் வென்றாய் என்று நீ கூறியமையால் ஆயுதங்கள் இல்லாமல் உன்னைக் கொல்லகிறேன்” என்றார்.

அதைக் கேட்ட சூரன், “ பத்து மலைகளையே நீ நகங்களாகக் கொண்டமையினால் தான் இவ்விடத்தில் என்னைக் கொல்லமுடிந்தது அல்லது உன்னால் என்னை வெல்ல முடியாது” என ஆணவமுடன் பேசி உயிர் துறந்தான்.

இத்துடன் கிறேதா யுகம் முடிந்தது.

திரேதா யுகம்

“திருமாலும், சிவனும் திருச்செந்தூர் கடற்கரை அருகில் சந்தித்தனர். குறோணியின் உடல் துண்டுகளில் நான்காவது துண்டை ஓர் உயிராய் ஈசன் படைக்கத் தொடங்கினார். திருமால், முற்பிறப்பில் இரணியனாகிய இவன் என்னை இழித்துப்பேசினான். எனவே இப்பிறப்பில் இவனைப் பத்து தலைகளுடனும், இருபது கண், காதுகளுடன் படையும்” என்று கூறினார்.

ஆதிசிவன் பத்து தலைகளுடன் இராவணனைப் படைத்தார். முன்னால் குளத்தில் இட்ட இரத்த அணுக்களை அசுர குலங்களாய்ப் பிறக்கச் செய்தார். திருமால் தனது உடலில் இருந்த வியர்வை அழுக்கை உருட்டி விபீடனன் என்ற உயிரைப் படைத்து, இராவணனின் தம்பியாய் கருத்துடன் வாழ்ந்து அவன் இரகசியங்களை அறிந்து இருப்பாயாக என்று கூறி அனுப்பினார்.

பூவுலகில் பிறந்த இராவணன் கடும் தவம் செய்து இறைவனிட வரம் வேண்டி நின்றான். அவன் முன் தோன்றிய சிவபெருமான் 'என்ன வரம் வேண்டும்' என்று கேட்டார். பத்து தலையுடையோன் 'நான் கேட்கும் வரங்களைத் தருவதாக நந்தியின் பேரில் ஆணையிட்டு தாருங்கள்' எனக் கேட்டான். இராவணன் கேட்டபடி பரமசிவ உறுதியளிக்க இராவணன், 'மூன்று உலகங்களிலும் உள்ள முனிவர்களும், தேவர்களும், பலவிதமான ஆயுதங்களும் எனது உடைமையாக வேண்டும். சூரியனும், சந்திரனும் எனது கோட்டையை சுற்றிச் செல்ல வேண்டும் ......'' இவ்வாறாக இராவணன் மூன்றரை கோடி வரங்களைக் கேட்டான்.

சிவன், பிரம்மா, உமையாள் ஆகியோர் முறையே கோடிவரங்களும், தேவர்கள் அரைக் கோடி வரங்களும் கொடுத்தனர். அந்நேரத்தில் பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலின் மனைவி இலக்குமி உமையம்மையின் அருகில் அலங்காரத்துடன் இருந்தார். தான் அழியப் போவதை அறியாத அரக்கன் அம்மையைக் கண்டு மனங்கலங்கி நின்றான். இதைக் கண்ட சிவன், "சீதை சிரிக்க சீர்இலங்கையும், நீயும் அழிவாய்" என்று சபித்தார்.

அரக்கன் வரங்களுடன் புறப்பட்டான். திருமால் குறுக்கிட்டு தந்திரமாக மூன்று கோடி வரங்களைப் பறித்துக் கொண்டார். அரைக் கோடி வரங்களுடன் அரக்கன் சென்றான்.

இராவணன் தேவர்களையும், மற்றும் பிரம்மா, தேவேந்திரன் முதலியோர்களையும் பணியாட்களாகக் கொண்டு நாடாண்டான். தேவர்களுக்கும், மற்றையோர்க்கும் பலவிதமான கொடுமைகளை இழைத்தும்; அச்சுறுத்தியும் அரசாண்டான். இராவணனின் கொடுமைகளைப் பொறுக்கமுடியாத தேவர்கள் திருமாலிடம் சென்று முறையிட்டனர்.

திருமாலை மகனாகப் பெற பூமியில் தசரதன் தவம் இருந்தார். எனவே திருமால் தசரதனின் மகன் இராமனாகவும், அரக்கர்குலம் அழிக்க இலக்குமி சீதையாகவும் பிறந்தனர். சனகரைத் 'தினகரர்'

என்று அகிலத் திரட்டு கூறுகிறது. திருமாலின் பாம்பினை இலட்சுமணனாகவும், அவரது வெள்ளிமணி மெத்தை பரதனாகவும், அவர் அமரும் ஆசனம் சத்துருக்கனாகவும் உடன் பிறந்தார்கள்.

இராமனைப் பிறவி செய்யும் பொழுது திருமால் தனது கணைக்காலில் ஒரு நரம்பை உருவி 'இராமபாணக் கணை' என்று வேள்வியில் விட்டார். அவ்வாறே இலட்சுமி தேவியும் தன் கையின் தூண்டுவிரலில் இருந்து நரம்பு ஒன்றை உருவி 'திருராமனைத் தவிர யாராலும் அம்பேற்ற முடியாத வில்லாகட்டும்' என வேள்வியில் இட்டாள்.

இராமன், சீதை ஆகியோரின் பிறப்பை அறிந்து தேவர்கள் மகிழ்ந்தனர். தேவர்கள் வானரங்களாகப் பிறந்தனர். சீதையுடன் திருவில்லும் வளர்ந்தது. தினகரனார் கலைக்கோட்டு முனியை அழைத்து திருமணம் நடத்த விவரம் கேட்டார். கலைக்கோட்டு முனி, ஐம்பத்தாறு தேசத்து அரசர்களையும் அழைத்து வில்லை வளைத்தவர்க்கு மென்மையானவளான சீதையை மணமுடித்துக் கொடுங்கள்'' என்றார்.

அரசர்கள் அழைக்கப்பட்டனர். யாராலும் வில்லை வளைக்க முடியவில்லை. திருராமர் வில்லை வளைத்து சீதையை மணமுடித்தார். பின்னர் உற்றம் சுற்றமுடன் அயோத்தி சென்றார்.

திருராமர் வனவாசம்

அயோத்தியில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்த இராமர் கைகேயினால் தம்பி இலக்குவனுடனும், சீதையுடனும் வனம் சென்றார். காட்டில் சூர்ப்பனகையின் மகனை இலட்சுமணன் கொன்றான். இலட்சுமணனைத் தேடிச் சென்ற சூர்ப்பனகை இராமன் மீதும், இலட்சுமணன் மீதும் மோகம் கொண்டாள். இலட்சுமணர் சூர்ப்பனகையின் மூக்கையும், மார்பையும், முகத்தையும் வடிவிழக்கச் செய்தார்.

சூர்ப்பனகை இராவணனிடம் சென்று, '' இராமனின் மனைவி சீதை பேரழகி. அவள் காட்டில் உள்ளாள். அண்ணா! உனக்காக நான் அவளைப் பிடிக்கச் சென்ற போது என் அழகைக் குலைத்து விட்டனர்'' என்று கூறி அழுதாள். சூர்ப்பனகை கூறியது கேட்டு கோபம்கொண்ட இராவணன் யாசிக்கச் செல்வது போல் இராம,

இலக்குவர் இருக்குமிடம் சென்றான். அந்நேரம் அவர்கள் மான் ஒன்றைப் பிடிக்கச் சென்று இருந்தனர். இராவணனுக்குப் பிச்சையிடச் சென்ற சீதையை அவள் தான் அன்னை இலக்குமி என்று அறியாத இராவணன் சிறையெடுத்துச் சென்றான்.

குடிலுக்குத் திரும்பிய இராம, இலட்சுமணர்கள் சீதையைக் காணாது அழுது புரண்டனர். பின்னர் அவளைத் தேடி அலைந்து துன்புற்றிருக்கையில் அனுமனைக் கண்டனர். அனுமன் துன்பத்திற்கு காரணம் கேட்க, சீதையைப் பற்றி கூறினார்கள். அனுமனுடன் சுக்ரீவன், சாம்புவன் ஆகியோரும் இராமருக்குத் துணையாகவந்தனர்.

அனுமன் தூது

அனுமன் இலங்கை சென்று இராவணனைக் கண்டு, அவன் அச்சம் கொள்ளும்படியாக இராமனின் வல்லமைகளைக் கூறினான். பின்னர் இலங்கையை எரித்தான். இராமனின் மோதிரத்தை சீதையிடம் காட்டி, செய்தி சொல்லி, இலங்கையிலுள்ள சோலைகளை அழித்துஇராமனிடம் வந்து சேர்ந்தான்.

இராமர் படையெடுப்பு

இலங்கை மீது இராமர் படையெடுத்தார். விபீடணன் இராமரிடம் சரணடைந்தான். இராம இராவணப் போர் மூண்டது. இராவணன் படைகளும், பலமும் இழந்து நின்றான். அப்போது இராமர், முற்பிறவியில் நீ இரணியனாகப் பிறந்தாய். நான் உன்மகனாகப் பிறந்து உன்னை வதைத்தேன். அப்போது நீ ஆணவமுடன் பேசியதால் இப்போது உன் நகரை எரித்து, உன்படைகளை எல்லாம் அழித்தேன். மிகுந்த பலமுடைய உன்னையும் இப்பொழுது கொல்கிறேன் என்று கூறினார்.

அதைக் கேட்ட இராவணன், "இராமனாகிய உன்னால் என்னைக் கொல்ல முடியாது. எனது தம்பியாகிய விபீடணன் எனது இரகசியங்களை எல்லாம் உன்னிடம் கூறியதால் தான் என்னை வெல்ல முடிந்தது" என்றான்.

இராவணன் கூறிய ஆணவ மொழிகளைக் கேட்ட இராமர், தம்பியால்தான் வென்றேன் என்று நீ கூறியதால் அடுத்தப் பிறவியில் உன்னை நூறு தம்பிகளுடன் பிறக்கச் செய்து வேறு

ஒருவனைக்கொண்டு உன்னைக் கொல்வேன்'' என்று கூறி இராவணனைக் கொன்று அழித்தார்.

திரேதா யுகம் முடிய இராமராய் பிறந்த திருமாலும், சீதையாக பிறந்த இலக்குமியும் கைலாயம் சேர்ந்தனர்.

துவாபர யுகம்

''குறோணியின் உடல் துண்டில் ஐந்தாவது துண்டை நூறு கூறுகளாக்கி கௌரவர்கள் நூற்றுவராய் இறைவன் பிறக்கச் செய்தார். திருமால் திரேதா யுகத்தில் தன்னுடன் பிறந்த இலட்சுமணன், பரதன், சத்துருக்கனன் ஆகிய மூவரையும், மற்றும் விபீடணனையும், சாம்புவனையும் பஞ்சபாண்டவர்கள் ஐவராய் பிறக்கச் செய்தார். திருச்சடையானவள் துரௌபதியாகப் பிறந்தாள். கும்பகருணனை கஞ்சன் (கம்சன்) ஆக வட மதுரையில் பிறக்கச் செய்தார்.

கஞ்சன் தன் பெற்றோரைச் சிறையிலிட்டும், கொடும் வரிகள் வசூலித்தும், தேவர்களையும் மனிதர்களையும் பலவகையாகத் துன்புறுத்தியும் அரசாண்டான். கஞ்சன் (கம்சன்) கொடுங்கோலாட்சி செய்து வருகையில் தேவருலகில் வாழ்ந்த தெய்வகி, உரோகிணி ஆகிய இருவர் நீராடிவரும் வழியில் திருமால் குழந்தையாய் கிடந்து அழுதார்.

குழந்தையின் அங்க அழகினைக் கண்ட தெய்வப் பெண்கள் அக்குழந்தையை எடுத்துக் கொஞ்சி மகிழ்ந்தார்கள். பின்னர் கைலாயம் எடுத்துச் சென்று நீலகண்டரான சிவபெருமான்காலடியில் வைத்தார்கள்.

குழந்தை மேல் கொண்ட ஆசையால் அவர்கள் மார்பில் அமுது இளகிப் பால் மணம் வீசியது. அதற்கான காரணம் என்ன? என பரமேஸ்வரனார் கேட்டார். பின்னர் பெண்களின் நிலையைக் கண்டு மாயவனாகிய திருமாலினாலேயே இவ்வாறு ஆகியிருக்கவேண்டும் என்று அறிந்தார். பெண்களைப் பார்த்து, 'நீங்கள் பூவுலகில் உள்ள துவாரகையில் பெண்களாகப் பிறந்து திருமாலைக் குழந்தையாகப் பெற்று மகிழுங்கள்' என்று கூறினார்.

தெய்வப் பெண்கள், ''பூலோகத்தில் எங்களைப் படைத்தால் அறிவுடன் படையுங்கள் அல்லது எங்களுக்குப் பிறவி வேண்டாம்'' என வேண்டினர். ''திருமால் உங்களைத் தாயாகப் பெற எண்ணியுள்ளபோது நான் என்ன செய்ய முடியும்? பூலோகத்தில் வாயு மகாதேவன் உங்களுக்குக் கணவனாக இருப்பார். திருமாலும், பகவதியும் பிள்ளைகளாகப் பிறப்பார்கள்.' என உரைத்தார் உலகுடையோன்.

தெய்வகியும், உரோகிணியும் கஞ்சனின் தங்கைகளாகப் பிறந்து பருவம் அடைந்தனர். ஒரு நாள் கஞ்சன் தன் தங்கையருடன் வேட்டையாடச் சென்றான். தவமுனிவர் ஒருவர் உண்ணவிருந்த கனியைப் பறித்துத் தங்கைகளுக்கு கொடுத்தான். அதை அறிந்த முனிவர், 'மங்கையர்களின் மகனால் நீ அழிவாய்' எனச் சாபமிட்டார்.

மேலும் பல பாவங்களைச் செய்த கஞ்சன் தங்கையின் வயிற்றில் பிறக்கும் பிள்ளையால் மரணம் வரும் எனச் சோதிடன் மூலம் அறிந்து தங்கையர்க்கு திருமணம் செய்யாமல் வைத்திருந்தான். இதனை அறிந்த நாரதர் வாழாத பெண்களை வைத்திருந்தால் உண்டாகக் கூடிய கேடுகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, "திருமணம் செய்வித்துப் பிறக்க கூடிய குழந்தைகளாகக் கொன்றாலும் பரவாயில்லை" என்று கூறினார்.

கஞ்சன் தனது குருதேவனான வசுதேவனுக்கு தெய்வகியையும், உரோகிணியையும் திருமணம் முடித்து வைத்தான். பெண்கள் கர்ப்பமுற்ற போது மூவரையும் சிறையில் அடைத்தான்.

கஞ்சனின் கொடுமைகளைக் கண்டு பொறுக்க முடியாத நிலப்பெண்ணும், நீர்ப்பெண்ணும் கூடித்திருமாலைக் கண்டு அவரின் பெருமைகளை எல்லாம் கூறி முறையிட்டார்கள். கஞ்சனின் கொடுமைகளைக் கேள்விப்பட்ட நாராயணன் மனமிரங்கி, 'மகாபாரதம் முடிக்கவும், நந்தனின் குலம் வளரவும், கஞ்சனை அழிக்கவும், துரியோதனன் மற்றும் சராசந்தன் போன்ற அரக்கர்கள் அனைவரையும் அழிப்பதற்காகவும் ஆயர் குடியில் வந்து பிறப்பேன்' என நற்செய்தி கூறினார்.

சிவன் திருமாலை நோக்கி, 'முதலில் கஞ்சனைக் கொல்லும் வழியைக் காணுங்கள்' என உரைத்தார். மேலும் அவர், "வியாசர் முன்னால் எழுதி வைத்தபடி கஞ்சனையும், துரியோதனனையும், சராசந்தனையும், மற்ற தீயவர்களையும் கொன்று மக்களைக்காப்பதற்காக நீங்கள் பூவுலகில் பிறக்க வேண்டும்" என வேண்டினார்.

திருமால் தேவகன்னியர், தாருகா வன ரிசிகள், உருபிணி முதலியோரை உலகில் பிறக்கச் செய்ய வேண்டினார். இந்நிலையில் கஞ்சன் தெய்வகி, உரோகிணி ஆகியோர் வயிற்றில் பிறந்த குழந்தைகளைக் கொன்று வந்தான். ஆயர் குடியில் யசோதை வயிற்றில் பகவதியும், தெய்வகி வயிற்றில் திருமாலும் பிறந்தார்கள். பொழுது விடியுமுன்னர் கண்ணன் பிறந்தான்.

கண்ணன் பிறக்கவும் காவலர் வலுவிழந்தனர். வசுதேவன் விலங்கு அறுபட்டது. கோட்டைக் கதவின் தாழ் தானாகவே திறந்தது.

கஞ்சன் வந்தால் குழந்தையைக் கொன்று விடுவான் என அறிந்த தெய்வகி வசுதேவனிடம் குழந்தையைக் கொடுத்து யசோதையிடம் அனுப்பினாள். வசுதேவன் தெய்வகியின் ஆண் குழந்தையை ஆயர்குடியிலிருந்த யசோதையிடம் கொடுத்து, யசோதை பெற்ற பெண் குழந்தையை எடுத்து வந்து தெய்வகியிடம் வைத்தான்.

தங்கை குழந்தை பெற்றாள் என்பதை அறிந்த கஞ்சன் விரைந்து வந்தான். தெய்வகியிடம் இருந்த பெண் குழந்தையைத் தூக்கி தரையிலடித்துக் கொல்ல முயன்றான். குழந்தையாய் இருந்த பகவதியால் கம்சன் பலமிழந்து நின்றான். அப்போது பகவதியாள், 'உன்னை அழிக்க திருமால் ஆகிய என் அண்ணன் ஆயர்பாடியில் வளர்கிறான்' என்றாள். ஆயர்பாடிக்குச் சென்று குழந்தையைக் கொல்லமுடியாத கஞ்சன் மனம் கலங்கினான். தூதன் ஒருவனை அனுப்பி குழந்தையைப் பார்த்து வரச்சொன்னான். கண்ணனைக் கண்டு வந்த தூதன் கஞ்சனிடம், "குழந்தையிடம் தெய்வகியின் முக அடையாளம் காணப்படுகிறது" எனக் கூறினான்.

கஞ்சன் பூதமொன்றை ஏவி கண்ணனைக் கொல்லத் தூண்டினான். தன்னைக் கொல்ல வந்தோரை எல்லாம் கண்ணன் கொன்றழித்தான். ஆயர் குலக்கொழுந்தாம் கண்ணன் தன்னைக் கொல்ல வந்த அரக்கர்களை எல்லாம் கொன்று, ஆயர்களுக்கு வந்த ஆபத்துகளை நீக்கி நந்தகோபாலனின் மகனாக வாழ்ந்தான்.

கண்ணனை அழைத்து வரும்படி கஞ்சன் ஆள் அனுப்பினான். கண்ணன் தன் நண்பர் புடைசூழச் சென்றான். கண்ணனைக் கொல்ல நினைத்த கஞ்சன் படைகளை ஏவி கொல்லத் தூண்டினான். எல்லாப் படைகளையும் கிருட்டிணர் அழித்தார். இறுதியில் ஆயர்பாடிக்கண்ணனுடன் கஞ்சன் போரிட்டான். போரில் கஞ்சன் கொல்லப்பட்டான்.

திருமால் திரும்பி வரும் வேளையில், 'என் மருமகனைக் கொன்றவன் இவனோ?' என்று கோபத்துடன் சராசந்தன் என்ற அரக்கன் வந்தான். இச்சராசந்தன் வீமனால் தான் அழிக்கப்படவேண்டும் என்ற விதியிருந்தபடியால் கண்ணன் அவனை விட்டுத் துவாரகை சென்றடைந்தார்.

அந்நாளில் கண்ணனின் விருப்பத்திற்குரிய பெண்ணாள் உருபிணியை மற்றொருவருக்கு மணமுடிக்க திட்டமிட்டுள்ளார்கள் என்பதை நாரதர் மூலம் கிருட்டிணர் அறிந்தார். விலை மதிப்பற்ற ஆபரணம் ஒன்று செய்து உருபிணியைத் தூக்கி வந்து மணமுடித்தார். பின்னர் தன் விருப்பத்திற்குரிய பெண்களை எல்லாம் மணமுடித்து கடலால் சூழப்பட்ட துவாரகையில் மகிழ்ச்சியுடன் இருந்தார். அந்நாளில் கௌரவர்கள் நூறு பேரும், பாண்டவர்கள் ஐவரும் பிறந்து வளர்ந்து பலவிதமான கலைகளைக் கற்றுச் சிறந்திருந்தார்கள்.

துரியோதனன் ஆண்ட அத்தினாபுரம் என்ற நகர் அநீதியின் உறைவிடமாய் இருந்தது. பாண்டவர்கள் ஆண்ட குரு நாட்டில் மனிதர்களும், விலங்குகளும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். உலகில் ஒப்பற்ற திருநாடாக அந்நாடு திகழ்ந்தது. துரியோதனன் பாண்டவர் ஐவருடைய நாட்டையும் பறிக்க, அவர்களைச் சூதாட்டத்திற்கு அழைத்தான். வஞ்சனையால் பாண்டவருடைய நாட்டைப் பறித்து ஐவரையும் காட்டிற்குச் செல்ல வைத்தான்.

பாண்டவர்கள் காட்டில் வசிக்கும்போது வியாசர் திருமாலை அணுகி பஞ்சவர்களுக்குத் துணையாகச் செல்லுமாறு வேண்டினார். கண்ணன் பாண்டவர்களிடம் சென்றார். தருமர் கண்ணனை வணங்கி வரவேற்றார். திருமால் பாண்டவர்களை நோக்கி, 'உங்களைக் காப்பேன்' என உறுதிமொழி அளித்தார். திருமால் சூரிய பாண்டம் ஒன்றை வரவழைத்து ஓர் அரிசியை அதிலிட்டு, 'ஐயாயிரம் பேர் வந்தாலும் என்னை நினைத்து இதிலிருந்து எடுக்க எடுக்கத் தேவையான அன்னம் வந்து கொண்டேயிருக்கும்' என வாழ்த்தி வழங்கினார்.

துரியோதனன் பாண்டவர்களுக்கு இழைத்த அத்தனை தீங்குகளிலிருந்தும் கண்ணன் அவர்களைக் காத்தார். வனவாச காலம் முடிந்த பின்னர் பஞ்சவர்களுக்காக கண்ணன் துரியோதனனிடம் தூதனாகச் சென்று, 'சிறிதளவு இடமாவது கொடு' எனக் கேட்டார். ஆணவம் கொண்ட துரியோதனன் மறுத்ததுடன் கண்ணனையும் அவமதித்துப் பேசினான். கோபம் கொண்ட கிருட்டிணர் தருமருக்குப் பொறுமையும், அர்ச்சுனனுக்கு சக்திமிக்க அம்புகளும்,பீமனுக்கு தண்டாயுதமும், சகாதேவனுக்கு சக்தி மூலமும், நகுலனுக்கு நல்ல குதிரைகளும் வாய்க்கச் செய்தார்.

பாரதப் போர் மூண்டது. கண்ணன் செயலால் வீடுமர், துரோணர், சராசந்தன், கீசகன், கர்ணன், துரியோதனனின் தம்பியர் 99 பேர், மற்றும் படைகள் அனைவரும் மாண்டனர்.

துரியோதனன் குளமொன்றில் இறங்கி மாண்டவர்களை எல்லாம் எழுப்ப யாகம் செய்யத் தொடங்கினான். கண்ணன் பீமனை அழைத்து குளத்தில் இறங்கி கலக்கச் சொன்னார். துரியோதனன் வெளிப்பட்டு அர்ச்சுணனைக் கொல்ல வந்தான். வீமன் எதிர்கொள்ள இருவரும் கடும் போர் செய்தனர். துரியோதனனின் வலது தொடையில் அடிக்குமாறு கண்ணன் குறி காட்ட வீமன் தண்டாயுதத்தால் தொடையில் அடித்தான்.

துரியோதணன் உயிர்விடும் வேளையில் கண்ணன் அவனை நெருங்கி, 'முற்பிறப்பில் என் தம்பி விபீடணன் இல்லாமல் என்னைக் கொன்றிருக்க முடியாது எனக் கூறினாய். அதனால் உன்னைத் தொண்ணூற்று ஒன்பது தம்பியருடன் பிறக்கச் செய்து வேறு ஒருவனைக் கொண்டு கொன்றேன்' என்றார்.

அகந்தை அழியாத துரியோதனன், 'தண்டால் அடித்த பீமனால் அல்லாது உன்னால் என்னைக் கொல்ல முடியாது' என உரைத்தான். கோபம் கொண்ட திருமால், 'இன்னொரு பிறவியிலே உன்னைச் சாதாரண மனிதனாக அறிவுடனும், திருவுடனும் பிறக்கச்செய்வேன். அந்த ஏழாவது பிறவியிலும் நீ என்னை நினைக்காவிட்டால் பாழ்நரகில் வீழ்வாய்' எனக் கூறினார். துரியோதனன் மாண்டான். தருமர் பாரதப் போரில் இறந்த அனைவருக்கும் ஈமச் சடங்குகளைச் செய்து முடித்தார்.

திருமால் கர்ணனுக்கு மோட்சம் கொடுக்க முற்பட்டார். வியாசர் குறுக்கிட திருமால், 'முற்பிறப்பில் வாலியாகப் பிறந்தவன் இவன். இராமபாணத்தால் இவன் இறக்கும் வேளையில், அடுத்த பிறவியில் உனக்கு கைலாயம் தருவேன் என உரைத்தேன். மேலும் இவன் 1. இரவலர்க்கு ஈந்தவன், 2. ஒருகணைக்கு மேல் விடேன் என்று அன்னைக்கு வாக்கு அளித்தபடி நடந்த உத்தமன். எனவே முன்னால் உரைத்தபடி கர்ணனுக்கு மோட்சம் கொடுத்தேன்' என்றார் திருமால்.

பாஞ்சாலி குழல் முடித்தாள். பாண்டவர் ஐவரும் திருமாலையும், வியாசரையும் வணங்கி அரசாண்டிருந்தனர். திருமால் திருவரங்கம் சென்று பள்ளி கொண்டார்.

ஆறு யுக வரலாற்றில் மனிதர்களின் படிப்படியான ஆன்மீக வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் விளக்கப் பெற்றுள்ளது. சைவமும், வைணவமும் இணைக்கப் பெற்றுள்ளது. அநீதியின் கைஓங்கிய போதெல்லாம் இறைவன் தோன்றி தீமையை அழித்துள்ளான். இதனால் தர்மம் என்றும் வெல்லும் என்பதை உணர்கிறோம்.

இத்துடன் முதல் ஆறு யுக கால வரலாறு முற்றிற்று. அடுத்து ஏழாவது யுகமான கலியுகத்தில் பூவுலகில் நடைபெற்ற நிகழ்ச்சிகளும், தேவர் உலகில் நடைபெற்ற நிகழ்ச்சிகளும் கூறப்பெறுகின்றன.

கலியன் பிறப்பு

கலி எனப்படுவது பாவம். பாவ எண்ணங்கள், பாவச் செயல்கள் குறிப்பிட்ட ஒருவரிடமோ, ஒரு சமுதாயத்தினரிடமோ மட்டும் இல்லாமல் எங்கும் பரவிக் கிடப்பன. பாவ எண்ணங்களின் செயல்களின் தோற்றத்தையே “கலியன் பிறப்பு” என்னும் பகுதி குறிப்பிடுகிறது. பாவத்தின் ஓர் உருவமாக கலிநீசன் சுட்டப்படுகிறான். இந்த அதிகாரத்தில் கலியைப் பற்றிய செய்திகளே அதிகம் உள்ளதால் ‘கலியன் பிறப்பு’ என்ற தலைப்பு இடம் பெற்றுள்ளது. கலியன் பிறந்த யுகம் கலியுகம்.

கலி பற்றிய செய்திகளும், சான்றோர் பிறப்பு, கலியை அழித்துத் தர்மயுகத்தைத் தோற்றுவிக்க திருமாலின் செயற்பாடுகள் ஆகியனவும் இவ்வதிகாரத்தில் இடம் பெறுகின்றன.

சான்றோர்

‘சால்பு’ என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது ‘சான்றோர்’ எனும் சொல். சால்பு என்னும் குணத்தையுடைய பெரியோர்களையே அகிலத்திரட்டு சான்றோர் எனக் குறிப்பிடுகிறது. அத்தகைய சான்றோரின் பிறப்புப்பற்றி அகிலத்திரட்டு ஒரு வரலாற்றினைக் கூறுகிறது.

கிழக்கில் புட்டாபுரமும், மேற்கில் பூங்காவும், தெற்கில் திரிகோணமும், வடக்கில் செங்காவும் எல்லைகளாகக் கொண்டது அயோக அமிழ்தவனம். அவ்வனத்தில் அமிழ்தகங்கை என்னும் நீர்த்தடாகம் இருந்தது.

மரகதம், வல்லி, வள்ளி, சரிகை, சரகதக்கன்னி, சரிதை, அரிமடவு என்னும் ஏழு பெண்கள் அந்நீர்த்தடாகத்தில் நீர் விளையாடி மகிழ்வர். பின்னர் அமிர்த கங்கை நீரைத் தங்கள் கற்பின் வலிமையால் வெண்ணெய் போலத் திரட்டி எடுத்துச் சென்று சிவபெருமானுக்கு நீராட்டி வழிபடுவதை அப்பெண்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஏழு தெய்வகன்னியர் என அகிலத்திரட்டில் அழைக்கப்பெறும் இப்பெண்கள் ‘சப்தமாதர்’ என இந்து மக்கள் அனைவராலும் பரவலாக பேசப்படுகின்றனர்.

ஏழு கன்னியர் பற்றி 'சப்த மாதர்கள்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்து வரும் செல்வி ஆ.பூமா அவர்கள் நேரடி பேட்டியின்போது சில தகவல்களைத் தந்தார்கள்.

சிந்து சமவெளி நாகரிகம் பற்றிய அகழ்வாராய்ச்சியின்போது கிடைக்கப்பெற்ற ஒரு சிவலிங்கத்திற்கு அருகில் ஏழு பெண்களின் உருவங்கள் காணப்பெற்றன.

இதிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே 'சப்தமாதர்கள்' வழிபாட்டுத் தொடர்புடையவர்களாக இருந்தார்கள் எனத்தெரிகிறது. ஆதிச்சநல்லூர் கல்வெட்டுகளில் புடைப்புச் சிற்பங்களாக ஏழு பெண்களின் உருவங்கள் காணப்பெறுகின்றன.

மாயவரத்திற்கு அருகில் உள்ள சிறிமுட்னம் (Sri mushnam) என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ள 'பூவராகவர்' என்னும் பெருமாளுக்குரிய தேவியின் தோழிகளாக ஏழு பெண்களின் உருவங்கள் காணப்பெறுகின்றன.

சென்னை, சைதாப்பேட்டை, பரங்கிமலை சாலையில் அமைந்துள்ள இளங்காளியம்மன் ஆலயத்தில் ஏழு அண்ணன்மார்கள் உருவங்களுடன், சப்தகன்னியர் உருவங்களும் காணப்பெறுகின்றன.

சென்னை, வேளச்சேரியில் பல்லவர் காலத்திற்கு முற்பட்ட செல்லியம்மன் கோயில் உள்ளது. இது பழங்காலத்தில் சப்தமாதர்களின் கோயிலே எனத் தெரிகிறது.

சென்னை, அசோக் நகரிலுள்ள, அசோகர் நினைவுத்தூணுக்கு அருகில் 'சிறி பிடாரி' என்னும் நவசக்தி காளியம்மன் கோயில் அமைந்துள்ளது. இங்கு விநாயகர் சிலைக்கு அருகில் சப்தமாதர்களுக்குத் தனித்தனி சிலைகள் காணப்பெறுகின்றன.

'சப்தமாதர்கள்' பற்றி ஆய்வு செய்யும் செல்வி ஆ. பூமா அவர்கள், "ஏழு கன்னியர் அன்னை காளியிடத்திலிருந்து தோன்றியவர்களே எனக் கூறுகின்றார்."

"ஏழு கன்னியர் 'கன்னியர்' என திருநெல்வேலி பகுதிகளில் கூறப்பெறுகின்றனர். சங்க இலக்கியங்களில் கூறப்பெறும் 'சூரமகளிர்' சப்த கன்னியராக இருக்கலாம். சிலப்பதிகாரத்தில் அறுவருக்கு இளையநங்கை எனகூறப்பெறும் பிடாரியுடன் சேர்த்துத்

தெய்வமங்கையர் எழுவர் ஆகின்றனர். கி.பி. ஐந்து முதல் கி.பி. பத்து வரை கன்னிமார்வழிபாடு பெருவழக்காக இருந்தது. திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் சப்தகன்னியர் காட்சி தருகின்றனர். திருநெல்வேலிப் பகுதிகளில் ஏரி மற்றும் ஆற்றங்கரைகளிலும், ஐயனார் கோயில்களிலும் சப்த கன்னியர் கோயில்கள் உள்ளன. உருவங்கள் கல்லாலும், சுதையாலும் அமைக்கப்பெற்றிருக்கும். ஏழு பீடங்களாக அமைக்கப்பெறுவதும் உண்டு.

சப்த கன்னியர் வரலாறு அகிலத் திரட்டு கதையுடன் ஒத்துள்ளது. சப்த கன்னியர் மழைத்தெய்வம் எனப்பெறுவதும் உண்டு. நாடார்கள் தங்களை சப்தகன்னியரின் புதல்வர்கள் எனக் கூறி வணங்குவர்.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கடம்பர்கள் தங்களை சப்தகன்னியர் புதல்வர்கள் எனக்கூறி வழிபட்டார்களாம். சாளுக்கிய மன்னர்களிடமும் இவ்வழக்கம் உண்டாம்" என்று சென்னையிலிருந்து வெளிவரும் 'நாடார் முரசு' இதழ் கூறுகிறது.

இதுகாறும் கூறிய செய்திகளிலிருந்து நீண்ட நெடுங்காலமாக திராவிடர்களிடம் சப்த கன்னியரை வழிபடும் வழக்கம் இருந்தது எனத் தெரிகிறது.

"இராமன் ஓர் அம்பினால் ஏழு மராமரங்களைத் துளைத்தான். அதனைக்கண்டு ஏழு என்ற எண்ணுடையவை அனைத்தும் அஞ்சின. ஏழு என்ற எண்ணுடைமையால் ஏழு மாதர்களும கலங்கி நின்றார்கள்" என கம்பராமாயணம் கூறுகிறது.

கங்கை திரட்டி சிவனுக்கு அபிடேகம் செய்த பெண்களிடம் திருமால் தன்னையும் நீராட்டும்படி வேண்டினார். கன்னியர், 'எருதேறி நித்தம் இறவாதிருக்கின்ற ஒருவனுக்கேயன்றி வேறுயாருக்கும் ஊழியங்கள் செய்வதில்லை' என்று மறுத்துவிட்டனர். திருமால், 'திருவோட்டிலே பிச்சை எடுத்து உண்ணும் ஆண்டிக்கு மட்டுமேயன்றிப் பாற்கடலிலே பாம்பணையில் பள்ளிகொள்ளும் காண்டீபனுக்கும் ஏவல் செய்வதில்லை என்று சொல்லிவிட்டீர்கள். இனி நீங்கள் நீரைத் திரட்டுவதைப் பார்ப்போம்' என சூளுரைத்தார்.

சூளுரைத்த மாயன் பரலோகம், பூலோகம், தெய்வலோகம், வைகுண்டலோகம், சிவலோகம், வானலோகம், பிரம்லோகம் ஆகிய ஏழு உலகங்களிலிருந்தும் ஏழு உயிர்களை எடுத்து தன் இதயத்திலே சேர்த்தார்.

ஏழு உலகிலிருந்து ஏழு உயிர்களை எடுத்து அவற்றைப் பூவுலகில் பிறப்பிக்க திருமால் முனைந்தார் என அகிலத்திரட்டு கூறுவதிலிருந்து, அகிலத் திரட்டு ஏழு உலகங்களையும் பூவுலகில் அடக்கும் கொள்கையைக் காண்கிறோம்.

பின்வரும் பகுதியில் ஏழு உலகத்திலும் வாழ்ந்த தேவர்கள் முனிவர்கள் அனைவரையும் வைகுண்டர் பூவுலகில் பிறக்கச் செய்ததைக் காணலாம். இவ்வாறாக அனைத்து உலகங்களையும் வைகுண்டர் பூவுலகுக்குள் அடக்கிவிட்ட திறனை அகிலத்தில்காண்கிறோம்.

ஏழு கன்னியரை மனதில் எண்ணிய திருமால் அக்னிப் பிழம்பாய் அமிர்த கங்கை அருகில் வந்து நின்றார். ஏழு பெண்களும் நீராடி வெளிவரும்போது கடுங்குளிர் உண்டாயிற்று. குளிர் தாங்காத தெய்வப் பெண்கள், மாயனின் மாயம் உணராது அக்னியைச் சூழ்ந்திருந்து குளிர்காய, ஓங்கார மோகத்தால் கருவுற்றார்கள். ஏழு பேரும் ஏழு பிள்ளைகளைப் பெற்றார்கள். மனங்கலங்கி நின்றார்கள்.

பெற்ற பிள்ளைகளைப் பெற்ற இடத்திலேயே வைத்துவிட்டு ஆடை உடுத்தி, இறைவனுக்காக நீரைத் திரட்டியபோது நீர்திரளவில்லை. கற்பை இழந்தோம் என மனங்கலங்கிக் கண்ணீர்சிந்தி, 'எங்கள் கற்பை அழித்தவர் வந்து மாலையிடவேண்டும்' என்று சிவபெருமானை நோக்கித் தவம் செய்து காட்டிலேயே தங்கினார்கள்.

திருமால் தாம் பெற்றெடுத்த பிள்ளைகளை எடுத்து, 'யாரிடத்தில் இந்தப் பிள்ளைகளை அடைக்கலமாகக் கொடுக்கலாம்' என்று சிந்தித்தார். பின்னர் வேய்ங்குழலை எடுத்து ஊதி தேவேந்திரனின் பசுக்களை வரவழைத்து குழந்தைகளுக்குப் பாலூட்டினார்.

காளி வரவு

அக்காலத்தில் ஆண்களால் அழிக்கமுடியாத வரம் பெற்ற தக்கன் என்ற அரக்கன் பெரும் கொடுமைகளைச் செய்து வந்தான். தக்கனை அழிக்குமாறு மாகாளிக்குச் சிவபெருமான்கட்டளையிட்டார். காளிதேவி, "எனக்குப் போர்த்துணையாகவர புதல்வர்களைத் தாருங்கள்" எனக் கேட்டாள். அரனார், 'காளியாகிய நீ பிள்ளைகளைப் பெற விதியில்லை. திருமாலை நாடி நீ கேட்பாயானால் அவரது விந்து வழியில் பிறந்த பிள்ளைகள் எழுவரையும் தருவார்' என வழிப்படுத்தினார்.

காளியாகிய தேவி திருமாலை வேண்டித் தவம் செய்தாள். அச்சுதன் அதை அறிந்து தன் பிள்ளைகளைக் கொடுத்தார். அப்போது காளி அன்னை, 'மாதவனே! இக்குழந்தைகளுக்கு பேரிட்டுக் கொடுங்கள்' எனக் கேட்டாள்.

திருமால் சிவன், பிரம்மா, தேவர்கள், முனிவர்கள் ஆகிய அனைவரையும் வரவழைத்து வேதங்கள் ஓதி, வாத்தியங்கள் முழங்க குழந்தைகளுக்குப் பெயரிடுமாறு அவையோரைக் கேட்டுக்கொண்டார்."

"சிவபெருமான் குழந்தைகளுக்கு 'சாணார்' என்று பெயரிட்டார். இதனை அகிலத் திரட்டு,

> தோணாப் பொருளைத் தொடர்ந்து கண்ட மன்னவர்க்கு
> சாணார் என நாமம் சாற்றினார் ஈசுவரர்

என்று கூறுகிறது. காண்பதற்கு அரியவனான இறைவனை அரிதின் முயன்று கண்டவர்கள் சாணார்கள் என்பது இதன் பொருள்.'

முற்காலத்தில் இறைவன் மீது பற்றுக் கொண்ட பல பழந்திராவிட இனத்தவர்கள் 'சாணார்' என அழைக்கப்பட்டதாக வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். இதன்மூலம் 'சாணார்' என்றால் சிவனடியார் என்று கூறிக்கொள்ளலாம். குழந்தைகளுக்கு சிவன்பெயரிட்டபின் சரசுவதி 'வெள்ளானை வேந்தர்' என்றும், பிள்ளையார் 'நகுலவேந்தர்' என்றும், சண்முகன், 'தவலோகமன்னர்' என்றும், வானோர்கள், 'தர்மகுலவேந்தர்' என்றும், 'சூரியகுலவேந்தர்' என்றும் இவ்வாறாக பலரும் பல புகழ்ப் பெயர்களைச் சூட்டினார்கள்.

பெயர் சூட்டிய பின்னர் அன்னை சரசுவதி தாலாட்டினாள். குழந்தைகளுக்குச் சேனை நீராக ஊட்டுவதற்காக அமுதம் கொண்டு வரும்படியாக தேவர்களை வானுலகிற்கு அனுப்பினார்கள். தேவருலகில் பல நூல்களைக் கற்ற வேதியன் ஒருவனும், அவன் மனைவியும் அமுதம் முழுவதையும் குடித்தும், மேலும் கீழும் கொட்டியும் கொழுத்துக்கிடந்தனர். தேவர்கள், 'சிவனும்திருமாலும் அமுதத்திற்காகப் பூவுலகில் காத்திருக்கின்றார்கள். நீங்கள் வந்து அவர்களுக்குப் பதில் கூறுங்கள்' எனக் கூறிவேதியனையும், அவன் மனைவியையும் இழுத்துவந்து சிவன், திருமால் முன் நிறுத்தினார்கள்.

பரமேசுவரன் வேதியர்களை பனை மரங்களாக நட்டும்படி ஆணையிட்டார். தேவர்கள் அவ்வாறே நட்டார்கள். வேதியர்கள் பனை

மரங்களாயினர். பரமசிவன் சான்றோர்களை நோக்கி, 'இப்பனை மரங்களில் ஊறும் அமுதை உண்டு வாழுங்கள்' எனச் சான்றோர்களுக்கு வாழ்த்தி வழங்கினார்.

திருமால் காளியை அழைத்து, 'இப்பாலகர்களுக்கு எல்லாவிதமான கலைகளையும் கற்பித்து இவர்கள் உயிரையும் காத்து வளர்த்துத்தருவாயாக! குழந்தைகளுக்கு தீங்கு ஏற்பட்டால் உன்னைச்சிறையில் வைப்பேன்' என்று கூறிக் குழந்தைகளை அன்னை பத்திரகாளியிடம் ஒப்படைத்தார். சான்றோர்களின் வளர்ப்பு அன்னை பத்திரகாளி என்று அகிலத்திரட்டு கூறுகிறது. திராவிடர்களின் ஆதி தெய்வமாக அன்னை தெய்வமே வணங்கப்பட்டதை அனைவரும் அறிவர். தமிழ்நாட்டுக் கிராமங்கள் அனைத்திலும் அன்னை தெய்வமே ஆதி காலம் முதல் கோயில்கொண்டு இன்றும் வணங்கப்பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கதது.

குழந்தைகளைப் பத்திரகாளியிடம் ஒப்படைத்த திருமால் திருவரங்கம் சென்றார். திருமால் வந்தபின் திருவரங்கம் செழித்தது. உயிர்கள் மகிழ்ந்து வாழ்ந்தன. அந்தணர்கள் குற்றம் இல்லாமல் பூசை செய்தார்கள். திருமால் மகிழ்ச்சியுடன்இருந்தார். அன்னை பத்திரகாளி, சான்றோர்களுக்குப் பலவித போர்க்கலைகளையும் அறிவுக் கலைகளையும், கற்பித்து வளர்த்துவந்தாள். பின்னர் விட்ணு குமாரர்களுடன் தக்கன் மீது படையெடுத்து அவனை அழித்து மீண்டும் புட்டாபுரம் வந்து இனிதுவீற்றிருந்தாள்.

திருமாலின் பாலகர்கள் வாலிபப் பருவம் அடைந்தார்கள். அவர்களுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று நாரதர் மூலமாக அன்னை பத்திரகாளி பெண்களைத் தேடினாள். நாரதர் நிருபத மகராசனின் ஏழு பெண்களைச் சான்றோர்களுக்குத் திருமணம் பேசி முடித்தார். காளியின் பிள்ளைகளுக்கும், நிருபதமன்னனின் பெண்களுக்கும் திருமணம் கோலாகலமாக நடைபெற்றது.

அன்னை மாகாளி சான்றோரான பாலகர்களுக்கு மாளிகைகள் கட்டி வாழவைத்தாள். மாளிகைகளில் மகிழ்ந்திருந்த சான்றோர்களின் பத்தினிகள் பிள்ளைகளைப் பெற்றார்கள். சான்றோர்கள் பலவிதமான வியாபாரங்கள் செய்தும், பனையிலிருந்தது பாலமுது எடுத்தும், இன்னும் பலவிதமான தொழில்கள் செய்தும் வாழ்ந்திருந்தார்கள்.

சோழ மன்னன் சான்றோர்களைப் பல விதமாகப் பெருமைப்படுத்தியும், நாட்டில் பங்கு கொடுத்தும் மகிழ்ச்சியுடன் வைத்திருந்தான். சோழனுக்காக சான்றோர்கள் பலபோர்களில் ஈடுபட்டு வெற்றி கண்டு மகிழ்ந்திருந்தார்கள்."

கலி நீசன் பிறப்பு

கலி எனப்படுவது பாவம். பாவச் செயலைச் செய்பவன் நீசன். எனவே பாவச் செயலை உடையவன் கலி நீசன் எனப்பட்டான். ஒருவன் தீய எண்ணங்களாலும், தீய செயல்களினாலும் கலிநீசன் ஆகிறான். பாவச் சிந்தனைகளும், செயல்களும், உடைய மனிதனின் தோற்றத்தையே கலிநீசன் பிறப்பு என அகிலத்திரட்டு குறிப்பிடுகிறது.

திருமாலுக்குத் தெரியாமல், அவரைக் கலந்து கொள்ளாமல் கலிநீசனை பிறவி செய்தமைக்காக கோபங்கொண்ட திருமால் திருச்செந்தூர் விட்டு கையிலை சென்று சிவபெருமானிடம்பேசும்போது,

மெலிவெல்லாந் தீர்த்து மேவி ஸ்ரீரங்கமதில்
இனிதிருக்கும்போது யென்னை நினையாமல்
மனிதனையும்பூமிதனில் வகுத்ததென்ன சொல்லுமென்றார்.

இவ்வடிகளிகளிலிருந்து பாவங்களையுடைய மனிதனையே கலி நீசன்என அகிலத் திரட்டு குறிப்பிடுகிறது என்பதனைத் தெள்ளத்தெளிவாக புரிந்துகொள்ளலாம்.

பாவங்களை உடையவன் நீசன். பாவங்களிலிருந்து விடுபட்டவன் ஈசன். மனிதனைப் பாவங்களிலிருந்து விலக்கி ஈசன் என்னும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்வதே வைகுண்ட அவதாரத்தின் நோக்கம். கலியை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டு வைகுண்டர் கலியுகத்தில் அவதரிக்கிறார்.

மகாபாரதம் மனிதர்களின் பாவச் செயல்களின் தொடக்கத்தையே கலியுகம் பிறந்ததற்கான அடையாளம் எனக் கூறுகிறது. மேலும் அகிலத் திரட்டு உலகில் கலி வந்ததால் ஏற்பட்ட சீர்கேடுகளை,

இழந்தகலி தோன்றி இவன்சென்றானவ்வுகத்தில்
கலியனவன் செல்லக் கைமறந்தவ்வுலகில்
பொலிவுள்ள தர்மம் பொன்றிச்சேநீதமது

முன்னிருந்த சாஸ்திரமும் முறையுமிகத்தவறி
பின்னுதித்தநீசன் பிரித்தான்காண் வெவ்வேறாய்
ஆனதால் பூலோகம் அழித்துமிகத்தவறி
ஊனமடைந்தார் உலகிலுள்ள சான்றோர்கள்.
தந்திரமந்திரத்தாற் சான்றோரைத் தான் மயக்கி
பந்தியழித்ததினால்ப் பத்தினியாள் பெற்றமக்கள்
ஒண்ணுக்குளொன்று எதிர்த்தொத்து மிகவாழாமல்
பெண்ணுக்கு ஆணும் பிரிவுமுறிவாகி
தாய்க்குதான் பிள்ளை தாளாமலேபேசும்
வாய்க்குவாய் சொன்னாலும் மங்கை நல்லாளென்றிடுவார்
பிதாவை மிகநம்பார் புண்ணியமென்றேபாரார்
இதாகவெல்லாம்நீசன் இடறுவரச் செய்தான்காண்

என்று விளக்குகிறது.

அகிலத் திரட்டில் கலியன், நீசன் என்ற சொற்கள் ஒரு தனி மனிதனையோ, ஒரு இனத்தவரையோ கட்டவில்லை. மாறாக, தீயஎண்ணம் கொண்டோரையும், தீயச் செயல் செய்வோரையுமே அகிலத் திரட்டு கலியன் என்றும், நீசன் என்றும் காட்டுகிறது.

சான்றோர் இருவரை சோழன் கொன்ற வரலாற்றை சொல்லவந்த 'அகிலம்' கலியன் வரவால் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களாக

பூலோக மெல்லாம் பொய்யான மாகலியன்
மாலோ சனையிழந்து மாறியே மானிடவர்
சாதி யினம்பிரித்துத் தடுமாறி மானிடவர்
ஊதி னங்களாக ஒன்றுக்கொன் றேயெளியதாய்
பிரட்டுருட்டாய் மானிடரைப் பெலமுள்ளோர் தாமடித்து
மருட்டும் புரட்டுடனே மாநீச னாளுகையில் ....

என்று விவரிக்கின்றது. கலி என்னும் பாவத்தால் வேதனுக்கு உகந்த வேதியர்கள் கூட நிலை தடுமாறினார்கள் என்பதை அகிலம்

அப்படியேமாயன் அவர்ஸ்ரீரங்கமதில்
இருக்கும்பொழுது இரணியநீசக் கலியன்
கருக்காகலோகங் கண்டவிடமே பரந்து
ஸ்ரீரங்கமானதிலே சேர்ந்திருக்கும் வேதியர்கள்
நீதங்குழறி நெறிதவறிப்போனதினால்

முறைவைத்த பூசை முந்திமுறையெனவே
மறையவனும் பூசை வந்தே முகித்திடவே
பொறாமல் மற்றொருவன் பூசையெனக்கென்று சொல்லி ....

என்று கூறுகிறது.

திருவரங்க வேதியர்கள் பொருளீட்டுவதற்காக ஒருவருக்கொருவர் சண்டையிட்டார்கள். வேதியர்கள் நிலை தவறியதைக் கண்ட திருமால் திருவரங்கத்தில் இருக்க மனமில்லாது திருவனந்தபுரம் நோக்கிப் புறப்பட்டார்.

கலி என்றால் ஒரு குறிப்பிட்ட உயிரோ, உருவமோ அன்று என்றுகூறி அக்கலியை அழிக்க வழியையும் அகிலத்திரட்டு கூறுகிறது.

கலியென்றால் எலியல்லவே கணையாளி வேண்டாமே
வலிமாய நினைவு மாய்மால மென்மகனே
ஆனதாலாயுதங்கள் அம்புதடி வேண்டாமே
மானமாக விருந்தால் மாளுங்கலி தன்னாலே

அனைவரும் ஒழுக்கமுடன் வாழ்ந்தால் கலி தானாக அழியும்.

கலியினால் ஐம்பத்து ஐந்து ரிஷிமார்கள் ஐம்பத்தைந்து வகையான பாவங்களைச் செய்கிறார்கள். பூவுலகில் சென்றால் பாவ எண்ணங்கள் தங்களைப் பற்றிக் கொள்ளுமோ எனத் தேவர்களும் அஞ்சுகிறார்கள். நல்ல உயிரினங்களும், தாவரங்களும் பாவத்தைக் கண்டு உலகை விட்டே மறைகின்றன. உலகில் பாவம் நிறைந்தது. பாவம் உலகில் நிறைந்த காலமே கலியுகம்.

பாவங்களை அகற்றித் தர்மம் மலரச் செய்ய வேண்டும் என எண்ணுகிறார் திருமால். பாவத்தை அழிப்பதற்கான வழிவகைகளைத் தேடி பாடுபடுகிறார். பாவங்கள் இல்லாத தர்மயுகத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்பதே வைகுண்டரின் குறிக்கோள். பாவம் என்னும் கலியுடன் போராடித் தர்மயுகத்தைத் தோற்றுவிக்க வைகுண்டர் பாடுபடும் வரலாற்றைக் கூறுவதே அகிலத் திரட்டு.

உலகில் மானிடர் மனதில் பாவ எண்ணங்கள் இருந்தே ஆகவேண்டுமென்பது கட்டாயமில்லை. பாவச் செயல்கள் நடந்துதான் ஆக வேண்டும் என்பதும் விதியில்லை. பாவங்கள் இல்லத மானிட சமுதாயம் உருவாக முடியும். அச்சமுதாய வாழ்வுமலரும் காலமே தர்மயுகம். தர்மயுக இலக்கை நோக்கி மனிதர்களை வழி நடத்துவதே அகிலத் திரட்டின் குறிக்கோள். இனிக் கலியுக வரலாற்றினைக் காண்போம்.

ஆறு யுகங்களில் ஆண்டவனை நினையாததினால் அசுரர்களைத் திருமால் அழித்தார். 'இறைவனே, குறோணியின் உடல் துண்டில் ஒன்று எஞ்சியுள்ளது. அத்துண்டினை இந்த யுகத்தில் பிறக்கச்செய்யுங்கள்' என்று குருமுனிவர் சிவனிடம் வேண்டினார்.

ஈசன், 'அசுரனைப் பிறவி செய்ய வேண்டுமென்றால் மாயவனார் வரவேண்டாமா?' என்று கேட்டார். முனிவர்கள், 'திருமால் தனது அடுத்த பிறவிக்காக தவசு புரிய கீழ் உலகம் சென்று மெய்ஞானநிலையில் இருக்கிறார்' என்று கூற சிவபெருமான், வசிட்டர், கிணநாதர், கிம்புருடர் முதலான தேவர்களை எல்லாம் வரவழைத்தார். தேவர்களும் திருமால் பூவுலகில் இறந்துகிடப்பதாகக் கூறினார்கள்.

எனவே சிவபெருமானும், தேவர்களும் அசுரனைப் பிறக்கச் செய்ய எண்ணி இருக்கும் போது பிண்டத்தை துளைத்துக் கொண்டு தலை கீழாகவும், கால் மேலாகவும் நீசன் வந்து பிறந்தான். நீசனே கலியன்.

நந்தி வரவு

நீசன் தலை கீழாகப் பிறந்ததைக் கண்டு அனைவரும் வியப்படைந்தார்கள். சிவனும் தன் இடத்தை விட்டு எழுந்து வந்து நீசன் பிறப்பைப் பார்க்கலாம் எனப் புறப்பட்டார்.

எதிர்ப்பட்ட நந்தி, 'இறைவனே! நீங்கள் உங்கள் இருப்பிடத்தை விட்டு எழுந்து இங்கு வந்ததேன்?' என்று கேட்டார். சிவபெருமான் தலைகீழான பிறப்பை காண வந்தேன் என்றார். நந்தியார், 'நிலை அழிந்தது அங்கு அல்ல. தாங்கள் தங்கள் இடத்தை விட்டு எழுந்து வந்ததினாலேயே நிலை அழிந்தது. இதனால் குலம் அழியும், நாட்டில் கலகம் உண்டாகும், ஒழுக்க முறைகள் அழியும், மழையும் அரச நீதியும் குன்றும், வேதங்களிலும் குற்றம் உண்டாகும்' என்று கூறி சிவனை அழைத்து கயிலாயம் சென்றார். கயிலாயத்தில் பரமசிவனார் சித்திர புத்திரனை அழைத்து, 'நடந்த விவரம் என்ன? நூல்களைப் புரட்டி விவரம் கூறு' என்று கேட்டார்.

சித்திரபுத்திரனார், 'குறோணியின் உடல் துண்டில் கடைசித் துண்டே இவ்வாறு பிறந்துள்ளது. இதுவரை பிறந்த அசுரர்களில் இவனே கொடியவன். இரணியனை வதைக்க நான்கு முழ உயரத்துடன், சிங்க முகத்துடன் திருமால் எடுத்த உருவ அளவாக கலியன் பிறந்துள்ளான்.

இவனுடைய அசுர வேகத்தால் பிண்டம் வெடித்துள்ளது. தாய், தந்தையர் உறவால் மகனாகப் பிறக்காமல் தானாய் பிறந்தமையால் இவனது தத்துவங்கள் தொண்ணூற்றாறும் கொடுமையான குணங்களே ஆகும். இவனுக்குப் புலன்கள் ஐந்து. இவனது கண்கள், கால்கள், தலை அனைத்தும் நீசமானவை. இவனது உடலுக்கு ஆயுள் நூறு ஆண்டுகள்' என்று நீசனைப் பற்றி விளக்கம் அளிக்கும் சித்திரபுத்திரர் மேலும்,

> **மாயக் காயமதுக்கு வருசமொரு நூறிருப்பு**
> **தோயநாதத் துளிரு தொகைபத்துநூ றாயிரந்தான்**
> **வாழ்வுவந்து சேர்க்கை வருசம் பதினாறு**
> **தாழ்வு தசைநரம்பு சனித்தமுப்பத் தோராண்டில்**
> **ஆர்க்கை நரம்பு அடைக்கு மெலும்புடனே**
> **மூர்க்கைத் தசையும் உதிரப் புனலுடம்பும்**
> **மன்தண்ணீ ரோடே வகைக்காகாப் பாண்டமிது**
> **வின் பரந்த வீடு வெளிவீடு ஒட்டலுமாய்**
> **ஒட்டை மடத்துக்கு ஒன்பது பொந்துடனே**
> **வீட்டைப் பிரித்தால் விறகுக்கு மாகாது**
> **விசையிட்டு ஆட்டும் வித்தாரப் பாவையிலும்**
> **பசையிலாப் பாவையிது பட்சியொன் றாடிவரும்**
> **பட்சிக்கு காயம் பகைத்துக்கிட்ட முட்டுகையில்**
> **குச்சியைக் கீழப்போட்டு குதித்தோடு மக்குருவி**
> **இக்குருவிக் கூடு இவன் மணிய மீசுரரே**
> **அக்குருவி யேகும் அவ்வளவு மிந்நீசன் ......**

என்று நீசனின் உடல் இயல்பையும், உயிர் இயல்பையும் கூறுகிறார். நீசனின் உடலாகிய பாண்டம் ஒன்றுக்கும் உதவாதது. அதில் ஒன்பது துவாரங்கள் உண்டு. அந்த ஒட்டலாகிய வீட்டைப்பிரித்தால் ஒன்றுக்கும் உதவாது. விசையினால் ஆடுகின்ற பொம்மை போன்ற உடலில் உயிர் ஆகிய பறவை யொன்று ஆடும். உயிராகிய பறவைக்கு இறுதி வரும் போது குச்சியாகிய உடலைக் கீழே போட்டு விட்டு உயிர்க் குருவி பறந்தோடிவிடும் என்பது அகிலத்திரட்டு கூறும் நீசனின் உடல், உயிர் இயல்பாகும்.

இவ்வாறு நீசனின் உடல், உயிரியல்பாக அகிலத் திரட்டு தரும் விளக்கம் முற்றிலும் மனித உடல், உயிர் இயல்புக்குப் பொருந்துவதைக் காண்கிறோம். எனவே கலியன் பிறப்பு என்பது மனிதப் பிறப்பையே சுட்டுகிறது என்பது மீண்டும் உறுதிப்படுகிறது.

சித்திரபுத்திரர் மேலும் நீசனின் கொடிய குணங்களை விளக்கினார். சிவபெருமான் காலன், தூதன், எமன் ஆகியோரை அனுப்பி நீசனை அழைத்து வரச் சொன்னார். அவர்கள் திரும்பிவந்து நீசனின் தலை பூமிக்குள் சிக்கி வெளிவர முடியாமல் தவிக்கிறான் என்று கூறினார்கள்.

சிவனார், 'கவ்வை ஒன்றைச் செய்து நீசனின் தலையைக் கவ்வையால் எடுத்து வெளியே வையுங்கள்' என்று சொன்னார். நந்நீசுவரனார் சென்று கவ்வை கொண்டு நீசனைத் தூக்கி வெளியே வைத்தார். வெடித்த பூமி மீண்டும் பொருந்தியது. பின்னர் நீசனை இழுத்துவந்து சுவாமியிடம் விட்டார்கள்.

"உனக்கு வேண்டியதெல்லாம் என்னிடம் கேள்" என்றார் ஈசுவரர். நீசன், 'அப்படியானால் என்னுடைய உடல் அளவாக அழகிய பெண் ஒருத்தியைப் படைத்துத் தாருங்கள்' என்றான். சிவன் அம்மை பார்வதி கூறியபடி நீசனின் விலாவில் ஒரு எலும்பைத் தட்டிக் கழற்றி அதற்கு உயிர் கொடுத்து ஒரு பெண்ணாகப் படைத்தார். அப்பெண் நீசன் நினைத்தது போலவே பேரழகு உடையவளாக இருந்தாள்.

அழகிய பெண்ணைக் கண்டதும் அருகில் உள்ளோர் நினைவுமின்றி கட்டியணைத்து முத்தமிட்டு, கொஞ்சி தன்னை மறந்திருந்தான் நீசன். தேவர்கள், 'இப்போது உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்' என்று கூறினார்கள்.

மாநீசன், திருமாலின் திருமுடியையும், சக்கரத்தையும் பின்னர் அரனின் வெண்ணீர், அந்தணனின் பிறப்பு, சக்திமூலம், சிவமூலம், தவமூலம், இலட்சுமி மூலம், காலனின் மூலம், காமாட்சி மூலம்,சரசுவதி மூலம் இப்படியாக எல்லா தெய்வங்களின் ஆற்றலையும் கேட்டான். பின்னர் கூடு விட்டுக் கூடு பாய்தல் முதலிய சகல சித்து ஆற்றல்களையும் கேட்டான். மேலும் சகலவிதமான மந்திர, தந்திர ஆற்றல்களையும் கேட்டான். மந்திர ஆற்றலுடைய குளிகைகளையும் கேட்டான். ஆயுதங்களின் ஆற்றலைத் தடுக்கும் தந்திரம், விலங்குகளை அடக்கி ஆளும் தந்திரம் ஆகியவற்றையும் கேட்டான். பேராசை கொண்ட நீசன் ஒன்பது வகையான செல்வங்களையும் தந்து பெண்ணுடன் மகிழ்ந்து, பிள்ளைகளைப் பெற்று உறவினர் சூழ, மனைவியை எப்போதும் மறவாமல் புத்தியுடன் வாழவும் வரம் தர வேண்டும் என்று சிவனிடம் கேட்டான்.

நீசன் கேட்ட வரங்களை எவ்வாறு அளிப்பது என்று நினைத்த சிவபெருமான் சூத்திரசித்தன் என்னும் அகத்தீசுவரனைப் பிறக்கச் செய்தார். நீசன் கேட்ட அனைத்தும் அறிந்த அகத்தீசர் அனைத்தையும் கொடுத்தார். சிவன் ஆணைப்படி நீசனுக்குவரங்களைக் கொடுத்த அகத்தீசுவரர்,

வசமாகும் வித்தை மரணம் வரா வித்தைகளும்
நிசமாக்கும்வித்தையெல்லாம் நீசனுக்கே கொடுத்தோம்
கொல்லவேமெத்தக் கோபத்தால் நீசனையும்
வெல்லவகை யில்லையல்லோ விடையேறும் ஈசுரரே
இன்னீசன்லோகமதில் இருந்தாலும் நாளையிலே
அன்னீதமல்லால் அறம்அறிய மாட்டானே
செய்வதெல்லாம்பாவச் சிந்தனையே யல்லாது
மெய்வரம்பு சற்றும் மிகவறிய மாட்டானே
அல்லாமல் பின்னும் அச்சுதனார் சக்கரமும்
பொல்லாதான் கொண்டு போகிறான்மால்கிரீடமும்
இவ்வரிசையிரண்டும் இவனிடத்திலேயிருந்தால்
எவ்வொருத்தராலும்வதைக்க ஏலாது நீசனையும்

என்று கூறிச் சென்றார். நடந்தவைகளை எல்லாம் அறிந்த நாராயணர் ஆண்டிக் கோலம் பூண்டு வரம்பெற்ற நீசனிடம் சென்று, 'நீ சிவபெருமானிடம் பெற்ற வரங்களில் கொஞ்சம் எனக்குக் கொடு. அல்லது சாபமிடுவேன்' என்று கூறினார். அப்போது நீசன், 'நான் ஆண்டியிடம் சண்டை போடுவதில்லை. திருமால் வந்தால் பார்த்துக் கொள்வேன்' என்று ஆணவமுடன் கூறினான்.

ஆண்டியாக இருந்த திருமால், 'அப்படியானால் ஒற்றையாய் வந்தவனோடும், பிச்சைக்காரனோடும், ஆயுதங்கள் இல்லாதவனோடும் நான் சண்டையிடுவதில்லை என்றும், அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்வதில்லை என்றும் சத்தியம் செய்து கொடு' என்று கேட்டார்.

புத்தியில்லாத நீசன் 'ஆண்டி, பரதேசி ஆகியோருக்கு நான் தீங்கு செய்வதில்லை. அவர்களோடு சண்டையிடுவதில்லை. இது ஆணை. இந்த ஆணையை நான் மீறினேனானால் என் நாட்டை இழந்து, உறவினர்களை இழந்து, ஆட்சியை இழந்து என் உயிரையும் இழந்து உறவினர்களுடன் நரகத்திற்குச் செல்வேன்' என்று ஆணையிட்டான்.

நீசனை ஆணையிடச் செய்த திருமால், 'மந்திர தந்திர ஆற்றல் இருக்க, இந்த சக்கராயுதமாகிய இரும்பை சுமப்பதேன். நீ இந்தச்

சக்கராயுதத்தை தந்தால் உலக வாழ்விற்குரிய பொருட்செல்வத்தைத் தருகிறேன்' என்றார். நீசன் சக்கரத்தைக் கொடுத்து பணத்தை வேண்டினான். சக்கராயுதம் பணமாக மாறியது. திருவாங்கூர் மாநிலத்தில் இன்றும் பணத்தை மக்கள் சக்கரம் என்று அழைப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தந்திரமாக நீசனின் வரங்களுக்கெல்லாம் அழிவு தேடிய திருமால் திருவரங்கம் சென்றார். அன்னை இலட்சுமி, 'நீசன் கேட்ட வரங்கள் எதைக் காட்டுகிறது?' என்று கேட்டாள். திருமால், 'கலியுகம் பிறந்துள்ளது போல் தோன்றுகிறது என்றார்.

கலியன் வருகை

"பூவுலகில் கலியன், கலிச்சி வரவினால் நல்ல பறவைகள், விலங்குகள் அனைத்தும் மறைந்தன. வேதங்களும், சாத்திரங்களும் மறைய வழிதேடின; தெய்வத் தலங்கள் மறைந்தன; நீதிநெறிமுறைகள் மறையத்தொடங்கின; செல்வங்கள் மறைந்தன; மழை குறைந்து வறட்சி ஏற்பட்டது; தர்மம் தலை கவிழ்ந்தது; அக்காலத்தில் வாழ்ந்த பஞ்சபாண்டவர்கள் கலியின் கொடுமை கண்டு வைகுண்டம் சென்றார்கள்.

நல்ல விலங்குகள், பறவைகள் எல்லாம் திருமாலைப் பார்த்து, 'கலியன் உலகில் வந்ததினால் எங்களுக்கு உலகில் வாழ விருப்பமில்லை' என்று கூறின. திருமால் 'நீங்களெல்லாம் குருமலையில் கூடி சதாசிவத்தை நினைத்து தவம் செய்யுங்கள்' என்று கூறினார். ஐந்து தலை நாகத்தைக் கடலுக்கடியில் சென்று வைகுண்டர் பிறப்புக்காக தவம் செய்யச் சொன்னார். இவ்வாறே இன்னும் பல உயிர்களுக்கும் திருமால் வழி காட்டினார். வேதங்களை மட்டும் தம் மனதில் நிறுத்தினார்.

திருமால் திருவரங்கம் புறப்பட்டபோது, கலைமுனி, ஞானமுனி, என்ற இரு முனிவர்களைக் கண்டார். அவர்கள், 'துவாபர யுகத்தில் உங்களுக்குரிய தேர், சிங்காசனம், மண்டபங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும்படி சிவனார் எங்களை அனுப்பினார். நாங்கள் அவைகளைப் பாதுகாத்து திரும்பும் வழியில் கலி நீசனைக் கண்டுதலை கவிழ்ந்திருக்கிறோம்' என்றார்கள்.

திருமால் அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டபோது கரிய நிறமான பல விலங்குகளும், பறவைகளும் வரக் கண்டு அவ...

சக்கராயுதத்தை தந்தால் உலக வாழ்விற்குரிய பொருட்செல்வத்தைத் தருகிறேன்' என்றார். நீசன் சக்கரத்தைக் கொடுத்து பணத்தை வேண்டினான். சக்கராயுதம் பணமாக மாறியது. திருவாங்கூர் மாநிலத்தில் இன்றும் பணத்தை மக்கள் சக்கரம் என்று அழைப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தந்திரமாக நீசனின் வரங்களுக்கெல்லாம் அழிவு தேடிய திருமால் திருவரங்கம் சென்றார். அன்னை இலட்சுமி, 'நீசன் கேட்ட வரங்கள் எதைக் காட்டுகிறது?' என்று கேட்டாள். திருமால், 'கலியுகம் பிறந்துள்ளது போல் தோன்றுகிறது என்றார்.

கலியன் வருகை

"பூவுலகில் கலியன், கலிச்சி வரவினால் நல்ல பறவைகள், விலங்குகள் அனைத்தும் மறைந்தன. வேதங்களும், சாத்திரங்களும் மறைய வழிதேடின; தெய்வத் தலங்கள் மறைந்தன; நீதிநெறிமுறைகள் மறையத்தொடங்கின; செல்வங்கள் மறைந்தன; மழை குறைந்து வறட்சி ஏற்பட்டது; தர்மம் தலை கவிழ்ந்தது; அக்காலத்தில் வாழ்ந்த பஞ்சபாண்டவர்கள் கலியின் கொடுமை கண்டு வைகுண்டம் சென்றார்கள்.

நல்ல விலங்குகள், பறவைகள் எல்லாம் திருமாலைப் பார்த்து, 'கலியன் உலகில் வந்ததினால் எங்களுக்கு உலகில் வாழ விருப்பமில்லை' என்று கூறின. திருமால் 'நீங்களெல்லாம் குருமலையில் கூடி சதாசிவத்தை நினைத்து தவம் செய்யுங்கள்' என்று கூறினார். ஐந்து தலை நாகத்தைக் கடலுக்கடியில் சென்று வைகுண்டர் பிறப்புக்காக தவம் செய்யச் சொன்னார். இவ்வாறே இன்னும் பல உயிர்களுக்கும் திருமால் வழி காட்டினார். வேதங்களை மட்டும் தம் மனதில் நிறுத்தினார்.

திருமால் திருவரங்கம் புறப்பட்டபோது, கலைமுனி, ஞானமுனி, என்ற இரு முனிவர்களைக் கண்டார். அவர்கள், 'துவாபர யுகத்தில் உங்களுக்குரிய தேர், சிங்காசனம், மண்டபங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும்படி சிவனார் எங்களை அனுப்பினார். நாங்கள் அவைகளைப் பாதுகாத்து திரும்பும் வழியில் கலி நீசனைக் கண்டுதலை கவிழ்ந்திருக்கிறோம்' என்றார்கள்.

திருமால் அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டபோது கரிய நிறமான பல விலங்குகளும், பறவைகளும் வரக் கண்டனர். அவை

என்ன? என்று திருமால் கேட்க, 'நீசனின் உதிர அணுக்கள் இத்தாழ்ந்த உயிரினங்களாக வருகின்றன' என்று முனிவர்கள் கூறினர்.

அங்கிருந்து விலக எண்ணிய திருமால் முனிவர்களை நோக்கி, 'நீங்கள் திருச்செந்தூர் கடற்கரை சென்று கலியை அழிப்பதற்காக நாராயணர் வரவேண்டும் எனத் தவம் செய்யுங்கள்' என்று கூறி அனுப்பினார். முனிவர்கள் திருச்செந்தூர் சென்று தவம் செய்தார்கள்.

போக முனி தவசு

திருவரங்கம் நோக்கி நடந்த திருமாலுக்கு மீண்டும் அதிர்ச்சி ஏற்பட்டது. போகமுனி எனப்பட்டவர் மலையொன்றில் வேகமாக மோதிக் கொள்வதைப் பார்த்தார். 'மாமுனிவரே மலையில் முட்டி மரணமடைய முயலுவதன் காரணம் என்ன?' என்று திருமால் கேட்க அம்முனிவர், 'உலகில் தரும நெறிகளும், மானிடர்களின் உயர்பண்புகளும் அழிந்தன. கொடிய எண்ணங்கள் வளர்ந்துவிட்டன. இதனால் என் தவம் கலைந்தது. தவம் செய்ய முடியாத நான்தலை சிதறிச் சாக முடிவு செய்தேன்' என்றார்.

'உயிர் விட வேறு வழியில்லையா? கல்லிலே முட்டித்தான் உயிர்விட வேண்டுமா? என்று கடற்கரையாண்டி வினவ முனிவன், 'கலியன் பிறந்த பின்னால் நான்கு வேதங்களுள் ஒன்று பயனற்றுக் கல்லின் நிலையை அடைந்தது. 'பயனற்ற வேதம் கல்லாகி வைகுண்டர்வரும் நாளில் இளகி, உலகில் ஆறுபோல் பரவி மக்கள் அறிவில் நிறையட்டும் என இறைவன் சபித்ததால் இவ்வாறு நிகழ்ந்தது. வேதம் கல்லாய் உறைந்த மலையின் மேல் மோதி உயிர்விட்டால் வைகுண்டம் கிடைக்கலாம் என எண்ணி இம்மலையில் மோதி உயிர்விடத் துணிந்தேன்' எனப் போக முனி புனிதனுக்குக் கூறினார். இருவரும் வழி நடந்தனர்.

நீர் பெண்ணாக மாறுதல்

“போக முனியும், பொற்புடைய நாதனும் போகின்ற வழியில், 'களைப்பாயிருக்கிறது; நீராடினால் நலமாய் இருக்கும்' என நாராயணர் உரைக்க போகமுனி, 'இதோ அருகில் உள்ள அருணகிரி மலையில் குளமொன்று உள்ளது' என்று நல்லநாராயணரை அழைத்துச் சென்றார். வைகுண்டப் பரம்பொருள் குளத்தில் இறங்கிக் குளிக்கப்போகும் நேரத்தில்,பெண்ணொருத்தி தண்ணீலிலிருந்து எழுந்து திருமாலை நோக்கிவந்து பணிந்தாள். தண்ணீர் மறைந்தது.

வியப்படைந்த திருமால், 'தண்ணீர் மறைந்து பெண்ணான அதிசயம் எவ்வாறு நிகழ்ந்தது?' என்று முனியிடம் கேட்க முனிவர் பெண்ணிடம் கேட்டார். பெண், ஐயா, 'நான் கயிலாயத்தில் ஈசனிடம் பணியாற்றி வந்தேன். அந்நாளில் இடுப்பில் ஆடையில்லாமல் குளத்தில் சென்று குளித்தேன். அதை கண்ட கொன்றை சூடியபெருமாள் என்னை அழித்து நீர்த் தடாகமாகப் படைத்துவிட்டார். திருமால் உன்னிடம் நீராட வரும்போது உன் சாபம் தீரும் என்றார்' என்று கூறினாள்.

திருமால் போக முனியையும், நீர்ப்பெண்ணையும் பார்த்து, 'துவாபர யுகத்தில் நான் ஆட்சி செய்தபோது இருந்த வைடூரியம் பதித்த விருதுக்குடையும், பொன் ஆயுதங்களும், பச்சை நிறமான சக்கரமும் கோட்டைகளும், குளங்களும், மண்டபங்களும் இருக்கின்றன. நீங்கள் போய் அவற்றைக் காவல் செய்து இருங்கள். நான் வந்து உங்களுக்கு நற்கதி அளிப்பேன்' என்று அனுப்பினார். பின்னர் திருமால் திருவரங்கம் சென்று இருந்தார். பூவுலகில் நீசன் அறிவு தடுமாறி மக்ளைப் பல சாதிகளாகப் பிரித்தான்; மானிடர்களிடையே பொய்யும் புரட்டும் ஏற்பட்டது; வலியவர்கள் மெலியவர்களை அடிக்கும் நிலை ஏற்பட்டது.

நந்தி வரவு

"கயிலையில் வீற்றிருந்த சிவன், நந்தியை வரவழைத்து கயிலை வரம்பழியக் காரணம் என்ன?' என்று கேட்டார். 'இந்த நிலைஅறிய இங்கே இருந்தால் முடியாது. பரலோகம் செல்லலாம்'என்று நந்தி சிவனை அழைத்துக் கொண்டு பரலோகம் சென்றார். அங்கு நந்தியானவர், 'திருமால் தெய்வ கன்னியர்கள்மீது இச்சைகொண்டு குழந்தைகளைப் பெறுவார். தேவர்கள்அனைவரும் விட்ணுவின் வழியில் வாரிசுகளாகப் பிறப்பார்கள். பின்னர் திருமால் வந்து அவர்களை எல்லாம் எடுத்து தர்மயுகம் ஆள்வார்— என்று யோக முனி இட்ட சாபப்படி தெய்வகன்னியர்கள் பெற்ற சான்றோர்கள் வளர்கின்றார்கள். இதற்கிடையே கலியன் தோன்றி உலகத்தில் பல கேடுகள் உண்டாயின. அந்தக் கலியனின் நீசச் செயல் கயிலாய மலைவரை சென்று பரவியது. எனவே மாயவரை வரவழைத்து அவர் வார்த்தைகளைக் கேளாதிருந்தால் அண்டங்கள் எல்லாம் இருளில் மூழ்கக்கூடும்' என்று கூறினார்.

ஈசுவரனார், 'திருமாலை எவ்வாறு வரவழைக்கலாம்' என்று கேட்டார். நந்தியானவர், 'நீங்கள் தவம் செய்தால் திருமால்வருவார்' என்று கூற, பேய்க்கணங்களை மாலையாகச் சூடி, அரி வரவேண்டும் என்று சிவன் தவமிருந்தார்.

சிவனின் தவத்தை அறிந்த அரி அவர் முன் தோன்றினார். தான் உலகில் சென்று அரக்கர்களை அழித்த வரலாற்றையும், மலைமீது பொய்ச்சடலத்தைப் போட்டு திருவரங்கத்தில் இருந்ததையும் சொல்லி, 'என்னை வரவழைத்தது ஏன்?' என்று கேட்டார். 'பதினான்கு உலகங்களையும் இருள் மூடியது. நான் உங்களைக் காணாமல் மனங்கலங்கி, பேய்க்கணங்களை மாலையாக இட்டு இருந்தேன். மாயவரே! இருளை மாற்றுங்கள்' என்றார் சிவன்.

திருமால் பேய்க்கணமாலையைக் கழற்றி எறியச் சொன்னார். சிவன் மாலையைக் கழட்டி அக்கினியில் எறிந்தார். மாலை வெடித்துப் பேய்க் கூட்டங்களாகியது. பேய்கள் குதித்தாடி சிவனை வணங்கி வரங்களைக் கேட்டன. வரங்கொடுக்க சம்மதித்த சிவன் திருமாலிடமும், பிரம்மனிடமும் ஆலோசனை கேட்டார்.

திருமால், 'பேய்களுக்கு வரம் கொடுத்தால் அவை உலகத்தை அழித்துவிடும். எனவே நாரத முனிவரை வரவழைத்து, பேய்களுக்கு வரம் கொடுத்து, நாரத முனிவரின் பொறுப்பில் பேய்களை அனுப்பி வையுங்கள். உலகில் பேய்கள் தவறு செய்தால் கலி அழியும்போது வட கயிலாயத்தில் பேய்களுக்குச் சிறையும், உயிர்அழிவும் உண்டாகும் என்று சொல்லிவிடுங்கள்' என்று கூறினார்.

சிவன் பேய்களுக்கு வரம் கொடுத்து நாரத முனிவர் பொறுப்பில் அனுப்பி வைத்தார். பின்னர் திருமாலை நோக்கி கயிலை இருளை அகற்ற வேண்டினார். திருமால் பண்டார வேடம் கொண்டுஅனைவரையும் கயிலையில் இருக்கச் சொன்னார். மாயன் உரைத்தபடி சிவன், தேவர்கள், முனிவர்கள் ஆகியோர் ஆண்டி வேடங்கொண்டு கயிலையில் இருந்ததால் கலி அங்கு செல்லவில்லை.

சோழன் தீவினை – சான்றோர் இருவர் இறப்பு

பூவுலகில் நீசன் அறிவு தடுமாறி மக்களைப் பல சாதிகளாகப் பிரித்தான். மானிடர்களிடையே பொய்யும் புரட்டும் மிகுந்து வலியவர்கள் மெலியவர்களை அடிக்கும்படியாக நீசன் ஆட்சிசெய்தான்.

அந்நாளில் வைகையில் பெருவெள்ளம் ஏற்பட்டது. இது பாண்டிநாட்டில் உள்ள வைகையைக் குறிப்பிடவில்லை. வெள்ளப் பெருக்கெடுத்து வேகமுடன் பாயும் ஆறுகள் வேகவதி என

அழைக்கப்பெற்றன. காஞ்சிநதி, பம்பா ஆறு, மதுரை ஆறு போன்ற பல ஆறுகள் இப்பெயர் பெற்றன. வேகவதி என்பதே மருவி வைகை என்றாயிற்று. அகிலத் திரட்டில் கூறப்பெறும் வைகை சோழ நாட்டில் பெருமழையால் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிய ஒரு ஆறு ஆகும்.

"வைகை வெள்ளத்தை அடைக்காவிட்டால் நாட்டை அழித்து கடலில் கொண்டு சேர்த்துவிடும் என்று மக்கள் அரசனிடம் கூறினார்கள். அரசன் எல்லா இன மக்களையும் வரவழைத்தான். மண், கல், மரம் ஆகியவற்றை இட்டு வைகை அடைப்பை உடைக்க முயன்றார்கள். அடைக்க முடியவில்லை. 'வெள்ளத்தால் நாடே அழிந்துவிடுமோ' என்று அரசன் அஞ்சினான். அப்போது நீசகுலத்தில் தோன்றிய ஒருவன், 'நம்மால் இந்த அணையை அடைக்கமுடியாது. மாகாளியின் கைக்குள் சான்றோர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை இங்கே அழைத்து வந்து அணையை அடைக்கச் சொன்னால் வெள்ளத்தைத் தடுக்க முடியும்' என்றான். அரசன் அமைச்சர்களையும், படைத் தலைவர்களையும் அனுப்பி சான்றோர்களை வரவழைத்து அணையை அடைக்கச்சொன்னான்.

சான்றோர்கள், 'அரசரே, தங்களுக்காக பல போர்கள் செய்தோம். ஆனால் மண் சுமந்து அணையை அடைக்கும் இழிவான வேலையைச் செய்ய எங்களால் இயலாது' என்று கூறினர். அரசன் படைகளை ஏவி சான்றோரிடம் வேலை வாங்கச் சொன்னார். அரசனின் கொடுமைகளைக் கண்டும் அவனை எதிர்க்காது சான்றோர்கள் பொறுத்திருந்தார்கள். அரசன் படையுடன் சான்றோரை ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்று கூடையைத் தூக்கச்சொன்னான்.

'ஆற்றங்கரையில் எம்மைக் கொன்றாலும் கூடையைத் தொடோம்' என்றார்கள் சான்றோர்கள். சான்றோரில் ஒருவரை பூமியில் புதைத்துக் கூடைமண்ணைத் தலையில் வைக்க அரசன் ஆணையிட்டான். புதைக்கப்பட்ட சான்றோன் தலையில் மண்கூடை வைக்கப்பட்டது. கருத்தழிந்த சான்றோன் கண்களில் நீர்வழிந்தது. யானையைக் கொண்டு அவன் தலையை இடறச்சொன்னான் அரசன். இவ்வாறு சான்றோர்கள் எழுவரில் ஒருவரை சோழ அரசன் கொன்றொழித்தான்.

சான்றோரில் மற்றொருவரைப் பிடித்து வந்து அவரையும் மண்சுமக்கச் சொன்னார்கள். 'முன் இறந்த மன்னனினும் மோசமோ

நாங்களுந்தான்' என்று மறுத்தான் மானமுடைய சான்றோன். அவரையும் முன்போலவே குழியில் புதைத்தும், கூடை மண்ணை தலையில் வைத்தும், யானையைக் கொண்டு தலையை இடறிக்கொன்றழித்தான் கொடிய வேந்தன். தம் மக்களில் இருவர் கொல்லப்பட்டதை அறிந்த திருமால் கோபம் கொண்டு திருவரங்கம் சென்றிருந்தார்.

மாகாளி செய்தியறிந்து சோழன் நாட்டினிலே 12 ஆண்டுகள் மழை பெய்யாதிருக்க நினைத்தாள். நாட்டில் மழை தவறி வறுமை உண்டாகி, யாரும் தர்மம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இறந்த சான்றோர் இருவரின் மனைவிமாரும் மாயவரை மனதில் நினைத்து தவம் புரியச் சென்றார்கள்"

திருமால் திருவனந்தபுரம் புறப்படல்

"நீச கலியனின் செயல் நாடெங்கும் பரந்ததினால் திருவரங்கத்தில் இருந்த அந்தணர்கள் வழி தவறிப் போனார்கள். பூசை செய்வதற்கு ஒருவர்க்கொருவர் போட்டியிட்டார்கள். மற்றொரு வேதியன் 'பூசை செய்யும் உரிமை எனக்கே' என்று முப்பது வேள்வி வளர்த்து, வேள்வியில் திருமால் வராவிட்டால் 'நெருப்பில் விழுந்து உயிர்விடுவேன்' என்றான்.

திருமால் அந்த் மறையவனை அழைத்துப் புத்தி சொல்லி அவனுடன் திருவரங்கம் விட்டு திருவனந்தபுரம் புறப்பட்டார். திருமாலும் அந்தணரும் சிவபெருமான் கோயில் ஒன்றை அடைந்து இருந்தார்கள். தேவர்கள் எல்லோரும் அங்கு வந்து,'பெருமானே தாங்கள் இங்கு வந்தது ஏன்?' என்று கேட்டார்கள்.

திருமால், 'தேவர்களே! நாட்டின் நிலை தவறியது. எனவே திருவனந்தபுரம் செல்கிறேன்' என்றார். முனிவர்களும், தேவர்களும் கூடி, நீசன் பிறந்து பரந்திருக்கும் திருவனந்தபுரத்திற்குச் செல்வது ஏன் ஐயா? அவ்வாறு சென்றால் நீசன் பெருமைகொண்டு இழித்துப் பேச வகையாகும்' என்று கேட்டார்கள்.

'கலியானால் என்ன? நீசன் என்றால் என்ன? திருவனந்தபுரம் செல்லவேண்டும் என தனந்தசுக முனிவனின் சாபம் எனக்குள்ளது. எனவே சிறிது நாளாகினும் நான் அங்கிருந்தாக வேண்டும் என ஆதிக்கு ஆதியான அனந்தன் கூறினார்"

சிலையான ரிசிகள் சாபம் நீக்கி நலம் அளித்தல்

"அய்யா திருவனந்தபுரம் செல்லும் வழியில் ரிசிகள் பலர்சிலையாக நிற்பதைக் கண்டு, 'ஏது இது அதிசயம்?' எனதேவர்களையும், முனிவர்களையும் கேட்டார். அருணமுனி என்பவர், 'நாங்கள் பிரம்ம லோகத்தில் வாழும் நாளில், பிரம்மனின் வடிவம் கொண்டு இந்த ரிசிகள் வேத நூலில் மாற்றங்களைச் செய்ததினால் பிரம்மன் இவர்களைச் சிலைகளாகும்படி சாபமிட்டார். சாபம் தீருவது எப்போது என ரிசிகள் கேட்டார்கள். திருமால் திருவரங்கம் விட்டு திருவனந்தபுரம் செல்லும் நாளில் உங்களைத் தொடுவார். திருமாலின்திருக்கரம் பட்டதும் உங்கள் சாபம் தீரும் என்றார் பிரமன். அன்றிலிருந்து ஐம்பத்தைந்து ரிசிகளும் இங்கே சிலைகளாக நிற்கிறார்கள்' என உரைத்தார்.

முனிவர் சொல் கேட்டு திருமால் கற்சிலைகளைத் தொட, சிலைகள் ரிசிகளாய் மாறி அவர்கள், 'திருமாலின் திருவடியில்விழுந்து வணங்கி, பிரம்மாவின் சாபத்தைத் தீர்த்து எங்களைக்காக்க வந்த பெருமானே, எங்களுக்கு நற்கதி தர வேண்டும்'என வேண்டினார்கள்.

'உங்களுக்கு மேலோக வாழ்வு வேண்டுமா? இல்லை பூலோக வாழ்வு போதுமா?' என்று இறைவன் கேட்க, இப்போது எங்களுக்கு வரம் தந்து அனுப்பிவைத்தால் போதும்' என முனிவர்கள் வேண்டினார்கள்.

'பிச்சை வாங்கி அடுத்த நாளுக்கு என வைக்காமல், ஆணவம் கொள்ளாமல், நாட்டிற்கு ஒருவராகச் சென்று ஆண்டியாக, பரதேசியாக இருந்து பூசை, பலிகள் ஏற்காமல் ஆசையை நீக்கிஇறைவன் மீது ஒரே நம்பிக்கையாக இருந்து, மாயைக்கு உட்படாமல் உலகில் புகழுடன் வாழுங்கள்' என்று ரிசிகளை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார் மாதவன்.

மலைப்பெண் சாபம் தீர்த்தல்

"முனிவர்களை அனுப்பி திருவனந்தபுரம் செல்லும் வழியில்கானகத்தில் ஒரு மலை பெண் வடிவில் கிடக்கக் கண்டு எம்பெருமாள் காலால் ஒற்றினார்.

உடனே அம்மலை சிறுமலைகள் போன்ற மூக்குடலும், தனங்களுடனும், மிகப்பெரிய மலை போன்ற வயிறுடனும் முன் யுகத்தில்

இராமன்அழித்த தாடகைபோல் அண்டம் நிறைந்த மிகப் பெரிய உருவமாய் எழுந்து நின்றாள்.

'இவள் யார்?' எனத் தேவர்களையும், முனிவர்களையும் திருமால் கேட்க, 'அரனார் இடத்தில் பணி செய்தவள் இவள். சிவனார் இட்ட சாபத்தால் சிலையாகி இங்கு கிடந்தாள்' எனத் தேவர்கள் உரைக்கத் திருமால், 'பெண்ணே உன் வரலாறு என்ன?' எனகேட்டார்.

'பரலோகத்தில் செந்திருசி மனைவியாக வனப்புடனும் , வடிவழகுடனும் வாழ்ந்திருந்தேன். எமன் என்மீது மோகம்கொண்டு என் கணவரைக் கொன்றான். கொன்றவனை அழிக்கவேண்டும் என்று பரமசிவனை நோக்கித் தவமிருந்தேன். அந்தகனை அழித்தால் அவனியில் மனிதர் எண்ணிக்கை பெருத்துவிடும். எனவே பொறுத்திரு என வேண்டினார் சிவன்.

எனினும் ஆண்டு தோறும் திவசம் நாளில் அந்தகனை அழிக்கும்படி ஆண்டவனிடம் வேண்டினேன். 'பொறுத்திரு என உரைத்தும் மிஞ்சினாய்' எனவே ஆதிமூலம் அனந்தபுரம் வரும் காலம்வரை பெருவயிறும், உடம்புமாய் பாரமலையாகக் கிட என இறைவன் சாபமிட்டார்' என்றுரைத்தாள் கணவனை இழந்து கலங்கியபெண்ணாள். மேலும் 'காலனை அழிக்க கண்ணா நீ வரம் தரவேண்டும்' என கற்புடைய அப் பெண்ணாள் கருமேனித் திருவிடம் வரம் கேட்டாள்.

- திருமால், 'பெண்ணே! கலியுகம் அழியும்வரை தவத்தில் இரு. தர்மயுகம் பிறக்கட்டும். சண்டாளன் அழியும் நேரம் வரும்'என்றார்.

தவம் புரிந்த பசுவுக்கும் பெண்ணுக்கும் வரம் தருதல்

"மேலும் நாராயணர் நடந்து செல்லும் வழியில் ஒரு பசுவும், பெண்ணும் திருமாலை நோக்கித் தவமிருக்கக் கண்டார். தவம்செய்வது ஏன்? என திருமால் பசுவைக் கேட்க, 'மாயவரே! என்னுடைய மகனைக் கொல்லும்படியாக இப்பெண் தவமிருக்கிறாள். என் மகன் இறந்தால் மீண்டும் அவன் என் வயிற்றில் கன்றாகப் பிறக்கச் செய்ய வேண்டும் என்று தவமிருக்கிறேன்' என்றது பசு.

'பெண்ணே, நீ கூறப்போவது என்ன?' என விட்ணு கேட்க, 'ஐயா இறைவன் அருளால் எனக்கு வீரம் மிக்க மகன் ஒருவன்

இருந்தான். அவனுக்கு பதினாறு வயதாகும்போது இப்பசுவின் மகன், என் மீதுஆசை கொண்டான். நான் அவனைக் கண்டித்ததற்கு என் மகனைக் கொன்றுவிட்டான். விதிப்படி என் மகன் சாவதற்கு வழியில்லை. எனவே நான் கோபம்கொண்டு சிவபெருமானிடம் முறையிட்டேன். சிவன் செவிசாய்க்கவில்லை. மகனுக்காகப் பழிவாங்க உமது அருளை வேண்டி நிற்கிறேன்' என்றாள் தவப்பெண்.

பெருமாள், 'பெண்ணே நல்ல தவம் புரிந்தால் நினைத்தது நினைத்தபடி நடக்கும்' என்று கூறி, 'பசுவே உன் மகன் இறந்தால் அவனே உன் வயிற்றில் மகனாகப் பிறப்பான்' என வரமருளி திருவனந்தபுரம் நோக்கி நடக்கத் தொடங்கினார்."

அப்பொழுது கேத்திரனும், வேதியனும் திருமால் அடிபணிந்து, 'உமது பிள்ளைகளான சான்றோர்கள் வாடியிருக்கும் நீசனுடைய இடத்தில் நீர் போவது சரியோ?' எனக் கேட்டனர். அப்பொழுது ஆதிமூலன், 'சான்றோர்களுக்கு நான் உதவி செய்வதற்கு முன்பாக கலி நீசனுக்குப் புத்திசொல்லவில்லையெனில் குற்றமாய் சான்றோர்களிடம் இருந்து கொண்டு அவர்களுக்காக எங்களைக் கொன்றீர் என்பான். அதற்கு இடம் வைக்காமல் நீசனிடம் செல்கிறேன்' என்றார்.

இறைவன் துக்கமுடன், கலி நீசன் உலகில் கால் வைத்த நாள் முதலாய் நீர் அறியாது, எண்ணெய் அறியாது, இலக்குமியைப் பார்க்காமல் உடுத்த உடையை மாற்றாமல், பூசையை ஏற்காமல், பலவிதமான சுகங்களையும் அனுபவிக்காமல் இருக்கிறேன். கலியை அழித்து எனது மக்களுக்கு பட்டம் அளிப்பதற்கு முன்னால் என்னை எப்படிப் போற்றி வேண்டினாலும் ஏற்க மாட்டேன். பூசையை ஏற்கின்ற தேவர்கள் எனக்கு ஆகாதவர்கள் ஆவார்கள்' என்று கூறி திருமால் திருவனந்தபுரம் சென்றார்."

திருவனந்தபுரத்தில் கோயில் கொள்ளல்

"நீலவண்ணன் திருவனந்தபுரம் வந்ததை ஒரு புலச்சி பார்த்துவிட்டாள். திருமால் மறைந்தார். புலச்சி ஊர் மக்கள் அனைவரையும் அழைத்து தான் திருமாலைக் கண்டதைக் கூறினாள். அப்புலச்சியிடம் நெருப்பு வாங்கி திருவரங்கத்தில் இருந்து வந்த வேதியர் தீபாராதனைக் காட்டினார்கள்.

திருவனந்தபுரத்தில் திருமால் கோயில் கொண்டதை அறிந்த நீசனாகிய மன்னன் கோயில், கோபுரம் கட்டி பூசைகளை நடத்தினான். தினம் புலச்சி தீபம் கொடுக்க நம்பூதிரி வேதியர்கள் முதலானோர் பூசைகளைச் செய்தார்கள். நாட்டில் நல்ல மழையும், விளைச்சலும் கண்டது. திருவனந்தபுரம் சிறப்புடன் திகழ்ந்தது. நீசன் நினைத்த சிறப்புகளை எல்லாம் நீலவண்ணன் கொடுத்தார்.

கொக்கு பெற்ற பிள்ளை வெண்ணீசன்

கலி அரசு புரியும் நாளில் நீசன் தனக்கு குழந்தை இல்லை எனமனம் வருந்தித் திருமாலை வேண்டினான். காசியிலுள்ள புகழ்பெற்ற நதிக்கரையில் தவமிருந்தால் பிள்ளை பற்றிய துயரம் தீருமென திருமால் உரைத்தார். நீசன் காசிக்குச் சென்று கங்கைக்கரையில் தவமிருந்தான். அங்கு ஒரு மறையோன், தன்மனைவியைத் தழுவினான். அதைக் கண்ட நீசனின் காம இச்சை மிகுந்து இந்திரியம் வெளிப்பட்டு நீரில் விழுந்தது. அதனைக் கொக்கு ஒன்று விழுங்க கர்ப்பமுற்றது. தண்ணீரில் கொக்கு குழந்தையைப் பெற்றது. குழந்தை நீரில் மிதந்து செல்கையில் புனல்ரிசி என்பவர் எடுத்து வளர்த்தார். அக்குழந்தைக்கு பலவிதமான கலைகளையும் கற்றுத் தந்தார். பருவம் அடைந்த வெள்ளை நீசனுக்கு செங்கோமட்டி என்னும் தேசத்தில் இரண்டு பெண்களை திருமணம் முடித்து வைத்தார்.

தவம் அழிந்த நீசன் கவலையுடன் திருவனந்தபுரம் வந்து திருமாலிடம் நடந்ததைச் சொன்னான். திருமால் சோதிடரை வரவழைத்துக் கேட்கும்படி சொன்னார். சோதிடன், “உனக்குப்பிள்ளை பெறும் பாக்கியம் இல்லை. அப்படியே பிள்ளை பெற்றாலும் அவன் நாட்டை ஆள்வதற்கு விதி இல்லை. மற்றவர்கள் பெற்ற உன் மருமகன் தான் உனக்குப் பின்னர் ஆட்சி புரிவான் என்று கூறினார்.

சோதிடன் உரைத்தபடி மருமகனுக்கே பட்டம் என பறைசாற்றி நீசன் நாட்டை ஆண்டு வந்தான். நீசனின் இந்திரியத்தில் உதித்த வெள்ளை நீசன் பல கலைகளையும் கற்று, செங்கோமட்டி என்னும் நாட்டில் பெரும் செல்வம் சேர்த்தான். யானை, குதிரை,ஒட்டகம் மற்றும் ஆயுதங்களுடன் பெரும்படை சேர்த்தான். தன் இனமும்பெருத்து, தனக்கு யாரும் எதிரி இல்லை என்ற நிலையில் வாழ்ந்தான்.

வருடங்களை பன்னிரண்டு மாதங்களாகப் பிரித்தான். ஆண்டவன் அனாதி ஆனவன் என்றான். பணத்தைக் கொடுத்து

தனது வேதத்திற்குள் அனைவரையும் சேர்த்தான். இவ்வாறாக வலிமையும், மக்களும் படையும் உடைய தனக்கு யார் எதிரியாக இருக்கிறார்கள் என ஆராய்ந்திருந்தான்.

'சோழன், சேரன், பாண்டியன் முதலான ஐம்பத்தாறு நாடுகளை உடைய தேசம் ஒன்று உள்ளது. அத்தேசத்தில் சேர, சோழ, பாண்டியர்கள் தெய்வ மகளிர் சாபத்தால் தங்கள் இனம் அழிந்து கடலில் மறைந்தார்கள். வேசி ஒருத்தியின் மகன் சேர, சோழ, பாண்டிய நாட்டை அரசாண்டு இருக்கிறான். அங்கு படையெடுத்துச் சென்றால் அந்த நாடு நமக்கு கிடைக்கும்' என்று வெள்ளை நீசனுக்கு ஒருவன் சொன்னான்.

வெள்ளை நீசன் படையெடுத்து வருவதை நீசனுக்கு அச்சுதர் சொன்னார். நீசன் தனக்கு வேண்டிய படைகளைச் சேர்த்து வெண்ணீசனுடன் போரிட்டுத் திருமால் அருளால் வெற்றிபெற்றான். வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் கோட்டை கட்டி பட்டங்களைச் சூட்டிக் கொண்டு அரசாண்டான்.

சான்றோர் காவல்

தனக்கு போதிய காவலர்கள் இல்லை என்று நினைத்த நீசன் திருமாலை நோக்கி, 'எனது ஏவல் செய்வதற்காக நம்பிக்கைக்குரிய சாதி ஒன்றை வருவித்து என்னுடைய கோட்டைக் கொத்தளங்களைக் காவல் காக்க உதவ வேண்டும்' என வேண்டினான். நீசன் அமைச்சர்களை நோக்கி, நமக்கு காவல் செய்ய யாரை அழைக்கலாம் என கேட்டான். அமைச்சர்கள், 'நல்லோர்களான சான்றோர்களை வரவழைத்து வைத்தால் நமக்குத் தகுந்தவர்களாக அவர்கள் இருப்பார்கள்' என்று கூறினர்.

நீசன் சான்றோரை வரவழைத்து அவர்களுக்கு ஊதியமும், ஆயுதங்களும், ஆடைகளும் கொடுத்து கோட்டை வாயில், மாளிகைகளை எல்லாம் காக்கும்படி சொன்னான். சான்றோர்கள் இறைவனை நெஞ்சில் கொண்டு கருத்தாகக் காவல் புரிந்தார்கள். கலியின் கொடுமையினாலும், நீசனுக்கு அழியும் நாள் வந்ததாலும் சான்றோர்கள் காவல் புரியும் வேளையிலே தூங்கிவிட்டார்கள். நீசனுடைய குலத்தவர்கள் தங்களுக்கிடையே உள்ள பகையால் நீசனைக் கொன்றார்கள்.

உயிர் போகும் வேளையில் நீசன் சான்றோரை நோக்கி, காவலாய் இருந்த நீங்கள் காட்டிக் கொடுத்து விட்டீர்கள். எனவே என் குடும்பத்தவர்கள் நாட்டை ஆளும் மட்டும் உங்கள் குடும்பத்தவர்கள் ஊழியங்கள் மிகச் செய்து துன்பப்படுவீர்கள் என்று சாபமிட்டான். நீசன் மரணத்திற்குப்பின் அவனது சகோதரியின் மகன் நாட்டை ஆண்டான்.

நீசன் சான்றோர்களுக்கு இட்ட சாபத்தை அறிந்து தேவர்கள் திருமாலிடம் சொன்னார்கள். திருமால், 'என் சான்றோர்கள் சோழனுக்கு ஏராளமான உதவிகளைச் செய்தார்கள். எனினும் சோழன் சான்றோர் மக்கள் இருவரைக் கொன்று பழியேற்றான். சேரனுக்காக தூக்கம் இன்றி வாயில் காத்தார்கள். அவர்களுக்கு நீசன் சாபமிட்டுப் பழியேற்றான்' என்று கூறி வருந்தினார்.

சான்றோர் துயரம்

நீசன் இட்ட சாபம் சான்றோர்களைத் துன்புறுத்தத் தொடங்கியது. சான்றோர் சகோதரர்கள் தங்களுக்குள்ளேயே பகையானார்கள். ஒருவருக்கொருவர் கோள் சொன்னார்கள். ஒருவரை அடிக்க மற்றொருவர் கைக்கூலி வாங்கினார்கள். இவ்வாறு சான்றோர்கள் ஒற்றுமை இல்லாமல் பிரிவினை கொண்டு, துன்பம் கண்டு தாழ்வுற்றார்கள். தாழ்வுற்ற சான்றோர்களுக்கு நீசன் பலவிதமான இறைகளை விதித்தான். அதனை அகிலத்திரட்டு,

தாலிக்கு வாயம் சருகுமுதலாயம்
காலிக்கு வாயம் கம்புதடிக்காயம்
தாலமதேறுஞ் சான்றோருக்காயம்
தூலமதுக்காயம் தரணிதனிலே வளர்ந்த
ஆலமரம் வரைக்கும் அதிகயிறை வைத்தனனே
வட்டிக்குமாயம் வலங்கைச் சான்றோர் கருப்புக்
கட்டிக்குமாயங் கடுநீசன்வைத்தானே

என்று கூறுகிறது. இன்னும் சான்றோர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளாக அகிலத்திரட்டு கூறுவதைப் பாருங்கள்.

பனைமரம், பதநீர், கருப்புக்கட்டி, பெட்டி செய்ய நாரு மற்றும்ஓலை கொண்டுவா என அடிப்பான். வாய்க்குச் சுவையான நுங்குகொண்டுவா என அடிப்பான். மற்றும் பனைமட்டை, நீண்ட ஓலை,கூழ்ப்பதநீர், சீரகமிட்டுச் செய்த சிறு கருப்புக் கட்டித் துண்டுகள்,

மிளகு இட்ட பனை வெல்லப் பலகாரங்கள், தோண்டிக்கு ஓலை, சிறிது சூடான பதனீர் இவற்றைக் கொடு என நீசர்கள் அடிப்பார்கள்.

இத்தனையும் கொண்டு வந்து கொடுத்தாலும் சான்றோர்களின் துயரம் தீரவில்லை. தங்களுக்கு ஊழியங்கள் செய்யும் சான்றோர்களுக்கு நன்மை செய்ய நீசர்கள் எண்ணவில்லை. சான்றோர் என அறிந்த உடனேயே துரத்தினார்கள். மேலும்நீசர்கள் சான்றோர்களைக் குளம் வெட்டச் சொல்வார்கள். கூலி கொடுக்க மாட்டார்கள். ஓலையைச் சுமந்து வரச் சொல்வார்கள். நாள்தோறும் சான்றோர்கள் பயந்து செய்த பணிகள் ஏராளம். நீசர்கள் சான்றோர்களை அடித்தும், கட்டிவைத்து சிறையிட்டும் துன்புறுத்தினார்கள். சான்றோர் குலப்பெண்களையும், ஆண்களையும் மானபங்கப் படுத்தினார்கள். பறையர், புலையர் போன்றோரைக் காட்டிலும் சான்றோர்களை இழிவுபடுத்தினார்கள். ஆலயங்கள், அரண்மனைகள் அத்தனையிலும் உள்ளோர் நாவானது கள்ளையே நாடினாலும் கள்ளேறும் சாணார் எனச் சான்றோரைத் துன்புறுத்தினார்கள்.

நீசர்கள் மனைகள், மாளிகைகள் அனைத்தும் அமைக்க சான்றோர்கள் அளிக்கும் மரம் போன்ற பொருட்கள் மிகவும் தேவை என அறிந்திருந்தார்கள். சான்றோர்களிடமிருந்து அவற்றைப் பெறவும் செய்தார்கள். ஆனாலும் சான்றோர்களுக்கு நீசர்கள் இழைத்த கொடுமைகள் குறையவில்லை. சான்றோர்கள் எவ்வளவு தான் கொடுத்த போதிலும் நீசர்கள் சான்றோர்களிடம் உறவு கொள்ளவில்லை. இவ்வாறு நீசர்கள் சான்றோர்களுக்கு இழைத்த கொடுமைகளைக் கண்டு திருமால் கோபம்கொண்டார்.

அகிலத் திரட்டு பட்டியலிட்டுக் காட்டும் அன்புடைய சான்றோர்கள் பட்ட துயரிலிருந்து அவர்களை மீட்க பரம்பொருளான இறைவன் பாரினில் வந்தது வியப்பில்லையல்லவா?

திருபத்மநாபர் உபதேசம்

கலியனே, 'திருமாலுக்கும் தெய்வப் பெண்களுக்கும் பிறந்தவர்கள் சான்றோர்கள். சான்றோர்களும், கற்புடைய சான்றோர் குலப் பெண்களும் சாபமிட்டால் உன் குலம் கிளைகளுடன் அழிந்துபோகும்' என பத்மநாபர் கலியனுக்கு புத்தி சொன்னார். அவனோ, 'ஆணவமுடன் யார் சாபமிட்டாலும் சிவமூலம் பெற்றுள்ள என்னை

எள்ளளவும் பாதிக்காது என உரைத்து இறுமாந்திருந்தான். திருமால் மேலும், 'முன் ஆறு யுகங்களில் குறோணி, குண்டோமசாலி, மல்லோசிவாகனன், தில்லை மல்லாளன், சூரபத்மன், சிங்கமுகா சூரன், இரணியன், துரியோதனன் ஆகிய அனைவரும் தங்களுக்குத் தகுந்தவர் புத்திசொல்லிய போதிலும் கேட்காமல் தங்கள் உற்ற சுற்றமுடன் மற்றும் கோட்டைக் கொத்தளங்களுடன் அழிந்தார்கள்.

உனக்கு இப்பொழுது நாராயணனாகிய நானே புத்தி சொல்கிறேன். நீ உன் சுற்றமுடன் மகிழ்ந்து அரசாண்டிருக்க ஏழைகளுக்கு கொடுமை செய்வதை நிறுத்து. சான்றோர்கள் இடும் அபய ஒலியைக் கேட்டு என்னால் இங்கு இருக்க முடியவில்லை. மாகாளியின் மக்களான சான்றோர்கள் சாதியில் உயர்ந்தவர்கள். நீ உலகைத் தொடர்ந்து ஆண்டு கொண்டிருக்க வேண்டுமேயானால், சான்றோர்களுக்கு விதித்த வரிகளை நீக்கிவிடு. அவர்களுக்கு இட்டுள்ள ஊழியங்களையும் விலக்கிவிடு. அல்லது சான்றோர்களின் சாபத்தினாலும், கற்புடைய சான்றோர் குலப் பெண்கள் சாபத்தினாலும் உன் ஆயுள் அழியும்; கோட்டைகள் தூளாகும். என்று பலவிதமாக நீசனுக்கு திருமால் புத்தி சொன்னார்.

நீசன், 'மாயவரே, சான்றோர்களின் பெருமைகளைச் சொன்னீர். என் வாழ்நாள் அழிந்தாலும் சான்றோர்களுக்கு அளித்த இறைகளை நீக்கப் போவதில்லை. அவர்கள் செய்ய வேண்டிய ஊழியங்களையும் மாற்றப் போவதில்லை. நீர் இங்கிருந்து புறப்பட்டு சான்றோரின் ஊரிலே சென்று தங்கினாலும், சான்றோருக்காக நீவிர் பரிந்து பேசுவதை யாம் கேட்கப் போவதில்லை' என்றான்.

அனந்தனாகிய ஆண்டவன், 'உனது பெருமைகள் எல்லாம் அழிந்து நரகம் செல்வதற்காக அல்லவா ஊரை விட்டு ஓடிப்போ என்று சொன்னாய். எனினும் மேலும் சொல்கிறேன். சான்றோர்களுக்கு விதித்துள்ள ஊழியங்களையும், இறைகளையும், அடிகளையும்நீக்கிவிடு' என்று நீலவண்ணார் வேண்டினார்.

எனினும் கலியன், 'சாணார் இறைகளை நீக்கினால் உனது பூசைகளுக்கு ஆகும் செலவுகளுக்கும், எனது செலவுகளுக்கும், அரசு செலவுகளுக்கும் ஆயிரமாயிரம் பொன்னுக்கு எங்கே போவேன்? திருமாலே! என்னோடு இருந்து கொண்டே எனக்கு எதிராகப் பேசினாய். உன்னோடு எனக்கு என்ன உறவு? இந்த நிலத்தை விட்டு நீ எங்கு வேண்டுமானாலும் போ' என்று அழிவுக்கு நெருங்கிய நீசன் ஆணவம் கொண்டு பேசினான்.

நீசன் இறைவனுக்கும் மரியாதையின்றி இழித்துப் பேசிய போதிலும்,கோபத்தை அடக்கி பொறுமை கொண்டு கோபாலர், 'எனக்குபூசை செய்யும்படி உன்னை நான் கேட்கவில்லை. நீ பிராமண நம்பூதிரிகளுக்கு பூசை செய்ததை நான் அறிவேன். உனது பூசைகளை நான் ஏற்கவில்லை என்பதற்கு அடையாளமாக நான் தெற்கே தலை சாய்த்துள்ளதைக் கொண்டு நீ அறியவில்லையா?' என்று கேட்டார்.

'எனது பூசையை ஏற்கவில்லை என்றால் என்னோடு இருந்தது ஏன்? நீ விரும்பும் இடத்திற்குப் போ' என நீசன் உரைத்தான். கலியன் சொல்லால் கடுங்கோபம் கொண்ட திருமால், 'உன் இடத்தைவிட்டு நான் திருச்செந்தூர் செல்கிறேன். என்னையும் ஏழைச்சான்றோன் என நினைத்துப் பேசிவிட்டாய். உன்னை அழிப்பதற்காக ஒரு வடிவம் தாங்கி வருவேன். எளியவர், வலியவர் அனைவர்க்கும் நன்மை செய்து நீ அறியும்படியாகஉலகத்திலே தர்மத்தை நடத்தி, பேய் போன்ற வெறிச் செயல்களை அழித்து, பூவுலகம் முழுவதும் ஆளும்படியாக நாடாள்வார் தமக்குப் பட்டம் சூட்டுவேன். எப்பொழுதும் ஒரே நினைவுடன் என்னையே நினைத்து இருப்பவர்களுக்கு நல்ல புத்திகொடுத்து இவ்வுலகத்தையே ஆள வைப்பேன்.'

நான் வரப் போவதை மரங்கள், உயிரினங்கள், மலை, கடல், வாயு, வருணன் அனைவரும் அறியச் செய்து வருவேன். நான் சான்றோரிடம் வந்த பின்னர் பல சாதியினரும் ஒற்றுமையுடன் வாழ்வார்கள்' என்று கூறித் திருமால் அன்றே திருவனந்தபுரத்தை விட்டுப் புறப்பட்டார்.

திருவனந்தபுரம் விட்டுப் புறப்படல்

புறப்படும் வேளையில் நாராயணர் தான் குடி கொண்டிருந்தசிலையைப் பார்த்து, 'இன்றுபோல் என்றும் இந்த மன்றத்தில் இரும்' மும்மூர்த்தியாகிய நான் ஒரே மூர்த்தியாகி, கயிலைப்பெண்களையும் திருமணம் முடித்து ஆதி வைகுண்டராக ஒருநாள் உம்மிடத்தில் வருவேன்' என்றார். அப்பொழுது அப்பொற்சிலை, 'நான் இங்கு இருந்தால் நீசன் வந்து என்னை பார்ப்பான். காளியும் என்னோடிருப்பாளே என்ன செய்வது?' எனக் கேட்டது.

'கலிநீசன் வந்தாலும் கண்டு கொள்ளாது போய் விடுவான். நீர் அதற்காக மலைக்க வேண்டாம். இன்று முதல் நான் இருக்கும்

இடங்களில் எல்லாம் சாதிகள் எல்லாம் ஒன்றுபோல் ஒற்றுமையாக வரும்' என்று கூறித் திருச்செந்தூர் புறப்பட்டார்.நம்பூதிரி ஒருவன் வேத நூல்களைப் புறட்டிப் பார்க்க,'சாதியெல்லாம் ஒன்றாய் வாழும் காலம் வரும்' என்றிருக்கக் கண்டான்.

திருமால் மூலப்பதி எனப்பட்ட பழங்கால கோயிலுக்குச் சென்று கையமர்த்தி அங்கிருந்த தெய்வ ஆற்றலை நீங்கச் செய்தார். திருமால் திருவனந்தபுரத்தை விட்டு நீங்கியதும் யானைத் துதிக்கை போல் மழை பொழிந்தது. உலகத்தையே அழிப்பது போல்காற்று வீசியது. கடல் கோபம் கொண்டது போல் கொந்தளித்தது. நீசனின் கோட்டை இடிந்தது. காவல் இருந்தவர்கள் எல்லாம் அச்சம் கொண்டு ஓடினார்கள். சிப்பாய், சுபேதார் அனைவரும் ஓடினார்கள். நீசனும் ஓடினான்.மோசம் போனோம் என நம்பூதிரிகள் அழுதார்கள். 'திருமாலையும் காணோம், உலகம் இருளானது, அரசன் நம்மைக் கெடுத்தான்' என வேதியர்கள் அழுதார்கள்.

பத்மநாபர் இருந்த வரையில் நாட்டில் நீசனின் சட்டம்நிலைத்தது. அவர் பிரிந்ததும் தேசத்தின் பல பகுதிகளை நவாப்பிடித்துக் கொண்டான். திருமால் திருச்செந்தூர் சென்றுகோயில் கொண்டார். திருச்செந்தூரில் சான்றோர்கள் தேர்செய்து, அவர்கள் தொட்டுக் கொடுத்த பின்னரே தேர் ஓடியது. வலங்கை உயர்வுடைய சான்றோர்களுக்கே முதலிடம் என்ற நிலை ஏற்பட்டது. கடற்கரையாண்டி என்ற பெயருடன் தெய்வமங்கையர் சூழ திருமால் திருச்செந்தூரில் வீற்றிருந்தார்.

திருச்செந்தூரில் ஆதித்தனார் குடும்ப நாடார்கள் தொட்டுக் கொடுத்த பின்னரே தேர் இழுக்கும் வழக்கம் இன்றும்நடைமுறையில் உள்ளது.

திருமால் கயிலை ஏகல்

திருமால் திருச்செந்தூரில் இருந்தார். நாட்டை ஆண்ட நசுறாணி என்ற நீசன் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளை அழித்தான். சான்றோரின் முறைகளை அழித்தான்; அவர்களின் புகழையும், பெருமைகளையும் அழித்தான். சான்றோர்களின்உயர்நிலையை அழித்து அவர்களைத் தாழ்ந்த சாதியினர் ஆக்கினான். இழிந்த நீசனுக்கு பவள மாலையும், வஞ்சகமுடையசாதியினருக்கு நல் வாய்ப்புகளும் கொடுத்தான்.

சாதிகளின் நிலை தடுமாறச் செய்து மூவேந்தர்களின் முடி அழியக் காரணமான நவாப் நாடு முழுவதையும் தன் நாடாக்கி நீசனை

நாடாள வைத்தான். 'இறைகளைப் பிரித்து தவறாமல் கப்பத்தை அனுப்பி வை' என்று வெண்ணீசனானவன் படைகளுடன் சென்றான்.

நவாப்பின் விருப்பம் போல நீசன் சட்டங்கள் இயற்றினான். சான்றோர்கள் மானம் அழிந்து, இழிநிலை அடைந்து இருந்தபோது தேவர்கள் அனைவரும் திருச்செந்தூர் வந்தார்கள். திருமாலைப் பார்த்து கலி நீசனால் தேவர் துன்புறும் நிலையையும், சான்றோர்களுக்கு ஏற்பட்ட இன்னலையும் எடுத்துக் கூறினார்கள். தேவர்கள் முறையிடும் வேளையில் உமையம்மை அங்கு வந்து திருமாலின் திருவடியில் வீழ்ந்து அழுது புலம்பினாள்.

பின்னர் அன்னை, 'நாராயணரே கலியினால் நாங்கள் மிகவும் துன்புற்றோம். தங்கள் மைத்துனரான சிவபிரான் கண்மூடி தலைகவிழ்ந்து இருக்கிறார். அவர் என்னோடு பேசுவதில்லை. சான்றோர்கள் படும் துன்பத்தைப் பார்க்க எழுந்தருளும். சிவன் நிலை தடுமாறி நீசனை பிறக்கச் செய்துவிட்டார். நீசன் உருவமற்ற பிறவி போல் பாவக் குணங்களுடன் இருக்கிறான். இதனால் தேவர்களும், சான்றோர்களும் அழியும் நிலை வந்துள்ளது. தாங்கள் கயிலைக்கு வந்து உங்கள் மைத்துனர் சிவனுக்கு ஓர் உபாயம் சொல்ல வேண்டும்' என்று இறைஞ்சினாள்.

திருமால், 'தங்கையே உன்னாலும், அந்தச் சிவனாலும் தான் எனக்கு அலைச்சலும், துன்பங்களும் உண்டாயின. சான்றோர்களை நான் படைத்திருக்க நீசனைப் படைத்தது நியாயமா? இந்தக் கலிநீசனை வாளாலும், வேறு ஆயுதங்களாலும் அழிக்க முடியாது.

ஒவ்வோரு யுகங்களிலும் நான் பட்ட துயரங்களை எண்ணிப்பார்க்காமல் அவர் தன் விருப்பம் போல இவ்வாறு படைத்துவிட்டாரே. சான்றோர்கள் தாயில்லாத பிள்ளைகள் போல வாடுகிறார்கள். சான்றோர்களை வளர்த்த பெண்ணான பத்திரகாளியும் மனம் வாடுவாள். எனவே நான் செல்லும் இடம் வேறில்லை. நீ உன்னுடைய கயிலாய மலைக்குப் போ' என்று கோபத்துடன் உரைத்தார்.

உமையம்மை அங்கிருந்து நகராது மீண்டும் அழுது புலம்பி, 'நீ கயிலைக்கு வராவிட்டால் சான்றோர்கள் அதிக துன்பப்படுவார்கள். நானும் சிவனும் மயங்கித் தவித்திருப்போம்' என்று பலவாறாகப் புலம்பினாள். 'உன்னோடு பிறந்ததினால் எனக்கு நிம்மதி இல்லை. ஊருக்கு ஊராய்த் திரிந்து அலையவேண்டியதாயிற்று. மகிழ்ச்சி

இல்லாமல் சலிப்படைய வேண்டியதாயிற்று' என்று திருமால் பலவாறாகப் புலம்பி கயிலைக்கு புறப்பட்டார்.

திருமால் உடலெங்கும் வெண்ணீறு அணிந்தார். ஆசை, மயக்கம்,நீக்கி இடைக்கோலம் கொண்டு, சிவனை நினைத்து, மார்பினிலே மணிகளைப் பூண்டு, கண்ணிலே உமையம்மையின் நினைவுகளைத் தாங்கி, முப்பத்திரண்டு அறங்களைப் பூண்டு, வெள்ளைக் கந்தைத் துணியை அணிந்து, கையில் தடியொன்றை ஏந்தி, தேவர், முனிவர் எல்லாம் போற்றி வர கயிலை மலை வந்தார்.

திருமால் சினம்

சிவனார் திருமாலைக் கண்டு, மகிழ்ந்து, கட்டித்தழுவி வரவேற்றார். திருமாலைக் காணாததால் தான் பட்ட துன்பங்களைக் கூறினார். தான் கலியனைப் படைத்தது தவறு என்றும், இனி திருமால் விருப்பம் போல் உலகை எல்லாம் ஆளலாம் எனவும் கூறினார். நீசனைப் படைத்த செயலுக்காக சிவனார் மீது கொண்ட கோபம் தீராத திருமால், 'நான் வேடனைப்போல் திரிந்து அலைகிறேன். நீங்களோ சங்கடங்கள் ஏதுமின்றி இருக்கிறீர்கள். குறோணி, குண்டோமசாலி, தில்லைமல்லாளன், சூரபத்மன், சிங்கமுகாசூரன், இரணியன், இராவணன், துரியயோதனன், கஞ்சன் ஆகியோரை அழிப்பதற்காக நான் பட்ட துன்பங்கள் ஏராளம். இனிமேலாவது பகை இல்லாமல் இருக்கலாம் என்று எண்ணினேன். சான்றோர்களைப் பெற்று இனி வேலையில்லை, அலைச்சல் இல்லை என்று எண்ணி இருக்கும் போது என்னை நினைத்துப் பார்க்காமல் மனிதனைப் பூமியில் படைத்தது ஏன்? 'கலி' என்ற சொல்லைக் கேட்டதும் உடனே உடல் சலிப்படைகிறது அல்லவா? உண்மை பேச வேண்டும் என்று நினைத்தால் கூட பொய் பேசத் தூண்டுகிறது.

வாளாயுதத்தாலும், வில், அம்பாலும் இந்தக் கலியை அழிக்கமுடியாது. நீர் வேறு அரக்கப் பிறவியைப் படைத்திருந்தாலும் நான் இவ்வளவு சஞ்சலப்படமாட்டேன். என் மக்கள் கலிக்குள் அகப்பட்டுள்ளார்கள். அவர்கள் மீட்சி பெறுவது எந்தக் காலம்? இந்தக் கலியனை எந்த வகையால் அழிக்க முடியும் என்று எண்ணி என் மனம் தவிக்கிறது. நான் இப்படியே அலையும் படியாக என்னை நீர் படைத்தது ஏன்?' என்றார்.

அப்போது ஈசுவரர் திருமாலைப் பார்த்து, 'ஆறு பிறவிகள் பிறக்கும் முன்னதாக நான் உமக்கு இத்துன்பங்கள் வரும்படியாக சபித்தேன். மைத்துனரே நீங்கள் சலிப்புடன் பேசினால் உலகம் வாழ்வது எப்படி? நீங்கள் சுவர். நான் சித்திரம். மலை போன்ற மைத்துனர் நீங்கள்' என்று பலவாறாக இனிய வார்த்தைகளைப் பேசி கலியனைப் பிறவி செய்த குற்றத்தைப் பொறுக்கும்படி வேண்டினார். 'எல்லாவற்றையும் பொறுத்து இனி நீங்கள் நினைத்தபடி ஒரு சொல்லால் உலகை ஆளுங்கள்' என்று எல்லா பொறுப்புகளையும் திருமாலிடம் ஒப்படைத்தார் ஈசன்.

திருமால், 'என்னை கீழுலகில் இறந்து கிடக்கிறார்' என்று சொன்னவர்களை எல்லாம் உடனடியாக வரவழையுங்கள் என்றார்.

தேவர்கள், முனிவர்கள் அனைவரையும் சிவபெருமான்வரவழைத்தார். அவர்களைக் கண்ட திருமால் கோபம்கொண்டார். அவர் கண்கள் சிவந்தன. அவரது கரிய மேனி மேலும் கருத்தது. தேவர்கள் முனிவர்கள் அனைவரும் திருமாலின் கோபம் கண்டு நடுங்கினார்கள். சிவன், உமை, எமன் கூட அஞ்சினார்கள்.

திருமால் முழு உரிமை பெறல்

"அப்போது நாராயணர், 'தேவர்களே, முனிவர்களே நான் ஒளித்தது எங்கே? சாகக் கிடந்தது எங்கே? உங்கள் விருப்பப்படி அரி இங்கே இல்லை என்று கோள் உரைத்தேன்? வேதங்களைப் புரட்டி நீங்கள் சொன்னதை எல்லாம் சொல்லுங்கள் என்றார். தேவர்களும், முனிவர்களும் அச்சம் கொண்டு எந்தப் பதிலும்பேசாமல் நின்றார்கள்.

சிவன், 'அன்று திருமால் கீழுலகில் தவம் இருக்கிறார் என்றும், இறந்து கிடக்கிறார் என்றும் கூறிய நீங்கள் இப்போது எதுவும் பேசாமல் நிற்பது ஏன்? என்று கேட்டார்.

திகைப்படைந்து நின்ற தேவர்களைப் பார்த்து, 'நான் சொல்வதைக் கேட்பீர்களா?' என்று கேட்டார். அப்போது சிவன், உமையாள் அனைவரும் திருமாலை அருகிலேயே இருக்கச் செய்து, 'இதற்கு முன் செய்த தவறுகளை எல்லாம் பொறுத்து இனி உங்கள்

எண்ணம் போலவே எல்லாவற்றையும் நடத்துவதற்கு உரிமை தந்தோம். இன்று முதல் உங்கள் விருப்பம் போல் எல்லாவற்றையும் நடத்திக் கொள்ளுங்கள்' என்று சத்தியமாய் நாராயணருக்கு உரிமை தந்தார்கள்.

இவ்வாறாக மும்மூர்த்தி உரிமைகள் அனைத்தும் திருமாலுக்கு வழங்கப்பட்டது.

தேவர்களைப் பூவுலகில் பிறக்க ஆணையிடல்

முழு உரிமை பெற்ற திருமால், 'கலியின் பிறப்பால் நான் மீண்டும் பிறக்க வேண்டிய நாள் வந்துள்ளது. தெய்வ லோகம் ஏழிலும் உள்ள மேலோர்கள் எல்லோரும் பூலோகத்தில் எனக்கு பிள்ளைகளாகப் பிறக்க வேண்டும் என்று முனிவன் ஒருவன் இட்டசாபத்தினால் தேவர்கள் பூமியில் சான்றோர்களாகப் பிறந்துள்ளார்கள். நான் திருவனந்தபுரம் நோக்கிச் செல்லும் போது பல தேவர்களையும், முனிவர்களையும், தருமிகளையும் கண்டேன். அவர்கள் வடக்குக் கயிலாயத்தில் வாட்டமுடன் இருந்தார்கள். கலியன் பிறந்து தான தவங்கள் குன்றியதால் இங்கு உம்மைக்காண வந்தோம் என்றார்கள். அவர்கள் மேலும் எங்களை சான்றோர்களாய் பிறவி செய்யுங்கள் என்றார்கள். அவர்களைப் பொறுத்திருங்கள் என்று கூறி இங்கு வந்தேன். இங்கு தேவர்கள் செய்த தவறினால் அவர்களைப் பூமியில் பிறக்கச்செய்வது சரியென்றே தோன்றுகிறது. தேவர்களே நீங்கள் சிந்தித்துப் பார்க்காமல் திருமால் இங்கே இல்லை என்று சொன்னதினால், உங்கள் இனமாகப் பூவுலகில் பிறந்திருக்கும் சான்றோர் குலத்தில் பிறக்கச் செல்லுங்கள்' என்று கூறினார்.

தேவர்கள், 'ஐயா, பூவுலகில் கலியன் செயலால் எங்களுக்கு இறப்பு வந்தாலும், மீண்டும் அந்தச் சான்றோர் குலத்திலேயே பிறக்குமாறு எங்களுக்கு அருள வேண்டும்' என்று கேட்க அப்படியே நாராயணர் வரம் அருளினார்.

சம்பூரணத் தேவன்

தேவருலகில் சம்பூரணத் தேவன் இருந்தான். எம உலகில் இருந்த பரதேவதை மேல் நாட்டங்கொண்ட சம்பூரணத் தேவன், 'நான்பூமியில் பிறக்க வேண்டுமானால் இப் பரதேவதையையும் என்னோடு பிறக்கச் செய்ய வேண்டும்' எனத் திருமாலிடம் வேண்டினான். திருமால்,

'தேவனே, நீ தேவர் குலத்தவன். அவளோ எம குலத்தவள். இருவரும் ஒன்றாகப் பிறத்தல் கூடுமோ? எப்படி இவ்வாறு உரைத்தாய்? என அதட்டினார். தான் ஆசை கொண்ட பெண்ணை எப்படியும் தன்னோடு பிறக்கச்செய்ய வேண்டுமென கெஞ்சினான் சம்பூரணன்.

'கீழ்நிலையில் உள்ள பெண்ணை மேலாக்க வேண்டுமென்றால் நீயும், அப்பெண்ணும் தவம் செய்தாக வேண்டும். தவத்தினால் நீங்கள் நினைத்தபடி உங்களுக்கு நான் அருளுவேன்' என்றார் திருமால். 'பூரணன்' என்ற சொல் நிறைவடைந்தவன் என்ற பொருளைத் தரும். 'சம்பூரணன்' என்றால் மிக நிறைவானவன், முழுமையானவன். அதாவது இறைவன். எனவே சம்பூரணன் என்ற சொல் இறைவனையே குறிக்கிறது.

சம்பூரணத் தேவன், மேலானவன். பரதேவதை எமலோகத்தவள், கீழானவள். கீழான உயிரை மேலான தன்னுடன் சேர்க்க நினைக்கிறான், அதாவது கீழான உயிரை மேல் நிலைக்கு கொண்டுவர சம்பூரணன் முயற்சி செய்கிறான்.

இதுவே அகிலத்திரட்டின் தத்துவமாகும். இறைவனின் தத்துவமும் இதுவே ஆகும். கலி என்னும் பாவத்தால் தாழ்வடைந்து கிடக்கும்உலக மக்களை மேம்படுத்தி, அவர்களை தேவர் நிலைக்குஉயர்த்தி தரும யுகத்தைத் தோற்றுவிக்க திருமால் பாடுபடுவதே அகிலத் திரட்டின் சாரம். இறைவனின் தத்துவத்திற்கு ஓர் அடையாளமாகவே சம்பூரணத் தேவனும், பரதேவதையும் அமைந்துள்ளார்கள். இறைவனின் தத்துவத்தை நிறைவேற்றும் கருவிகளாக அவர்கள் பூவுலகில் முடிசூடும் பெருமாளாகவும், பரதேவதையாகவும் பிறக்கிறார்கள்.

தேவர்கள் மானிடராகப் பிறத்தல்

திருமால் ஏழு உலகங்களிலும் உள்ள தேவர்கள், முனிவர்கள், தருமிகள் அனைவரையும் பூமியில்சென்றுசான்றோர் குலத்தில் பிறக்கும் படியாக அனுப்பி வைக்கிறார்.

அப்போது ரிசி ஒருவர், 'ஐயா எங்களில் ஒருவரை சான்றோரில் ஒருவராகப் பிறக்கச் செய்தீர். பிரம்மனிடம் தவறு இழைத்ததற்காக ஐம்பத்தைந்து ரிசிகளை உலகில் சென்று இருக்கச் செய்தீர். நாங்கள் இப்பொழுது பூமியில் சென்று பிரிந்து வாழ நேரிடுமே' என்று கேட்டார்.

திருமால், 'ஐம்பத்தைந்து வகையான சன்னியாசிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ராச்சியத்தில் வாழ்கின்றார்கள். அவர்கள் பல அதிசயங்களைக் காட்டுகிறார்கள். நான் தென்னாட்டில் பிறந்துவரும் பொழுது சன்னியாசிகள் அனைவர் வரங்களையும் கொண்டுவைக்கச் சொல்லி விடுவேன். நீங்கள் உலகில் எனது மக்களான சான்றோர் குலத்தில் பிறந்திடுங்கள். இறப்பு வந்தாலும் உங்களுக்கு நான் நற்கதி அருளுவேன்' என்றார்.

'நீங்கள் இதற்கு முன் பல நன்மைகளைச் செய்துள்ளீர்கள். இன்னும் ஒரு பிறவியில் நீங்கள் பிறந்தால் உங்களது யுக வரலாறு கேட்டு எனது சொத்துக்களையும், நாட்டையும் உங்களுக்கு கொடுத்து மும்மடங்காய் வளரச் செய்வேன்' என்று கூறிய திருமால் பூவுலகில் வாழும் ஐம்பத்தைந்து ரிசிகளின் இயல்பையும், செயல்களையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அவைகள் தற்கால சன்னியாசிகளின்செயல்களை விளக்குவதாகவும், விமர்சிப்பதாகவும் உள்ளன. சுவையான அப்பகுதியை இங்குக் காண்போம்.

ஐம்பத்தைந்து சன்னியாசிகள் நிலை

பாண்டிய நாட்டில் வாழும் சன்னியாசி வருசம் ஒருமுறை மாற்றிப் பிறந்தேன் என்றும், என்னைப் புருசனாகக் கொண்டால் பிள்ளை உண்டாகும் என்று சொல்லியிருப்பான்.

சிங்கள நாட்டில் உள்ள சீகண்டன் ராச்சியத்தில் வாழும் சன்னியாசி புங்கம்பால் உண்டு, பெண்களைப் பார்க்கமாட்டோம் என்று சொல்லி ஆடை உடுத்தாமல் இருப்பான்.

கோரக்க நாட்டில் உள்ள குருக்கேத்திரன் ராச்சியத்திலுள்ள சன்னியாசி சூரக்கோலும், சூலாயுதமும் ஏந்தி ஆணவத்துடன் பேசியிருப்பான். அவன் தனது ஆணவத்தால் சாவான்.

நாலாம் சன்னியாசி கண்களை இமைக்காமல், கையைக் கொண்டு காலைக்கட்டிக் கொண்டு இறுக்கி இருப்பான்.

ஐந்தாம் சன்னியாசி அன்னம் குடியாமல் பிஞ்சான எலுமிச்சை இலையைப் பிசைந்து தின்றிருப்பான்.

ஆறாம் சன்னியாசி கஞ்சாக் குடித்து தேகத்தை நீராக்கி தியானத்தில் இருப்பான்.

ஏழாம் சன்னியாசி இடுப்பில் மட்டும் ஒரு துணியைக் கட்டி பறவைகளைத் தின்று வாழ்வான்.

எட்டாம் சன்னியாசி கண்களை மூடி சுவாசத்தைக் கட்டுப்படுத்தியிருப்பான்.

ஒன்பதாம் சன்னியாசி உமிழ்நீரை இறக்காமல் இன்ப விறுவிறுத்து, ஈரவம் போல் கண்வெளுத்து, தூங்கினாற் போல் சூழச் சூழவிழித்து, பாங்குகள் தேடி பரிவுடன் இருப்பான்.

பத்தாவது சன்னியாசி நாள்தோறும் சிற்றாமணக்கு இலையில் தூங்குவான்.

பதினோராவது சன்னியாசி பவள மணிமாலைகளை அணிந்து தினம் மந்திரங்களைச் சொல்லி இறைவனை வணங்கி, உளுந்து உண்டும், கஞ்சாவை அருந்தியும் இருப்பான்.

பன்னிரெண்டாம் சன்னியாசி கல் மாலையணிந்து, இலுப்பை இலைச்சாறு குடித்து இருப்பான்.

பதிமூன்றாம் சன்னியாசி பருப்பு, பால், பழம், அவல் ஆகியவற்றை தினம் சாப்பிட்டு கோவை இலையும், கொடுப்பை இலையும் புசித்து சேவை செய்து இருப்பான்.

பதினாலாம் சன்னியாசி தினம் மந்திரங்களை ஓதிக் கொண்டு கயிறைத் திரித்துக் கட்டிக் கொண்டே இருப்பான்.

பதினைந்தாம் சன்னியாசி பால்கெந்த மாலை அணிந்து அறிவைத் தேடி மலர்ந்து துயின்று கொண்டிருப்பான்.

பதினாறாம் சன்னியாசி ஆடை உடுத்த எண்ணமில்லமல் கள்ளைக் குடித்து நிலையழிவான்.

பதினேழாம் சன்னியாசி கள்ளியைத் தின்றும், காய்கள், இலைகளைத் தின்றும் நெருப்பு காய்வான்.

பதினெட்டாம் சன்னியாசி அத்திக்காயைத் தின்று நாமமும், மாலைகளும் அணிந்து சுற்றி சுற்றித் திரிவான்.

பத்தொன்பதாம் சன்னியாசி மான் தோலில் இருப்பான்.

இருபதாம் சன்னியாசி மீசை உடையவன்.

இருபத்தோறாம் சன்னியாசி பாம்பின் முள்ளை தலையின் மேல் அணிந்து குளத்தைச் சுற்றி சுற்றித் திரிவான்.

இருபத்து இரண்டாம் சன்னியாசி மதுவை வைத்து மந்திரம் சொல்லி வணங்குவான்.

இருபத்து மூன்றாம் சன்னியாசி மயிரை வளர்த்து பால், பழத்தில் மந்திர தந்திரத்தை ஒதுவான்.

இருபத்து நான்காம் சன்னியாசி எங்கும் திரிந்தலைந்து மந்திரங்களை உருவேற்றி உடல் வாடியிருப்பான்.

இருபத்தைந்தாம் சன்னியாசி எருக்கம் பாலைக் குடித்து, பொம்மை செய்து அதன் மேல் படுத்திருப்பான்.

இருபத்தாறாம் சன்னியாசி கள்ளைக் குடித்து கறி, உப்பு கூட்டாமல் புலித்தோல் மேல் இருப்பான்.

இருபத்தேழாம் சன்னியாசி நீரைத் தியானம் செய்து, நித்திரைக்கும் மந்திரங்கள் ஒதி வீட்டுலகிற்கு வழிதேடியிருப்பான்.

இருபத்தெட்டாம் சன்னியாசி கோணலான கொண்டை முடிந்து ,சிறு தடியைக் கையிலேந்தி வெட்கமில்லாது அலைவான்.

இருபத்தொன்பதாம் சன்னியாசி சூலாயுதம் ஏந்தி ஓம் என்ற எழுத்தை ஒதி பல வடிவங்களைக் கொண்டு திரிவான்.

முப்பதாம் சன்னியாசி ஊமை போலவும், காது கேளாதவன் போலவும் திரிவான்.

முப்பத்திரண்டாம் சன்னியாசி உயர்ந்த இடம் பார்த்து அமர்ந்து, நான் பாம்பின் நஞ்சை உண்ட சிவனடியான் என்று கூறியிருப்பான்.

முப்பத்து மூன்றாம் சன்னியாசியின் கண் வெளுத்திருக்கும். தொண்டையில் கயிற்றுடன் செப்பு வடிவங்களைக் கட்டி திரிவான்.

முப்பத்து நான்காம் சன்னியாசியின் மண்டை பிளவு பட்டிருக்கும்.

முப்பத்து ஐந்தாம் சன்னியாசி முயலகன் போலவும், ஏமாற்றி பிழைப்பவர் போலவும் அலைவான்.

முப்பத்து ஆறாம் சன்னியாசி பெண்கள் தாலாட்ட பூக்களின் மீது சிறிது கூட ஆடை அணியாதிருப்பான்.

முப்பத்து ஏழாம் சன்னியாசி அகத்தி இலையை உண்டு, ஆனைத்தோலில் அமர்ந்து, மகத்துவமாய் பேசி மாள்வான்.

முப்பத்தெட்டாம் சன்னியாசி மிளகு முதலியவற்றை உண்டு, பல்லைத் துலக்காமல் இருப்பான்.

முப்பத்தொன்பதாம் சன்னியாசி சோற்றைக் குழைய சமைத்து. செவ்வலரிப் பூவை இட்டு, சாதம் ஆறுமுன் பூவோடு உண்பான்.

நாற்பதாம் சன்னியாசி நாக்கிலே ஓர் ஆணியை அதிசயமாய் நுழைத்துக் கொண்டிருப்பான்.

நாற்பத்தொன்றாம் சன்னியாசி சிறுபயிற்றை மாவாக்கி அதில் தேங்காய் போட்டு உண்டு மந்திரங்களை முழங்குவான்.

நாற்பத்திரண்டாம் சன்னியாசி அரைக்கீரை விதையை தின்று சுரை ஓட்டை ஏந்தித் திரிவான்.

நாற்பத்து மூன்றாம் சன்னியாசி நத்த சூரி விதையைத் தின்று இருப்பான்.

நாற்பத்து நான்காம் சன்னியாசி விராலி இலையையும், விளாங்காய் வெறும் ஓட்டையும் அவித்துத் தினம் உண்பான்.

நாற்பத்தைந்தாம் சன்னியாசி பூவைப் பறித்து தின்று பூனை போல் பேசுவான்.

நாற்பத்தாறாம் சன்னியாசி பேய்க் குமட்டிக் காயைப் பிசைந்து விதையை எடுத்துவிட்டு நாய் போலத் தின்று நாட்டிலிருப்பான்.

நாற்பத்தேழாம் சன்னியாசி எருமை மோரும், எள் எண்ணையும் குடித்து நறநறென பேசுவான்.

நாற்பத்தெட்டாம் சன்னியாசி மயக்கம் தரும் பெண்ணை மனதில் நினையோம் என்று கூறி இருட்டான பின் பெண் நினைவாகவே இருந்து, காம எண்ணங்களில் களித்து, உடல் வாடி, இறைவன் பெயரை உச்சரிக்காமல் இருப்பான்.

நாற்பத்தொன்பதாம் சன்னியாசி புகையிலையை தீயில் வைத்து புகையை அதிகமாகக் குடிப்பான். நகத்தை வளர்த்து இருப்பான்.

ஐம்பதாம் சன்னியாசி அரச இலை மேல் துயில்வான். மண்ணில் புரள்வான். மாசலம் குடிப்பான்.

ஐம்பத்து ஒன்றாம் சன்னியாசி கடற்கரை தோறும் சென்று புனித நீராடித் திரிவான்.

ஐம்பத்து இரண்டாம் சன்னியாசி நீல அவுரிச்சாறு குடித்து ஆலம்பலகையில் இருப்பான்.

ஐம்பத்து மூன்றாம் சன்னியாசி சுக்குப் பொடியைத் தின்று மருகு அணிவான்.

ஐம்பத்து நான்காம் சன்னியாசி கீரித்தோலை காலில் கட்டி பெரும் காவடி ஏந்தி பெருமையுடன் அலைவான்.

ஐம்பத்தி ஐந்தாம் சன்னியாசி விழியிட்டே ஆடி வெறிகொண்டே தான் திரிவான். வழி விட்டு விலகி வழி நடப்பான்.

சன்னியாசிகள் நிலைகள், செயல்கள் பற்றி இயன்ற அளவு விளக்கம் தரப்பட்டுள்ளது. இத்துறை வல்லார் இன்னும் நற்பொருள் தரக்கூடும். பலவிதமான மாறாட்டங்கள் இறைவழிபாட்டில் தேவையில்லை. உண்மை அன்புடன் இறைவனை வழிபட்டால் போதுமானது என்பது வைகுண்டரின் கூற்று.

சன்னியாசிகளின் போலித் தன்மைகளைக் கண்டு வெறுப்புற்ற திருமால் தென்னாட்டில் வரும் காலத்தில் சன்னியாசிகளின் வரங்களைப் பறித்துத் தண்டிக்கப் போவதாகக் கூறினார்.

சன்னியாசிகளின் இயல்புகளைக் கூறிய திருமால் வானுலகில் வாழ்ந்த ரிசிகள் அனைவரையும் பூவுலகில் சென்று பிறக்கும்படிகூறினார்.

பூவுலகில் புனிதர்கள் பிறந்தால் கலியுகம் தர்மயுகமாக மாறுவது எளிது என்பது திருமாலின் எண்ணம்.

திருமால் தர்மிகளுக்கு உறுதி கூறல்

தர்மிகள் அனைவரும் திருமால் திருவுளப்படி நடப்பதாகக் கூறினார்கள். திருமால், 'தர்மிகளே, நீங்களும் பூவுலகில் என்மக்களாய் பிறந்து வாழுங்கள். உங்களுக்கு நற்பலனை அளிப்பேன்' என்றார். அப்பொழுது தர்மிகளில் சிலர், 'திருமாலே தாங்கள் எங்களை மறந்தது ஏன்? தங்களைக் காணாமல் நாங்கள் வாடி இருக்கிறோம்' என்றார்கள்.

அவர்களே பாண்டவர்கள் என உணர்ந்த பெருமாள், 'ஒவ்வொரு யுகத்திலும் எனக்குத் துணையாய் இருந்த நீங்கள் இப்பொழுதும் பூவுலகம் சென்று என் மக்களாய் இருங்கள்' என்றார்.

தர்மிகள், ''நாங்கள் தான, தவங்கள் செய்து வைகுண்ட வாழ்வு பெற்றோம். எங்களைக் கலியுலகில் பிறக்கச் சொல்கிறீர்கள். பூவுலகில் பிறந்தால் குற்றங்களுக்கு ஆளாவோம். நடுத்தீர்ப்பு நாளில் உங்களுக்குப் பதில் சொல்ல முடியாத நிலையை அடைவோமே' என்று கேட்டார்கள்.

'கலியினால் உண்டாகும் பாவங்களை உங்களுக்காக நானே தவம்செய்து அழிப்பேன். உங்களை மகிழ்வுடன் நாடாளவைப்பேன். உங்கள் குற்றங்களைப் பொறுத்து, நல்லறிவும் தருவேன்' என்று திருமால் கூற தர்மிகள் அனைவரும் சான்றோர் குலத்தில் பிறந்தார்கள்.

பின்னர் திருமால் சிவலோகத்தில் இருந்த வானவர்கள் அனைவரையும் அழைத்து, 'கலியினால் அனைவரும் இழிவடைந்தோம், அழிந்தோம். எனவே அனைவரும் பூவுலகில் பிறந்து கலியை அழிக்கவேண்டும்' என்றார்.

வானவர்கள், 'நாங்கள் சிவப்பணி செய்து, யாருக்கும் பணியாமல்,மயக்கம், இடர் இல்லாமல் வாழ்கிறோம். எங்களுக்கு களைப்பு,பசி, தாகம், நோய் எதுவும் இல்லை. எங்களிலே ஆசையும், ஆண்பெண் பாகுபாடும் இல்லை. எங்களுக்கு காம இச்சையும் இல்லை. மலர் தூவி இறைவனை வணங்கி இன்ப துன்பமும், இருவினையும் இல்லாமல் அமைதியாக வாழும் எங்களை கலி உலகில் பிறக்கச்சொல்கிறீரே?' அய்யா, என திருமாலைக் கேட்டார்கள். மேல் உலகம் ஏழிலும் வாழ்ந்த வானவர்கள் அனைவரையும் பூமியில் பிறக்கச் செய்து அண்டங்கள் அனைத்தையும், உயிர்கள் அனைத்தையும் பூமிக்குள் அடக்கி விடுகிறார் வைகுண்டர். இதன்மூலம் மேலுலகம், கீழுலகம் என்பது அனைத்தும் பூவுல்கு ஒன்றுக்குள்ளேயே அடக்கம் என்பது அகிலத் திரட்டின் கருத்து எனஎண்ணத் தோன்றுகிறது.

பூமியில் பிறக்கத் தயங்கும் வானவர்களுக்கு இல்லற வாழ்வின் பெருமைகளை இனி கூறவரும் திருமால், 'இல்லற வாழ்வின்றி வேறு வாழ்வில்லை' எனக் கூறுகின்றார். உலகில் பிறந்து இல்லறத்தில் சிறந்து வாழ்வதே அனைத்து பிறப்புகளைக் காட்டிலும் உயர்ந்தது என்பது வைகுண்டர் கருத்து.

இல்லறச் சிறப்பு

இதோ வைகுண்டர் கூறும் இல்லறச் சிறப்பைக் கவனியுங்கள். ‘‘வானவர்களே நான் இனி செய்யக்கூடிய பிறவிகளில் இல்லறத்தைத் தவிர வேறு தவம் இல்லை. பேடு, அருளியிருளி, மானமில்லார் என்று எந்த மேற்பிறவியும் இனி இல்லை.

ஒவ்வொரு ஆணும் ஒரே பெண்ணுடன் ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்ற முறையில் எல்லாக் காலங்களிலும் இனிது வாழ்வார்கள். அவர்கள் மக்கள் கிளைகளொடு செழித்து வாழ்வார்கள். அடக்கமுடன் வாழ்கின்றவர்கள் புகழ்பெருகி பெருமையுடன் வாழ்வார்கள். இத்தகையோருக்கு என்றும் அழிவில்லை. பெண்ணுடன் மகிழ்ந்து வாழ்வார்கள். இல்லறமில்லாமல் பிறவியற்ற வாழ்க்கை வேறு இல்லை’’ என்பது வைகுண்டர் கூற்று.

வைகுண்டர் படைக்கும் உலகில் ஊர், பேர் அற்று, உற்ற சுற்றம் மறந்து, உலகை மறந்து, நாட்டின் பெருமை மறந்து, ஆடல் முதலிய இன்பங்களை மறந்து, அன்னம், சொர்ணம் மற்றும் சுக தூக்கம், நலம் முதலியவைகளை மறந்து வாழும் தவ வாழ்க்கை இல்லை.

எல்லா நன்மைகளும் மகிழ்ச்சியும் உண்டு. ‘அடுத்த பிறவியில் மக்கள் அனைவரையும் ஒரே இனமாய், அன்புடையோராய் இன்பமுடன் வாழவைத்து அரசாள்வேன் என்று இல்லறச் சிறப்பைக்கூறி, அவசியமற்ற துறவு எனும் துன்பங்கள் இல்லாமல் சுகமான வாழ்க்கை வாழலாம்’ என வைகுண்டர் கூறுகிறார். இல்லறவாழ்வே சிறப்புடையது என்பது வைகுண்டர் கூற்று.

திருமால் உரை கேட்ட வானவர்கள், ‘அய்யா, நன்மைகளோடும், பெண்ணோடும் கூடிய இல்லற வாழ்வில் மேண்மையுண்டாகும் படியாக பிறக்கச் செய்வேன் என்று சொன்னீர்கள்’. தாங்கள் கூறியபடியே பிறக்கச் செய்யுங்கள் என்றார்கள்.

திருமால் ஏழுலக தேவர்கள், முனிவர், ரிஷிகள் அனைவரையும் பூவுலகில் சான்றோராய் பிறக்கச் செய்தார்.

இவ்வாறாக, வைகுண்டர் உலகங்கள் அனைத்தையும் பூமியில் அடைத்தார். எளிமையாக, இனிமையாக வாழும் இல்லற வாழ்வை மேன்மைக்கு உரிய வழியாக விதித்தார். தர்மயுகம் தோற்றுவிக்க தயார் செய்தார் பூவுலகை.

தர்மயுகச் சிறப்பு

தேவர்களை எல்லாம் பூமியில் பிறக்கச் செய்த நாராயணர் சிவனை அடைந்து, 'ஆதியே, அனாதியானவனே, ஒளி வடிவானவனே, தெய்வ உலகு ஏழிலும் உள்ளவர்களைப் பூமியில் சான்றோர்களாகப் பிறக்கச் செய்துள்ளேன். கலியுகத்தில் பிறந்துள்ளதால் அவர்களும் அசுத்தப்படக் கூடும். கலியில் அகப்பட்டவர்கள் மீட்சி அடைய நல்லவழி வேண்டுமல்லவா? அதற்கென ஆற்ற வேண்டியபணி என்ன என்று கூறுங்கள்' என்றார்.

ஈசர் அச்சுதரைப் பார்த்து, 'நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. காரியங்களைச் செய்ய வேண்டியது நீங்களே. நான் முன்னர் உரைத் சத்தியத்தின்படி இனிமேல் நடப்பதை நடத்திக்கொள்ளுங்கள்' என்று அண்டங்கள் அனைத்தையும் இனி இயக்கும் பொறுப்பை முழுமையாகத் திருமாலிடம் முன் ஒப்படைத்ததை நினைவுபடுத்தினார்.

அகிலங்களை ஆளும் பொறுப்பைச் சிவன் திருமாலிடத் ஒப்படைத்துவிட்டதால் முழு முதற்பொருளாய், முப்பரம்பொருளாய் திருமாலே ஆகிவிட்டதை நாம் உணரவேண்டும். 'நீசனை அழித்து தர்மயுகத்தை தோற்றுவிக்கவேண்டும் என்று திருமால் சிந்திக்கிறார். 'புதுயுகத்திற்கேற்ற தாவரங்கள், புதிய மானிடர்கள் இவ்வாறாக தர்மயுகத்திற்கு ஏற்ற பொருட்களை எல்லாம் படைக்க வேண்டும்' என்று எண்ணுகிறார்.

இவ்வாறு சிந்தித்த திருமால் சிவனை நோக்கி, 'துரியோதனனை அழித்து நான் திருவரங்கத்திலிருந்தேன். அப்போது கலிஉலகத்தில் வந்ததனால் நீதி நெறிகளும், தர்மமும், வெள்ளானை முதலிய நல்ல விலங்குகளும், வெண்போத்து முதலிய நல்ல பறவைகளும் நீசனை ஏற்றுக் கொள்ள முடியாமல் அறிவுடன் உலகைவிட்டு, கானகம் கடந்து என்னை நினைத்து தவம் செய்தன.

தர்மயுகம் தோன்றும் போது அவை அனைத்தும் உலகில் தோன்றும். இன்னும் தர்மயுகத்தில் நல்ல தாவரங்கள் பலவற்றையும் உருவாக்க வேண்டும். வானத்திலே உள்ள நிலவு தர்மயுகத்தில் எப்பொழுதும் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும். அவ்யுகத்தில் ஒரே ஒரு மதம் தான் இருக்கும். வாயுவானது மலரெடுத்து வீசும். கலைகளும், தமிழும் ஒன்றுபோல் பரவும். தர்மபதிகள் பல தோன்றும். மக்கள்

அனைவரும் ஒரே சாதியாக மகிழ்ந்து வாழ்வார்கள். சான்றோர்களாகிய நல்லவர்களே உயர்ந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் நீண்ட ஆயுளுடன் புண்ணியம் உடையவர்களாக பூமியை ஆண்டிருப்பார்கள்.

இப்படியான தர்ம ராச்சியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற நோக்குடன் முன் முடிந்த துவரம்பதியில் பெரிய தங்கப்பதியும், தேரும் சிங்காசனமும் கடலுள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. தர்மபுவி கண்டு வாழும் மக்களுக்கு நோய் இல்லை. எமனின் துன்புறுத்தலும் இல்லை. தவறுடைய முன் சாத்திர நூல்களைஎல்லாம் மறைய வைத்து தர்ம யுகத்துக்கு என புராணம் ஒன்றை உண்டாக்கி போதிப்பவன் ஒருவனையும் உருவாக்க வேண்டும். அதற்கு முன் தர்மயுகத்திற்கு தேவையானவற்றையெல்லாம் ஆக்கிகலியை திடீரென அழிப்பதற்கு உரிய வழிகளைப் பார்ப்போம்' என்று கூறினார்.

ஏழு அம்மைமார் தவம் நிறைவேறுதல்

"தர்மயுகம்" படைப்பதற்கான வழியைத் திருமால் சிந்தித்து இருக்கும் வேளையில் அயோத கங்கை அமிர்த வனத்தில் திருமாலினால் குழந்தைகளைப் பெற்ற தெய்வப் பெண்கள் ஏழுபேரும் கடுந்தவம் புரிந்தார்கள். ஆலம் விழுதுகள் அவர்கள் மீது படர்ந்து மூடியது. அவர்கள் தலை மயிர் பூமியில் வேராகப் படர்ந்தது. இவ்வாறு ஏழு பெண்களும் அர்ச்சுனனைக் காட்டிலும், சீதையைக் காட்டிலும் கடுமையான தவம் செய்தார்கள்.

பெண்களின் தவச் சிறப்பைக் கண்ட அன்னை உமையாள் சிவனிடம் கூறிப் பெண்களின் தவத்தை நிறைவேற்ற வேண்டினாள். தெய்வகன்னியர் தவம் முடிக்க வேண்டுமானால் திருமால் வரவேண்டும் என்றார் சிவன். உமையம்மை திருமாலை வேண்டி அழைக்க அவரும் உடன் சென்றார். மூவரும் தெய்வ கன்னியரை அடைந்தார்கள். தெய்வ கன்னியர், மூவரையும் வரவேற்று, அன்னையே நாங்கள் என்ன தவறு செய்தோம் எங்களுக்கு அருள்புரிய தாமதம் ஏன்? என கேட்டனர்.

அப்போது உமையம்மை ஆதிசிவனை நோக்கி, 'தவத்தை நிறைவேற்றி வையுங்கள்' எனச் சொன்னாள். திருமால் பெண்களைச் சூழ்ந்திருந்த தடைகளை எல்லாம் அகற்றி, 'பெண்களே எழுந்து வாருங்கள்' என அழைத்து தவத்தை நிறைவேற்றி வைத்தார். கரையை அடைந்த கப்பலைப் போல மகிழ்ச்சி அடைந்த தெய்வப் பெண்கள்

சிவனைப் போற்றி மீண்டும் எங்களைக் கயிலைக்கு அழைக்காமல் எங்கள் கணவரையும், நாங்கள் பெற்றெடுத்த குழந்தைகளையும் தந்து இவ்வுலகில் அரசாண்டு இருக்கச் செய்யுங்கள் என வரம் கேட்டார்கள்.

திருமால், கன்னியர் நீர் திரட்டி அபிஷேகம் செய்ததையும், தனக்கு நீர் வார்க்கும்படி தான் கேட்டதையும், மறுத்த பாவையரைமாயக் கனலாய் நின்று தான் மதலை பெறச் செய்ததையும் கூறினார்.

திருமால் தெய்வப் பெண்களை நோக்கி, நீங்கள் பெற்ற பிள்ளைகள் அமுது அருந்தி மன்னர்கள் போல சில நாள் வாழ்ந்தார்கள். சோழன் இருவரைக் கொன்று பழி ஏற்றான். நீசன் சாபமிட்டதால் சான்றோர் துயரடைந்து கலியில் அகப்பட்டுத் துன்புறுகிறார்கள் என்று உரைத்தார்.

தாம் பெற்ற பிள்ளைகள் பற்றி திருமால் உரைக்கக் கேட்டதெய்வப் பெண்கள் தலையில் அடித்துக் கொண்டு கீழே விழுந்து அழுதார்கள். சோழன் அழியவும், கலியன் ஒழியவும் மனம் நொந்து சபித்தார்கள்.

பின்னர் திருமாலைப் பார்த்து, 'எங்கள் கற்பை அழித்து குழந்தை கொடுத்த பண்டாரமாகிய பெருமாளே, எங்களை மனைவியராக ஏற்று, எங்கள் குழந்தைகளையும் கொடுத்து வாழ்வு அளியுங்கள். அப்படிச் செய்யாது போனால் ஏழு பெண்களின் பாவத்தையும் ஏற்பீராக' என்று சபித்தார்கள்.

திருமால், 'பிரம்மா விதித்த விதிப்படி உங்களுக்கு இவ்வாறு நேரிட்டது. கலி அழியும் வரை இன்பங்களைத் துய்க்க எனக்கு விதியில்லை. முன்னரே ஏழுயுக அசுரர்கள் அழியும் வரை துன்புறும்படியாக ஈசன் எனைச் சபித்துள்ளார். இந்த பெரும் துன்பம் நீங்கும் வரை நீங்கள் எங்குச் சென்று தங்குவீர்கள் எனத் தெய்வப் பெண்களிடம் கேட்டார்.

சான்றோர்களைப் பெற்ற அம்மைமார், 'அய்யா, சான்றோர் குலத்தில் எங்களைப் பிறக்கச் செய்யுங்கள். நீங்கள் வந்து எங்களை ஏற்றுக் கொள்ளும் வரை நாங்கள் பூப்படையாமல், குழந்தையராகவே இருக்கச் செய்யுங்கள். இறந்து போன எங்கள் பிள்ளைகள் எங்கே?' என்று நாராயணரைக் கேட்டார்கள்.

இறந்து போன சான்றோர் இருவரின் உயிரையும் கயிலாயத்தில் அடைத்து வைத்திருப்பதாகத் திருமால் கூறினார். அதைக் கேட்ட அம்மைமார், 'ஐவரோடு அவர்களும் பெருகியிருப்பார்களே.' இப்போது அவர்களையும் பிறக்கச் செய்யுங்கள் என வேண்டினார்கள்.

திருமால் அவர்கள் கேட்ட வரங்கள் அனைத்தும் அளித்து, 'நான் பிறந்து வரும் வரையும் என் நினைவாயிருங்கள். வடக்கிலும், வடமேற்குத் திசையிலும் கால் நீட்டாதீர்கள் என்று கூறி சிவன், திருமால், பிரம்மா மூவருமாக தெய்வப் பெண்களை உலகில்பிறக்கச் செய்தனர்.

காளி சிறை

திருமால் காளியை அழைத்து சோழன் சான்றோர் இருவரைக் கொன்ற விவரம் கேட்டார். மாகாளி, தான் சோழன் மீதுகோபம் கொண்டு அவன் நாட்டில் பஞ்சம் ஏற்படும்படி சபித்ததைக் கூறி அழுதாள். மக்களைக் காப்பாற்றாமல் விட்டதற்கு பத்திரகாளியை வடவா முகத்தில் சிறை வைத்தார் பெருமாள்.

திருமால் சிவனாரிடம், 'சிவனே காளி சிறையிருக்கும் நிலைவந்தால் உலகில் யாருக்கு சுகம் கிடைக்கும். கலியை முடிக்கவேண்டிய வேளையில் வடமுகாக்கினியில் காளி சிறையிருக்க நாம் இங்குப் பார்த்திருக்கலாமோ?' எனக் கேட்டு வருந்தினார்.

"மைத்துனரே, கலியை அழிப்பது தங்கள் கடமை. தாங்கள் எப்பொழுது கலியை அழித்து எங்களை மீட்பீர்கள் என காத்திருக்கிறோம்' என்றார் ஈசுவரர்.

இலக்குமி பொன் மகரமாதல்

திருமால் இலக்குமியை அழைத்து, 'திருப்பெண்ணே, ஆறுமுகனின்திருச்சம்பதி கடலின் உள்ளே மண்டபமும், தேரும், சிங்காசனமும் உனக்காக அமைத்துள்ளேன். அங்கே சென்று பொன் மகர வடிவாய் நீ இருக்கவேண்டும். கலியுகத்தை முடிக்க ஒரு மகனைப் பெற்று, நகர் சோதனை பார்த்து, தீய கலியை அழித்து, உன் மகனுக்கு முடியும், செங்கோலும் கொடுத்து அரசாள வைக்க ஆண்பிள்ளையொன்றைப் பெறுவதற்காக நீ அங்கு செல்வாயாக' என்றார்.

அய்யா, பொன் மகரமாக நான் கடலிலே இருந்தால் நீர் அங்கே வருவதற்கான அடையாளம் என்ன? என்று அன்னை இலக்குமி கேட்டாள். 'மூன்று சடையுடனும், கண்களில் சூரிய ஒளி பிரகாசமுடனும், நெற்றியில் பிறை தாங்கி, கனல் வடிவமாய்,பதினான்கு உலகங்களுக்கும் ஒரே வடிவமாய் கலியை எரிக்க, தர்மத்தை தண்டை மணியாகக் கட்டி, வேதங்களைப் பிரகாசிக்கின்ற உடலாக்கி வருவேன். நீ என் நினைவாகவே இருந்தால் பிழைப்பாய். நாம் இருவருமாக ஒரு மகனை ஈன்று அவனை அனுப்பி கலியை அழித்த பின்னர் தான் நமக்கு மகிழ்ச்சியான காலம் உண்டு. அந்த மகனே நாடாள்வான்' என்றார் திருமால்.

கலியை அழிக்க வரப்போகும் வைகுண்டராக திருமால் கூறும் வடிவில் சிவனுக்குரிய அடையாளங்களும் இருப்பதைக் காண்கிறோம். இதிலிருந்து கலியை அழிக்க வரும் வைகுண்டர் முப்பொருளும் ஒரு பொருளான பரம் பொருள் என அறிகிறோம். அப்பரம்பொருள் கலியை அழிக்க தர்மத்தையும், வேதத்தையுமே துணையாகக் கொண்டுள்ளதை நாம் உணர்கிறோம்.

'என்னை மகரமாக எவ்வாறு அமைப்பீர்கள்?' என்று அன்னை கேட்டாள். அன்னையைப் பொன் மகரமாக அய்யா மனதிலேநினைத்தார். உடனே அலைகள் வந்து அன்னையை எடுத்துச் சென்று செந்தூர் கடலினுள்ளே திருமால் படைத்த கோட்டையினுள் வைத்தன. தெய்வ அரம்பையர்களும், தேவர்களும் குரவையிட,வாத்தியங்கள் ஒலிக்க, வலம்புரிச் சங்குகள் முழங்க, குளிர்ச்சி பொருந்திய இரத்தினங்களும், முத்துக்களும் ஒளி வீச, கோமேதகம் சூழ, கன்னிமார்கள் கவரி வீச, மறையோர் சாத்திரங்கள் ஓத திருப்பெண்ணாள் வந்து வளர்ந்தாள்.

பார்வதி, ஈசுவரன், பிரம்மா மற்றும் வேதியர்கள் திருமகளைக் காண தினம் வந்தார்கள். சிவலோகத்தவர் 'சிவசிவா' என்று சொல்லி நின்றார்கள். சூரியனும், சந்திரனும் அன்னையின் பதம் போற்றினார்கள். பொன்னுலகத்தோர் மலர் தூவினார்கள். அன்னை திருமகள் அலைக்குள் மகரச்சிலை போல வளர்ந்தாள்.

சம்பூரணன் தவம் தவறுதல்

அன்னை மகரச்சிலை போல வளர திருமால் சங்கரனை நோக்கி, 'எனது மனத்திற்கு இனியவள் அங்கு சிலை போல் வளர தேவர்களில்

வல்லவனான சம்பூரண தேவனும், பரதேவதை என்னும் எமலோகப் பெண்ணும் பூவுலகில் ஒன்றாகப் பிறக்கத் தவம்செய்கிறார்கள். அவர்களை உலகில் பிறக்கச் செய்யக் கூடிய நாள் வந்துள்ளது. சம்பூரணத் தேவனின் தியானம் நிறைவேறியுள்ளதா? பார்க்கலாம் வாருங்கள்' என்று அழைக்க சிவனும், திருமாலும் திருமுடி சூடிய தேவேந்திரனும் சம்பூரணத்தேவனிடம் சென்றார்கள்.

சிவனும், திருமாலும், தேவேந்திரனும் தொலைவில் வரக்கண்ட சம்பூரணன் இந்திரனின் முடி மீது ஆசை கொண்டான். தியானம் மயங்க பரதேவதையிடம், 'பெண்ணே இந்திரன் தலையிலுள்ள திருமுடியை என் தலையிலே அணிந்து, நீ அருகிருக்க இவ்வுலகை ஆட்சி செய்தால் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்?' என்றான்.

அப்பொழுது பரதேவதை, 'நீங்கள் நினைத்தபடி ஆதிசிவன்நம்மைப் படைத்தால், படைக்கப்பட்ட நாம் இறவாமலிருப்போமா?' எனக்கூறினாள். சம்பூரணன் பெருமூச்சு விட்டான்.

பிறப்பு இறப்பு இல்லாத உயர்நிலை அடைவதிலேயே பரதேவதை நாட்டம் கொண்டுள்ளதை இங்குக் காண்கிறோம். திருமாலும், சிவனும் அருகில் வந்தனர். சம்பூரணனும், பரதேவதையும் வணங்கினர். ஆதிசிவன், 'மாயவரே அவன் ஆசையை அறுக்கவில்லை. தவம் நிறைவேறும் வேளையில் திருமுடிமேல் இச்சை கொண்டான்.' என்று கூறி சம்பூரணை நோக்கி,'இப்போது நீ நினைத்ததைச் சொல்' என்றார்.

சம்பூரணன், 'ஐயோ! நாங்கள் மனதில் நினைத்ததை அறிந்துவிட்டீர்களே! நாங்கள் தவம் தவறி செய்த பிழையை பொறுக்கவேண்டும்' என்று மன்றாடினான்."

சம்பூரணன், பரதேவதை பிறப்பு

திருமால் சம்பூரணனிடம் நீ பூமியில் சான்றோர் குலத்தில் என் மகவாய் பிறந்திருப்பாய். பரதேவதையாகிய இவள் அங்கிருந்து தனது கணவனுக்கு உரிய ஊழியங்களைச் செய்து பல துன்பங்கள் பட்டு, இனிய மொழிகள் இல்லாமல், நல் உறவும் இல்லாமல் எப்பொழுதும் ஏக்கமுடன் துன்புற்று இந்த சம்பூரணனாகிய உன்னுடன் கூடி இருவரும் ஒருவரெனவே உற்றம் சுற்றம் மறந்து, சுகதுக்கம் மறந்து சந்தோசமில்லாமல், எல்லோரிடமும் வெட்கமடைந்து, மேலும் பல இன்னல்களை அடைந்து பலராலும் கேலி செய்யப்பட்டு, இரத்த

ம் சிந்தி, இருமலும், விக்கலுமாய் இன்னலுற்று பின்னர் நாட்டை அரசாண்டு நாச்சியார் போலிருப்பாய்' என்றுரைத்தார். பரதேவதையை பூமியில் பிறக்கச்செய்து, 'பரதேவதை பூமியில் பிறந்தாள், நீ என்ன செய்யப்போகிறாய்?' என்று சம்பூரணனைத் திருமால் கேட்டார். அப்பொழுது சம்பூரணன் 'நாராயணரே' நான் தவம் செய்யும் வேளையில் இந்திரனின் திருமுடி மீது ஆவல் கொண்டு மெய்ஞ்ஞானத்தைவிட்டு மயங்கினேன். என்மீது இரக்கம் கொண்டுநான் செய்த பாவ வினையை நீக்கி அருள்புரிய வேண்டும்' என இறைஞ்சினான்.

திருமால், 'கீழான மங்கையரை மேலாக்க வேண்டுமென்று நீ தவமிருந்தாய். தவம் செய்கையில் ஆசை கொள்ளலாமா? பற்றை நீக்கினால் அல்லவா பரநிலையை அடையலாம். உனக்கு இத்தீய நினைவு வந்ததனால், நீயும் அப்பெண்ணைப் போல உலகில் பிறந்து, அப் பெண்ணோடு உறவாடி பல துன்பங்களைஅடைந்து, நஞ்சு தின்றாகிலும், நாண்டு கொண்டாகிலும் சாகமனங்கொண்டு நீ வாழும் நாளில் உன் துயரம் தீர்த்து உன்னை என் மகனாக எடுத்து, உன்னை என்னாக்கி என் ஆற்றல், பெருமைகளை எல்லாம் உனக்களித்துப் 'பொன்னரசு' தந்து புவியாள வைத்திடுவேன்' என்று கூறினார்.

அப்பொழுது சம்பூரணன் பெருமாளை வணங்கி, 'பூமியில் அவதரிக்கப் போகச் சொன்னீர். கலியுலகில் நான் பிறந்தால்நான் பிறந்த குல மக்கள் எல்லாம் பெருமை அடையும்படி என்குப் புத்தி சொல்லிக் கொடும். மேலும் என்னை நீர் வந்துஆட்கொள்ளும் நாளையும் விவரமாகக் கூறும்' எனக் கேட்டான்.

திருமால் 'நான் வரும் நாளில் சுவாமி வேதம் மறந்து சுழல்வேதம் உண்டாகும்; சாதிகள் நிலை தடுமாறும்; நீசர்கள் அதிகரிப்பார்கள். இவ்வாறான கலியின் கொடுமைகள் அதிகரிக்கும் காலத்தில் நான் வருவேன். உன்னால் எனது வேலைப் பளு குறையும் என்று தான் இவற்றைச் சொன்னேன்' என்றார். அதைக் கேட்ட சம்பூரணன், 'ஆதிகாலம் முதல் உமக்குத் தொண்டு செய்யும் சான்றோர் குலத்தில் என்னைப் பிறக்கச் செய்யும்' என வேண்டினான்,

திருமால், 'எனது மக்கள் ஏழு பேரின் சான்றோர் குலத்தில்பிறக்கப் போகிறாய்' என்றார்.

ஆறு யுகங்களிலும் தன்னைத் தாங்கி மலையில் மறைத்து வைக்கப்பட்ட சடலத்தைக் கொண்டு வரும்படி திருமால் உத்தரவிட்டார்.

தேவர்கள் சடலம் இருந்த மலைக்குச் சென்று திருமாலின் உடற் கூட்டைக் கண்டு அதனைத் தேரிலேற்றி கயிலை வந்தார்கள். 'நீ பூவுலகில் எனது மகனாகப் பிறந்து இரு. சிலநாள் கழித்து உனக்குப் புத்தி உபதேசங்கள் செய்து அனைவரின் துயரத்தையும் மாற்றி உன்னை அரசாளச் செய்வேன்' என்று சடலத்திற்கும் திருமால் கூறினார்.

'திருமாலின் மகனாகப் பிறக்க சம்பூரணன் என்ன தவம் செய்தானோ. இந்தச் சம்பூரணன் பிறக்கும் குலத்தில் நாம்பிறந்தால் நமக்கும் நலம் கிட்டும் என எண்ணி சான்றோர் குலத்தில் தேவர்களும் வந்து பிறந்தார்கள்.

கலியினால் பூவுலகத்திலும், தேவர் உலகிலும் ஏற்பட்ட விளைவுகள் இங்கு கூறப்பெற்றது. மானிடர் துன்பம் நீங்கவும், தேவர்களின் துயர் தீரவும் கலியை அழிக்க வேண்டியது அவசியமாயிற்று. எனவே திருமால் தான் பூவுலகில் பிறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ததை இங்குக் கண்டோம்.

வைகுண்டர் காலத்துச் சமுதாயம்

அநீதியின் கை ஓங்கி தர்மம் தாழ்ந்து நிற்கும் நிலையில் இறைவன் தோன்றுவான் என கீதை கூறுகிறது.

இறைவனாகக் கருதப்படும் வைகுண்டர் தோன்றுவதற்கு உரியதேவையை, காரணத்தை உணர வேண்டியது அவசியமாகும்.

இதற்காக 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19ஆம்நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருந்த தென்னாட்டின் சமுதாயநிலையை ஆராய வேண்டியது இன்றியமையாமை ஆகும்.

இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிறபகுதிகளிலும் இருந்த அரசர்களும், நவாப்புகளும் வலுவிழந்து இருந்தனர். அப்பொழுது ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்திய நாட்டில் காலூன்றி ஆதிக்கம் பெற்றுக் கொண்டிருந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர் ஜெனரலாக இருந்த வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தின்படி ஒவ்வொரு அரசுகளிலும் ஆங்கிலேயப் படைகள் அமைக்கப்பட்டு இந்திய அரசர்கள் ஆங்கிலேயர்களின் கைப்பாவைகளாகச் செயல்பட்டனர்.

திருவாங்கூர் மாநிலத்தின் மேற்குப் பகுதியில் மலையாளமும், கிழக்குப் பகுதியில் தமிழும் பேசப்பட்டது.

"இக் காலகட்டத்தில் மிளகு, தேயிலை, காப்பி, இலவங்கம்போன்ற பொருட்களை வாங்கி வாணிபம் செய்ய வந்த போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோர் திருவாங்கூர் மாநிலத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைப்படுத்திக் கொள்ள முயன்றனர்."

" 1723 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாள் அப்போதிருந்த மார்த்தாண்ட வர்மா என்ற அரசர் ஆங்கிலேயர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டு குளச்சல் என்ற இடத்தில் அவர்கள் கோட்டை ஒன்று கட்டிக் கொள்ள அனுமதித்தார்."

" 1795 ஆம் ஆண்டு கார்த்திகைத் திருநாள் ராமவர்மா ஆங்கிலேயர்களுடன் மற்றொரு உடன்படிக்கை செய்துகொண்டு ஆங்கிலேயரைத் தவிர மற்ற வெளி நாட்டவர்களை தன்னாட்டில் அனுமதிப்பதில்லை என உறுதி அளித்தார்."

இவ்வாறாக படிப்படியாகத் திருவாங்கூர் ஆட்சியாளர்கள் ஆங்கிலேயர்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் நிலையை அடைந்தனர்.

"உள்நாட்டு அரசியல் சிக்கல்களினாலும், வெளிநாட்டு அரசியல் சூழ்நிலைகளினாலும் ஆங்கிலேயர்களை ஆதரவாகக் கொள்ளவேண்டிய நிலை திருவாங்கூர் மன்னர்களுக்கு ஏற்பட்டது."

ஏற்றுமதிப் பொருட்களால் திருவாங்கூர் அரசுக்கு நல்ல வருவாய்கிடைத்த போதிலும் ஆங்கிலேயர் உறவுக்காக அவர்கள் பெருஞ்செல்வத்தை இழக்க வேண்டியதும் ஏற்பட்டது.

இந்நிலையில் இந்தியப் பெருமன்னர்கள், சிற்றரசர்கள், நவாப்புகள் ஆகியோரில் பலர் சுகபோக வாழ்க்கை நடத்துவதிலேயே காலத்தைக் கழித்தனர். மக்களின் நலன்கள் கவனிக்கப்படவில்லை.

தங்களின் சுகபோகத்துக்கு உரிய வருவாயைத் தரும் பாமரமக்கள் எங்கே தங்கள் வாழ்க்கைக்குத் தடையாக வந்துவிடுவார்களோ, அல்லது புரட்சி செய்து விடுவார்களோ என்று எண்ணிய அரச சுற்றத்தவர்கள் ஏழை மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருந்தனர்.

அரச குடும்பத்தினர், அவர்களின் சுற்றத்வர்களான அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், அரசு அலுவலர்கள், சேனைத் தலைவர்கள், பூசாரிகள் ஆகியோர் மேல்மட்ட இனத்தவர்களாக கருதப்பட்டார்கள்.

அக்காலத்தில் கல்வி என்பது செல்வந்தர்களுக்கு மட்டுமேகிடைக்கக் கூடியதாக இருந்தது. வசதி படைத்தவர்கள் தங்கள் செலவிலேயே ஆசிரியர்களை நியமித்து கல்வியைப்பெற்றார்கள்.

கல்வியைப் பெற முடியாதவர், வலிமை குன்றியோர் ஏழ்மை நிலையடைந்து மேல் மட்டக்காரர்களுக்கு ஊழியம் செய்பவர்களாக வாழ்ந்தனர்.

"திருவாங்கூர் நாட்டில் நம்பூதிரி, நாயர், பிள்ளை, ஐயர் ஆகியோர் மேல்மட்டத்தினராக வாழ்ந்தனர்."

"செட்டியார், காவேரி, துலுக்கப்பட்டர், பிரம்மர், வாணியர்,பள்ளர், நாடார், ஈழவர், (பணிக்கர்), யாதவர், பறையர்,குறவர், கம்மாளர்,

கருமறவர், பரவர், நசுறாணி,வேகவண்டர், இரலையர், ஊத்திரநீசர் ஆகிய பதினெட்டு இனத்தவர்கள் தாழ்ந்த இனத்தவர்களாக நடத்தப்பட்டனர்."

தமிழ்நாட்டில் இடத்திற்கு ஏற்ப பதினெட்டு சாதிகளின் பெயர்ப்பட்டியல் மாறுபடுகிறது.

திருவாங்கூர் இராச்சியத்தில் ஆதிக்க நிலையில் இருந்தவர்கள், அல்லாதவர்களுக்கு இழைத்ததாக கூறப்படும் கொடுமைகள்நம்மனதை உருகச் செய்கின்றன.

அக்கொடுமைகளைப் பின்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

"ஆலய வழிபாடும், பொது விழாக்களில் பங்கு கொள்வதும் ஏழைமக்களுக்கு மறுக்கப்பட்டன."

இதனால் சிவன், திருமால், முருகன் பேரன்ற தெய்வங்களை வழிபடவாய்ப்பில்லாத ஏழை மக்கள் சுடலைமாடன், முனிசாமி, இசக்கியம்மன், பேச்சியம்மன் போன்ற சிறு தெய்வங்களையேவழிபட வேண்டியதாயிற்று.

அத்தெய்வங்களுக்கு ஆடு, கோழி, பன்றி ஆகியவற்றை பலியிட்டும், பல மூடநம்பிக்கைகளைக் கொண்டும் ஏழை மக்கள் வாழ்ந்தனர். அவர்களுக்கு அறிவு புகட்டி மேம்படுத்துவார் இல்லை.

"நன்செய் நிலங்கள், கல்லால் கட்டப்பட்ட நல்ல வீடுகள் போன்றசொத்துரிமைகள் மறுக்கப்பட்டதோடு வளமற்ற, பயனற்ற பகுதிகளுக்கு ஏழை மக்கள் துரத்தப்பட்டனர்."

"பெண்களும், ஆண்களும் மார்பில்சேலை அணிவதும், கணுக்காலுக்குக் கீழ் ஆடை அணிவதும் மறுக்கப்பட்டது."

"1829 ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் நாள் திருவிதாங்கூர் அரசாங்கம், பேரறிக்கை ஒன்றை வெளியிட்டது." அவ்வறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப் பெற்றுள்ளது.

"சாணார் பெண்கள் மேலாடை அணிவது நியாயமற்றதாகும். அவ்வாறான வழக்கங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. வருங்காலத்தில் மேற் குறிப்பிட்டுள்ளபடி சாணார் பெண்கள்இடுப்பின் மேல் பகுதியை மேல் துண்டால் மறைப்பதை நிறுத்திக் கொள்ளவேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்."

“1822 ஆம் ஆண்டு மே மாதத்தில் மேற்சாதியினரால் சந்தையில் நாடார் பெண்களின் மேலாடைகள் அகற்றப்பட்டன. கோயில், பள்ளி முதலியன எரியூட்டப்பட்டன.”

“ஏழை மக்கள் தங்க நகைகள் அணிய அனுமதியில்லை. நகை அணிவதற்கு வரி கட்ட வேண்டியது இருந்தது. இராமவர்மாமக்கள் மீது திணித்த வரிகள் பற்றி கூறுகையில் டாக்டர் சோபனன் இதுபற்றி குறிப்பிட்டுள்ளார்.”

“பசுக்களில் பால்கறக்க அனுமதிக்கப்படவில்லை.”

“ஓலைவீடு தவிர ஓட்டு வீட்டில் வாழ்வதற்கும் தீர்வை கட்ட வேண்டியதிருந்தது.

பொதுக்கிணறுகளில் ஏழைமக்கள் தண்ணீர் எடுக்கக்கூடாது.

மேல்சாதியினர் தெருவில் போகக்கூடாது.”

“உயர்ந்த சாதியினரிடம் தொலைவில் நின்றே பேச வேண்டும். நம்பூதிரிகளிடம் பேசும்போது முப்பத்தாறு அடி விலகி நிற்கவேண்டும். நாயரிடம் பேச பன்னிரண்டு அடி தள்ளி நிற்கவேண்டும்.

குடை, செருப்பு முதலியவற்றை ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடாது.

பெண்கள் தண்ணீர்க்குடத்தை இடுப்பில் சுமக்கக்கூடாது.”

“ஊதியம் இல்லாமலேயே நாட்டுப் பாதுகாப்பிற்குப் பணியாற்ற கட்டாயப் படுத்தப்பட்டனர். மேலும் மேட்டுக் குடியினருக்குக் கூலி இல்லாமலேயே ஊழியங்கள் செய்ய வேண்டும்.”

“கட்டளைகளுக்குப் பணியாதவர்கள் மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டார்கள். மேல்சாதியினர் அருகில் செல்ல முயன்றவர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.”

ஏழை மக்கள் மேல் சாதியினரின் குற்றங்களைப்பற்றி முறையீடுசெய்ய முடியாது.

இதனை 1818, மார்ச் ஏழாம் நாளில் திருவாங்கூர் கொச்சிசமஸ்தான ஸ்தானிகர் கர்னல் மன்றோ தமது குறிப்பில்,

"புகார் செய்வது பயனற்றது பரிகாரம் கிடையாது, லஞ்சத்தால் மீள முடியாது" என்று கூறியுள்ளார்.

இவ்விதமான கொடுமைகள் ஏழைகளாக இருந்த எல்லா இனமக்களுக்கும் இழைக்கப்பட்ட போதிலும், நாடார் குல மக்களுக்குமட்டும் அதிகமான தீமைகள் இழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. நாடார்கள் பகைவர்களாகவே கருதப்பட்டு மேற்குலத்தவர்களால் ஒடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்திருக்கக்கூடும். பதினொன்றாம் நூற்றாண்டில் சேர மன்னராக இருந்த குலசேகரப் பெருமாள் காலம் வரை நாடார்கள் ஆட்சிப்பொறுப்பில் இருந்ததாக கருதப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் திருவிதாங்கூர் ராச்சியத்தின் திவான் பேஷ்காராக இருந்த பிராமணராகிய நாகமையா தான் எழுதிய திருவாங்கூர் மானுவல் என்ற நூலில் பலவேறு குறிப்புகளைத் தந்துள்ளார்கள். அவை நாடார்கள்ஆட்சி பொறுப்பில் இருந்தவர்கள் என்ற கருத்திற்கு அரண் செய்கின்றன.

"பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்பெறும் குறிப்புகளாலும் இவ்வினத்திற்குரிய சில சிறப்பான பாரம்பரிய தன்மைகளினாலும் சாணார்கள் போர் நாட்டமுடைய சாதனையாளர்கள் என்பது தெரிகிறது. அவர்கள் மிகப் பழங்காலத்தில் நாட்டின் பலபகுதிகளில் ஆட்சியாளர்களாக ஆதிக்கம் பெற்றிருந்ததாகத் தெரிகிறது.

ஆட்சியாளர் என்று பொருள்படும்டியாகவே 'நாடார்' என அழைக்கப் பெற்றனர் என்பது நாகம் அய்யாவின் கூற்றாகும்.

நாகம் அய்யா திருமதி எஸ். தக்கர் என்பவரின் கூற்றாக கிடைத்துள்ள பல சான்றுகளிலிருந்து சாணார்கள் நாட்டின் உண்மையான உடமையாளர்கள் என ஏற்றுக் கொள்ள வேண்டியதுள்ளது. இதற்குச் சாதகமான உறுதியான கருத்து ஒன்று உண்டு. திருநெல்வேலி மாவட்டத்தின் தென்பகுதியில் உயர்ந்த சாணார்கள் எனப்பட்ட நாடார்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலச் சொந்தக்காரர்களாக இருந்தனர். ஒரு நாடார் தன் நிலத்தை விற்றபோதும் மேலைநாட்டு நிலப்பிரப்புக்கள் போல ஒருவிதமான உரிமையை தக்கவைத்துக் கொண்டிருந்தனர்–எனக்கூறுகின்றார்.

மேலும் "திருவாங்கூரிலுள்ள பழமையான பல கல்வெட்டுக்களில் நாடாள்வார் என்ற சொற்கள் காணப்பெறுகின்றன." எனக் கூறுகின்றார் நாகம் அய்யா.

நாகம் ஐயா அவர்களின் குறிப்புகள் நாடார்கள் நாடாண்ட பரம்பரையினர் என்பதற்குச் சான்றுகளாக உள்ளன.

"நாயக்கர் போன்ற திராவிடர்களின் எழுச்சியே நாடார்களின் வீழ்ச்சிக்குக் காரணம் என்பது நாகம் அய்யாவின் குறிப்பு.

நாடார்களிடையே இருந்து வந்த 'உருமல் கட்டு விழா' என்னும் வழக்கமும், திருமண்த்தின் போது நாடார் மணமகன் வலக்கையில் வாளும், இடது கையில் வெற்றிலையும் கொண்டு தலைப்பாகையுடன் ஊர்வலமாககச் செல்லும் வழக்கமும் அவர்கள்அரச பாரம்பரியம் உடையவர்கள் என்பதற்குச் சான்றாகும் எனநாகம் அய்யா குறிப்பிட்டுள்ளார்கள்.

"திருவாங்கூர் வரலாறு எழுதிய பி. சுங்குனிமேனன், பழமையான சேரமரபினர் பின்னர் தென்பகுதியில் ஒதுங்கி அங்கு வாழ்ந்த தம்குலத்தவர்களுடன் சேர்ந்தனர்—எனக் குறிப்பிடுகிறார்.'

திரு. சுங்குனிமேனன் கொங்கணி அரசர்களாக ரெட்டியார்கள் இருந்தார்கள் என்றும், சேரமன்னர்கள் சத்திரியர்கள் என்றும் கூறுகிறார். அவர் குறிப்பிடும் சத்திரியர்கள் நாடார்களாகத்தான் இருக்க வேண்டும்.

பதினொன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் தென்னாட்டில் பலபகுதிகளில் நாடார்கள் ஆட்சி புரிந்தனர் என கருதப்பெறுகிறது.

"அவ்வாறு ஆட்சி புரிந்த காலத்தில் அவர்கள் வெளியிட்ட தங்கநாணயம் கான்றோர் காசு எனப்பெற்றது. இதனைப் பிராமணப் பெண்கள் தங்கள் கழுத்தில் அணிய பெரிதும் விரும்பினார்கள் எனவும் தெரிகிறது." என்பதும் நாகம் அய்யாவின் குறிப்பாகும்.

நாகம் ஐயா அவர்கள் சான்றோர் என்ற சொல்லுக்கு விளக்கமாக, "இம்மரபினர் பெயரின் சரியானவடிவம் சான்றோர் என்பதாகும். இச்சொல் கால்பு என்னும் தமிழ்ச் சொல்லின்அடியாக பிறந்ததாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

தென்திருவிதாங்கூரில் கிறித்துவ மதத்தொண்டு புரிந்த மதகுரு,

சான்றோர்கள் வளமான பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று எடுத்து இயம்புவதற்குப் போதுமான பெருமைக்குரிய மேற்கோள்கள் பல இருந்தன. அவர்களில் சிறந்த செல்வந்தர்கள் தாங்கள் இந்நாட்டில் ஆட்சி செய்யும் அதிகாரத்தைக் கைக்கொண்டிருந்தார்கள் என வற்புறுத்திக் கூறுவர்–எனக் குறிப்பிட்டுள்ளார்.

"சுங்குனி மேனன், 'பரசுராமர் கேரளாவை நிறுவிய பின்னர் வடநாட்டிலிருந்து பிராமணர்களை அழைத்து வந்து குடியமர்த்தினார். அந்நாட்டை 64 கிராமங்களாகப் பிரித்தார் எனக் கூறுகிறார்" இக்கூற்றை மறுப்பார் யாருமிலர்.

ஏழாம் நூற்றாண்டில் நம்பூதிரிகளும், நாயர்களும் கேரளநாட்டிற்கு வந்தார்கள். மாறுபட்ட வாழ்க்கை முறை உடையநாயர்களைத் தங்களுக்குத் துணையாக கொண்டார்கள்.

நாயர் இனத்தவர்களிடம் ஒருமாறுபட்ட வழக்கம் இருந்தது. நாயர் இனப்பெண்கள் கட்டுப்பாடின்றி யாரிடமும் பாலியல் உறவு கொள்ளலாம் என்பது அது.

"நம்பூதிரிகளின் குடும்பத்தில் மூத்தவர் மட்டும் தன் இனப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இளையவர்கள் திருமணம் செய்து கொள்வதில்லை. நாயர் இனப்பெண்களுடன் விருப்பம்போல் உறவு கொண்டனர்."

இவ்வழக்கம் நாயர் நம்பூதிரிகளின் இடையீடற்ற நட்பிற்கும்காரணமாயிற்று. இம்மாறுபட்ட வழக்கத்தாலேயே மருமக்கள்வழித்தாயம் என்ற வாரிசுமுறை ஏற்பட்டது,

"பரசுராமர் பிராமணர்களைக் குடி அமர்த்தியதோடு பல ஆலயங்களையும் நிறுவினார். முதலில் ஆலயங்களில் ஆதிக்கம்பெற்ற நம்பூதிரிகள் ஆலயங்கள் மூலம் பெரும் செல்வந்தர்கள் ஆனார்கள். படிப்படியாக ஆட்சி உரிமை பெற்றார்கள்."

"நம்பூதிரிகள் முதலில் பரிஞ்சாலூர், பேயனூர், பார்ப்பூர், செங்காலியூர் ஆகிய இடங்களில் தங்கள் ஆட்சியை நிறுவனர். குடிஅரசாட்சி முறையைப் பல வழிகளில் முயன்று இறுதியிலேயே முடியரசு முறையை மேற்கொண்டனர்."

“கடைசி சத்திரிய அரசரான குலசேகரப் பெருமாளாலேயே திருவாங்கூர் ஆட்சியுரிமை பரிசாக வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது.”

“நாடார்கள் ஆட்சியுரிமை இழந்த போதிலும் நிலப்பிரபுக்களாகவும். போர்க்கலைகளைக் கற்றுத்தரும் ஆசான்கள்ாகவும், வைத்தியர்களாகவும் இருந்தனர். அவர்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையே அவர்கள் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது”.

வடநாட்டினர் வருகைக்குப் பின்னர் வடமொழியும், தமிழ்மொழியும் கலந்து மலையாளம் என்ற புதுமொழி தோன்றியது. நம்பூதிரிகளும், நாயர்களும் படிப்படியாக ஆதிக்கம் பெற்றுநாடார்களை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றினர். நாடார்கள் ஆதிக்கக்காரர்களான நம்பூதிரிகளையும், நாயர்களையும் எதிர்த்தனர். அவர்களோடு உறவாட மறுத்தனர். அவர்களைத் தேவர்கள் என்றும், உயர் சாதிக்காரர்கள் என்றும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். போற்றிப் புகழ்வது சுயமரியாதைக்கு இழுக்கு என்று நாடார்கள் நினைத்தார்கள்.

நாயர், நம்பூதிரிகள் ஒற்றுமையும், இராஜதந்திரமும் அவர்கள் வெற்றிக்கு காரணமாயிற்று.

நாடார்களிடம் வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாமை, ஒற்றுமையின்மை, கடவுள் வழிபாட்டில் அக்கறை இல்லாமை ஆகியன அவர்கள் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

வேறு ஏழை இனத்தவர்கள் மேலினத்தவர் தங்களுக்கு இழைத்த கொடுமைகளை வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டார்கள். நாடார்கள் கொடுமை கண்டு பல நேரங்களில் குமுறி எழுந்தார்கள்.

“18 ஆம் நூற்றாண்டில் அரசுரிமைக்கு உரியவராக இருந்த மார்த்தாண்ட வர்மாவுக்கும், பப்புத்தம்பி–இராமன் தம்பி என்பவர்களுக்கும் ஏற்பட்ட அரசுரிமைப் போரில் நாடார்கள் மார்த்தாண்ட வர்மாவுக்கு உறுதுணையாக நின்று வெற்றிதேடித்தந்தார்கள். மார்த்தாண்டவர்மா அரசு பொறுப்பேற்றதும் தன்னை அழிக்க நினைத்த நாயர்கள், போத்திகள், பிள்ளைமார் ஆகியோரை கடுமையாகத்தண்டித்தார்.”

தங்கள் தோல்விக்குக் காரணமான நாடார்களை தண்டிக்கப்பட்டவர்கள் பகைவர்களாக நினைத்ததில் வியப்பில்லை. அதனோடுமார்த்தாண்ட வர்மாவுக்குப் பின்னர் ஆட்சி பீடம் ஏறியவர்கள் தங்கள் இனத்தவர் பக்கம் சேர்ந்து நாடார்களை வெறுத்தார்கள்.

பனைத்தொழில் செய்தும், வறுமையில் வாடியும் வாழ்ந்த பிற்பட்டநாடார்கள் தங்கள் தூய்மைக் குறைவினாலும் பிற இனத்தவர்களால் வெறுக்கப் பெற்றிருக்கக் கூடும்.

மேற்கூறிய காரணங்களால் ஆளும் வர்க்கத்தினர் நாடார்களைப் பகைவர்களாகக் கருதி துன்புறுத்தினார்கள். ஊழியங்கள் செய்யவைத்தும் ஏராளமான வரிகளை விதித்தும் துன்புறுத்தினார்கள்.

"1825 ஆம் ஆண்டு நெய்யாற்றின் கரை, இரணியல், பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் நாடார்கள் கொல்லப்பட்டனர். நாடார்கள் மீது பொய்யான வழக்குகள் போடப்பட்டன. பல நாடார்கள்அஞ்சி திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஓடினார்கள். பலர் இசுலாமிய மதத்தைத் தழுவினார்கள்.

1858 ஆம் ஆண்டு அருமனை, அமரவிளை ஆகிய இடங்களிலிருந்துநாடார்கள் விரட்டப்பட்டு அவர்கள் நிலங்கள் பறிக்கப்பட்டன.

நாகர்கோவில், நெய்யூர் ஆகிய இடங்களில் சந்தைகளில் நாடார்களைக் கட்டி வைத்து அடித்தனர்."

கன்னியாகுமரிக்குச் சுமார் இரண்டு மைல் தொலைவில் உள்ள பஞ்சலிங்கபுரம் என்ற ஊரில் சந்தையில் பொன் தாலி அணிந்தமைக்காக ஏழை இனப் பெண்களின் தாலிகள் அறுக்கப்பட்டன. எனவே இன்னும் அச்சந்தை தாலியறுத்தான் சந்தை எனப்படுகிறது.

"பலராமபுரம் நெய்யாற்றின் கரை, குழித்துறை, நெய்யூர், மைலாடி, ஆரல்வாய்மொழி ஆகிய இடங்களில் பல நாடார்கள் கொல்லப்பட்டனர்.

குற்றங்களுக்கு மிகக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. ஏழைகளுக்குச் சரியான நீதி கிடைக்கவில்லை."

மார்பில் மேலாடை அணிவதற்காக பெரும் போராட்டமே நடத்த வேண்டியதாயிற்று. கிறித்துவ மத குருமார்களின் ஆதரவைப் பெற்ற

கிறித்துவப் பெண்கள் மேலாடை அணிந்தனர். ஆனால் இந்துப் பெண்கள் அணிவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

"தங்கள் மார்பகங்களின்மீது மேலாடை அணிந்தனர் என்ற குற்றத்திற்காக பொது இடங்களில் பெண்கள் அடிக்கப்பட்டனர். அவர்கள் அணிந்திருந்த ஆடைகளைக் கிழித்தெறிந்தனர்."

நீதிமன்றத்தில் மார்புத்துணி அணிவதற்கு ஆதரவாக தீர்ப்பு கிடைத்தும் மார்புத்துணி அணிய அனுமதிக்கப்படவில்லை.

"1859 ஆம் ஆண்டு சனவரி 4ம் நாள் சூத்திரர்கள் நாடார் குலப்பெண்மணிகளைத் தாக்கி அவர்கள் அணிந்திருந்த மேலாடைகளை கிழித்தெறிந்ததைத் தொடர்ந்து கலவரம் மூண்டது. இவ்வாறான கலவரம் மாநிலத்தின் பல பகுதிகளிலும் அதிக அளவில் பரவியது."

"1859 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் நாள் திருவிதாங்கூர் அரசாங்கம், நாங்கள் இதனால் தெரிவிப்பது என்னவெனில் கிறித்துவ சாணார் பெண்மணிகளைப் போன்று இந்துப் பெண்களும் ரவிக்கை அணிந்துகொள்வதில் அல்லது அனைத்து மதங்களையும் சார்ந்த சாணார் பெண்மணிகளைப் போன்று பருமையான இழை கொண்ட ஆடைகளை சாணார் பெண்மணிகள் அணிந்து கொள்வதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அப்பெண்மணிகள் முக்குவச்சிகளைப் (கீழ்சாதி மீனவப் பெண்கள்) போன்று அல்லது வேறெந்த மாதிரியிலும் தங்கள் மார்பை மூடிக் கொள்வதிலும் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் உயர்சாதிப் பெண்களைப் போல் மட்டும் ஆடை அணியக்கூடாது என்ற ஆணை மூலம் மேலாடை அணிய அனுமதித்தது."

ஏழைமக்கள் மீது அரசுவிதித்த வரிகளாக அகிலத்திரட்டு,

"தாலிக்குவாயம் சருகுமுதலாயம்
காலிக்குவாயம் கம்புதடிக்காயம்
தாலமதேறுஞ் சான்றோருக்காயம்
ஏலமுடனருவாள் தூரு வட்டிக்காயம்
தாலமதுக்காயம் தரணிதனிலே வளர்ந்த
ஆலமரம்வரைக்கும் அதிகஇறை வைத்தனனே
வட்டிக்கு மாயம்வலங்கைச் சான்றோர்கருப்புக்
கட்டிக்குமாயங்கடு நீசன் வைத்தனனே."

இவ்வாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது,

திருவிதாங்கூர் மாநிலம் இயல்பாய் மலைவளமும், மருத நிலவளமும்பெற்ற நாடு, இங்கிருந்து மிளகும், ஏனைய பொருள்களும் ஏராளமாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி ஆயிற்று. அதனால் நாட்டில் ஏராளமாக செல்வம் குவிந்தது.

என்றாலும் அரச சுற்றத்தாரும், மேட்டுக் குடியினரும், மட்டும்தான் செல்வ வாழ்க்கை வாழ்ந்தனரே அன்றி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஏழைமக்கள் மிகவும் கீழான வறுமை நிலையிலேயே இருந்தார்கள்.

இதே காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் வளமற்ற வனாந்திரமான தரிசு நிலப்பகுதியில் வாழ்ந்த நாடார்கள் திருவிதாங்கூர் நாடார்களைக் காட்டிலும் வளமாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்தார்கள்.

நாட்டின் நிலவளமும், ஏற்றுமதிச் செல்வமும் ஏழை மக்களை எட்டாததற்கு ஒரு காரணம் மேட்டுக்குடியினரின் சுகபோகவாழ்க்கை.

மற்றொரு காரணம் அரச குடும்பத்தினர் உள்நாட்டு மக்களின்முழு ஆதரவைப் பெறாததால் எப்பொழுதும் தங்கள் பாதுகாப்புக்கென கூலிப்படைகளை வைத்து அதற்கென பெரும்பொருள் செலவிட வேண்டியதாயிற்று.

"17ம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சிபுரிந்த இராமவர்மா திருச்சிராப்பள்ளி நாயக்க மன்னர்களின் படைகளை வரவழைத்துத் தனது பாதுகாப்புக்கு வைத்திருந்தார். பின்னர் அவைகளுக்காகதான் செலுத்த ஒப்புக்கொண்ட கட்டணத்தை கட்டமுடியாததால் நாயக்கர் படைகள் திரும்பிச் சென்றன."

"பின்னர் வந்த பாலமார்த்தாண்ட வர்மா பாண்டிய நாட்டைச்சேர்ந்த 1000 மறவர்களையும், மேலும் நாயக்கர்களிடம் இருந்துபெற்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூலிப்படையினரையும் வைத்து செலவு செய்து வந்தார்."

பின்னர் வந்த திருவாங்கூர் அரசர்கள் அனைவருமே தங்களுக்குஆதரவாக ஆங்கிலேயர்களை நாடி நிற்க வேண்டியதாயிற்று. இதனால் மிளகு வாணிபத்தில் பெரும் நட்டம் ஏற்பட்டது. ஆங்கிலேயர்களிடம் படிப்படியாக தங்கள் அதிகாரத்தை இழக்கவேண்டியது ஆயிற்று."

17, 18 ஆம் நூற்றாண்டுகளில் திருவாங்கூர் இராச்சியத்தில் கிறித்துவ மத குருமார்கள் தொண்டு பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியது. ஆலயங்களுக்குள் செல்ல முடியாமலும், மேல் இனத்தவர்களின் ஆதரவு இல்லாமலும் வாடிய ஏழை மக்கள் கிறித்துவ மத குருமார்கள் அரவணைப்பால் பெரும் ஆறுதலைப் பெற்றார்கள். தங்கள் சிறுதெய்வ வழிபாட்டை எளிதில் கைவிட்டார்கள். ஐரோப்பிய நாகரிகம் அவர்களைப் பற்றியது.

கிறித்துவ மதத்தில் அளிக்கப்பெற்ற சமத்துவமும், கல்வி, வேலைவாய்ப்புகளும் மதம் மாறிய ஏழை மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியது.

ஆங்கிலேய அதிகாரிகள் கிறித்துவ மக்களுக்காக பல உதவிகளைப்புரிந்தார்கள்.

மதம் மாறிய கிறித்துவர்களின் உயர்வையும், நாகரிகத்தையும் கண்ட ஏழை மக்கள் தங்கள் பழக்க வழக்கங்களையும், ஆடை அணிமணிகளையும் மாற்றிக் கொள்ளத் தொடங்கினார்கள்.

இத்தகைய மாற்றங்களால் கிறித்துவமதம் ஏழைகளாக இருந்த அனைத்துத் தரப்பு மக்களிடையேயும் மிக வேகமாக பரவிற்று.

படிப்படியாக ஆங்கிலேயரின் செல்வாக்கும், ஆதிக்கமும் வேர்விடத் தொடங்கிற்று.

"கி.பி. 1829 முதல் 1847 வரை சுவாதித் திருநாள் என்ற மன்னர் திருவாங்கூரை ஆட்சி புரிந்தார். இவர் காலத்திலேயே அய்யாவைகுண்டர் மானிட வடிவம் தாங்கி இருந்தார். சுவாதித்திருநாள் ஆட்சிபற்றி பெ. அனந்தசயனம் அவர்கள், சிறுபான்மை இனத்தவருக்கு மகிழ்ச்சியையும், பெரும்பான்மை இனத்தவருக்கு துன்பத்தையும் தந்த சுவாதித்திருநாளின் ஆட்சியில் சாதிகளின் எண்ணிக்கையும் அதனால் ஏற்பட்ட வேறுபாட்டுணர்வுகளும் அதிகமாகவே இருந்தன" என்கின்றார்.

ஏழை இனத்தவர்களான இந்துக்கள் ஆதிக்க வெறியர்களாலும், வறுமையினாலும், அறியாமையினாலும் மிகவும் துன்புற்று வாடினார்கள். அப்பொழுது அவர்களை மீட்டுக் காக்க இறைவனின் தோற்றம் அவசியமாயிற்று.

கலியென்னும் மாயநினைவுகளால், பாவச் செயல்களால் பாதிக்கப்பட்டு தாழ்ந்து கிடந்த மக்களைத் தற்காப்பதற்குதோன்றிய அவதாரமே வைகுண்டர் அவதாரமாகும். கலியை அழித்து தர்மயுக வாழ்வை உலகில் தோற்றுவித்து மக்களை இன்பமுடன் வாழச் செய்வதே வைகுண்டரின் நோக்கமாகும்.

எனவே வைகுண்டரை பூவுலகிலே பிறக்கச் செய்ய திருமால் திருவுளம் கொண்டார் என அகிலத்திரட்டு கூறுகிறது,

கலி என்னும் பாவத்தாலேயே சமுதாயத்தில் உயர்வு தாழ்வு ஏற்பட்டது; இனப்பாகுபாடுகள் தோன்றின: ஓரினம் மற்றொரு இனத்தை அடக்கி கொடுமைப்படுத்தும் நிலை உண்டானது. இதனாலேயே துன்பங்கள் பெருகின. எனவே துன்பத்தை ஒழிக்க, அல்லது குறைக்க கலி என்னும் பாவத்தை அழிக்க வேண்டும் அதற்கென இறைவனின் தோற்றம் தேவை ஆயிற்று என்பது இவ்வதிகாரத்தின் கருத்தாகும்.

வைகுண்டர் வரலாறு

கறைக்கண்டரின் மைத்துனர், கலியை அழிக்கக் கருதி அலைந்து திரிந்தவர் ஆதிமூலன். அந்த ஆதி நாராயணரே திரேதாயுகத்தில் இராமராக, பின்னர் துவாபர யுகத்தில் கண்ணனாகஅவதரித்தார். இன்னும் பல யுகங்களில் பல வடிவங்கள் கொண்டபெருமாள் கலியுகத்திலும் பிறக்கத் திருவுளம் கொண்டார்.

முற் பிறவிகளில் தான் தாங்கியிருந்த உடற்கூட்டில் சம்பூரணத்தேவன் உயிரை ஊட்டி உலகில் சான்றோர் குலத்தில் பிறக்கச் செய்தார்.

புனிதம் மிக்க தாமரை ஊர்ப்பதியில் தெய்வக்கூடு தாங்கி சம்பூரணன் பிறந்தான்.

பிறந்தவர் சம்பூரணர் என அங்கிருந்த ஆன்றோர் அறிந்திருக்க நியாயமில்லை. எனவே, அன்னையும், அவள் உற்றோரும் "முடிசூடும் பெருமாள் என்றும், முத்துக்குட்டி" என்றும் பெயரிட்டு அழைத்தார்கள் என்பது செவிவழிச் செய்தி.

சம்பூரணர் பிறப்புக்கு முன்னர் சான்றோர் குலத்தில் பரதேவதையும் பிறந்து வளர்ந்தார். அவர் திருமாலம்மை எனஅழைக்கப்பெற்றார்.

முடிசூடும் பெருமாள் என மூத்தகுடிச் சான்றோரால் அழைக்கப்பெற்ற அண்ணல் மானிடக்குழந்தை போலவே மாண்புடன் வளர்ந்தார். கருவிலே திருவுடையார் ஆகையால் திருமாலைத் தினம் வணங்கி வாழ்ந்தார். பொல்லாங்கு செய்யாமல் குருவுடன், பெரியோர் அனைவரையும் மிக போற்றி வளர்ந்தார். எதித்தோரை அடக்கி, ஏற்றோர்க்கு மிக நல்லவராக வாழ்ந்தார்.

பண்பால் இவர் எல்லோருக்கும் தலைவராகும் தகுதியுடையவர் என்றும், நீதியுடையவர் ஆதலால் நாடாள்வார் என்றும் சான்றோர்கள் நினைத்தார்கள்.

முடிசூடும் பெருமாள் சொல்லிலும் வல்லவராய், மற்போரிலும் வல்லவராய் விளங்கினார். ஆராய்ச்சித் தெளிவுடையவராய், அரிவையர் ஆசைக்கு உகந்தவராய் இருந்தமையால் எங்கும் புகழ் விளங்க, பல்லக்கு ஏறி பாராளும் மன்னவராய்த் திகழ்வார் எனபெரியோர் நினைத்தார்கள்.

நல்லோரை மறவாமல், கல்லாரையும் கண்டு களித்தார். இவ்வாறெல்லாம் பிள்ளையாய் வாழ்ந்த இறைத்தோன்றல் வைகுண்டரைப்பற்றி 'அகிலம்' கூறுகிறது.

இளைஞராய் வாழ்ந்த இறைவனுக்கு வயது பதினேழு நிறைந்தது. இளமையும், அழகும், வலிமையும் நிறைந்தவராய் காணப்பெற்றார். கலைகளும், தொழில் பலவும் கற்று பண்புடன் வாழ்ந்தார்.

பூவுலகில் பிறந்த பரதேவதை தனது கணவனைப் பிரிந்து அவ்வூர் வந்தார். விதியின் வலியால் முற்பிறவியில் நட்புகொண்ட பரதேவதையும், சம்பூரணனும் இப்பிறவியிலும் தொடர்புகொண்டார்கள்.

இருவரும் ஒருவர்மீது ஒருவர் அன்புகொண்டபோதிலும், "பரதேவதை அம்மையார் இருமல் நோயுடன், இரத்தம் சிந்தி மகிழ்ச்சியின்றி வாழ்ந்தார்கள் என்பது முன் அத்தியாய வரிகளால்தெரிகிறது" அவர் கணவரைப் பிரிந்து வந்ததற்கு நோயே காரணமாக இருந்திருக்கலாம்.

வயது முதிர்ந்த நோயுற்ற பரதேவதையும், இளம் வயதும் நற்பண்புகளும் உடைய முடிசூடும் பெருமாளும் கள்ளம், கபடற்ற உண்மை அன்பு கொண்டார்கள். நோயில் வாடிய அப்பெண்மீது இரக்கங்கொண்ட முடிசூடும்பெருமாள் பல உதவிகளைச் செய்தார். இருவரும் நட்பு அடிப்படையில் அன்புகாட்டினார்கள் என்பதே கள ஆய்வின்போது பல முதியவர்கள் கூறிய செவிவழிச் செய்தியாகும்.

முடிசூடும் பெருமாளுக்கு வயது இருபத்திரண்டு நிறைவுற்றது. சொல்லாற்றலும், செயலாற்றலும் மிக்க அவரின் இனப்பற்று, நாட்டுப்பற்றுடன் கூடிய செயல்களைக் கண்டு பலர் பொறாமையுற்றனர். பொறாமைகொண்ட நீசர் செயலால் முடிசூடும் பெருமாள் நோயுற்றார்.

நோயில் துன்புற்று இறைவனை வேண்டி ஆண்டு ஒன்று ஆகியும் குணம் ஏற்படவில்லை. தீவினையின் வலிமை குறைய மாயவரை தினம் மனதில் நினைத்து இருந்தார்.

ஒருநாள் அவர் அன்னையின் கனவில் திருமால் தோன்றினார். கனாக்கண்ட அன்னை "கொல்லம் ஆண்டு 1008 ஆன இவ்வருடத்தில் மாசி மாதம் பத்தொன்பதாம் தேதியில் திருச்செந்தூரில் திருவிழா நடக்கும். அங்கு மகனை அழைத்து வந்தால் நோயைத் தீர்த்து, நற்பலன்கள் கொடுப்பதாக நாராயணர் கூறினார். கனவில் வந்த

இறைவன் கரியநிறமாக இருந்தார். நான் கண்ட கனவு தவறாது, கனவின்படி திருச்செந்தூர் சென்றால் அல்லாமல் நோய் தீர வழியில்லை" எனக் கூறினாள்.

அன்னை உரைத்தபடி முடிசூடும் பெருமாளைத் திருச்செந்தூர் அழைத்துச்செல்ல உறவினர் முடிவுசெய்தார்கள்.

பயணத்திற்காக கருப்புக்கட்டி, மற்றும் உணவுப்பொருள்கள், தானம் செய்வதற்கு பணம் ஆகியவற்றைச் சேர்த்தார்கள்.

நெருங்கிய உறவினர்களுடன் அகலமான தொட்டில் ஒன்றைக் கட்டி அதில் நோயுற்ற முடிசூடும் பெருமாளைப் படுக்கவைத்து தூக்கிச்சென்றார்கள்.

கூடங்குளம், குளிர்ந்த சுக்குப்பார் முதலிய இடங்களைக் கடந்துசென்றார்கள். தோட்ட வழியைக் கடந்து, சூறாவளி வீசும் வனம் ஒன்றை அடைந்தார்கள். அங்கிருந்த நீர்நிலை அருகில் அமர்ந்து உணவருந்தி ஒய்வு எடுத்தார்கள்.

அப்பொழுது சிவன், பிரம்மா, பார்வதி ஆகியோருடன் திருச்செந்தூரில் இருந்த திருமால் தனது பிறவிக்கு ஏற்ற பிளளைவருவதை அறிந்தார். அங்கிருந்த கலைமுனி, ஞானமுனி என்றமுனிவர்களை அழைத்து, "எனது மனிதப்பிறப்புக்காக நான் நியமித்த உயிர் அதோ வருகிறது. நீங்கள் எதிர்சென்று அழைத்துவாருங்கள்" என்றார் பெருமாள்.

காற்றைப்போல் விரைந்த முனிவர்கள் வைகுண்டர் பிறவியை ஏற்கவரும் பெருமானைக் கண்டார்கள். இருமுனிவர்களும் இருபக்கமாய் பெருமாளின் கைகளைத் தங்கள் தோளில் தாங்கி குதிரைபோல் வேகமாக நடந்தார்கள். இதை முடிசூடும்பெருமாள் விரைவாக நடப்பதாக எண்ணிய உறவினர்களும் விரைவாக நடக்க வேண்டியதாயிற்று.

முனிவர்கள் தாங்கள் அழைத்துவந்த சடலத்தை (முடிசூடும்பெருமாள்) சந்தன வீதியில் நிறுத்தித் திருமாலிடம் தெரிவித்தார்கள்.

திருமால், 'திருச்செந்தூரில் உள்ள தெருக்களில் எல்லாம் இச்சடலத்தை அழைத்துச்சென்று காட்டி முன்வினைகள் கழியும்படியாக நீராட்டி வாருங்கள்' என்று முனிவர்களுக்குக் கூறி கடலினுள் சென்றார்.

கடலினுள் சென்ற திருமால் தான் அமைத்திருந்த மாடமாளிகைகள், மேடைகள் அனைத்தையும் கண்டார். பின்னர் செந்தழல் வடிவமாய் மகரமாக இருந்த அன்னை இலக்குமியின் முன்சென்றார்.

தழலின் வெம்மையைத் தாங்கமுடியாத அன்னை இலக்குமி பயந்தாள். கனலாய் வந்தது யார் என அறியாது, நெருப்பின் பெருமைகளை எல்லாம் கூறி வெம்மை தணியுமாறு வேண்டினாள்.

அச்சத்தால் இலக்குமி பேசுவதை அறிந்த திருமால் அனலை அடக்கித் தன் சுய உருவைக் காட்டினார். மனைவியை அருகில் வருமாறு அழைத்தார். அன்னை நாணத்துடன் சுவாமியின் திருப்பாதங்களில் வீழ்ந்தாள்.

இருவருமாக அங்கிருந்த மாடமாளிகைகளைக் கண்டுகளித்தார்கள். பின்னர் பெருமாள், 'நீ இதுவரை ஏற்ற பிறவிகளில் எல்லாம் சிறந்த பெருமை அடையும்படியாக, பெருமைமிக்க, சிவனுக்கு உகந்த ஒரு மகனைப் பெற உனக்கு உபதேசித்தேன்' என்று அன்னையிடம் கூறினார்.

அண்ணலைக் கண்டு அகமகிழ்ந்த அன்னை, 'மாண்புமிக்க மகனைப் பெறவேண்டும் என்பது விதியானால், அடியாளாகிய யான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. மகனைப் பெறுவது மனதிற்கு ஏற்ற செயலே' என்று மகிழ்ந்துரைத்தாள்.

அச்சுதனின் செயலால் அன்னை மயக்கமுற்று சிம்மாசனத்தில் அமர்ந்தாள். அன்னை மயக்கமுற்று இருக்கும் வேளையில், வாயு சிவன் முதலான தேவர்கள், ஏழு உலகங்கள், கடல் ஆகிய அனைத்தையும் மாமோகச் சக்கரத்தை வீசி மாயவனார் கணப்பொழுதில் மயக்கினார்.

மகரமான மாது மயங்கி இருக்க நாராயணர் மகரத்தினுள் சென்றார். மகனாகிய சடலத்தை நினைத்தார். கணப்பொழுதில் முடிசூடும் பெருமாளின் வடிவமாகிய சடலம் கடலினுள் சென்றது. மகனை எடுத்து செயலற்ற தெரு அறையில் அலங்காரமான இருக்கையில் திருமால் இருக்கச் செய்தார். குற்றமற்ற மணமிக்க தைலங்கள் ஊற்றப்பட்ட நீரினால் நீராட்டினார்கள். பின்னர் வெண்பட்டு. ஒளிவீசும் பச்சைப்பட்டு ஆகியவற்றை உடுத்தினார்கள். அரிய ஆபரணங்களை அணிந்தார்கள். தங்கத்தினாலாகிய மேலாடையை அணிவித்தார்கள். தங்கக் குல்லாவும் அணிவித்தார்கள்.

ஒளிவீசும் முத்துக்கள் பதிக்கப்பெற்ற ஒரு மண்டபம், அதில் சங்குகள் முழங்கின. பெரியோரும், முப்பரம்பொருளும், தேவாதி தேவர்களும் மகிழ்ந்திருந்தார்கள். ஆயிரத்து எட்டு அண்டங்களும் அடங்கிய அம்மண்டபத்தில் தங்க சிம்மாசனத்தில் வைகுண்டரை அமர வைத்தார்கள்.

தேவர் முதலானோர் போற்ற திருமால் தன் மகனை எடுத்து மடிமேல் அமரவைத்தார். கண்களையும், முகத்தையும் தடவி தன் முகத்தோடு முகமாக அணைத்துக்கொண்டார். பாலரான வைகுண்டரைக் குழந்தையாகவும், இளைஞராகவும், இருபத்தினான்கு வயது நிரம்பியவருமாக தோன்றச் செய்தார். இவ்வாறெல்லாம் தான் பெற்றெடுத்த வைகுண்டரைச் சீராட்டி, பாராட்டி திருமால் ஞானம் உரைக்கத் தொடங்கினார்.

இறைவன் உரைத்த ஞான உரைகள் விஞ்சை எனப்பெற்றன. விஞ்சையை விரிவாக காணலாம்.

திருமால்விஞ்சை அருளல்

திருமால் வைகுண்டருக்கு அருளிய ஞான உரைகளை இருவகையாகக் கொள்ளலாம். ஒருவகை உலகிற்கு அறிவிக்கக்கூடியவை; 1மற்றும் சில வைகுண்டர் மட்டும் உள்ளத்தால் உணர்ந்துபிறருக்கு அறிவிக்கக் கூடாதவை. தர்மயுகம் பிறந்த பின்னர்வைகுண்டர் உலகமறிய அவற்றைச் சொல்லலாம் என்பது திருமாலின் கட்டளை.

இப்போது வைகுண்டருக்கு அருளப்பட்ட ஞான உபதேசங்களை வரிசையாகக் காண்போம்.

1. ‘1008 ஆம் ஆண்டு (கொல்லம்) மாசி மாதத்தில் கடற்கரையாண்டி நாராயணப் பண்டாரமாகிய நான்தென்னாட்டில் உனது வடிவில் பிறப்பு எடுத்துள்ளேன்’ எனத் தன் பிறப்பை உணர்த்துவது முதலாம் விஞ்சை.

2 ‘உலகில் நாராயணராகத் தோன்றியுள்ள எனக்கு காணிக்கையும், கைக்கூலியும் வேண்டியதில்லை. காவடி எடுத்தல் போன்ற பகட்டான வழிபாடு வேண்டாம். மகனே, நீ அடக்கமுடன் தலை தாழ்த்தியிருக்க வேண்டும்’ என்று எளிமையான வழிபாட்டையும், பணிவையும் உணர்த்துவது இரண்டாம் விஞ்சை.

3. 'கலி அரசன் ஆட்சியினால் கொடுமைகள் அதிகமாகி, முகம்மதிய அரசன் படையெடுத்து வந்து, அவன் திரும்பி ஓடிய பின் ஓராண்டில் வருவேன் என்று முன் வேத நூலில் கூறியதுபோல மூவுலகத்தினரும் அறியும்படியாக இவ்வுலகில் வந்து இதனை உரைக்கின்றேன்' என்பது மூன்றாம் விஞ்சை.

4. அதர்மம் அழிந்து தர்மம் தோன்றிக்கொண்டிருக்கின்றது. தகுந்த நேரம் வரும்போது அது அனைவருக்கும் தெரியவரும். அறிவு தெளிவு உடையவர்கள் இறைவனைக் கண்டுகொள்வார்கள், அறியாமை உடையவர்கள் இறைவனைக் காண மாட்டார்கள். மானிடர்களின் தீவினைகள் அதிகரிக்குமானால் இறைவன்பொறுக்கமாட்டான். தீயவர்களைத் தண்டிக்க இறைவர் வரும்நாளில் மலைகள் உதிரும்; வானம் இடியும்; ஆ லங்காய்கள்போல விண்மீன்கள் உதிரும் என்பது நாலாம் விஞ்சை.

5. ஆயிரத்து எட்டு அண்டங்களில் வாழும் தேவர்களும் உயிர்ப்பலியிடும் பூசையை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

6. சிறு தேவதையென வணங்கப்படும் பேய்கள், ஊர்ந்து திரியும் விலங்குகளைப் பலியிடும் செயலை ஏற்றுக்கொள்ளக்கூடாது. இரத்தவெறி, தீபதூபங்களுடன் கூடிய வழிபாட்டை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

7. நீசக்குலத்தவர்கள் பலவிதமான துன்பங்கள் கொடுத்தபோதும் பொறுமையுடன் இரு. பணம், பொன் ஆகிவற்றோடு சிறிதும் தொடர்புகொள்ளாதே.

8. பொய்யரோடு எப்போதும் நட்பு கொள்ளாதே. உண்மை பேசுபவர்களோடு மட்டுமே நட்பு கொண்டிரு.

9. தீமையை அழிக்கவந்தேன் எனச் சொல்லி தர்மத்தின் பெருமைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி இருப்பாயாக.

இவ்வாறெல்லாம் ஞானமொழிகளைத் தன் மகனாகிய வைகுண்டருக்கு உரைத்த திருமால் பூவுலகில் ஆறு ஆண்டுகள் தவம்புரியச் சொன்னார். தவம் செய்ய வேண்டிய முறைகளைப் பற்றி,

'மூக்குச் சுழியும் மும்முகமு முத்திமுத்தி
நோக்குச் சுழியாய் நேர்நில்லு என்மகனே

பரமான பட்டணத்தில் பார்வைகொண் டேநாட்டி
சிரமானது விரித்துச் சிறையேயிரு என்மகனே’

என்று கூறுகிறார். தவத்திற்கான யோகமுறைகள் இங்கு உணர்த்தப்பட்டுள்ளன.

தவம் புரியும் நாளில் தரையிலேதான் அமரவேண்டும். பாலும், பச்சை அரிசி உணவையும் மட்டுமே கொள்ள வேண்டும். மணம்தரும் பொருட்கள் மீது ஆசை கொள்ளக்கூடாது. மணமலர், தீபம் ஆகியன கண்டு மகிழ வேண்டாம் என தவம் புரியும் முறைகளைக் கூறுகிறார். மேலும் தீயர்களை எல்லாம் நான் அழித்து உனக்கு அளவில்லாத சுகத்தைத் தருவேன். நான் உரைத்த உபதேசங்களினால் உன் பெருமைகள் கூடும். பலவிதமான பெருமைகளை நீ அடைவாய் என்று திருமால் வைகுண்டருக்கு ஞானம் உரைத்தார்

திருமால் வைகுண்டருக்கு உரைத்த ஞானமொழிகள் திருமாலின் கூற்றாகவே இங்குத் தரப்பெற்றுள்ளன. திருமாலின் அறநெறிக்கருத்துகளுக்கு மட்டும் எண்களிட்டு பட்டியல்படுத்தியுள்ளோம். வைகுண்டரால் திருமாலிடம் இருந்து உணரப்பட்ட செய்திகள் மறைபொருளானவை ஆதலால் அகிலத் திரட்டில் கூறப்பெறவில்லை.

திருமாலின் ஞானமொழிகளைக் கேட்ட வைகுண்டர், ‘என்னை ஈன்ற தந்தையே என்னை வளர்த்து நல்ல அறிவு மொழிகளைச் சொன்னீர்கள். பாற்கடலில் துயின்ற பெருமானே நான் முன்அடைந்த துன்பங்களை அழித்து என்னைத் தங்களின் மகனாகச் செய்தீர்கள். என்னை மீண்டும் கலியுகத்தில் பிறக்கச்சொல்கிறீர்கள். எனது பிறப்பின் இரகசியத்தையும், பெற்ற வரங்களையும் அறியாமல் நீசர்கள் இழித்துப் பேசுவார்களே! நமது சான்றோர் இன மக்கள் என்னைக் காணவந்தால் அவர்கள் சிதறி ஓடும்படி நீசக் குலத்தவர்கள் அடிப்பார்கள். நமது மக்கள் ஒதுங்கி நின்று விடுவார்கள். தெய்வ கன்னியர்கள் பெற்ற சான்றோர் குல மக்கள் என்னால் சிறப்படைய வேண்டுமல்லவா? முற்பிறவியில் நான் நட்புகொண்ட பெண்ணானவளுக்கு நல்லமனதைக் கொடுத்து உயர்வைத் தரவேண்டும் அல்லவா? இச்செயல்களைச் செய்து முடிக்கும் ஆற்றலை எனக்குத் தந்து தாங்கள் என்னை எப்போது ஏற்க வருவீர்கள். கொடுமையான கயவர்கள் அழிவது எப்போது?’ என்று விளக்கம் கேட்டார்.

வைகுண்டரின் எண்ணங்களைக் கேட்டு அவற்றை நிறைவுசெய்ய எண்ணினார் திருமால்.

எண்ணங்கள் ஈடேற மூன்று வகையான தவங்களை ஆறு ஆண்டுகளில் நிறைவேற்றும்படி கூறினார்.

தவங்கள் மூன்று

உலகம் முழுவதும் கலியின் கொடுமை அழிந்து தர்மயுகம் மலர்ந்து மக்கள் இன்பமுடன் வாழ இரண்டாண்டுகள் வைகுண்டர் ஆற்றவேண்டிய தவம் முதல் தவசு.

தெய்வ கன்னியர் பெற்றெடுத்த சான்றோர் இன மக்களின் துயர ம்மாறவும், புது வாழ்வு மலரவும் வைகுண்டர் ஆற்றப் போவது இரண்டாம் தவசு.

முற்பிறப்பில் நட்புக்கொண்ட பரதேவதையின் உயர்வுக்காகவும், முன்னோர்களின் ஆன்மா நற்கதி அடைவதற்காகவும் இறுதி இரண்டு ஆண்டுகளில் ஆற்றப்போகும் தவம் மூன்றாம் தவசு.

இவ்வாறான தவங்களை வைகுண்டர் தம் எண்ணங்கள் ஈடேறுவதற்காக ஆற்ற வேண்டும் என திருமால் கூறுகிறார். தவம் இயற்றும் முறை, அக்காலத்தில் கொள்ளவேண்டிய நோன்புகள் பற்றியும் திருமால் விஞ்சையாக வழிகாட்டியுள்ளார்.

திருமாலின் மகனாகப் பிறந்ததனாலேயே இறை ஆண்மை பெற்ற வைகுண்டர் தனக்காகத் தவம் இயற்ற வேண்டிய தேவையில்லை. உலகிற்காகவும், மக்கள் இனத்திற்காகவும் துன்புறும் பெண்களான பரதேவதைக்காகவும், முன்னோர்களின் ஆன்மாக்களுக்காகவும் வைகுண்டர் தவம் ஆற்றவேண்டியதாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

தேவருலகில், வானவர்களை பூமியில் சென்று பிறக்கும்படியாக திருமால் கூறியபொழுது, 'கலியுலகில் பிறந்தால் நாங்கள் மேன்மை அடைவது எப்படி?' என்று தேவர்கள் கேட்க 'உங்களுக்காக நான் தவம்புரிந்து உங்களுக்கு நற்பேறு அளிப்பேன்' என்று திருமால் உரைத்தது இங்கு நினைவுகூறத்தக்கது.

தவம்புரியும் காலத்தில் சொத்து, மனை ஆகியவற்றில் நாட்டம்கொள்ள வேண்டாம். தேவையற்றவைகளைப் பேசவேண்டாம்.

சுழுமுனையில் நினைவுகளைக் குவித்து, ஏகப்பரம்பொருளின் மீது நினைவை இருத்தி, கொண்டை அமுதுண்டு நினைவுகளை ஒன்றுபடுத்தி இருப்பாயாக. இவ்வாறாக ஆறுஆண்டுகள் தவம் புரிந்தால் நினைத்தவை எல்லாம் நிறைவேறும். நானும், நீயும் ஒன்றேயன்றி வேறில்லை. யாருக்கும் நினைத்தபடி நீ வரம் தரலாம். தீயவரை அழிக்கலாம்.

உனக்கு ஏற்றவர்களுக்கு உதவி செய். சிவன், திருமால், பிரம்மா ஆகிய எல்லாமே நீயே ஆவாய்' என்று அய்யா நாராயணர் உரைத்தார்.

'ஆறு ஆண்டுகள் தவம் நிறைவேறிய பின் அய்யா நடத்தத் திட்டமிட்டுள்து என்ன?' என்று வைகுண்டர் கேட்டார்.

தலைவனாகிய திருமால், 'மூன்று தவமும் நிறைவேற்றி மூவர்க்கும் முதல்வனாக நீ வந்த பிறகு தலைவன் நீயே ஆவாய், நீ நினைத்ததை எல்லாம் உன்னால் நிறைவேற்ற முடியும்; நீ உன் ஆற்றலைக் காட்டி உலகில் இருக்கும் நாளில் நீசனாகிய கலிஅரசன் எந்தத் தீவினை செய்தாலும் பொறுமையுடன் இருப்பாயாக. உனது உடலாகிய கூட்டிற்குள் அடக்கமுடன் இரு; இறைவனாகிய உன் எண்ணங்களிலேயே நிலைத்திரு; கோபத்தைக் காட்டாதே; இதழ் குவியச் சிரிக்காதே; பாவச் செயல்களில்கருத்தைச் செலுத்தாதே; வலிமையை வெளியே காட்டாதே; ஆணவத்தை அடக்கி இரு; உனக்கு தீவினை செய்கிறவர்களிடத்தும் பகைமை கொள்ளாதே; உன் அருகில் இருந்து தவறுசெய்கிறவர்களை நான் கவனித்துக்கொள்வேன்.

பழிச்சொற்களைப் பேசாதே; ஓரம் சாய்ந்த வழக்குசொல்லாதே; பிறர் கருத்தை அறிந்து தெளிவான வார்த்தைகளாகப் பேசு; தர்மத்தைக் காப்பாற்று; யாருக்கும் தீங்கு நினையாதே; இழிவற்ற முறையில் பொருளைத் தேடு; எனது அன்பர்களுடன் மட்டுமே மகிழ்ந்திரு" என்ற அறமொழிகளைக் கூறினார்.

விஞ்சைப் பகுதியில் உள்ள திருமாலின் அறநெறிக் கருத்துகளுக்கு மட்டும் இந்நூலில் எண்கள் இடப்பெற்றுள்ளன. அவ்வகையில்மேலே கூறியது பத்தாவது ஞான உரையாகும்.

திருமால் வைகுண்டருக்கு உரைத்த ஞான உரைகள் உலக மக்கள் அனைவருக்குமே உரைக்கப்பட்ட அறிவுரைகளாக உள்ளன.

மேலும் திருமால், 'விட்டுக் கொடுத்து வாழ்வாயாக, நிலைதடுமாறாதே; ஒருவரோடும் முரண்பட்டுப் பேசாதே; தற்பெருமை பேசாதே; மாதிரிகள் சொல்லிப் பேசவேண்டாம்; எளிமையாக இரு; வம்பர்களெல்லாம் அழிந்து போவார்கள்; பொறுமையே மிகப்பெரிய தர்மமாகும்; பொறுமையுடன் இருந்தால் உனது நிலை உறுதியடையும்; உன் மனமறியக் காட்டிய அறிவுரைகளை மனதில் நினைத்து மகிழ்ந்திருப்பாயாக' எனஉரைத்துள்ளது பதினொன்றாம் விஞ்சையாகும்.

"மகனே அதிகார பலம் பெற்றவர்களோடு பகைகொண்டு மோதவேண்டாம். அவர்களைப் பகைத்தால் நம்மை வாழவிடமாட்டார்கள். கலியை அழிப்பதற்கு முன்னால் யாரையும் பகைக்க கூடாது. எல்லோரோடும் எந்நேரமும் பணிவதே பணிவுடமை ஆகும்.

பகைவனோடும் பொறுமையாக இரு. பிள்ளைகளோடே என்றால் பொறுமையுடனே பழக வேண்டும். அன்பு கொண்டவர்களுக்கும் தருமம் கொடு; அன்பில்லாதவர்களுக்கும் கொடு; வம்பர்களுக்கும் கொடு; அறியாத புதியவர்களுக்கும் கொடு; எல்லோருக்கும் தருமம் அளித்து மகிழ்ச்சியுடன் இருப்பாயாக' என்று பணிவுடைமையும், பொறுமையும், தருமம் செய்யவும் புகன்ற பெருமாள், 'பெரியோர் உயர்வு பெற்றாலும் மரியாதையுடன் இருப்பார்கள். இழிந்தவர்கள் உயர்வுபெற்றால் பிறரை மதிக்கமாட்டார்கள். அடக்கம் சிறந்தது; அதனைக் கடக்க நினைக்காதே. கற்றவர்களை ஆதரவாக வைத்திரு; பிறர் செய்த உதவியை மறவாதே; அடைக்கலமாக வந்தவர்களை விலக்க நினைக்காதே; பாவச் செயல்களைக் காணாதே; புறம் பேசுவாரோடு நட்புகொள்ளாதே; சாப வார்த்தைகளைப் பேசாதே; பசு போன்ற பிராணிகளை அடைத்து வைத்து பட்டினி போடாதே; நம்பிக்கைக் கொண்டவர்களுக்குத் துரோகம் நினைக்காதே.

எளியோர் மீது இரக்கம் கொண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய். எல்லை மீறி தவறான செயல்களில் ஈடுபடாதே. அழிவு வந்தாலும் அறநெறிகளை மறவாதே. எவ்வித குறைவும் இன்றி இந்த நாட்டை ஆள்வாய்.'

என்று பெற்றெடுத் பிள்ளைக்கு ஞான உரைகளை அடுக்கடுக்காக உரைத்த ஆதிமூலன் இறுதியாக, 'மகனாகிய உனக்கு நான் எல்லா விஞ்சைகளை அளித்த போதிலும் ஒன்றைமட்டும் அளிக்கவில்லை. நீ முடி தரித்து அரசாளும் நாளில் அவ்விஞ்சையைச் சொல்லுவேன்.

நான் மகா விட்ணுவே என்ற போதிலும் கலியை அழிப்பது எனக்கும் எளிது அல்ல. கலி என்றால் எலி அல்ல. அதை அழிப்பதற்கு வில்லும் அம்பும் தேவை இல்லை. வலிமை மிக்க மாயையான எண்ணங்களே கலியாகும். எனவே அதனை அழிக்க ஆயுதங்கள் தேவையில்லை. நாம் ஒழுக்கமுடன் வாழ்ந்தால் கலி தானாக அழியும்' என்று கூறி எச்சரிக்கை ஒன்றும் விடுக்கிறார். 'நான் கூறிய முறைகளுக்குச் சிறிதளவேனும் நீ தவறி நடந்தால் உன்னையும் நான்தண்டிக்க வேண்டியது வரும். எனவே பயத்துடன் அடங்கியிரு கண்மணியே' என்பது அவரது எச்சரிக்கை ஆகும்.

திருமால் வைகுண்டருக்கு உரைத்த ஞான உபதேசங்கள் இன்னும்பல விருத்தப் பாக்களில் விளக்கப்பெறுகின்றன. உபதேசமொழிகளை எல்லாம் கேட்ட வைகுண்டர் தன் கைகளைச் சேர்த்து தந்தையையும், தாயையும் வணங்கினார். மகன் வணங்கக் கண்ட திருமால், "மகனே நானே நீ ஆனாய் மேலும் சர்வ பரம்பொருளும் ஆனாய் எனவே நீ கை குவித்து வணங்குதல் கூடாது. சாதிகளையும், தலையாட்டும் பேய்களையும் கடலில் தள்ளி அழித்துவிடு. அவற்றிற்கு அளிக்கப்பெற்ற வரங்களை வாங்கி வைத்துக்கொள். நீ தங்கி இருக்கும் இடங்களில் எல்லாம் முற்பிறவியில் எனக்குத் துணையாக இருந்த பாண்டவர்கள்உனக்கும் துணையாக இருப்பார்கள். எனது கிருட்டின அவதாரத்தில் என்னுடன் இருந்த பெண்கள் உன்னிடம் வருவார்கள்.

இசுலாமியர்களும், கிறித்துவர்களும் வேறு மதத்தவர்களும் நான் பெரிது, நீ பெரிது என்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டு அழிவார்கள்.

அதன் பின்னர் உனக்கு நல்ல காலம் வரும். உன்னைச்சார்ந்தவர்கள் துன்பங்கள் எல்லாம் மறையும்.

உலகத்தவர் அறியக்கூடாத மூன்று விஞ்சைகளை உனக்கு உணர்த்துகிறேன். அவைகளை மட்டும் யாருக்கும் கூறவேண்டாம்'என்று ஞான உரைகளை கூறி முடித்தார் திருமால்.

திருமாலால் வைகுண்டருக்கு ஞானம் உரைக்கப்பெற்றதும், மகரவடிவாக இருந்த அன்னையின் வயிற்றிலிருந்து வைகுண்டர் வெளிவந்தார். தேவர் முதலானோர் வந்து வைகுண்டக் குழந்தையை எடுத்துத் தொட்டிலில் வைத்து வாழ்த்தினார்கள் . தேவர்கள், ரிசிகள்,

வானவர்கள், ஈசர் ஆகியோர் மகிழும்படியாக அன்னை சரசுவதி தங்கத் தொட்டிலில் வைகுண்டரை வைத்துத் தாலாட்டுப் பாடினாள்.

தெய்வக் குழந்தையான வைகுண்டரை அறிவுத் தெய்வமாகிய அன்னை சரசுவதி பல வகையாகப் பாராட்டிப் பாடுகிறார். அன்னை சரசுவதியின் தாலாட்டுப் பாடல்களாக அகிலத் திரட்டில்கூறப்பட்டுள்ள பாடல்கள் சொற்சுவையும், பொருட்சுவையும் உடையவை. இனிய ஓசை நயத்துடன் இசையுடன் பாடுவதற்குஏற்றவை. எடுத்துக்காட்டாக ஒன்று.

"சந்திர சுந்தர தந்திர மந்திர
சாமிநீர் பாலகனோ
தாயக மாயக நாயக மாகிய
தண்டரள சுந்தரனோ
சுந்தர சந்திர சுதந்தர சுந்தர
சூரியப் பிர பாலகனோ
சூதனோ வீதனோ மாதனோ நீதனோ
சூலகலா திபனோ" என அன்னை

சரசுவதி பாடுகிறாள். கலைமகள் தாலாட்டிய பின்னர் தேவர்கள் எல்லாம் கூடி இசைபாடிப் பள்ளி உணர்த்துகிறார்கள். பள்ளி உணர்த்தும் பாடலும் இனிய கீதமாகும்.

தேவர்களின் அன்பை நினைந்து அவர்கள் துயரத்தை எல்லாம் தீர்க்க வைகுண்டர் எண்ணுகிறார். அவர் திருமாலை வணங்கி தன்னைப் பூவுலகுக்கு அனுப்பி வைக்குமாறு விடை வேண்டுகிறார்.

மகனைப் பிரிந்து தாங்கள் இருப்பது அரிது என உரைத்த திருமால், 'மகனே, உன்னைத் தனியாக அனுப்பி நாங்கள் இங்கே தங்கமாட்டோம். உனக்குத் துணையாக உன் அன்னையும், நானும் வருவோம். நீ பூவுலகில் சென்று மக்களுக்கு மண்ணும், தண்ணீரும் மருந்தாகக் கொடுத்து இருப்பாயாக. ஐந்து மலர்கள் கொண்டுஉன்னை வணங்கும் மக்களுக்குக் குறைவில்லாத வாழ்வு கொடு' என்று கூறி மகனை அனுப்பி வைத்தார்கள்.

பின்னர் திருமால் கலைமுனி, ஞானமுனி என்ற முனிவர்களைப் பார்த்து வைகுண்டர் வாழும் தலத்தில் வடமேற்கு மூலையில் ஒருவரும், வடகிழக்கு மூலையில் ஒருவருமாய் காவல் புரியுமாறுசொல்கிறார்.

கலியை அழிக்க கடலைக் கடந்து செல்லும் வைகுண்டருக்குத் தேவர்கள் வாழ்த்துப் பா பாடுகிறார்கள். கடற்கரை வந்த வைகுண்டர் அங்கே தனக்காக மூன்று நாட்களாகக் காத்திருக்கும் அன்னையைக் கண்டு, 'தாயே இந்த சமுத்திரத்தில் நான் பிறந்துவருகிறேன். அதோ கடற்பதியும், மாளிகைகளும் தேரும் தெரிகின்றன பார். இப்போது உன் கண்களில் தெரியும் காட்சியே நான் வைகுண்டராகப் பிறந்து வருவதற்குச்சாட்சியாகும்' என்று கூறி தான் பிறந்த இடத்தைக் காட்டினார்.

கடலுக்குள் நகரமும், மாளிகைகளும் தேர்களும் இருக்கக் கண்ட அன்னை வியந்து நிற்க, '1008 ஆம் ஆண்டிற்கு முன்னதாக நான் உன்னுடைய மகனாக இருந்தேன். கொல்லம் 1008 ஆம் ஆண்டு மாசி மாதம் இருபதாம் நாள் சான்றோர்கள் நலம் பெறும்படியாக நாராயணரின் மகனாக தர்ம குண்டத்தில் பிறந்து வருகிறேன். நான் உனக்குக் காட்டிய காட்சிகளை ஒருவருக்கும் சொல்லக்கூடாது" என்று ஆணையிட்டார்.

தென்னாடு நோக்கிப் புறப்பட்ட வைகுண்டரின் திருப்பாதங்களில் மலர் தூவி முனிவர்கள் அனைவரும் வணங்கினார்கள்.

திருச்செந்தூரில் கோயில் கொண்ட முருகனை அழைத்து, 'வல்லாத்தான் வைகுண்டமாக நான் பிறந்துள்ளதால் இனி நீகாணிக்கை, கைக்கூலி முதலியவற்றை வாங்க வேண்டாம். பலி, தீப தூபம் முதலியவற்றை ஏற்க வேண்டாம்' என்று வைகுண்டர் உரைக்க கந்தன் அவர் அடி வணங்கி, 'தங்கள் ஆணைப்படி நடப்பேன்' என்றார்.

வைகுண்டர் 'எனது ஆணையை நீ ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக உனது கோபுரத்தில் வடமேற்கு மூலையில் ஒரு பிளவை உண்டாக்க வேண்டும். உலக மக்கள் அறியும்படியாக ஒருவாயிற் கதவை அடைத்துச் சிலை ஒன்றில் தெற்கு முகமாக இருக்கவேண்டும்' என்று ஆணையிட்டார். அப்படியே நடப்பதாக ஆறுமுகன் சம்மதித்தார்.

வைகுண்டர் திருச்செந்தூரை விட்டு புறப்படும் வேளையில் முனிவர் ஒருவர், 'இங்கிருந்து நீங்கள் செல்வது ஏன்? இங்கு தங்கள் மனதிற்கு விரோதமாக நடந்தது என்ன?' என்று கேட்டார்.

முனிவன் கேட்டதற்கு முழுமுதல்வோன் 'வீணர்கள் சிலர் பெண்ணாசையினால் என்னை எண்ணிப்பார்க்காமல் கோயிலை அசுத்தப்படுத்தினார்கள். பெண் ஒருத்தி எனக்குப் பணி செய்து புறப்படும் வேளையில் பூசாரி ஒருவன் அவளைப் பிடித்து இழுத்துகேடு செய்தான். கோபங்கொண்ட அப்பெண் சில நாட்களில் செந்தூர் தலம் மண்மூடிப் போகும் என சாபமிட்டாள். சாபமிட்ட மங்கை உயிர்விட்டாள். மங்கையின் சாபத்தால் மனத்துயர்கொண்ட நான் இங்கிருந்து புறப்பட்டுவிட்டேன்.

மேலும் இங்கே நடனம் ஆட வரும் பெண்கள் அசுத்தங்களை உண்டாக்குகிறார்கள். பூசாரிகள் தாங்கள் இச்சைகொண்ட பெண்களுக்காக என் சொத்தைத் திருடுகிறார்கள். இக்காரணங்களால் இனிமேல் நான் இங்கிருக்க முடியாது'எனக்கூறித் திருச்செந்தூர்விட்டு தென்திசை நோக்கி நடந்தார் நாராயணர்.

வைகுண்டரை தரையிலே நடக்க விடாமல் தூக்கி சுமந்து வர பூதங்கள் முயன்றன. 'நீங்கள் என்னைச் சுமத்தல் கூடாது. எனக்குப் பணி செய்ய பாண்டவர்கள் இருக்கிறார்கள்' என்று கூறி வைகுண்டர் நடந்தார்.

வைகுண்டர் செல்லும் பாதையில் சிங்கம், செங்கருடன், பால்நிறப் பறவைகள், ஐந்து தலை நாகம் முதலிய நல்ல உயிரினங்கள் வைகுண்டரை வந்து வணங்கின.

'இன்னும் சில நாட்கள் கலிக்கு பயந்து நீங்கள் முன் இருந்த இடத்திலேயே இருங்கள்' என்று கூறி மேலும் நடந்தார். கடற்கரை வழியாக வைகுண்டர் வரும்போது, கடல்செல்வங்களான முத்து, சங்கு முதலியன வைகுண்டரை வந்து வணங்கின. வைகுண்டருடன் பல முனிவர்களும் நடந்தனர்.

பேய்கள் வந்து வைகுண்டருக்குத் தீபம் காட்ட அவர் அதனைக் காணாதது போல் சென்றார்.

உலகில் வைகுண்டர் வரவை அறிந்த சிறு தெய்வங்கள் இனி நமக்கு வேலையில்லை. தீயோருக்கு அழிவு வந்தது எனக் கூறி மறைந்தன.

குமரியில் கோயில் கொண்டிருக்கும் பகவதி அம்மனை அழைத்து "தங்கையே இனிமேல் காணிக்கை, கைக்கூலி, தீப தூபம் ஏற்றுக் கொள்ள வேண்டாம்' என்று கூறி பயணத்தைத் தொடர்ந்தார்.

தேவர்களாலும் முனிவர்களாலும் பெருமைபெற்ற தென்னாட்டில் உள்ள தாமரைக்குளம் என்னும் ஊரில் வைகுண்டர் வந்து தவம் இயற்றத் தொடங்கினார்.

வைகுண்டர் தவம்புரியும் நாளில் அவர் பெருமை எல்லா திசைகளிலும் பரவ எல்லா சாதி மக்களும் வைகுண்டரை வந்து வணங்கினார்கள். அவ்வாறு வந்தவர்களில் வீட்டிற்கு வெளியே வந்தறியாத பெண்கள், கிழவர்கள், முடவர்கள், கர்ப்பிணிப்பெண்கள் ஆகியோரும் இருந்தார்கள்.

வைகுண்டர் தன்னை நாடி வந்த மனிதர்களின் வியாதிகளை நீக்கினார். குழந்தை இல்லை என்று வந்த பெண்களுக்கு குழந்தைப்பேறு அளித்தார். ஐம்பது வயதான பின்னரும் வைகுண்டர் அருள்பெற்று பிள்ளை பெற்றவர்கள் உண்டு.

பிறவிக்குருடர், ஊமைகள் ஆகியோருக்குப் பார்வையும், பேச்சுத்திறனும் கொடுத்தார். கைகால்கள் ஊனமுற்றவர்களின் ஊனத்தைப் போக்கினார். உடலை உருக்கும் சயம், இருமல் நோய்களையும், குடலைப்புரட்டும் குன்ம வாய்வு முதலிய நோய்களையும் தீர்த்தார்.

வைகுண்டரின் அருளாற்றல் நாடெங்கும் பரவ ஏராளமான மக்கள் அவரிடம் வந்து குவிந்து மகிழ்ந்து இருந்தார்கள்.

வைகுண்டரைச் சென்று காண்பவர்களுக்குச் செல்வம் கொழிக்கிறது. வேத நூல்களில் கூறியுள்ளபடி திருமால் வைகுண்டராகத் தோன்றியுள்ளார். இனி சான்றோர்கள் நல்வாழ்வு பெறுவார்கள். சாதிகள் அனைத்தும் மறையும் என்று உலகமக்கள் பேசினார்கள்.

வைகுண்டர் தன்னை நாடி வந்த மக்களுக்கு 'எனக்கு ஆடு, கிடாய்,பன்றி, கோழி முதலியவற்றைப் பலியிட வேண்டாம். வாசனைப் புகையிடுதல் தீபஆராதனை காட்டுதல் வேண்டாம்" என்றுஉபதேசம் செய்தார்.

வைகுண்டர் பேய்கள் மீது மக்களுக்கு இருந்த அச்சத்தைப் போக்க எண்ணினார். பேய்களை வரவழைத்தார். பேய்களின் வரத்தை வாங்கி அவற்றை அழிந்து போகுமாறு சபித்தார். பேய்கள் அழிந்தன. மக்களிடம் பேய்கள் பற்றிய அச்சம் அகன்றது.

அக்காலத்தில் தென்னாட்டில் மந்திரவாதிகளாலும், பில்லி, சூனியம் ஆகியவற்றாலும் மக்கள் மிகவும் துன்புற்றார்கள். மந்திரவாதிகள் மக்களை மிகவும் அச்சுறுத்தி வாழ்ந்தார்கள்.

அய்யா மந்திரவாதிகளிடமிருந்தும், அவர்களின் தந்திரச் செயல்களிலிருந்தும் மக்களைக் காக்க எண்ணினார். அய்யா நினைத்தவுடன் நாட்டிலுள்ள கொடிய விலங்குகள் மந்திர தந்திரச் செயல்களைச் செய்து மலையில் வாழ்ந்த மலை அரசன்களைத்தாக்கச் சென்றன. விலங்குகளை விரட்ட மலை அரசர்கள் பலவிதமான மந்திரச் செயல்களைச் செய்து பார்த்தார்கள். ஒரு பலனும் கிட்டவில்லை.

குறத்தியை அழைத்துக் குறி கேட்டார்கள். குறத்திவைகுண்டராய்த் தோன்றியுள்ள இறைவனை அணுகினால் உங்கள்துயரம் தீரும் என்று உரைத்தாள். மந்திரவாதிகள் வைகுண்டரிடம் வந்து அவரடி பணிந்தார்கள்.

மந்திரவாதிகளை நோக்கி வைகுண்டர், “மந்திர தந்திரம், மாமுனிவன் சாத்திரம், உபாந்திர வாகடம், உபாயச் சம்மூலம், மாயக்கரு, மயக்கும் பேதனம், மாயமாலம், அட்ட கருமம் ஆகிய அனைத்தையும் விட்டு இன்று முதல் ஒழுக்கமுடன் வாழ்வோம் என உலகோர் அறிய ஆணையிடுங்கள்” என ஆணையிட்டார்.

வைகுண்டர் ஆணைப்படி தங்களது மந்திரச் செயல் அனைத்தையும் விட்டதாக மந்திரவாதிகள் ஆணையிட்டார்கள். ‘மலையில் பயிரிட்டு வாழ்வதற்கு துன்பமற்ற விலங்குகளின் தொல்லையற்ற நிலையைத் தரவேண்டும்’ என்று மந்திரவாதிகள் கேட்க அவர்கள்கேட்டபடி வைகுண்டர் வரமளித்தார்.

இவ்வாறாக மக்களைப் பேய்களிடமிருந்தும், மந்திரவாதி களிடமிருந்தும் வைகுண்டர் காத்தார். பின்னர் மக்களுக்கு அறக் கருத்துக்களைக் கூறத் தொடங்கினார்.

மக்களுக்கு வைகுண்டர் உரைத்த அறங்கள்

1. இறைவனைத் தஞ்சம் என எண்ணி ஒற்றுமையுடன் வாழுங்கள்.
2. யாருக்கும் காணிக்கை கொடுக்க வேண்டாம். காவடி தூக்கவேண்டாம்.

3. கடும் உழைப்பால் பெற்ற செல்வத்தை வீணாக செலவு செய்யவேண்டாம்.

4. வைகுண்டராகிய இறைவனுக்கு மட்டுமே அஞ்சுவதல்லாமல் வேறு யாருக்கும் அஞ்ச வேண்டாம்.

5. அவரவர் தேடிய செல்வத்தை அவரவரே வைத்துஅனுபவியுங்கள். யாருக்காகவும் பயந்து மயங்க வேண்டாம்.

6. பெரியவர், சிறியவர் என்று ஒருவருக்கொருவர் பகைக்காமல் இறைவனே தஞ்சம் என்ற உறுதியுடன் வாழுங்கள்.

7. இவ்வாறாக அன்பர்களுக்கு அறக்கருத்துக்களை கூறிய பெருமான் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் கூட ஒற்றுமையாக வாழ உபதேசங்கள் உரைத்தார்.

8. பொய்களை நம்ப வேண்டாம். பிசாசு, பில்லி வினைகள் ஆகியவற்றை நம்ப வேண்டாம்.

9. யாருக்கும் அஞ்சி நீங்கள் இறைகள் செலுத்த வேண்டியது இல்லை என்றும் அறங் கூறினார்.

இவ்வாறு மக்களின் துன்பங்களைப் போக்கி, அவர்களுக்குப் பலதர்மங்களைச் செய்து, தைரியம் ஊட்டி அறக் கருத்துக்களை உரைத்து வைகுண்டர் வாழ்ந்தார். திருவாங்கூரை ஆண்டமன்னனிடம் வைகுண்டரைப் பற்றி நீசர்கள் குற்றம் உண்டாகும்படியாக கெடுமொழிகளைச் சொன்னார்கள்.

கலி அரசன் செயலும், ஆண்டவன் செயலும்

நாட்டு மன்னனால் கைது செய்யப்பட்டு, வைகுண்டர் பட்ட துயரங்கள் அளவிடற்கரியன. எத்தனை துயரமுற்ற போதிலும், சிறுமையுற்ற போதிலும் வல்லமை காட்டாது அவர் ஆற்றிய பொறுமையே கடலினும் பெரிய பொறுமை ஆகும். பொறுத்தற்கரிய கொடுமைகளைப் பொறுத்து இருந்தமையே வைகுண்டர் தாம் வாழ்ந்த சமுதாய மக்களுக்கு ஆற்றிய தொண்டுகளிலெல்லாம் உயர் தொண்டாகும். இத் தொண்டு ஒன்றினுக்கே இந்நாட்டு ஏழை மக்கள் அனைவரும் ஏழேழு பிறவிகளிலும் வைகுண்டருக்குத் தொண்டாற்ற கடன்பட்டுள்ளார்கள்.

ஏழைகளுக்காக இன்னலுற்ற அந்த வரலாற்றினைக் காண்போம்.

கெடுமொழியாளர்களின் கூற்றைக் கேட்டு திருவாங்கூர் அரசன் நாட்டில் புரட்சி ஏற்படுமோ? அல்லது வைகுண்டரால் தன் இன்பவாழ்வுக்கு இடையூறு ஏற்படக்கூடுமோ? என அஞ்சிப் பரிவாரங்களுடன் வைகுண்டர் வாழ்ந்த தாமரைக் குளத்திற்கு அன்மையில் உள்ள சுசீந்திரம் என்ற ஊரில் வந்து தங்கினான்.

அங்கு அமைச்சர்களோடு அளவளாவும் வேளையில், 'நமக்குப் பகைவராய் உள்ளவர் யார்? என அறிந்து சொல்லுங்கள் என அரசன் கேட்டான்.

கெடுமதியாளனான அமைச்சன், 'நமக்குத் தீர்வைகள் செலுத்தி நமது ஊழியங்களைச் செய்யும் சாணார் குலத்தில் ஒருவன் தோன்றியுள்ளான். அவன் வைகுண்டராக அவதரித்துள்ளதாகக் கூறுகிறான். மேலும் அவன் பூமியை எல்லாம் தானே முடிசூடி ஆளப்போவதாகவும் சொல்கிறான். பல இன மக்களும் அவனைத் தேடிவருகின்றனர். சாணார்களுக்கு நல்ல உயர்வைக் கொடுப்பேன் என்றும், ஆகாதவர்களை அழித்துப் போடுவதாகவும் அவன் கூறியதாகத் தெரிகிறது' என்று அரசனின் மனம் வெறுப்படையும் வகையில் கெடுமொழிகளைக் கூறினான்.

அமைச்சன் கூறியதைக் கேட்ட கலியரசன், 'எல்லோரிலும் எளிய சாதியிலுள்ளவன் இத்தகைய வார்த்தைகளைப் பேசுவதோ? இதில் ஏதோ தந்திரம் உள்ளது. சோதிரி ஒருவரை அழையுங்கள், ஆராய்ந்து பார்ப்போம்' என்றான்.

எனக்கு எதிரி உண்டோ? என கேட்ட அரசனுக்கு, "பாவக்கலியானது ஏழுலகையும் சூழ்ந்தது. நாராயணர் கோபம்கொண்டு பூமியில் பிறந்து, பாவத்தை அழித்து வைகுண்டராக வரக்கூடிய நாளிதுதான். அந்த வைகுண்டரே நாடு முழுவதிலும் தர்ம அரசு செலுத்திடுவார்" என்று சோதிடன் சொன்னான்.

சோதிடன் சொற் கேட்டதும், 'அவர் எந்தக் குலத்தில் வருவார்? என கேட்டான் நாட்டை ஆண்டோன்.

நற்குணங்கள் பெற்ற சோதிடன், 'பொறுமை மிகுந்தவர்கள் நிறைந்திருக்கும் பெரிய குலத்தில் வருவார் என்று இருக்கிறது' என இயம்பினான்.

சோதிடன் சொல்லக் கேட்டு ஆணவம் கொண்ட வேந்தன் அகந்தையுடன் பெருமாள் வருவதாயிருந்தால் போத்தி, நம்பூதிரி அல்லது சூத்திரர் ஆகிய பெருமை மிக்க குலத்தில் அல்லவா பிறந்திருப்பார்? சாணார் குலத்தில் பிறக்க வருவாரோ பெரியநாராயணர்? உடனடியாக அந்தச் சாணானைப் பிடித்து வந்து என்முன் நிறுத்துங்கள்' என ஏவினான் ஏழைகளுக்கு இரங்காத பாவி.

அப்போது அங்கிருந்த பூவண்டர் என்னும் பெயருடைய ஆயர்குலத்துப் பெரியவர் ஒருவர் எழுந்திருந்து மாயவராகிய கண்ணன் முன்னர் ஆயர் குலத்தில் தோன்றினான். இப்போது சான்றோர் குலத்தில் பிறந்துள்ளான். இறைவன் எளிய குலம் என்று பார்ப்பதில்லை. கலியுகம் முடியும் காலம் வந்துவிட்டது. எனவே கடவுள் வருவது நிச்சயம். கடவுள் மானிடராக அவதரித்து இராவணன், கஞ்சன், துரியோதனன் ஆகியோரை அழித்தது தங்களுக்குத் தெரியும்.

எந்த யுகத்திலும் அழியாத வரங்களைப் பெற்றவர் மாயவர். அவர் சாணார் குலத்தில் தோன்றுவாரா என நீங்கள் எண்ண வேண்டாம். பரம்பொருள் பாணனாகவும் தோன்றுவார். பறையனாகவும் தோன்றுவார். தூணாகவும் தோன்றி நிற்பார்.

அவர் குயவர் குலத்திலும், குறவர் குலத்திலும், வேடர் குலத்திலும் வந்ததை நீங்கள் அறியவில்லையா? எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கும் பரம் பொருளுக்கு ஏது சாதி? எந்தக்குலத்தையும் ஆகாது என்று அவர் தள்ள மாட்டார். திருமாலின் இரகசியம் நாம் அறியமுடியாதது. இவ்வூர் விட்டு நாம் நம் ஊர்செல்வோம்' என்று பெருமாளின் பெருமைகளை எல்லாம் கூறி பிழைசெய்யாது திரும்பிச் செல்ல அரசனுக்கு அறிவுரை பகன்றார்.

புனிதர் பூவண்டர் உரைத்த அறிவினாலும் அமைதி பெறவில்லை,அகந்தை கொண்ட மன்னன், ஆணவம் தலைக்கு ஏறி, பூவண்டனே இந்த அவையோர்களுக்கு ஏற்காத வார்த்தைகளைப் பேசினாய்.

தினம் இலட்சம் பொன் செலவு செய்து, சத்திரச் சாலைகள்தோறும் தர்மங்கள் செய்து, சித்திரைத் திருநாள் விழா நடத்தும் நம் குலம் விட்டு நித்திய கூலி வேலை செய்யும் இழி குலத்தில் இறைவன் பிறப்பாரா?

வேதங்களும், கலைகளும், கற்ற மேற்குலத்தில் பிறவாது மாயவர் சிறுகுலத்தில் பிறப்பாரா என்னிடம் அதிசயமான வார்த்தைகளைப் பேச வந்தாய், பாதகனே எனக்கு நீயோ புத்தி சொல்வது?

பிரம்மனுக்கு ஒப்பான பிராமணக்குலத்தை விட்டு தாழ்ந்த குலத்தில் தாணுமால் பிறப்பாரோ? வராகமாகத் தோன்றிய மாயன் மனிதனாகப் பிறக்க மாட்டார்' என்ன ஆச்சரியமான வார்த்தைகளைப் பேசினாய்?

'உலகங்களுக்கு எல்லாம் ஆதி காரணமான மாயன் கலியுகம் வருவதை எண்ணி மலை ஏறி மானாய் ஓட, வேடன் அம்பால் மாண்டு பின்னர் உலகில் வருவோம் என்று தவலோகம் சென்றார் திருமால்.

அவ்வாறு கூறிய திருமால் பூமியில் மனிதராக வரமாட்டார். இவன்எ த்தகைய இழிமொழிகளைப் பேசி விட்டான்? பூவண்டனே நீசாணானிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு இவ்வாறு பேசவந்துள்ளாய் போலும்' என்று கடுமொழிகளைக் கூறினான்.

ஆயர்குலத்தில் உதித்த அருந்திறல் பூவண்டர் மாயவர் வைகுண்டருக்காக மனம் மிக நொந்து, மண்ணாளும் வேந்தனை நோக்கி மனதில் அச்சம் சிறிதும் இன்றி, 'அரசே நான் உண்மையைப் புரட்டிப் பேசவில்லை. நான் மாண்டு போனாலும் தவறில்லை. உமது உயிருக்கான தூண்டில் வைகுண்டரிடத்து வளர்கிறது. வைகுண்டருக்குப் பகையாக செயல்பட்டால் உமது கழுத்திற்கு நீரே கத்தியை வைத்தவர் ஆவீர். எனது சொற்கள் பிழையானால் பிழைபட்ட என் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு வீசை வீதம் என் தசையை அறிந்து தருவேன்.

இன்னும் தீங்கு செய்ய நினைத்தீர்களானால் உமது படைகளையும், அரண்மனைகளையும் வியாழனை ஒத்த செல்வச் சிறப்புகளையும் பட்டம், பதவி முதலிய பெருமைகளையும் இழந்து அழிவீர். இதை நான் சொல்லவில்லை. நாராயணர் சொல்கிறார்' என்றெல்லாம் எடுத்து இயம்பியபோதிலும் ஏற்கவில்லை அரசன்.

மனங்கலங்கி பலவிதமான வார்த்தைகளைப் புலம்பி, தான் அழியப்போகும் காலம் நெருங்கியமையால் அதனை உணராது, 'இவனைக் கொண்டு கொடுஞ்சிறையில் தள்ளுங்கள். சிவிகையைக் கொண்டு வாருங்கள். அந்த சாணாரச் சாமியைப் பார்த்துவிடுவோம்' என்றான் பரசுராமர் வழி வேந்தன்.

'சாணாணான சாமியைக் காண அரசராகிய நீங்கள் செல்லுதல் கூடாது. கௌட சாத்திரியாகிய அமைச்சரை அனுப்புங்கள்' என்று அங்கிருந்த சறடன் கூறினான்.

'கௌடர்' என்ற சொல்லுக்கு ஒருவகை பிராமணக் குலத்தவர் எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. எனவே கௌடசாத்திரி எனப்பட்டவர் அமைச்சராக இருக்க வேண்டும் என்பது துணிபு.

அனந்தபுர அரசன் கௌட சாத்திரியை நோக்கி, 'நீர்பெரும்படையுடன் சென்று அந்தச் சாமியாரைக் கயிற்றால் கட்டி என்முன் கொண்டு வந்து நிறுத்தும்' என்று ஆணையிட்டான்.

அரசன் ஆணையைக் கேட்ட கௌடன் வீரர்களை அணிவகுத்து குதிரை முதலான படைகளுடனும், பலவிதமான ஆயுதங்களுடனும் சாமித்தோப்பு நோக்கிச் சென்றான்.

படைகளுடன் கௌடன் வருகதை வைகுண்டர் அறிந்தார். தன்னைச் சூழ்ந்துள்ள மக்களில் துன்பம் வரும் வேளையில் தன் மீது மெய் அன்புகொண்டவர் யார்? பொய் அன்பு பூண்டவர் யார்? என சோதித்து அறிய விரும்பினார்.

எனவே படை வருவதை அறிந்து அச்சம் கொண்டவர் போல் கடற்கரையை நோக்கி ஓடினார்.

பொய் அன்பு கொண்ட இழிந்தவர்கள், 'படை வருவதைப் பார்த்ததும் பயந்து ஓடுகிறான். கதறி ஓடும் இவன் கள்ளச்சாமி, உண்மையான சாமி என்றால் மனிதர்களுக்குப் பயந்து ஓடுவானா? நாம் இவனை நம்பி இருந்தது வீண்' என்று பலவாறாக வைகுண்டரை வைதார்கள்.

உண்மை அன்பு கொண்டு உயர்ந்தவர்கள், நாராயணனே தஞ்சம் என்று வைகுண்டரைத் தொழுது அவர் பின்னாலேயே சென்றார்கள்.

இதைக் கண்ட வைகுண்டர், 'என்மீது அன்புகொண்ட மக்கள் எப்பொழுதும் நலமுடன் வாழ்வார்கள். வீணான வார்த்தைகளைப் பேசிய நீசர் குலங்கள் அழிந்து நரகத்தை அடைவார்கள்' என்று சபித்து தான் முன் பிறந்த கடலினுள் சென்றார்.

கடலுள் செல்லும் போது தன்னைப் பின் தொடர்ந்த மக்களைப் பார்த்து, 'என்னைப் பெற்ற தந்தை அழைக்கிறார், எனவே நான் பாற்கடல் செல்கிறேன். நீங்கள் கரையில் நில்லுங்கள் என்று மக்களை நிறுத்தி கன்னியாகுமரிக்கு அருகில் இப்பொழுது முட்டப்பதி என்று அழைக்கப்படும் இடத்தில் கடலினுள் சென்றார்.

தந்தையான திருமாலைக் கண்டு வணங்கி, 'தர்ம பூமியை ஆளும் அரசாட்சியை எப்போது தருவீர்கள்' என்று கேட்டார்.

'மகனே நீ பதற்றம் அடைய வேண்டாம். கலியை அழித்து உன்தாயாகிய திருமகளை உன்னிடத்தில் இருத்தி தர்மபூமி ஆட்சியை உனக்கு அளிப்பேன். நீ தவம் புரியும் இடத்திற்கு இப்பொழுது சென்றால் நீசர்கள் உன்னைப் பிடித்துக் கட்டி இழுத்துச் சென்று சிறையில் வைப்பார்கள். மூன்றே முக்கால் மாதம் நீ சிறையில் இருந்து கலியை வெல்வாய். உன்னைச் சாதாரணமான மனிதன்என நினைத்துக் கட்டி வைத்து, ஏராளமான வசை மொழிகளைப்பேசி உன்னை அடிப்பார்கள். உனது ஆற்றல் எதனையும் நீ காட்டவேண்டாம். பொறுமையுடன் நீ அடங்கி இருத்தல் வேண்டும்.

கலியை அழித்த பின்னர் உனக்கு நல்ல காலம் உண்டாகும். உனக்கென கோயிலும், மண்டபமும் உருவாகும். சக்தியாகிய பெண்கள் உனக்கு இருபுறமும் நின்று கவரி வீச நீ கொலுவிருப்பாய். கொடி மரத்தில் உன் வர்ணக் கொடி பறக்கும். முரசம் அதிர உனக்குத் திருநாள் நடக்கும். பல்லக்கு ஏறி நீ பதிவலம் வருவாய்.

பெண்கள் சிலரை மணமுடித்து மானிடர் போல் மகிழ்ந்திருப்பாய். சான்றோர்கள் அனைவரும் உனக்கு விருந்தளிப்பார்கள். உனக்குள்ளே சகல சக்திகளும் அடங்கும்.

மகனே நீ தவம் இருந்த தலம் சென்று பதற்றம் இல்லாமல் இருப்பாயாக. நீசன் வந்து உன்னைக் கைது செய்து எதுசெய்தாலும் பொறுமையுடன் இரு. வாயைத் திறந்து பேசவேண்டாம். நான் உனது மனதில் இருப்பேன். நீயும் என் நினைவாகவே இரு' என்று கூறி வைகுண்டரை கடற்கரையில் கொண்டு விட்டார் திருமால். இவ்வாறு திருமால் தன் மகனுக்குஇரண்டாவது முறையாக விஞ்சை உரைத்தார். வைகுண்டர் மகிழ்ச்சியுடன் தாமரைக்குளம் பதிவந்து சாமித் தோப்பில் தவத்தை தொடர்ந்தார்.

வைகுண்டரைக் கைது செய்ய முயன்ற நீசர்கள் கயிறு, வாள், வெடிகள், சூலாயுதம் முதலிய ஆயுதங்களுடன் மீண்டும் வந்தார்கள்.

வைகுண்டராசர் மக்களை நோக்கி, 'நீங்கள் அனைவரும் விலகியிருங்கள். நான் நீசனின் செயல்களை எல்லாம் கண்டுமீண்டு வரும்போது உங்களை அருகில் அழைத்துக் கொள்வேன்' என்றார்.

குறோணியின் குணங்கள் உடைய கௌடன் படைகளுடன் ஆரவாரித்து வந்தான். அவர்கள் கையில் துப்பாக்கியும் இருந்தது. வைகுண்டர் கட்டிலில் அமர்ந்திருந்தார். ஏராளமான மக்கள் அவரைச் சூழ்ந்திருந்தார்கள். குதிரை வீரர்கள் சாட்டையால்அடித்து மக்களை விரட்ட முயன்றார்கள். மக்களில் பலர் கோபம்கொண்டு, நம்மில் இவர்கள் ஆளுக்கு ஒருவர் ஆக மாட்டார்கள். இவர்களை அடித்துக் கொன்று விடுவோம் என்று கோபம் கொண்டு படைகளை எதிர்க்கத் தொடங்கினார்கள்.

வைகுண்டர் தன் கோபத்தை அடக்கி, 'பொறுமை உடையவர்களே பெரியோர் ஆகமுடியும். இப்படைகளை அழிப்பது எனக்கு கடினமான செயல் அல்ல. வம்பு செய்யும் இவர்களை வதைக்கவே நான் வந்துள்ளேன். அன்புடைய மக்களே நீங்கள் பொறுமையுடன் இருங்கள். உங்களை உலகம் ஆள வைப்பேன்' என்று போர்க்கோலம் கொண்ட சான்றோர்களை அமைதிப் படுத்தினார். மக்கள் வைகுண்டருக்கு மாறுபட்டுப் பேசமுடியாமல் விலகிச் சென்றார்கள்.

நீசர்கள் தங்களை எதிர்ப்பவர்கள் இல்லை என்று மகிழ்ந்து வைகுண்டரைக் கயிற்றினால் கட்டினார்கள். கைத்தடியால் இடித்தார்கள். கீழே தள்ளி மிதித்தார்கள். தலை முடியைப் பிடித்து இழுத்து அலைக்கழித்தார்கள். துப்பாக்கியை மாற்றிப்பிடித்து இடித்தார்கள்.

நீ சாணார்களுக்குச் சாமியாகத் தோன்றினாயோ? மண்டிப் பதனீர் குடிப்பவனே உன் உயிரை விட்டு வைப்போமோ நாங்கள்.'

'பனை ஏறி சம்பாதிக்கும் பணம் போதாது என்று அனைவரையும் வரச்சொல்லி பணம் தேட முயன்றாயோ?'

'உனது உடலிலுள்ள பனைச் சிரங்கு இன்னும் மாறவில்லையே. உன்னைச் சாமி என்று சொன்னால் யார் ஏற்றுக் கொள்வார்கள்? தாழ்ந்த குலத்தில் பிறந்த நீ சாமி என்று வந்து விட்டாயே.'

'நாராயண சுவாமி நான் என்று கூறியது நீதானா? உனை யானையின் காலில் கட்டி வதைக்கின்றோம் பார். உன்னை அடிக்கும் போது உன் கூட நின்றவர்கள் எதுவும் கேட்கவில்லையே. நீர் சுவாமி என்றால் அவர்கள் விலகிச் செல்வார்களா?'

'மந்திரத்தால் மனிதர்களைக் கட்டிய நீ எங்களை மயங்கச் செய்து மண்ணில் விழவை பார்ப்போம். நீ மிகுந்த சக்தி உடையவனானால் மந்திரத்தை உச்சரித்து உன் கைக்கட்டை அறச் செய். கூனனைப்போல் ஏன் விழிக்கிறாய் என்று பலவாறாக நீசர்கள் ஏசினார்கள். பலர் எள்ளி நகைத்தார்கள்.

பல உயிர்களையும் படைத்த பரமன் கவிழ்ந்து கண்மூடி நடந்தார். அவர்மீது அன்பு கொண்ட மக்கள் கண்ணீர் சிந்தியபடி அவரைத் தொடர்ந்தார்கள்.

தொடர்ந்து வந்த மக்கள், 'ஏழைகளான எங்கள் மீது இரக்கம் கொண்டு எங்கள் குலத்தில் தோன்றினார். இனி நாங்கள் என்ன செய்வோம்? இவர் வந்த நாள் முதல் நீசர்கள் துன்பம் செய்யாமல் இருந்தார்கள். இனி யார் நம்மைக் காப்பாற்றுவார்கள்' என்று பலவாறாகப் புலம்பி அழுதார்கள்.

நீசர்கள் வாழும் தெருக்களில் எல்லாம் வைகுண்டரை இழுத்துச் சென்றார்கள். கொடியவர்கள் மாயவரைப் பலவாறாக இழித்துப் பேசினார்கள். சிறுகுழந்தைகள் வைகுண்டர் மீது கட்டியை எறிந்தார்கள். 'நமது குலத்தைக் கெடுக்க வந்த பேயன் இவன்' என்றார்கள்.

வைகுண்டரை இழுத்துச் சென்ற காட்சியினைக் கண்ட பெண்களில் சிலர் அவரை வைதார்கள். சிலர் அவருக்காக இரங்கிப் பேசினார்கள்.

இவ்வாறாகப் படையினர் வைகுண்டரை சுசீந்திரம் நோக்கிகொண்டு சென்றார்கள். அவ்வழியில் கொடியவன் ஒருவன் வைகுண்டருக்குச் சொல்லமுடியாத துன்பங்களை எல்லாம்செய்தான். சுசீந்திரம் அடைந்து வைகுண்டரை அரசன் முன்நிறுத்தினார்கள்.

அரசன், 'பைத்தியக்காரனான இவனை சோதித்துப் பார்க்கவேண்டும்' என்று தன் மோதிரத்தைக் கழட்டி கைக்குள்ளே மறைத்து, என் கைக்குள் இருப்பது என்ன? உனது ஆற்றலால் சொல் பார்க்கலாம் என்றான்.

கொடியவன் செயலை அறிந்த வைகுண்டர், 'தான் அறிந்ததை உரைத்தால் இந்த நீசர்கள் நம்மை அழித்து விடுவார்கள். நமது சான்றோர்களின் துன்பம் தீராது. இறைவன் நினைத்தபடி நடப்பது நடக்கட்டும்' என்று அமைதியாக இருந்தார்.

கோபம் கொண்ட அரசன், இவனைக் கொண்டு சென்று சிறையிலே அடையுங்கள் என்றான்.

சிப்பாய்கள் வைகுண்டரை இழுத்துச் சென்று சறடனிடம் விட்டார்கள். சறடன் சாராயத்தில் நஞ்சைக் கலந்து அதைப்பாலிலே ஊற்றி வைகுண்டரைப் பருகச் செய்தான். வைகுண்டர் மகிழ்ச்சியுடன் பாலைப் பருகினார். 'நஞ்சுண்ட வைகுண்டர் அதனை அறியாமல் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்' என்று எண்ணிய சறடன் அவரைக் கொண்டு சென்று சிறையிலிடச் சொன்னான். ஏழைகளின் மீது கருணை கொண்ட வைகுண்டர், இறந்தவர்களையும் எழுந்து நிற்கச் செய்யும் ஆற்றல் பெற்ற வைகுண்டர் தர்மத்தை நினைத்து அமைதியாக இருந்தார். அவரை அடைத்து வைத்த அறையில் புழுக்களும், அட்டைகளும், தேளும் அதிகமாக இருந்தன. தாங்க முடியாத துர்நாற்றம் வீசியது.

இத்தகைய துன்பங்களை ஏற்கவேண்டிய காரணமே இல்லாமல் சான்றோர்களுக்காக வைகுண்டர் சிறை இருந்தார். ஏழைகளுக்காக முள்ளால் அடிக்கப்பட்டு சிலுவையிலே அறையப்பட்ட இயேசு நாதர் போல அசுத்தப் புரையில் இன்னலைத் தாங்கி இருந்தார் இறைவன்.

வைகுண்டரை திருவனந்தபுரம் கொண்டு செல்லல்

சிறந்த வைகுண்டர் சுசீந்திரத்தில் சிறையிருக்க நாட்டரசன் திருவனந்தபுரம் நோக்கி புறப்பட்டான். அவன் மாயவரைக் காட்டி திருவனந்தபுரம் கொண்டு வரும்படி சொல்லிச்சென்றான்.

சிப்பாய்கள் வைகுண்டருக்கு விலங்கிட்டு நடத்திச் சென்றார்கள். போகும் வழியில் இழிகுலத்தோர் வைகுண்டரை ஏசியும், பேசியும், கல்லெடுத்து எறிந்தும் கன பழி ஏற்றார்கள்.

வைகுண்டர் எதையும் கண்டு கொள்ளாமல் தலை கவிழ்ந்து நடந்தார்.

இவ்வாறாக கோட்டாறு, பிடாகை, சுங்கான்கடை, பத்மநாபபுரம் ஆகிய ஊர்களின் வழியாக வைகுண்டரை அழைத்துச்சென்று

தக்கலையில் சிறை வைத்து அங்கு தங்கினார்கள். பின்னர் பாலராமபுரம் ஊரைக் கடந்து திருவனந்தபுரத்திலுள்ள சிங்காரத்தோப்பு என்னுமிடத்தில் சிறை வைத்தார்கள்.

வைகுண்டர் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்ட காலத்தில் சுவாதித்திருநாள் என்ற மன்னன் அரசாண்டதாகத் தெரிகிறது.

விலங்கிடப்பட்ட வைகுண்டரைக் கண்ட மக்களில் சிலர், 'இந்நாள்வரை இவர் தவறு ஏதும் செய்ததாக நாம் கேள்விப்படவில்லை. எப்படியும் கடைசியில் தர்மம் இவரைக் காக்கும் என்று சொல்லி அழுதார்கள்.

அறவோர்க்கு ஆகாத அரசன் வைகுண்டருக்கு விலங்கிட்டு பத்திரமாகக் காவல் புரியும்படிச் சொன்னான்.

வைகுண்டர் சிறை வைக்கப்பட்ட சோலையில் வாழ்ந்த பறவைகள் 'சாமி வந்தார்' என்று வாழ்த்துக் கூறி தொழுதன. சோலை மா மரங்களும், பறவைகளும் மகிழ்ச்சி கொண்டாடி கொஞ்சி விளையாடின.

வைகுண்டர் சிறை வைக்கப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்ட அவரது அன்பு மக்கள் திரளாக வந்து அவர் பாதங்களைத் தொழுதார்கள். அவர்களில் சிலர், 'பிள்ளையில்லாத எங்களுக்கு இவர் அருளால் குழந்தை கிடைத்தது' என்றார்கள். வேறு சிலர் குட்டம் முதலாகிய கொடிய நோய்கள் பலவற்றையும் போக்கியவர் இவர் என்றார்கள்.

மற்றும் சிலர், 'நமக்கு உதவி புரிந்த இந்தப் பெருமான் நம்முடைய இடத்திற்கு வந்துள்ளார். இவரை நாம் எவ்வாறு உபசரிப்பது' என்றார்கள். இனிய கதலி வாழைப் பழங்களையும், இன்னும் பல பொருட்களையும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

"தர்மத்தால் இவர் நமக்கு நீக்கியுள்ள துன்பங்களை விவரிக்க முடியாது. அருளால் அதிசயங்கள் பல செய்த இவருக்கு நொடிப்பொழுதில் ஒரு அதிசயத்தைக் காட்டி தப்பிக்க முடியாதோ? முடியும். ஆனாலும் இவர் ஏதோ அடக்கமுடன் இருக்கிறார். இவரைத் துன்புறுத்தும் நீசர்களுக்கு கேடு வருவது நிச்சயம்' என்று பெண்கள் சிலர் பேசினார்கள். நாராயணரைச் சூழ்ந்து நின்ற நன்மக்கள் தங்கள் வீட்டிற்குச் செல்லக் கூட மனம் இல்லாது இருந்தனர்.

கடுவாய் சோதனை

கடுவாய் எனப்பட்டது புலி. அரசன் சேனைத் தலைவனிடம், 'பேயனாகிய இந்தச் சாமியாரைப் பிடித்து வந்து விலங்கில் வைத்துள்ளோம்.'

சாமி என்று சொன்ன சாணானை வனத்தில் வாழும் கொடிய புலி ஒன்றைக் கொண்டு வந்து சோதனை பார்ப்போம். புலி ஒன்றுவேண்டும் என்ன செய்வது?' என்று கேட்டான். உடனே சேனைத் தலைவன் சேவகனை அழைத்து, மலைகளில் தேடி கொடிய புலி ஒன்றை விரைவில் கொண்டு வரும்படி ஆணையிட்டான். அவ்வாறு கொண்டு வராவிட்டால் அவர்களையும் சிறையில் போட்டுவிடுவதாகவும், துன்புறுத்தி உயிரை வாங்கிவிடப் போவதாகவும் கூறினான்.

படைத்தலைவனின் ஆணையைக் கேட்டு அச்சம் கொண்ட சேவகர்கள் வைகுண்டரிடம் வந்து, 'நாராயணரே, நாங்கள் போகும் வேலை விரைவில் முடிய வேண்டும். திருமாலே தங்களைச் சோதிக்க ஒரு புலி கொண்டு வரும்படி அரசன் எங்களை அனுப்பியுள்ளான். எனவே எங்களுக்கு புலி விரையில் கிடைக்க புனிதரே நீர் வரம் தரவேண்டும்' என்று கேட்டார்கள்.

சேவகர்கள் செப்பிய மொழி கேட்டு மனத்திற்குள் சிரித்தார் மாயவர். பின்னர் புலி விரைவில் கிடைக்க வரம் கொடுத்துவாழ்த்தி அனுப்பினார்.

சேவகர்கள் புலிகள் வாழும் கொடிய காட்டிற்கு வேடர்களுடனும், வேட்டை நாய்களுடனும் சென்றார்கள். அங்குப் பல இடங்களில் வலை விரித்தார்கள். பின்னர் பெரும் ஒலி எழுப்பியும், நாய்களை ஏவியும் காட்டைக் கலைத்தார்கள்.

கோபம் கொண்டு எழுந்து ஓடி வந்த புலி ஒன்று வலையில் சிக்கியது. அனைவரும் உடனே ஓடி தந்திரமாக புலியை ஒரு கூண்டில்அடைத்தார்கள்.

புலியைப் பிடிப்பதில் வெற்றி கண்ட அவர்கள், 'தாமரைக் குளத்துசாமி கருணையால் நாம் அரசனிடம் இருந்து தப்பித்தோம். அந்தச் சாமியிடம் நல்ல அருளாற்றல் உள்ளது. அவர் நல்லவர்தான்' என்று கொண்டாடினார்கள்.

கூண்டில் அடைத்த புலியை சுமந்து கொண்டு வந்தார்கள். கூண்டில் அடைபட்ட புலி அலறுகின்ற ஓசை கேட்டு பயத்துடன் மக்கள் கூடினார்கள். கூடிய மக்கள், 'சாமி என்ற சாணாரைச் சோதிப்பதற்காகப் புலியை கொண்டு போகிறார்கள்' என்று கூற சோதனையைப் பார்ப்பதற்காக மக்கள் பெருங் கூட்டமாகக் கூடினார்கள்.

வைகுண்டரைச் சூழ்ந்திருந்த அன்பு மக்கள், 'நாம் இனிமேல் என்ன செய்வது? என்று சொல்லி அழுதார்கள். அன்பு மக்கள் அழுவதைப்பார்த்த வைகுண்டர் உதட்டைச் சுழித்து, உள்ளத்தில் மகிழ்ந்து, 'நாட்டுக்குத் தலைவன் நான், நாராயணனும் நான் தான், பறவைகளும், பல உயிரினங்களையும் படைத்த நீல வர்ண நாதனும் நான் தான், உலகை அளந்த பெருமாளும் நான் தான். ஆகாயத்தை அளந்த அனந்த விட்னுவும் நான் தான். நாதக் கடலில் துயில்கின்றநாக மணியும் நான் தான். எல்லாவற்றையும் படைத்தவன் நான். எங்கும் நிறைந்தவன் நான். முப்பரம் பொருளும் என்னுள் அடக்கமானதால் உயிர் இனங்களுக்கு எல்லாம் உயிரும் நான்தான். நீசர்கள் என்னை அறியாவிட்டால் நான் படைத்த மிருகமும் அறியாதோ? ஒன்றுக்கும் நீங்கள் அஞ்ச வேண்டாம்' என்று சொல்லி அச்சம் இல்லாமல் ஆயன் இருந்தார்.

சேவகர்கள் புலியைக் கொண்டு வந்து அரசனுக்குச் சொன்னார்கள். கடுவாயைக் கண்ட கடுநெஞ்சக் காவலன் புலிக்கு கோபம் வருவதற்காக கூட்டில் அடைத்து இரை போடாமல் இரண்டு நாள்ப ட்டினியாக வைத்திருக்கும்படிச் சொன்னான்.

இரண்டு நாள் ஆனதும், அரசனும், தளபதி சறடனும் அமைச்சன் கௌடனும் வந்தார்கள். புலிக்கு இரையாகப் புனிதரையிடப்போகும் இழி செயலைக் காண துரைசாணிகளும், மந்திரிமார்களும், துலுக்கர்களும், சலுப்பர்களும், சிப்பாய்களும், மற்றும் படைவீரர்களும் திரண்டு வந்தார்கள். அவர்கள் துப்பாக்கி முதலிய ஆயுதங்களை வைத்திருந்தார்கள். பொதுமக்களும், ஏராளமாகக் கூடினார்கள்.

அரசன் தலையாரிகளை அழைத்து, புலியை பைத்தியக்காரச் சாமியார் இருக்கும் கூண்டிற்குள் விடுங்கள் என்றான்.

கம்பால் குத்தப்பட்டு பதறிய புலி பகவான் வைகுண்டரை அறிந்து உள்ளம் உருகி அவர் அடி வணங்கி நின்றது. சறடன் ஒரு வெடியை வெடித்துப் புலியைத் தூண்டினான். புலி எந்தவித

மாற்றமும் கொள்ளாமல் படுத்துக் கிடந்தது. ஒருவன் ஈட்டியால் குத்தும்படி கூற மற்றொருவன் ஈட்டி முனையால் புலியைக் குத்தினான்.

கோபம் கொண்ட புலி ஈட்டியைப் பிடித்து இழுத்து விட்டது. ஈட்டி அருகில் நின்ற வேதியன் ஒருவன் மீது குத்தியது. குடல் வெளிப்பட்டு வேதியன் இறந்தான்.

வேதியன் சாகக் கண்ட வேந்தன் பதறினான். 'ஒரு வேதியன் கொல்லப்பட்டது ஆயிரம் பசுக்களை கொன்ற பாவத்தைக் காட்டிலும் கொடிய பாவம் ஆகுமே. நான் ஒன்று நினைக்க வேறொன்று ஆனதே' என்று மனம் தடுமாறிய அரசன் தான் நடத்திய செயல் நியாயமற்றது என உணர்ந்து சறடனுடன் அரண்மனைக்குச் சென்றான். படைகளும் சென்றன.

சாமிக்கு வெற்றிதான் என்று மக்கள் கூட்டம் கலைந்தது.

அய்யாவின் அருகில் இருந்த அன்புக்கொடி மக்கள், ஈசுவரர் நம்மைக் காத்தார். திருமால் நம்மைக் காப்பாற்றினார் எனக் கூறி மகிழ்ந்தார்கள்.

மக்கள் மகிழ்ச்சி கண்டு தானும் மகிழ்ந்தார் பெருமாள். கடலில் திருமால் மூன்றே முக்கால் மாதம் சிறையிருக்க வேண்டும் என உரைத்தபடி மூன்றே முக்கால் மாதம் முடியும் வரை அங்கேயே தங்க முடிவு செய்தார்.

ஆயர் குலத்தைச் சார்ந்த தூயவர் ஒருவர் அரசவையில் இருந்தார். அவர் வைகுண்டரை காவலில் இருந்து விடுவிக்க எண்ணினார். துணிவுடன் அவர் அரசன் முன் சென்று, ' தங்கள் ஆளுகையில் எங்கள் அன்புக்குரியவராய் இருப்பவர் சான்றோர். இவர் மிகவும் நல்ல தன்மைகளும், மானமும் உடையவர். நேர்மையும் ஒழுக்கமும் உடையவர். நம்பிக்கைக்கு உரியவர். உலகோர் அனைவருக்கும் உதவி செய்யக் கூடியவர். எனவே அரசர் எங்களுக்காக இவர்பால் மனம் இரங்க வேண்டும்' என வணங்கினார்.

அரசனும் மனம் இரங்கி வைகுண்டரை விடுதலை செய்யச் சம்மதித்தான். ஆனால் தன் சாதியினரைத் தவிர வேற்றுச்சாதியினரை இவர் தன் பால் வரவழைக்கக் கூடாது என நிபந்தனை இட்டு எழுதி வாங்கிய பின்னர் விடுதலை செய்யும்படி ஆணையிட்டான்.

ஓலையில் சீட்டெழுதி வைகுண்டரை ஒப்பமிடச் சொன்னார்கள். வைகுண்டர் நகத்தால் ஓலையில் கீறி தரையில் விட்டெறிந்தார். காவலர் ஓலையை எடுத்துக் கொண்டு வைகுண்டரை விடுதலைசெய்தனர்.

வைகுண்டர் விடுதலை செய்யப்பட்ட போதிலும் திருமால் உரைத்தபடி மூன்றே முக்கால் மாதம் முடியும் வரை திருவனந்தபுரம் சிங்காரத் தோப்பிலேயே தங்கியிருந்தார். அக்காலம் முடிந்ததும் பயணத்தைத் தொடங்கலாம் எனத் தன் அன்பர்களுக்குத் தெரிவித்தார்.

அன்புடைய சான்றோர் மக்கள் சிவிகை ஒன்றில் வைகுண்டரை வைத்துச் சுமந்து சென்றார்கள். அதைக் கண்டு மனம் பொறுக்காதவர்கள், 'தன்னைச் சாமி என்று கூறியவன், பட்ட துன்பங்களை எல்லாம் பார்த்தும் செருக்கு கொண்டு மீண்டும் சுமந்து செல்வதைப் பாருங்கள். புத்தி கெட்ட சாணார்கள் பிழைக்க வழி இல்லாமல் சாமியைச் சுமந்து திரிகிறார்கள். பேயனைச் சுமந்து திரிவதற்கு இறைவன் இவர்ளைப் படைத்துள்ளான்' என்று பலவாறாக இழித்துப் பேசினார்கள்.

வேறு சிலர், சுவாமி இனத்தவர்கள் அவரைச் சுமந்து செல்வதால் நமக்கு என்ன நட்டம் வந்தது. நமக்கு ஏன் இந்த வீண் பேச்சு? என்று உரைத்தார்கள்.

செம்மை கொண்ட நாதன் சிவிகையில் பயணம் செய்து பாலராமபுரம், பார்வதிபுரம், சுசீந்திரம் ஆகிய இடங்களைக்கடந்து தாமரைக்குளம் பதி வந்து சேர்ந்தார். அய்யாவைக் கண்ட அன்பு மக்கள் 'நல்ல காலம் வந்தது' என மகிழ்ந்தார்கள். வைகுண்டரும் ஏற்ற காலம் வந்தது என்று மகிழ்ந்தார்.

தாமரைக் குளத்தில் அய்யா வைகுண்டர் தவம் செய்த பதி அரசனிடம் அமைச்சராக இருந்த பூவண்டருக்கு உரியதாக இருந்தது. எனவே அவ்விடம் பூவண்டன்தோப்பு என அழைக்கப்பட்டது. பூவண்டர் மனம் உவந்து அப்பூமியைச் சாமி வைகுண்டருக்கு அளித்தார் என கூறப்படுகிறது. சாமி தவம் புரிய தொடங்கிய காலத்திலிருந்து சாமித் தோப்பு என வழங்கப் பெற்று இன்றும் சாமித்தோப்பு என்று பெருமையுடன் திகழ்கிறது.

அய்யா வைகுண்டர் மீது ஆயர் குலத்தவர்கள் மிகவும் அன்பு கொண்டிருந்தார்கள் என்பதற்கு பூவண்டரும், அய்யா விடுதலைக்கு காரணமான ஆயரும் சான்றுகளாவர்.

தமக்கு வரக்கூடிய துன்பங்களையும் பொருட்டாக எண்ணாது தியாகம் புரிந்த பூவண்டர், அவருக்குப் பின்னர் அய்யாவுக்காகஅரசனிடம் பேசிய ஆயர் (பெயர் தெரியவில்லை) ஆகிய இருவரின் பொற் பாதங்கள் அன்புக் கொடி மக்கள் அனைவரும் பூசிக்கத்தக்கன.

இன்றும் ஐயா வைகுண்டரை ஆயர் குல மக்கள் பெரும்பான்மையோர் வழிபடுகின்றனர். கோகுலத்துக் கண்ணனே குமரி நாட்டின் வைகுண்டராக வந்தார் என அறிந்து அவர்கள் வைத்துள்ள அன்புவாழ்த்துதலுக்கு உரியது.

துவையல் தவசு

கொல்லம் ஆண்டு 1008ல் (கி.பி 1833) திருச்செந்தூர் கடலில் மகரவடிவாய் இருந்த அன்னை இலக்குமியின் வயிற்றிலிருந்து வைகுண்டர் வெளிப்பட்டது- அவரது பிறப்பாகக் கருதப்படுகிறது. எனவே வைகுண்டர் பிறந்தது கொல்லம் 1008ஆம் ஆண்டு மாசி மாதம் இருபதாம் நாள்.

திருச்செந்தூரில் இருந்து சாமித் தோப்பு வந்த வைகுண்டர் தவம்புரியத் தொடங்கிய பின்னர் அவரிடம் ஐந்து பேர் சீடர்களாகஇருந்தார்கள். துவாபர யுகத்தில் கண்ணனின் நண்பர்களாகவிளங்கிய பாண்டவர்களே கலியுகத்தில் வைகுண்டரின் சீடர்களாகப் பிறந்தார்கள் என்று கருதப்படுகிறது.

அவர்களில் (1) நாங்குனேரி வட்டம் கேளையபுரம் என்ற ஊரைச் சார்ந்த சிவனாண்டி நாடார் ஒருவர். இவரே தர்ம சீடர் என அழைக்கப்பட்டார். (2) பாஞ்சாலங்குறிச்சி கைலாசபுரத்தைச் சார்ந்த பண்டார நாடார் வீமன் சீடராக இருந்தார். (3) பிள்ளையார் குடியிருப்பு என்ற ஊரைச் சார்ந்தவர் (பெயர்தெரியவில்லை) ஐயாவிடம் அர்ச்சுன சீடராகப் பணி புரிந்தார். (4) குளச்சலைச் சார்ந்த சுப்பையாநாடார் நகுல சீடராக விளங்கினார். (5) தென்தாமரைக் குளத்தைச் சார்ந்த இராமகிருட்டின பெருமாள் நாடார் மகன் அரி கோபால நாடார் சகாதேவ சீடராகத் திகழ்ந்தார். இவரே அய்யா வைகுண்டர் உரைக்க அகிலத் திரட்டை எழுதிய பெருமை பெற்றவர் ஆவர்.

வைகுண்டர் தன்னைத் தேடி வரும் மக்களுக்கு அறம் உரைத்தும், அவர்களின் துன்பங்களைப் போக்கியும் அறப்பணி ஆற்றினார். மக்கள் தர்மமாகக் கொண்டு வரும் பொருட்களை ஏற்று மக்களுக்குப் பிச்சையிட்டார். அவருடைய அறப்பணிகளில் சீடர்கள் ஐவரும் துணையாக நின்றார்கள்.

முற்பிறவியில் அய்யாவிடம் நட்பு கொண்ட பரதேவதை அம்மையார் சமையற் பணிகளைச் செய்தும், அய்யாவிற்கான தேவைகளை நிறைவேற்றியும் தொண்டு செய்தார்கள். பரதேவதை அம்மையின் மக்கள் வழி வந்தவர்களே இப்பொழுதும் சாமித் தோப்பு ஆலயப்பணிகளை நிர்வகித்து வருகிறார்கள். அம்மையின் வழி வந்தவர்களில் ஒருவரே, சாமித் தோப்பில் அன்புவனம் என்னும் ஆசிரமம் அமைத்து அறப்பணிகள் ஆற்றி வரும் புனிதகுரு பால பிரசாதிபதி அடிகள் ஆவார்.

அய்யாவைத் தேடி வந்த மக்களுக்கு மண்ணும் தண்ணீரும் மருந்தாகக் கொடுத்து அவர்களது நோய்களை நீக்கினார் வைகுண்டர்.

மருட்பேய் பிடித்து துன்புற்ற பெண்கள் அய்யாவிடம் வந்தார்கள். அப்பேய்களை ஓட்டி பெண்களுக்கு அமைதி அளித்தார். புத்தி பேதலித்தவர்களையும் அய்யாவிடம் கொண்டு வந்தார்கள். அய்யாவின் அருளால் மருள் நீங்கி அறிவு சுகம் பெற்றார்கள் அம்மக்கள்.

இவ்வாறெல்லாம் பல அறப்பணிகளை ஆற்றிய வைகுண்டர் மக்களைத் தவ வாழ்விலும் பயிற்றுவிக்க வேண்டும் என எண்ணினார்.

அய்யாவைப் பின்பற்றிய மக்கள் 'அய்யா வழியினர்' என்றும், 'அன்புக்கொடி மக்கள்' என்றும் அழைக்கப்பட்டார்கள்.

தவ வாழ்வில் நாட்டம் கொண்ட மக்களைத் தன்னிடம் வரும்படி அய்யா அழைத்தார். அய்யா அழைப்பை அன்புடன் ஏற்ற மக்கள்தங்கள் வீடு, நிலம் ஆகியவற்றை விற்று, மற்றும் பலபொருட்களைத் துறந்து அய்யாவுடன் வந்தார்கள். அவ்வாறு வந்த மக்களில் ஆண்களும், பெண்களும், வயது முதிர்ந்தவர்களும், வயது குறைந்தவர்களும் இருந்தார்கள். கர்ப்பிணிப் பெண்களும் இருந்தார்கள். வயது வராத குழந்தைகளும் இருந்தார்கள்.

அய்யா அவர்களை வாகைப்பதி என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்று தவம் செய்யும் முறைகளைப் போதித்தார். தவம் செய்ய முயன்ற

மக்கள் நிலம், உறவு, மாடு, வீடு, பெண், பொருள், பொன், கல்வி ஆகிய அனைத்தின் மீதும் இருந்த ஆசைகளைத் துறந்தார்கள். குருவே தஞ்சம் என எண்ணி, வாகைப்பதி எனும் கடற்கரை ஊரில் தங்கினார்கள்.

தவவாழ்வில் தினம் மூன்று முறை ஆடைகளைத் துவைத்து மூன்று முறை குளித்தார்கள். மதிய வேளையில் மட்டும் பச்சரிசியை சமைத்துத் தரையிலிட்டு உண்டார்கள்.

இவ்வாறு சுமார் 700 மக்கள் தவம் செய்தார்கள். காலையில் யுகப்பாட்டு என்னும் வழிபாட்டுப் பாடலையும், நடுப்பகலில் உச்சிப்படிப்பு என்னும் பாடலையும் பாடி தியானம் செய்தார்கள். இப்பாடல்கள் அருள்நூல் என்னும் வழிபாட்டு நூலில் உள்ளன.

தவம் செய்த நாளில் பெண்கள் யாருக்கும் தூய்மைக் குறைவு ஏற்படவில்லை என கூறப்பெறுகிறது.

இவ்வாறான தவம் துவைத்துக் குளித்து நடத்தப் பெற்றதால் துவையல் தவசு எனப்பெற்றது என்பர் சிலர்.

பரமன் பதம் போற்றி பச்சரிசி உணவை மட்டும் உண்ட மக்கள் துவையலை மட்டுமே துணையாகக் கொண்டமையால் துவையல் தவசு என்றாயிற்று என்பாருமுளர்.

ஆனால் மனமாசு என்னும் அழுக்கை துவைத்து நீக்கி தூய மனதில் ஆண்டவனை நிலை நிறுத்திச் செய்யப்பெற்ற தவம். எனவே துவையல் தவசு எனப் பெற்றது என்பதே உண்மை.

அன்பு மக்களை வாகைப் பதியில் தவம் செய்ய வைத்து அய்யா வைகுண்டர் சாமித்தோப்பு சென்றார். அரசன் கைது செய்து இடையூறு செய்தமையால் ஆறு ஆண்டுகள் தவம் நிறைவேறாமல் குறைவு பட்டு நின்றது. அதனை நிறைவு செய்வதற்காக அய்யா மீண்டும் தவத்தில் அமர்ந்தார்.

தவத்தில் இருந்த இறைவன் வாகைப்பதியில் தவம் புரிந்த மக்களைச் சோதிக்க எண்ணினார் போலும். பொன்மக்களைப் புடம் போட்டு பொலிவூட்ட நினைத்தார் போலும்.

வாகைப் பதியில் மக்கள் தவம் புரிந்த இடத்தில் நீரை வாரி இரைத்தது போல கொடும் குளிர் காற்று வீசியது. இறைவன் செயல் இது என்று மக்கள் உறுதியுடன் தவம் புரிந்தார்கள்.

சான்றோர்கள் தவம் புரியும் இடத்தில் ஏராளமான தெள்ளுப்பூச்சிகள் உருவாயின. தவச்சான்றோர்கள் குடிசைகளிலும், ஆடைகளிலும் அவை நிறைந்தன.

மூட்டைப் பூச்சிகளையும் இறைவன் ஏவினார். தெள்ளுப் பூச்சிகள்மற்றும் நண்டுகள் தொல்லைகளினால் தவசிகள் மிகவும்துன்புற்றார்கள். எனினும் மனங்கலங்காது உறுதியுடன் தவம்புரிந்தார்கள். இத்தனைத் துன்பங்களுடன் குடிநீர்ப் பஞ்சமும்ஏற்பட்டது.

பலகாலம் இவ்வாறு துன்புற்ற மக்கள் தவம் புரிய வேறு இடத்திற்குச் செல்ல தீர்மானித்தனர். அருகாமையில் இருந்த முட்டப்பதி என்னும் இடம் தவம் புரியச் சிறந்த இடம் எனத் தேர்ந்தெடுத்தார்கள். முட்டப்பதி தலம் அய்யா இரண்டாம்முறை விஞ்சை பெற்ற தலமாகும்.

முட்டப்பதியில் சென்று தவம் புரிந்தால் நலமாகுமென தவசிகளின் கனவில் அய்யா உரைத்தார்.

வாகைப்பதியில் ஆறு மாதம் தவம் புரிந்த மக்கள் முட்டப்பதி சென்றார்கள். அங்கு வரிசையாக குடிசைகளை அமைத்தார்கள். முன்போல் மூன்று நேரம் குளித்து துவைத்தும் மூன்று வேளை இறைவனைத் தொழுதும் ஒரு வேளை உணவு உண்டும் இறைவன் மீது ஒரே நினைவாகக் கொண்டு தவம் புரிந்தார்கள்.

சான்றோர்கள் தவத்தைக் கண்டு பிற இன மக்கள் வியப்படைந்தார்கள். தவத்தில் வெற்றி கண்ட அம்மக்களைஅவரவர் சொந்த ஊருக்கு அனுப்பி விட வைகுண்டர் தீர்மானித்தார். அவர்கள் கனவில் தோன்றி சொந்த ஊர் செல்ல விடை கொடுத்தார். ஆனாலும் தவசிகள் தவத்தை விட்டுச்செல்ல மனம் இல்லாமல் இருந்தார்கள்.

எனவே தவசிகளை மேலும் சோதிக்க எண்ணிய திருமால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட உணவைப் பாதியாகக் குறைத்தார். எனினும் ஏற்றம் பெற்ற மக்கள் தவத்தை உறுதியாக மேற்கொண்டார்கள்.

திருமால் வைசூரி நோயை ஏவி விட்டார். அந்நோயில் பலர் மடிந்தார்கள். எனினும் இறைவன் நினைவு மாறாமல், தவமுறைகள் தவறாமல் இருந்தார்கள்.

வைகுண்டரை நாடிய அவர்களை இப்போது உங்கள் ஊருக்குச் சென்றால் உங்களுக்கு நல்ல சிறப்புகள் கிடைக்கும் என வாழ்த்தி அனுப்பிவைத்தார்.

துவையல் தவசுக்காரர்கள் சொந்த ஊர் சென்றார்கள். அந்தந்த ஊர் மக்கள் அவர்களுக்குத் தங்க இடமும், உணவும் கொடுத்து குருவெனக் கொண்டாடினார்கள். துவையல் தவசுக்காரர்கள் இறைவழிபாடு தவறாமல் நடத்தி மகிழ்ந்திருந்தார்கள்.

திருமால் வைகுண்டரை முட்டப்பதிக்கு அழைத்து விஞ்சை செய்தல்

மனித அவதாரம் எடுத்த நாராயணர் இனி நாம் என்ன செய்யலாம் என்று சிந்தித்திருந்தார். இப்போது திருமால், பரமேசுவரர், பிரம்மா, உமையம்மை, சரசுவதி மற்றும் முனிவர்கள் வந்து முட்டப்பதி கடற்கரை அருகில் இருந்தார்கள். முனிவர்களை அனுப்பி வைகுண்டரை அழைத்து வரும்படி கூறினார்கள்.

முனிவர்கள் வைகுண்டரைக் கண்டு முட்டப்பதியில் வந்திருக்கும் திருமால் அழைத்து வரச் சொன்னதைச் சொன்னார்கள்.

வைகுண்டர் தொட்டிலில் அமர்ந்து சீடர்களும், முனிவர்களும் சூழமுட்டப்பதி வந்து சேர்ந்தார்.

மகனாகிய வைகுண்டரைத் திருமால் வரவேற்றார். வைகுண்டர் கலி அரசனால் தான் பெற்ற துன்பங்களைக் கூறினார். பின்னர் குற்றம் ஏதும் இல்லாமல் தான் தவம் செய்து முடித்ததையும் தெரிவித்தார்.

திருமால் வைகுண்டரை கடலுக்குள் அழைத்துச் சென்று மூன்றாம் முறையாக விஞ்சை உரைக்கத் தொடங்கினார்.

நல்ல மகனே, நல்ல காலம் வந்துள்ளது. உனது பதியில் ஒருவாரம் இடைவிடாமல் நீ திருவிழா நடத்து. ஏழு தெய்வகன்னிமாரை திருமணம் செய்து கொள்.

சலிப்பில்லாமல் காசு தருகின்றவர்களிடம் வாங்கி அறப்பணிகளைச் செய். இவ்வாறாக, பத்து ஆண்டுகள் வாழ்ந்து மூலப் பதிக்கு வந்து சேர வேண்டும். அங்கும் சில பெண்களை மணம் புரிவாய்.

அதன் பின்னர் நான் வந்து ஏற்றுக் கொள்வதற்குரிய சுகங்களைத் தருவேன்" என்று மேல் நிகழ்ச்சிகளைத் திருமால் கூறினார்.

வைகுண்டர் திருமாலையும், ஐந்து பூதங்களைத் தனக்குள் அடங்கிய சிவனையும் வணங்கி, என்னை ஆட்கொண்ட தந்தையே, எப்போது எனக்கு முடியரசு தருவீர்' எனக் கேட்டார்.

திருமால், 'திருமுடி எப்பொழுது தருவீர்கள் எனக் கேட்ட மகனே, தலைவனுக்குரிய தலைப்பாகையை அணிந்த போதும், அழகிய இடைகளையுடைய மாதர்களைத் திருமணம் முடித்து அவர்களுக்கு நீ நாயகன் ஆனபோதும் அரசாட்சிக்குரிய நிலமகளை அடைத்துவிட்டாய்' என்று கூறிப் பலவாறாக வைகுண்டரைத் திருமால் மகிழ்வித்தார். மேலும், கலியுகத்தில் நீசன் எதிரியாக அமைந்ததால் உனக்கு இன்னல் இழைத்தான். கலங்காமல் நீ போய் பதியில் இரு. அன்பரசு செய்யும் நாள் நெருங்கி விட்டது' எனக் கூறி வைகுண்டரை வழிகூட்டி அனுப்பி வைத்தார்.

கடற்கரையில் வைகுண்டர் வந்து சேருமுன்னர் அவர் பால் அன்புகொண்ட மக்கள் ஏராளமான பேர் அங்கு கூடி வந்து இருந்தார்கள். அவர்களைக் கண்ட வைகுண்டர் மகிழ்ந்து சாமித்தோப்பு வந்து சேர்ந்தார்.

அவ்வாறு இருக்கும் நாளில் பச்சரிசி, தேங்காய்ப்பூ, , மிளகு கூடிய உணவை நாளுக்கு ஒருமுறை மட்டும் உண்டார். காவி உடைதரித்து, உருத்திராட்ச மாலை அணிந்து மாத்திரைக்கோல் தாங்கி இருந்தார். சிறிது நாள் கழித்து ஐம்புலன்களையும்அடக்கி காவித் தொட்டிலில் அமர்ந்து மக்களுக்கு அருள் உரைத்தார்.

தீயவர்கள் அழிந்து தர்மயுகம் தோன்றப் போவது பற்றி கூறினார். நீசர்கள் படப்போகும் துன்பங்களை விளக்கினார். அவர் உரை கேட்டு நல்லவர்கள் புகழ்ந்தனர். சண்டாளர்கள் ஏதோ கபடு செய்கிறார்கள் என்றார்கள்.

அய்யா மீது பக்தி கொண்ட மக்கள் அவருக்குப் பசுக்களையும், பாலாடுகளையும் கொண்டு வந்து கொடுத்தார்கள். இன்னும் காசு, ஆடைகள், நெல், தேங்காய்கள் ஆகியவற்றையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவற்றைப் பணி விடை செய்கின்றவர்களுக்கும், ஏழை மக்களுக்கும் பகிர்ந்து அளித்தார்.

பதினெட்டு இன மக்களும் வைகுண்டரிடம் வந்தார்கள். பெண்களில் பலர் தாங்களே இலக்குமி எனவும், ஏழு கன்னிமார்எனவும், பரமேஸ்வரனார் எனவும், மண்டைக் காட்டாள் எனவும்,வள்ளி, தெய்வானை எனவும் பகவதி என்றும் ஆராதனை கொண்டு ஆடிப் பாடினார்கள்.

ஆண்களில் பலர் தாங்களே சிவன் என்றும், திருமால் என்றும், அனுமன் என்றும், காலன் என்றும், எமன் என்றும் முனிவர்கள் என்றும் ஆராதனை கொண்டு ஆடினார்கள்.

அவர்கள் தங்கள் தங்கள் ஊர்களிலும் இவ்வாறு ஆராதனைகளை கொண்டு ஆடி பாட்டுக்கள் பாடினார்கள். அவர்களிடம் வந்த மக்களின் துன்பங்களுக்கு ஆறுதல் கூறியும் இன்னும் நிகழப்போவதைக் கூறியும் இறைத் தொண்டு செய்தார்கள்.

தெய்வ கன்னியராக ஆராதனை கொண்டவர்கள் திருமாலினால் சான்றோர்களைப் பெற்ற கதையைப் பாடினார்கள்.

உமை மண்டைக்காட்டாள், குமரி பகவதியாள், சீதை ஆகியோர் கலியை அழித்து கல்யாணம் முடித்து எங்களுடைய நாயகனார் இங்கு வருவதாகச் சொன்னார்கள். அவ்வாறு வந்தவர் நீர்தானோ? என்று கேட்டார்கள்.

வைகுண்டர் அவர்களை, 'உலகை வைகுண்டர் ஒரு குடைக்குள் ஆளும் காலம் வரை காவலில் இருங்கள்' என்று சிறை வைத்தார்.

தெய்வ கன்னியர் திருக்கல்யாணம்

வைணவ ஆலயங்களில் நடத்தப்படும் சீனிவாசப் பெருமாள் திருக்கல்யாணம் போன்று, முருகன் கோயில்களில் நடத்தப்படும் வள்ளி திருமணம் போன்று சான்றோர்களின் மகிழ்ச்சிக்காகவைகுண்டர் நடத்திய திருமணமே தெய்வ கன்னியர் திருக்கல்யாணம்.

வைகுண்டர் திருநாள் நடைபெற்றது. மக்கள் பெரும் கூட்டமாய் கூடியிருந்தார்கள். முற்பிறவியில் தான் அடைந்த ஏழுகன்னியரையும் மணமுடிக்க வைகுண்டர் எண்ணினார்.

திருமணத்திற்காக காவி உடை உடுத்தினார். தோளில் பொட்டலம் ஒன்றைத் தொங்க விட்டார். உருத்திராட்ச, துளசி மாலைகள்

அணிந்தார். பிரம்பும், சுரைக் கூடும் கையில் ஏந்தினார். இவ்வாறாகத் தன்னை அலங்கரித்துக் கட்டிலில்அமர்ந்தார்.

சீடர்களை அழைத்து உங்கள் தாய்மார்களை நான் மணம்புரியும் வேளை வந்தது. அவர்களைப் போய் அழைத்து வாருங்கள் என்றார்.

சீடர்கள் கூட்டத்தில் சென்று, "அம்மையார்களே வாருங்கள்", 'அம்மையார்களே வாருங்கள்' என்று அழைத்தார்கள்.

சீடர்கள் அழைப்பைக் கேட்டு (1) கொட்டங்காடு என்னும் கிராமத்தைச் சேர்ந்த சாத்திரத்தாள் என்னும் பன்னிரண்டு வயதுசிறுமியும் (2) புன்னையடி என்ற ஊரைச் சார்ந்த கமலக்கன்னி என்னும் ஐந்து வயது சிறுமியும் (3) கோட்டையடி என்ற ஊரைச் சேர்ந்த யோக கன்னி என்னும் ஏழு வயது சிறுமியும் (4) தென்தாமரைக்குளம் என்னும் ஊரைச் சேர்ந்த மூலகன்னி என்ற ஐந்து வயதுச் சிறுமியும் (5) களக்காடு என்னும் கிராமத்தைச் சேர்ந்த கடும்சக்தி கன்னி என்னும் ஏழு வயதுச் சிறுமியும் (6) பிள்ளையார்விளை என்னும் கிராமத்தைச் சேர்ந்த தெய்வகன்னி என்ற ஏழுவயது சிறுமியும் (7) பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்த அறிமடவார் என்ற ஐந்து வயது சிறுமியும் அய்யாவிடம் வந்தனர்.

முன் பிறவியில் அயோத கங்கை அமிழ்தவனத்தில் திருமாலைக் கூடி பிள்ளைகளைப் பெற்ற தெய்வ கன்னியரின் ஆவிகள் அப்பெண்களின்மேல் ஆராதனையாக வந்தனர். அவர்கள் சுனையில் நீராடியதும், திருமாலால் குழந்தைகளைப் பெற்றதையும் கூறினார்கள். தங்களைத் திருமணம் செய்து கொள்ளும்படி தவம் செய்த வரலாற்றையும் கூறி, இப்பொழுது எங்களைத் திருமணம் செய்துகொண்டு எங்கள் குழந்தைகளைத் தாருங்கள் என்று கேட்டார்கள்.

வைகுண்டர் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் இன்று போய் நாளை காலையில் வாருங்கள். நான் தேவர் முதலானவர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பி அவர்களை வரவழைத்து உங்களைத் திருமணம் செய்து கொள்கிறேன்' என்றார்.

பொழுது புலர்ந்தது. கதிரவன் கடு மகிழ்ச்சியுடன் உதயமானான். வானில் தேவர்கள் முரசு முழுங்கினார்கள். வானவர்கள் மலர்மாரி பொழிந்தனர்.

பிரம்மன் திருமுகூர்த்த மந்திரங்களை ஓதினான். தேவ மங்கையர் குரவையிட்டனர். நாராயணருக்கும், தெய்வப் பெண்களுக்கும் திருமணம் என்று சொல்லி தேவர்கள் வானப் பந்தல் அமைத்தார்கள். தேவர்கள் அமைத்த ஆகாயப் பந்தலில் சூரியன் விளக்காகவும், விண்மீன்கள் அலங்காரச் சிதறல்களாகவும் ஒளி வீசின.

தேவர்கள் திருமாலின் அடியைப் பணிந்து, 'அமுதளித்து உயிர்களை எல்லாம் காக்கும் பெருமாளே, தங்கள் அருளால் பந்தலும், விதானமும் அமைத்தோம். இன்னும் திருமணத்திற்காக நாங்கள் செய்ய வேண்டிய வேலைகள் என்ன? சொல்லுங்கள்' என்றனர்.

தேவர்கள் உரை கேட்டு மகிழ்ந்த மாயன் வருணனையும், வாயுவையும் நளின மலர் தூவி குளிர்ந்த தென்றலை வீசும்படிவேண்டினார். தேவர்களை ஏவிய திருமால் தெய்வ கன்னியர் வரவேண்டும் என நினைத்தார்.

தெய்வ கன்னியர் வந்தார்கள். அவர்களது பெற்றோர்களும் வந்தார்கள். பெற்றோர்களுடன் திருமணம் பேசி முடித்தார்கள். கன்னிமார்களின் பெற்றோர் கையைப் பிடித்துக் கொடுக்க அவர்களுக்கு திருமாங்கல்யம் அணிந்து திருமணம் முடித்தார்.

மாதர் குலம் வாழ, உலகத்தில் தர்மம் தழைத்து ஓங்க ஈசர்முதல் எல்லோரும் சிறப்பு பெற, சாந்த குணம் உடைய சான்றோர்கள் தழைத்து வாழ தாலி அணிவித்தார் தயாபரன்.

தேவர்கள் விடைபெற்றுச் சென்றார்கள். வைகுண்டர் கன்னியரின் கைபிடித்து தெருவீதி வலம் வந்தார். அய்யா வைகுண்டர் தெருவீதி வலம் வந்ததை வருணிக்கும் அகிலத்திரட்டு பாடல்கள் இனிமையானவை.

'மதிவலம் வருவோம், தர்மபதி வலம் வருவோம்' என்றுபாடுகிறார்கள். மேலும் தர்மம் தழைக்க வலம் வருவோம், பொதுமைப் பதியில் வலம் வருவோம், கல்லாதவர் கருவறுக்க,கேடு கலி கோடு அற வலம் வருவோம் என்று பாடுகிறார்கள்.

சூழ்ந்து நின்ற மக்கள் அய்யாவையும், அம்மைமார்களையும் வாழ்த்தி சுபசோபனப் பாடல் பாடினார்கள்.

வைகுண்டரின் திருமணச் செய்திகள் நமது சிந்தனையைக் கிளறுவனவாக உள்ளன. வைகுண்டர் ஏழுகன்னியரைத் திருமணம்செய்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன? என்பது சிந்தனைக்குரியதாகும்.

முன்னைய எட்டு அவதாரங்களை எடுத்த திருமால் தான் தான் என்பதை மக்களுக்கு நன்கு உணர்த்த வைகுண்டர் மனதில் எண்ணி இருக்க வேண்டும். எனவேதான் முன்யுகத்தின் இறுதியில் மகாவிட்ணுவாகிய தான் அமிழ்த கங்கை அருகில் ஏழுகுழந்தைகளுக்குத் தாய்மார்களாக்கிய பெண்களை இந்தயுகத்திலும் தொடர்புபடுத்திக் காட்டுவதற்காகவே இத் திருக்கல்யாணம் நடைபெற்றிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது.

வைகுண்டர் திருமணம் புரிந்த ஏழு பெண்களும் குழந்தைப் பருவத்தினர். திருமண வயதுக்கு உரியவர்கள் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்திருமணம் மக்களை மகிழ்விப்பதற்காக நடத்தப்பட்ட நாடகக் காட்சி போலவே தோன்றுகிறது.

வைகுண்டர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த பெரியோர்கள் கூறச் செவிவழி வந்த செய்திகளில் இருந்து நாம் அறிவது:

“திருவிழாக் கூட்டத்தில் அம்மைமார்களைச் சீடர்கள் அழைக்க ஏழு குழந்தைகள் மீது முற்பிறவி தெய்வ கன்னியரின் அருள் வந்து அவர்கள் ஆராதனையுற்றார்கள். ஆராதனை பெற்ற பெண்கள் முற்பிறப்பு வரலாற்றைச் சொல்லி திருமணம் முடிக்கவேண்டினார்கள். திருமாலின் தோன்றலான வைகுண்டர் அவர்களோடு மகிழ்ந்து உரையாடினார். இது காண்போர்க்கும்,கேட்போர்க்கும் களிப்பைத் தந்தது. குழந்தைகள் மூலம் முற்பிறப்பு செய்திகளைக் கேட்ட மக்களுக்கு நாராயணர் மீது நம்பிக்கை மிகுந்தது.

இவ்வாறு திருமண நிகழ்ச்சி நடைபெற்ற பின்னர் அப்பெண்கள் தம் பெற்றோருடன் தங்கள் ஊருக்குச் சென்றனர். திருவிழாக் காலங்களில் மீண்டும் அவர்கள் பதிக்கு வந்து விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். வைகுண்டருடன் தாம்பத்ய உறவு கொள்ளக் கூடிய அளவுக்கு அவர்கள் நெருங்கி வாழும் வாய்ப்புக் கிட்டவில்லை என கூறப்படுகிறது.

வைகுண்டருக்கான அணுக்கப் பணிகளை அவரை விட வயதில் முதிர்ந்த, சிறு வயதிலேயே அவர் மீது அன்பு கொண்ட பரதேவதை அம்மையாரே செய்து வந்தார் எனக் கூறப்படுகிறது.

திருமண நிகழ்ச்சிகளை விவரிக்கும் அகிலத் திரட்டு மணமகனான வைகுண்டர் காவி உடை தரித்து, உருத்திராட்சமும் துளசிமாலையும் அணிந்து, சுரைக் குடுக்கையும், பிரம்பும் கையிலேந்திதவக் கோலத்தில் இருந்ததாகவே கூறுகிறது. தார்மீக உலக வாழ்விற்குரிய மணமகனாக அவரை வர்ணிக்கவில்லை.

வைகுண்டர் பல பெண்களை மணந்தார். அவர்களோடு இன்ப வாழ்க்கையைத் துய்த்தார் என்பது போல கூறப்படும் செய்திகள் தவறானவை என்றே எண்ணத் தோன்றுகிறது.

இதற்கு ஆதாரமாக இன்னும் பல சான்றுகளைத் தரலாம். ஏழுபெண்களும் குழந்தையர்கள். இதை மறுப்போர் யாருமில்லை. சுகவாழ்விற்கு உரியவர்கள் அல்லர்.

வைகுண்டரோடு உடன் உறைந்து இல்லற வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பது உண்மையானால் அவர்களின் பாரம்பரியத்தினர் யாராவது இப்பொழுது சாமித் தோப்பில் இருக்க வேண்டும். அவ்வாறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

வைகுண்டரின் விந்து வழித் தோன்றிய மக்கள் யாராவது இருந்திருந்தால் அவர்களுக்கு நலமேற்படும் வகையில் தன் ஆலய உரிமை ஏதேனும் வைகுண்டர் அளித்திருப்பார். மாறாக, ஆலயத்தின் பணிவிடை உரிமைகளையும், நிர்வாகப் பொறுப்புகளையும், பரதேவதை அம்மையின் மக்கள் வழியினருக்கே அளித்துள்ளார் எனத் தெரிகிறது.

இறைவனே ஆயினும் பல பெண்களை மணந்து அவர்களோடு சுகம்துய்த்து இருப்பதை எந்த சமுதாயத்தினரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அவருக்குரிய மரியாதையும், அன்பையும் அளிக்கமாட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

வைகுண்டர் பத்து பெண்களை மணந்து அவர்களோடு வாழ்க்கை நடத்தினார் என்பது உண்மையாயின், அவரை நாடித் தினம் ஆயிரம்ஆயிரம் மக்கள் வந்து அவர் அடிபணிந்து அவர் வழியில் நின்றார்கள் என்பது எப்படி உண்மையாகும்?

ஒருவர் எவ்வளவு உயர்ந்தவர் ஆயினும் அவரைப் பழித்துப் பேசக்கூடியவர்கள் அவர் வாழும் ஊரில் நிச்சயம் இருப்பார்கள். ஆனால் வைகுண்டர் வாழ்ந்து மறைந்து சுமார் 150 ஆண்டுகள்ஆகியும் அவர் வாழ்ந்த ஊரிலும், பக்கத்துக் கிராமங்களிலும்அவரைப் பழித்துப் பேசக் கூடியவர்கள் யாருமில்லை என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.

பாத்திரங்களுக்கிடையே தவறான உறவைக் கற்பிப்பது உள்நோக்கமுடைய செயலாகும்.

த. தினகரன் அவர்கள் இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, மாயா சக்தி, பரா சக்தி, ஆதி சக்தி, சிற் சக்தி என்ற சக்திகளின் வடிவமே ஏழு தெய்வ கன்னியர் எனக் கூறுகின்றார்.

இறைவன் ஒருவனே. அந்த ஏக பரன் தான் தான் என்பதை மக்களுக்கு உணர்த்த விரும்பிய வைகுண்டர் ஏழு சக்திகளையும் தன்னுள் அடக்கிக் காட்டுவதற்காக நடத்தப்பட்ட திருமணம் இகனைத் திருமணமாகும்.

"மாமணங்கள் செய்து மாதர் ஏழுபேர்களுக்கும்
தாமதங்கள் இல்லாமல் சந்ததிகள் தாங்கொடுத்து

இராச்சியம் ஆள செய்ய வேணுமென ..." வைகுண்டர் நினைத்தார்.

"சந்ததி ஏழு பேருக்கு
தருவீரென் தலைவா" என்று கேட்பார்கள் தெய்வ கன்னியர்.

அவ்வாறு கேட்ட தெய்வ கன்னியருக்கு தனது சீடர்களான சான்றோர் மக்களை பிள்ளைகளாகத் தந்தார் வைகுண்டர். கன்னியரோடு உடல் தொடர்புண்டு, பிள்ளைகள் பெற வாய்ப்புஉண்டு எனின் சீடர்களைப் பிள்ளைகளாகத் தந்து அமைவானேன்.

மேற்கூறிய சான்றுகளால் வைகுண்டர் நடத்திய திருக்கல்யாணம். இகனைத் திருமணமே என்று புலனாகிறது. வைகுண்டருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் அகிலத் திரட்டில் அமைந்துள்ள வரிகள் பிற்சேர்க்கையாகவோ அல்லது இடைச் சேர்க்கையாகவோ இருக்கலாம்.

அகிலத் திரட்டு காட்டும் வைகுண்டரின் மானிட வரலாற்றினைக் காணப்புகின் அவர் நடத்திய திரு நாட்கள் முக்கிய இடம்பெறுகின்றன.

வைகுண்டர் நடத்திய திருவிழாக்கள்.

வைகுண்டர் ஒவ்வொரு ஆண்டும் தாம் பிறந்த மாசித் திங்கள் இருபதாம் நாளை ஒட்டித் திருநாள் நடத்த நினைத்தார்.

திருநாளை கொண்டாட மக்கள் பால், நெல், திருமாலின் விருப்பத்திற்குரிய பிச்சி மலர் மாலைகள், மருக்கொழுந்து, பன்னீர், சந்தனம். இளநீர், மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், பாக்குக் குலைகள் ஆகியவற்றைக் கொண்டு வந்து அய்யாவின் திருமுன் வைத்தார்கள்.

திருநாள் நடத்துவதற்காகப் பெரிய கொட்டகை அமைத்தார்கள். கொட்டகையினுள் அழகிய மணி மேடை அமைத்தார்கள். மேடையின் மேல் பட்டாடைகளை விதானமாக கட்டினார்கள். பழக்குலைகளையும், பிச்சி மாலைகளையும் மற்றும் பலமலர் மாலைகளையும் கொண்டு அலங்கரித்தார்கள்.

சந்தனம், கத்தூரி போன்றவைகளால் மணம் ஊட்டினார்கள். மக்கள் கொண்டு வந்த பழம் முதலியனவற்றை அடுக்கடுக்காய் வைத்து அலங்கரித்தார்கள்.

முரசம் முழங்கியது. வானவெடிகள் அதிர்ந்தன. தீ வெட்டிகள் ஒளியை உமிழ்ந்தன. பட்டும், பொன்னும் அணிந்த பெண்கள் வெள்ளை நாமம் இட்டு அங்குமிங்கும் உலவினார்கள். பால்பாயாசம் வைத்து அனைவருக்கும் வழங்கினார்கள்.

மங்கள இலயத்துடன் நாதசுவரம் தொனித்தது. அய்யா வைகுண்டர் தலையை உச்சிக் கொண்டையிட்டு அலங்கரித்தார். நல்ல காவியாடை உடுத்தினார். கழுத்தில் உருத்திராட்சமாலையும், துளசி மாலையும் அணிந்தார். கையில் பிரம்பு ஏந்தினார். கக்கத்தில் மாத்திரைக் கோலைத் தாங்கினார். உடலெங்கும் வெள்ளை நாமத்தால் அலங்கரித்தார். பிச்சி மாலையை மேலிட்டார். பெண்களும், ஆண்களும் அவரைச் சூழ்ந்துவந்தனர்.

சீடர்கள் காவி உடை உடுத்தி மெய்யான வைகுண்ட குருவைப் போற்றி உருத்திராட்சம், துளசிமாலை, மாத்திரைக்கோல் பொட்டணம் ஆகியவற்றைத் தாங்கினார்கள். உடலெங்கும் நாமத்தால் அலங்கரித்தார்கள். 'அரகரா சிவ–சிவ' என்று போற்றினார்கள்.

துவையல் தவசுப் பண்டாரங்கள் காவியாடை, உருத்திராட்சம், கடுக்கன், செப்புக் கடுக்கன் ஆகியவற்றால் தங்களை அலங்கரித்து 'சிவ சிவா' என நாமம் கூறி வந்தார்கள்.

ஆராதனை கொண்ட பெண்கள் நாராயணர் பேரில் நல்ல பாடல்களைப் பாடினார்கள்.

கட்டிலில் சுவாமியை அமர வைத்து பெண்கள் குரவையிட்டார்கள். சங்கு முழங்கியது. வைகுண்டர் சிவிகையில் அமர சிவிகைத்தண்டை சுமந்து வந்தார்கள். இவ்வாறாக பதிவலம் வந்தார்கள். பூமாரியும், பொன்மாரியும் பொழிந்தார்கள். இவ்வாறாக, ஞாயிற்றுக் கிழமை திருநாள் முடிவுற்றது.

திங்கட்கிழமை திருநாளுக்கு வந்த மக்கள் பலர் விடை பெற்றுச் சென்றனர்.

தெய்வ கன்னிமார் ஏழுபேரையும் திருமணம் முடித்ததுபோல் அம்மை பரதேவதையையும் இலக்குமியாகப் பாவித்து தன்னைத் திருமாலாக பாவித்த வைகுண்டர் இகனைத் திருமணம் முடித்தார்.

ஏழு கன்னியருக்கு தாலி கட்டிய வைகுண்டர் பரதேவதைக்கு சீலையும், தாலியும் எடுத்துக் கொடுத்தார் என்று மட்டுமே அகிலத் திரட்டில் உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தெய்வ கன்னியர்கள், எங்கள் பிள்ளைகளை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்க, வைகுண்டர் நல்ல ஒரு நாளில் சீடர்கள் ஏழுவரையும் ஏழு தெய்வ மாதர்களுக்கும் கொடுத்தார். அப்போது பெண்கள், இறந்த பிள்ளைகள் மற்ற இருவரும் எங்கே? அவர்களை எப்பொழுது தருவீர்கள் என கேட்டார்கள்.

சோழன் தீ வினையால் மாண்ட மக்களை தர்மயுகம் மலரும் நாளில் தருவேன் என வைகுண்டர் உரைத்தார்.

மனைவியர்க்கு மதலையரைத் தந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார் வைகுண்டர். இல்லறமாம் நல்லறத்தின் பெருமையை இவ்வுலகம் உணரும் வண்ணம் மாடு, மனை, சொத்துக்களுடன் வாழ்ந்தார். உழைப்புக்கும், உழவுக்கும் பெருமை சேர்க்க உழவுத் தொழில் புரிந்தும் உவகை கொண்டார்.

வைகுண்டர் மூலகுண்டப்பதிக்கு எழுந்தருளல்

அய்யா வைகுண்டர் வாழும் காலத்திலேயே அவரது ஆலயங்கள் பல தென் தமிழ்நாட்டில் தோன்றின. அவற்றுள் பெருமை மிக்கது மூலப்பதி ஆகும். அதனை அம்பலப்பதி என்றும் அழைக்கின்றார்கள். சாமித் தோப்பிலிருந்து மூலப்பதிக்கு வந்து அய்யா ஆற்றிய அறச்செயல்களை கூறுவதே இப்பகுதியாகும்.

திருமால் வைகுண்டரை சாமித்தோப்பைவிட்டு மூலப்பதிக்கு வரச்செய்வதற்காக ஒரு உபாயம் செய்தார். சாமளை என்ற காளி தேவியை தூண்டினார். காளியால் வாந்தி நோயுற்று ஏழு அம்மைமார்களில் இருவர் இவ்வுலகைப் பிரிந்தனர். பெற்றோரும், உற்றோரும் மாதர் மறைவால் மனங்கலங்கி வைகுண்டரை நொந்தனர்.

அப்பொழுது அங்கு நின்ற ஒருவர் பல நாட்களுக்கு முன் தான் கனவு ஒன்று கண்டதாகக் கூறினார். கனவு என்னவென்று நாராயணர் கேட்டார்.

கனவு கண்டவர், "என் கனவில் பெரிய பூவண்டர் வடிவாய் ஒருவர் வந்தார். தோப்புப் பதியில் பத்தாண்டுகள் வாழ்ந்த பின்னர் மூலப்பதிக்கு வந்து இகனைகள் நடத்த வேண்டும் என்று நான்கூறியதை என் மகன் மறந்திருக்கிறான். நீ சென்று அவனை மூலப்பதிக்கு வரச்சொல். அவ்வாறு வரவில்லையென்றால் மாதருடன் மக்களையும், சரமதையும் வாங்கிவிடுவேன்! என்று சொல் என்றார்' எனக் கனவை விளக்கினார்.

கனவைக் கேட்ட வைகுண்டர் கவலை மிகக் கொண்டார். 'பூவுண்டராக வந்தது எனது தந்தை திருமால் அல்லவா? நீகனவைச் சொல்லாததனால் மென்மையான பெண்கள் இருவரை இழந்தேன்' எனக் கோபம் கொண்டார்.

உடனே மாதரொடும், சான்றோர் மக்களொடும் மூலப்பதி சென்றார். அங்கு தோப்புப் பதிபோல தொட்டில் கட்டியமண்டபமும், வரிசையான குடியிருப்புகளும், குளிர்ச்சி பொருந்தியமணி அரங்கும், பூம்பந்தலும் என பல இருப்பிடங்களை அமைத்தார்கள்.

அங்கும் ஞாயிறு, திங்கள் கிழமைகளில் திருநாள் நடைபெற்றது. அருளுரை ஆற்றுதல். கும்மி, அவதார விழா முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அக்காலத்தே வைகுண்டர் சிவனும், அரியும் தானே என்பதை மக்களுக்கு உணர்த்த எண்ணினார்.

கன்னியாகுமரி பகவதி அம்மனை வரவழைத்தார். அம்மை ஒருபெண்ணின்மேல் அருளாக வந்தார். சிவனும் ஆகிய வைகுண்டர் பகவதி அம்மையை மணம் முடித்தார்.

வைகுண்டர் மோகினி வடிவம் கொண்டு மண்டைக் காட்டாளாகிய பார்வதி அம்மையையும் அருவமாக அழைத்து வந்தார். அம்மை ஒரு பெண்ணின் மேல் அருளாக வர அவர் சிவனாண்டி கோலங்கொண்டு மண்டைக்காட்டு அம்மையை மணம் புரிந்தார்.

கந்தனும் நானே எனக் காட்ட எண்ணிய வைகுண்டர் தெய்வானை அம்மையையும் மணந்தார்.

அவ்வாறே பூமா தேவியின் வடிவாகிய பூ மடந்தையையும் மணந்தார்"

அய்யா, தான் வாழும் காலத்திலேயே பல நிழல் தாங்கல்களை (வைகுண்டர் ஆலயம்) தொடங்கி வைத்தார். வைகுண்டரை வணங்கிய மக்கள் அவரையும், அவர் குழாத்தினரையும் தம்இல்லத்திற்கு வரவழைத்து விருந்தளித்தார்கள். விருந்திற்கு வந்த வைகுண்டரை ஆனை அம்பாரியில் வைத்து ஊர்வலம் நடத்தி விழா கொண்டாடினார்கள். அய்யாவுக்கும், அம்மைமார்களுக்கும் பட்டும், பீதாம்பரமும் அளித்து பெருமைப்படுத்தினார்கள்.

மானிடராய்த் தோன்றிய திருமால், 'இன்னும் சில நாளில் என்னைத் தேடி நீங்கள் வருந்துவீர்கள்' எனக் கூடி இருந்த மக்களுக்குக்கூறினார். கூறிய கூற்றின் குறிப்பை யாரும் உணர்ந்துகொள்ளவில்லை.

அய்யா மேலும் பல அறக்கருத்துக்களை உரைத்து கொல்லம் 1026ஆம் ஆண்டு (கி.பி1849) வைகாசி மாதம் திங்கட்கிழமை நண்பகல் 12மணியளவில் வைகுண்டம் ஏகினார்.

வைகுண்டரின் மனித வரலாற்றைக் கூறும் அகிலத் திரட்டு அவரின் ஒப்பற்ற ஓவியம் ஒன்றை உள்ளத்தில் உருவாக்கி உள்ளது. அந்த உயிரோவியம் உணர்த்தும் உண்மை வடிவம்

தேவர் உலக சம்பூரணன் கருணை நெஞ்சம் கொண்டவர். அவர் தாழக் கிடப்பரைத் தற்காத்து மேலாக்க வேண்டும் என்னும் எண்ணம் கொண்ட ஏந்தல்.

ஏதோ காரணத்தால் எமலோகம் அடைந்தவர் பரதேவதை. எனினும் அவர் பிறப்பு இறப்பற்ற உயர்ந்த நிலையை அடையவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் கொண்டவர்.

உயர்ந்த எண்ணம் கொண்டு ஆனால் கீழ் நிலையில் வாழும்பரதேவதையைக் கண்டு இரக்கம் கொள்கிறார் சம்பூரணர்.

'கீழான மக்கையரை மேலாக்க வேண்டுமென்றால் தவம் இருக்கவேண்டும்' என்கிறார் திருமால்.

அவர் அறிவுரைப்படி பரதேவதைக்காக சம்பூரணர் தவம் இருக்கிறார்.

எனவே கீழான உயிர்களை மேலாக்குவதை குறிக்கோளாகக் கொண்டவர் சம்பூரணர்.

கலி என்னும் பாவத்தால் துன்பப்படும் உயிர்களை மேல்நிலைப்படுத்த வேண்டும். மேலான உயிர்களைக் கொண்ட தர்மயுகத்தைத் தோற்றுவிக்கவேண்டும் என்பது வைகுண்டரின் குறிக்கோள்.

வைகுண்டரின் குறிக்கோளை நிறைவேற்றும் கருவியாக உலகில் பிறப்பிக்கப்பட்டவர் சம்பூரணர்; திருமாலின் குறிக்கோளை தன் குறிக்கோளாகக் கொண்டு சான்றோராகப் பிறக்கிறார்சம்பூரணர்.

முடிசூடும் பெருமாள் பூரணரின் பிறப்பு; அவர் நிறைவானவர்; சம்பூரணர் – முழு நிறைவானவர் – நற்குணங்களால் நிறைந்தவர்.

முடிசூடும் பெருமாள் மேலாக்க நினைத்த முதல் உயிர் பரதேவதை அம்மை.

பரதேவதை யார்? பிறப்பு இறப்பற்ற பெருவாழ்வு அடையபேரவா கொண்ட பெருந்தகை.

தேவர் உலகில் இந்திரன் முடிமேல் இச்சைகொண்ட சம்பூரணருக்கு துணையானமையினால் திருமாலால் சபிக்கப்பட்டவர்.

இவ்வுலகில் கணவரைப் பிரிந்த கைம்பெண்; குழந்தைகளுடன் துயருற்ற கோதை; நோயில் துன்புற்ற தூயவள்; அன்புடைய நெஞ்சுக்கு அடிமை ஆனவள்; அதனால் உலகின் பழிச்சொற்களுக்கு ஆளானவர்.

இன்னல் உற்று ஏங்கிய அன்னைக்காக இரங்கினார் முடிசூடும்பெருமாள்; இயன்ற உதவிகளைச் செய்தார்.

உதவிய இடத்தில் உறவு வளர்ந்தது; அதைக் கூடாஉறவென்று கொண்டது உலகின் குற்றம்.

இறைவன் சாபத்தால் உள்ளங்களின் உண்மை அன்பு ஊராரால் பழிக்கப்பட்டது.

பழிச்சொல்லால் துன்புற்றனர் பண்புடையோர்; வயதால் முதிர்ந்து நோயுற்ற பெண்ணுக்கும், இனிய பண்புகளுக்கு இருப்பிடமாய், இரக்க மனம் படைத்த இளைஞருக்கும் கூடாஒழுக்கம் – எனக் கொடு மொழி கூறியது குற்றம்; ஏற்றுக்கொள்ளமுடியாதது; இயற்கைக்கு முரணான செய்தி.

எனவே முடிசூடும் பெருமாளுக்கும், பரதேவதை அம்மையாருக்கும் கூடாத உறவு இருந்திருக்கலாம் என எண்ணுவதற்கில்லை.

இறுதிவரை பரதேவதை அம்மைக்கு ஆதரவளிக்கும் நோக்கோடு மட்டுமே வைகுண்டர் அன்பு காட்டினார்; அரவணைத்தார்.

'தெய்வ கன்னியர் திருமணம்' வெறும் இகனைத் திருமணமே என்பதும் முன்னால் நிறுவப்பட்டுள்ளது.

மேலும் சிவன், முருகன் முதலான தெய்வங்களும் தன்னுள் அடக்கம் என உணர்த்த வைகுண்டர் எண்ணினார்.

அதற்காகவே இகனையாக பகவதி அம்மை, மண்டைக் காட்டம்மை, தெய்வானை அம்மை, பூமடந்தை அம்மை ஆகியோருடன் திருமணக் காட்சிகளை நடத்திக் காட்டினார். இவ்வுலகில் சால்பு என்னும் குணமுடன் சான்றோராய் வாழ்பவர்அனைவரும் அய்யாவின் மக்கள்.

எனவே பெண்களோடு வைகுண்டர் சுக வாழ்வு நடத்தியதாகக் கூறுவது தவறு; பஞ்சமா பாவங்கள் அதில் அடங்கும். தவறான செய்திகளைக் கூறி பின்னர் சமாதான மொழிகளாக அவர் கடவுள்

எனவே தவறில்லை; முன் யுகத் தொடர்பு எனவே குற்றமில்லை; இறைவனின் செயல்களை விமர்சிப்பது பாவம் – என்றெல்லாம் அணை போடுவது அவசியமற்றது.

பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடும் செயலுக்கு ஒப்பானது.

வைகுண்ட மாமணி ஒளி வீசும் பெருமணி. அங்கு மாசு மறு ஏதுமில்லை.

வைகுண்டர் தெய்வத்தின் திரு அவதாரம்; கலியை அழிக்க வந்த கதை நாயகன்; தீமையை அழிப்பதற்காக தன்னையே தீய்த்துக்கொண்ட ஒளிப்பிழம்பு; அறியாமை அகற்ற வந்த ஆதவன்; அல்லல் அகற்ற வந்த அண்ணல்; ஏழைகளின் இதயம்; எங்கும் நிறைந்த இனிய தென்றல்; கருணை மழைபொழியும் கார்மேகம் ;என்றும் பொன்றாத புகழுடை பொற்சுடர்.

இத்தனை பெருமைகளுக்குரிய வைகுண்டசாமி தம் இறைத்திறனால் நடத்திக் காட்டிய அதிசயங்கள் ஏராளம். அவை அகிலத் திரட்டில்கூறப்படவில்லை.

அய்யா நடத்திக் காட்டிய அதிசய நிகழ்ச்சிகள் பல நூறு செவிவழிச் செய்திகளாக பேசப்படுகின்றன. அவற்றுள் சில இங்கே தரப்பெறுகின்றன.

யுக முழக்கம் என்னும் திங்கள் இதழில் அந்நூலின் ஆசிரியர் ஆ.மணிபாரதி அவர்கள் ‘கோர்த்த முத்துக்கள்’ என்னும் தலைப்பில் மாதம் ஒரு நிகழ்ச்சி பற்றி எழுதி வருகிறார். அவற்றில் இரண்டு.

‘பஞ்ச பதி இனிமம்’ என்ற இதழின் ஆசிரியர் த. தினகரன் அவர்கள் நேரடியாக கூறிய நிகழ்ச்சி ஒன்று.

‘அன்புவனம் – புனிதகுரு பாலபிரசாபதி அடிகள் நேர்முக பேட்டியின் போது கூறிய நிகழ்ச்சி ஒன்று.

ஆகிய மூன்று நிகழ்ச்சிகளின் விவரங்கள் மட்டும் இங்கே தரப்பெறுகின்றன. ஒரு சுளை ஒரு பெரும் கனியின் சுவை காட்டுமன்றோ.

மன அழுக்கறுத்த படலம்

அய்யா வைகுண்டப் பரம்பொருளாய் சாமித் தோப்பில் வாழ்ந்திருந்த காலத்தில் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து சில அன்பர்கள் அய்யாவைக் காண வந்தார்கள்.

சாமித்தோப்பை அடைந்த அவர்கள் அய்யா வயலில் நிற்பதாக அறிந்து வயலுக்குச் சென்றார்கள். வயலில் அப்பொழுதுதான் தொழி கலக்கப்பட்டு சேறாக இருந்தது. அய்யா சேற்றின் நடுவே நின்று கொண்டிருந்தார்கள். காண வந்தவர்கள் சேற்றில் இறங்கத் தயங்கி வரப்பிலேயே நின்றார்கள்.

சிறிது நேரத்தில் கொட்டங்காடு என்னும் கிராமத்து அன்பர்கள் சிலரும் அங்கு வந்தார்கள். அவர்கள் சேறு என எண்ணாமல் சேற்றில் இறங்கிச்சென்று சேற்றிலே விழுந்து அய்யாவை வணங்கி எழுந்தார்கள்.

வரப்பில் நின்று பார்த்துக்கொண்டிருந்த அன்பர்கள் சேற்றில் விழுந்து எழுந்த கொட்டங்காடு அன்பர்களின் ஆடைகளில் அழுக்கு ஏதும் ஒட்டாததைக் கண்டு அதிசயத்தார்கள். தாங்களும் ஓடிசேற்றில் விழுந்து அய்யாவை வணங்கினார்கள். அவர்கள் உடல், உடையெங்கும் சேறு படிந்தது. இதனால் பாஞ்சாலங்குறிச்சி அன்பர்கள் அய்யாவின் அருள் நமக்கு கிடைக்காதோ என எண்ணி மனம் கலங்கினார்கள்.

வைகுண்டர், “அய்யா பெரிதா? ஆடை பெரிதா?” எனக் கேட்டார். பின்னர் இருதரப்பினரையும் அரவணைத்து, ‘நீங்கள் அனைவரும் என் மீது பற்று கொண்டவர்களே. வேறுவிதமான பற்றுதல்களை விட்டால் ஒழிய கலியில் இருந்து விடுபட முடியாது; இன்றைய நிகழ்ச்சி உங்கள் மன அழுக்கான கலியை அழிக்கும்’ எனக்கூறி ஆசீர்வதித்தார்.

யுகமுழக்கம் ஆசிரியர் மூலம் அறிந்த மற்றொரு நிகழ்ச்சி பஞ்சம் தீர்த்த படலம்

வ.உ.சி. மாவட்டம் சாத்தன்குளத்திற்கு அண்மையில் வேப்பங்காடு என்னும் கிராமம் உள்ளது. இங்கு பாலையாநாடார் என்பவர் வாழ்ந்தார். இவரது மனைவி உமை பார்வதிஅம்மாள். இத்தம்பதியருக்கு மூன்று ஆண் குழந்தைகளும், இரண்டுபெண் குழந்தைகளும் இருந்தனர்.

கடைசிக் குழந்தை பிறந்த சிறிது காலத்தில் பாலையா நாடார் இறந்துவிட்டார்.

உமை பார்வதி அம்மாளும், குழந்தைகளும் வறுமையில் வாடினர். நெல்லைக் குத்தி அரிசியாக்கி விற்றுப் பிழைத்து வந்தார். வறுமை நீங்க உமை பார்வதி அம்மை இறைவனை வேண்டினார்.

சாமித் தோப்பில் தவம் புரிந்த அய்யா வைகுண்டரையும், அவர் அருள் செயல்களையும் உமையம்மையார் கேள்விப்பட்டார்.

ஒரு நாள் கைக்குழந்தையுடனும், 12 வயதுடைய மூத்த மகனுடனும் சாமித்தோப்பு நோக்கிச் சென்ற அம்மை காதில் பாம்படம் என்னும் நகை மட்டும் தொங்கியது.

காட்டு வழியில் இரண்டு கயவர்கள் காதணிகளைப் பறித்துக்கொண்டார்கள். 'சாமித் தோப்புபோகிறாயா?' என நகைத்த கயவர்கள் கள்ளுக்கடை சென்றார்கள்.

இறைவனையே எண்ணியபடி உமை பார்வதி அம்மைசாமித் தோப்பு சென்றார். அங்கு இருந்த அய்யாவின் முன் தன் குழந்தையைக் கிடத்தி கண்களில் நீர் பொழிய வணங்கி நின்றார். மனம் வறுமையைப் போக்க இறைவனை வேண்டியது.

உமைபார்வதியின் உள்ளத்தைப் புரிந்துகொண்ட அய்யா, 'இனி அழவேண்டாம். உன் பாம்படம் அவனுக்கு பாம்பாகிப்போச்சு' எனக் கூறினார்.

அம்மை அதிசயத்து அய்யாவின் கால்களில் விழுந்து குமுறிக் குமுறி அழுதார். அய்யா நாமம் இட்டு குளித்து வா எனப் பணித்தார். உமையம்மை பதம்விடச் சென்றார்.

சிறிது நேரத்தில் அங்கு ஒருவர் ஓடி வந்தார். அய்யாவின் காலடியில் இரண்டு பாம்படங்களை வைத்து தரையில் விழுந்து வணங்கி, 'அய்யா, நான் கள்ளுக்கடைக்காரன். இருவர் கொடுத்த பாம்படத்தை கல்லாப்பெட்டியில் போட்டேன். மீண்டும் பெட்டியைத் திறந்தபோது பெட்டியினுள் நல்ல பாம்பு இருக்கக் கண்டேன். அச்சத்துடன் மூடி பாம்படங்களைக் கொடுத்தவர்களிடம் கூற அவர்களும் பாம்பைக் கண்டு அஞ்சி சாமித்தோப்பு அய்யாவை வணங்கச் சென்ற பெண்ணிடம் பறித்ததாகக் கூறினார்கள். பாம்படங்களை அய்யா உங்களிடம்

ஒப்படைத்துவிடுவதாக நான் உறுதி கூறியபின் பாம்பு மறைந்து பாம்படம் கண்ணில் பட்டது. எடுத்து வந்தேன். என் பிழைபொறுத்து என்னை மன்னிக்கவேண்டும்' என வேண்டினார். அய்யா அவரை மன்னித்து நெற்றியில் திருநாமம் இட்டு அனுப்பி வைத்தார்.

உமைபார்வதி அம்மை முத்திரி கிணற்றில் நீராடி அய்யாவை வணங்க வந்தார். அய்யா அவரிடம் பாம்படங்களைக் கொடுத்து, 'நீ இருக்கும் இடத்தில் யாம் இருப்போம்' என வாழ்த்தி நாமம் இட்டு அனுப்பி வைத்தார்.

மகனுடன் வேப்பங்காடு சென்ற உமை பார்வதி அங்கு நிழல்தாங்கல் ஒன்றினை நிறுவினார். அவர் குடும்பம் வறுமை நீங்கி செல்வம் பெற்று செழித்து வாழ்ந்தது.

பஞ்சபதி இனிமம் இதழின் ஆசிரியர் த.தினகரன் அவர்கள் நேரடிப் பேட்டியின்போது கூறியது

ஏழு சன்னியாசிகள் அய்யாவுக்கு கங்கை நீரால் அபிடேகம் செய்ய ஆவல் கொண்டார்கள். கால்நடையாக காசி சென்றார்கள். கங்கை தீர்த்தத்தை கலசங்களில் எடுத்துத்திரும்பினார்கள்.

கானக வழியில் ஒரு மனிதன் உயிர் போகும் நிலையில் தண்ணீர், தண்ணீர் எனப் புலம்பிக்கொண்டிருந்தான். கங்கை நீரை இவனுக்கு கொடுத்து வீணாக்குவதா என அனைவரும் நினைத்தார்கள்.

ஒரு சன்னியாசி மட்டும் உயிர் காப்பது மிக அவசியம் என எண்ணி கங்காதீர்த்தத்தை அவன் வாயில் விட்டார். அவன் உயிர்பிழைத்தான்.

மீண்டும் வழி நடந்தார்கள். கழுதை ஒன்று உயிர் போகும் நிலையில் தவித்துக்கொண்டிருந்தது. அருகில் சென்று அதன் தாகத்தை உணர்ந்தார் மனிதனைக் காத்த சாமியார். மனம் தயங்காமல் கழுதைக்கும் கங்கை நீரை ஊற்றினார்.

மேலும் வழி நடையில் இரக்ககுணம் கொண்ட சாமியார் பல இடங்களில் கங்கை நீரை தானமாக ஊற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கருணைச் சாமியார் கங்கை நீரை தானம்செய்தபடியே வழி நடந்தார்.

மற்ற சாமியார்கள் கங்கை நீரை அய்யா வைகுண்டருக்கே அல்லாது யாருக்கும் அர்பணிப்பதில்லை என பத்திரமாககொண்டு வந்தார்கள்.

சாமித்தோப்பை அடைந்தார்கள். அய்யா புன்னகை பூத்து வருகவென வரவேற்றார்.

அய்யாவின் பாதங்களை கழுவ கலசத்தைக் கவிழ்த்தார்கள். அவர்களின் கலசங்களில் ஒரு துளி நீரும் இல்லை. கலசங்களில் இருந்த கங்கை நீர் மறைந்தது எப்படி? கருணைச்சாமியார் ஒரே கலசத்தில் இருந்து அத்தனை இடங்களில் தாகம் செய்யமுடிந்தது எப்படி? என எண்ணி மனம் குழம்பினார்கள். இவ்வளவு முயன்றும் அய்யாவுக்கு கங்கை நீரினால் அபிடேகம் செய்ய இயலவில்லையே என மனம் கலங்கினார்கள் ஆறு சாமியார்களும்.

அய்யா கருணைச்சாமியாரைப் பார்த்து 'அப்பா உன் கலசத்தில் இருக்கும் நீரை ஊற்று" என்றார்.

'எச்சில் நீரை அய்யாவின் பாதங்களில் ஊற்றுவதா" எனத் தயங்கியவர் அய்யா வற்புறுத்த நீர் இருப்பதாக நினைத்துக்கொண்டு அய்யாவின் பாதங்களில் கலசத்தைக் கவிழ்த்தார். அவர் கலசத்திலும் நீர் இல்லை என உணர்ந்தார். கண் கலங்கினார்.

அப்போது அய்யா அனைவரையும் பார்த்து, 'எல்லா நீர்நிலைகளைக் காட்டிலும் புனிதமான முத்திரி கிணற்றின் நீர் இங்கிருக்க, இதைவிட்டு எங்கோ புனித நீர் தேடி அலையலாமோ? முத்திரி கிணற்றின் பதம் கொண்டு வாருங்கள்' என்றார். அய்யாவின் திருவிளையாடல்களை உணர்ந்த சாமிகள் முத்திரி கிணற்றின் பதம் கொண்டு வந்து அய்யாவை நீராட்டி மகிழ்ந்தார்கள்.

சாமித்தோப்பில் அன்புவனம் என்னும் ஆசிரமம் நடத்திவரும் புனிதகுரு பால பிரசாபதி அடிகள் கூறிய நிகழ்ச்சி

மானிட வடிவம் தாங்கி வாழ்ந்த அய்யா வயலில் இறங்கி மாடுகளைப் பூட்டி ஏர் உழுதுகொண்டிருந்தார்.

அங்கு சில அன்பர்கள் வந்தார்கள். அவர்கள் அய்யா, "வானம் மழை இல்லாமல் வறண்டு கிடக்கிறதே, ஏன் வீணாக நிலத்தை உழுது சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்' எனக் கேட்டார்கள்.

அய்யா பதில் ஏதும் கூறாமல் தன் உதவியாளர் ஒருவரைக் கூப்பிட்டு, ' வீட்டில் போய் குடை எடுத்துக்கொண்டு வா' என்றார்.

உதவியாளர் ஓடிச் சென்று பனை ஓலையிலான குடை எடுத்துவந்தார். அன்பர்கள் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். அய்யா ஏரினை விட்டுக் குடையை வாங்கித் தனக்கு மேல் பிடித்ததும் திடீரென பெருமழை பெய்தது. அருகில் நின்ற அன்பர்கள் யாரும் நனையவில்லை. அதிசயம் கண்டு அய்யாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார்கள்.

இந்நிகழ்ச்சி நடந்த இடத்தில் தற்பொழுது நினைவுச் சின்னம் ஒன்று குடையுடன் ஏற்படுத்தி வைத்துள்ளார்கள். அவ்விடம் "அன்புவனம்" என்னும் ஆசிரமத்திற்குள் அடங்கியுள்ளது.

வைகுண்டரின் சமுதாய சீர் திருத்தங்கள்

சமுதாய ஏற்றத் தாழ்வுகளால் இன்னல் உற்ற ஏழைமக்களைக் காக்க வந்தவர் வைகுண்டர். தனது சமயத் தொண்டின் மூலம் சமுதாயத் தொண்டு ஆற்றியவர் வைகுண்டர்.

அவரது சமயத் தொண்டுகளால் தாழ்ந்து கிடந்த ஏழை மக்கள் உயர்வு பெற்றார்கள். சமுதாயத்தின் ஏற்ற நிலையில் வாழ்ந்து ஏழை மக்களைத் துன்புறுத்தியவர்கள் தங்கள் தவறுகளைஉணர்ந்தார்கள்.

அய்யாவின் சமயப்பணியால் சமுதாயம் சீர் பெற்றது. எனவே அய்யா வைகுண்டரின் சமயப் பணியைச் சமுதாய சீர்திருத்தம் எனக்கொள்வது சாலப் பொருத்தமே ஆகும்.

வைகுண்டரின் சமுதாய சீர்திருத்தங்கள் பற்றி காணப் புகுமுன்னர் வைகுண்டர் காலச் சமுதாய நிலை என்ற அதிகாரத்தை நினைவிற்கொள்ளல் அவசியமாகும்.

வைகுண்டரின் சமுதாயம் என சிந்திக்கும்போது செல்வச்செருக்கும், அதிகார பலமும் கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்த ஒரு மக்கள் கூட்டமும், ஆடை, அணிமணி இன்றி, உண்ணும் உணவிற்காக உழைத்து உருக்குலைந்து, வாழ வழி தெரியாது வாடித் தவித்த ஒரு ஏழைக் கூட்டமும் நம் கண்முன் நிற்கின்றன.

வைகுண்டரின் சமுதாய சீர்திருத்தம் என்பது செல்வத்தில் திளைத்து வாழ்ந்து களித்திருந்தவர்களை அழிப்பதல்ல.

ஆணவக்காரர்களை அடக்கி ஒடுக்குவதும் அல்ல. அல்லது வறுமையில் தவித்தவர்களுக்கு வளமான வாழ்வைத் தருவது மட்டுமே அல்ல.

மாறாக வைகுண்டரின் சமுதாய சீர்திருத்தம் கொடுமை இழைத்த மக்களின் மன அழுக்குகளைப் போக்கி அவர்களை மாண்புடையவர்களாகச் செய்வதாகும்.

வறுமையாலும், அறியாமையாலும் வாடிக் கிடந்த மக்களை வாழ்வித்து அவர் நிலை உயரச் செய்வதும் வைகுண்டரின் சமுதாய சீர்திருத்தத்தின் மற்றொரு அங்கமாகும்.

இந்தக் குறிக்கோளை எட்டியபின் எல்லாத் தரப்பு மக்களையும்ஒன்று கூட்டி தர்மயுகம் என்னும் பொன்னுலக வாழ்வுக்கு இட்டுச்செல்வதே உயர் குறிக்கோள் ஆகும்.

இக் குறிக்கோளை அடைய வைகுண்டர் ஆற்றிய அறப்பணிகளை ஆய்வதே இப்பகுதியின் நோக்கமாகும்.

முதற் குறிக்கோளான, முதலில் குறிப்பிட்ட மக்களைச் சீர்படுத்தும் பணிக்காக அன்னாரை எட்டும் வாய்ப்பு வைகுண்டருக்குக் கிடைக்கவில்லை. ஏனெனில் அவர்கள் மானுட வைகுண்டரின் எல்லைக்குள் இல்லை. வைகுண்டரின் எல்லைக்குள் இருந்தவர்கள் ஏழை மக்களே. எனவே ஏழை மக்களின் வாழ்வை செம்மைப்படுத்தும் பணியையே அவரால் சிறப்பாகச் செய்ய முடிந்திருக்கிறது.

வைகுண்டரின் சமயப்பணியை பல படிகளாக காணலாம்.

சமயப் பணியில் சுரண்டல் ஒழிப்பு

வைகுண்டர் சமயத்தின் பெயரால் ஒடுக்கப்பட்டவர்களை விடுவிக்க எண்ணினார். அவர் கொடுத்த முதற் குரல் 'காணிக்கை வேண்டாம்; கைக்கூலி வேண்டாம்' என்பதாகும்.

மதத்தின் பெயரால் நடைபெற்ற சுரண்டலைத் தடுக்கவும், சுரண்டப்பட்ட மக்களைக் காக்கவும் இவ்வாறு குரல் எழுப்பினார். மனிதர்களுக்கு மட்டுமின்றி தெய்வங்களைப் பார்த்தும் 'காணிக்கை வாங்காதீங்கோ, கைக்கூலி வாங்காதீங்கோ' என உரைத்தார்.

காணிக்கை உண்டியலும், காணிக்கை தட்டும் இல்லாதஆலயங்களை அமைத்தார். இதனால் இறைவனின் பெயரால் ஏய்த்துப் பிழைத்தவர்களின் பிடரிகள் ஒடியத் தொடங்கின.

உடல் தூய்மை

தாழ்ந்து கிடப்பவர்களை உயர்த்துவதற்கு முதல்படி அவர்களைத் தூய்மைப்படுத்துவதாகும். தூய்மையில் உடல் தூய்மை முதன்மையானது.

ஆலயங்களிலும், அக்ரகாரங்களிலும், நீர் நிலைகளிலும் அனுமதிக்கப்படாத மக்கள் உடல் தூய்மை பற்றி கவலை கொள்ளாமல் இருந்ததில் வியப்பில்லை. அய்யா வைகுண்டர் முத்திரிக்கிணறு என்னும் புனித நீர் நிலையை உண்டாக்கி மக்களை நீராடச்செய்து, ஆடையையும் தூய்மைப்படுத்தி ஆலயம் வரச்செய்தார். உள்ளத் தூய்மை பெறுமுன்னர் உடல் தூய்மை அவசியம் என மக்கள் உணர்ந்தனர். தூய்மையாய் இருத்தல் மக்களின் வாழ்க்கை நடைமுறை ஆயிற்று.

உள்ளத் தூய்மைக்கு அறம் உரைத்தார்

உள்ளத் தூய்மையைப் பேணுவதற்காக தன்னை நாடிவந்த மக்களுக்கெல்லாம் நாள்தோறும் அறக்கருத்துக்களைப்போதித்தார்.

'பொறுமை பெரிது பெரிய திருமகனே'

'தர்மம் பெரிது சாற்றியிரு என் மகனே'

'பொய்யரோடு அன்பு பொருந்தி இராதே'

'மெய்யரோடு அன்பு மேவி இரு'

'தாழ்ந்திரு என் மகனே சட்டைக்குள்ளே பதுங்கி'

'அடக்கம் பெரிது அறிவுள்ள என்மகனே'

'கோபமதை விள்ளாதே குவியச் சிரிக்காதே'

'பாவத்தை காணாதே பராக்கிரமம் காட்டாதே'

'ஆக்கிரமமெல்லாம் அடக்கியிரு என் மகனே'

'நன்றி மறவாதே நான் பெரிதென்றெண்ணாதே'

'அன்போர்க்கும் ஈயு ஆகாதபேர்க்கும் ஈயு'

'வன்போர்க்கும் ஈயு வழி போவோர்க்கும் ஈயு'

இவ்வாறான அறக்கருத்துக்களை தினந்தோறும் உரைத்து மக்களின் உள்ளங்களைத் தூய்மை செய்தார்.

கலி என்னும் பாவத்தை அழிப்பதற்கு ஆயுதங்கள் தேவையில்லை.

இவ்வாறு உடல் தூய்மையும், உள்ளத் தூய்மையும் பெற்றவர் உயர்வடைய தன்னை உணர்தல் அவசியமாகும். எனவே அய்யாவைகுண்டர் மக்களுக்கு அவர்தம் பெருமையை உணர்த்தவிரும்பினார்.

தன்னைத்தான் உணரச் செய்தல்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்கள் தாங்கள் தாழ்ந்தவர்கள், இழிந்தவர்கள் என்றஉணர்விலேயே மூழ்கிக் கிடந்தார்கள். அந்த நிலையிலிருந்து அவர்தம் உயர்வுநிலையை அவர்களுக்கு உணர்த்த எண்ணினார்.

'தானானாய் நீயும் தலைவனும் நீ என் மகனே' என்று கூறி தன்னம்பிக்கை ஊட்டுகிறார்.

'அவனவன் தேடிய முதல் அவனவன் வைத்து ஆண்டிடுங்கோ...'

'ஒருவனுக்கும் பதறி நீங்கள் வாழ வேண்டாம்' என்று ஏழை மக்களின் இதயத்திலே முதல் முதலாகத் தைரிய தீபத்தை ஏற்றிவைத்தார்.

'முட்டுக்குக் கீழே ஆடை உடுத்தாதே; இடுப்பிற்கு மேலே எந்தத்துணியும் உடுத்தாதே' என்று முடியரசு கொடுங்கோலாட்சி புரிந்த காலத்தில் 'மகனே நீ உயர்ந்தவன், உன் தலையிலே தலைப்பாகை அணி. தலைப்பாகை அணித்து கொண்டு தான் பரம்பொருளாகிய என்னை நீ வணங்கவேண்டும்.' எனபுரட்சிக்குரல் கொடுத்தார்.

தலைப்பாகை அணிந்த மகன் தன்னை உணர்ந்தான்; தன் பெருமை உணர்ந்தான்; வளைந்து கிடந்த அவன் முதுகெலும்புகள் நிமிர்ந்தன;

தானும் உயர்ந்தவனே என அம்மகன் உணர்ந்தான்; தான் யாருக்கும் அடிமையில்லை. தனக்கும் யாரும் தாழ்ந்தவரில்லை. எல்லோரும் சமம் என்ற ஏற்றமிகு கருத்தை உணர்ந்தான்.

பரிபூரணனுக்கே அடிமையன்றி வேறு யார்க்கும் அஞ்சி அடிமை செய்யோம் என மக்கள் ஆர்ப்பரித்து எழுந்தார்கள்.

ஒற்றுமைப்படுத்தி உயர்வு தந்தார்

தம்மை உணர்ந்த மக்களை வைகுண்டர் ஒற்றுமைப்படுத்தியது உயர்ந்த செயலாகும். நாம் ஒன்று, ஓரினம் என்ற உணர்வில்லாததாலேயே ஏழை மக்கள் பிறர்க்கு அஞ்சி அடிமைகளாய் வாழ நேரிட்டது.

வைகுண்டர் நடத்திய கூட்டு வழிபாட்டு முறைகளாலும், திருவிழாக்களினாலும் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்த மக்கள் ஒன்று கூடினார்கள். இவ்வாறு அன்பெனும் நூலிழையினால் அனைத்து மக்களையும் கோர்த்தார்.

நமது நம்பிக்கைக்குரிய, ஆதரவு அளிக்கக்கூடிய, நமது அன்புக்கு உரிய சகோதர மக்கள் கூட்டம் விரிந்து பரந்து கிடக்கிறது என்பதை உணர்ந்த மக்களுக்கு தன்னம்பிக்கையும், வாழ்க்கைப்பிடிப்பும் ஏற்பட்டது. ஏழை மக்களாகிய பதினெட்டிற்கும் மேற்பட்ட சாதியினர் ஒரு சமுதாயமாக உருவானார்கள்.

மதச் சின்னங்கள்

காவி ஆடை, வெள்ளை நாமம், உருத்திராட்ச மாலை, துளசிமாலை முதலிய மத சம்பந்தப்பட்ட அடையாளச் சின்னங்களை அணிய வைத்து ஏழை மக்கள் தாமும் உயர்ந்தோரே என்பதைஉணரச் செய்தார்.

மூட நம்பிக்கைகள் ஒழிப்பு

வைகுண்டர் காலத்தில் சிவன், திருமால், முருகன் போன்ற தெய்வங்களின் ஆலயங்களில் ஏழை மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

எனவே ஏழை மக்கள் தாங்கள் அணுக முடிந்த சிறு தேவதைகளையே வழிபடவேண்டிய கட்டாயத்துக்குள்ளாயினர்.

விபத்துக்கள், சண்டைகள் போன்ற காரணங்களால் அகால மரணமடைந்தவர்களே சிறு தேவதைகளாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டார்கள்.

அச்சிறு தெய்வங்கள் தங்களுக்கு உயிர்ப்பலி இடுதலையும், கள் போன்ற மதுபான வகைகளை படைத்தலையும் விரும்பின.

இத்தகைய தெய்வங்கள் மீது அச்சம் கொண்ட மக்கள் அவைகளுக்கு கோழி, ஆடு, பன்றி போன்ற உயிரினங்களைப் படைத்து பின்னர் அவற்றை உண்டு மகிழ்ந்தார்கள்.

வைகுண்டர் இத்தகைய சிறு தெய்வங்களைப் பேய்கள் என்றார். இகனையாக இத்தெய்வங்களை வரவழைத்து அவைகள் பெற்றிருந்த ஆற்றல்களை வாங்கி பேய்களை அழித்தார்.

வைகுண்டர் எளிமையான வழிபாட்டு முறையில் மக்களைப் பயிற்றுவித்தார். ஆடம்பரமான வழிபாட்டு முறைகளை வெறுத்தார். கற்பூரம் காட்டுதல், சாம்பிராணி புகையிடுதல், பலியிடுதல் போன்ற வழக்கங்களைக் கண்டித்தார்.

“தினம் ஒரு நேரம் எந்தன் திருமொழி அதனைச் சொன்னால் பனிவெள்ளம் போல பரந்திடும் பாவம்” என்றார் அய்யா. ‘அரகரா சிவசிவா’ என்னும் மந்திரத்தைத் தினம் ஒரு முறைசொன்னால் போதும் என்பது அவர் வாக்கு.

‘அன்பு மலரெடுத்து ஆசாரம் செய்திடுங்கே’ அன்புடன் ஒரே ஒரு மலரிட்டு வணங்கினால் போதும் என்பது வைகுண்டரின் எளிமையான வழிபாட்டு முறை.

வைகுண்டர் கண்ட சமதர்ம சமுதாயம்

‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற உயரிய உண்மையை அய்யா வைகுண்டர் போதித்தார்.

பதினெட்டிற்கும் மேற்பட்ட சாதி மக்கள் அய்யா வழிபாட்டில் கூடினார்கள். அவர்களிடம் எந்த வேறுபாடும் காணப்படவில்லை;

காட்டப்படவில்லை. அனைவரும் ஒன்றாக அமர்ந்து சமபந்தி உணவு உண்டார்கள். இன்றும் அதே முறை அய்யாவின் நிழல்தாங்கல்களில் பின்பற்றப்படுகிறது. அங்கு யார் ஒருவருக்கும் ஆசனம் இடும் வழக்கம் இல்லை.

அனைவரும் தரையில் அமர்ந்தபின்னர் இருக்கும் உணவு எல்லோருக்கும் பரிமாறப்படும். அனைவருக்கும் பரிமாறப்பட்டபின்னர் குருவாய் இருப்பவர் 'உணவுண்ணலாம்' என உணர்த்திய பின்னரே அனைவரும் உண்ணத் தொடங்குவது வழக்கம்.

பேய்களை வைகுண்டர் அழித்து விட்டார் என மக்கள் அறிந்தார்கள். அவர்களிடமிருந்த பேய்கள் மீதான அச்சம்அகன்றது.

பாமர மக்களுக்குப் பலியிடுதல் அல்லாத வழிபாட்டு முறைகளைக் காட்டினார்.

"திருவாங்கூர் இராச்சிய பகுதியில் மந்திரவாதிகள் அதிகமாக வாழ்ந்தார்கள். அவர்கள் பேய்களைக் கொண்டு மக்களுக்குபலவிதமான துன்பங்களைக் கொடுத்து வந்தார்கள்.

மக்கள் பகைவர்களுக்கு அஞ்சியதைக் காட்டிலும் மந்திரவாதிகளிடம் அதிகமாக அச்சம் கொண்டிருந்தார்கள். இத்தகைய அச்சத்தைப் போக்க அய்யா எண்ணினார்.

மந்திரவாதிகள் மலைகளிலும், காடுகளிலும் மறைந்திருந்து தொழில் புரிந்து வந்தார்கள். அய்யா கொடிய காட்டுவிலங்குகளை மந்திரவாதிகளிடம் ஏவிவிட்டார். விலங்குகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள மந்திரவாதிகள் அய்யாவை தஞ்சம் அடைந்தனர்.

அய்யா, 'இனி மந்திரத் தொழில் செய்வதில்லை' என அவர்களைச் சத்தியம் செய்ய வைத்து அவர்களை வேறு தொழில்களைச் செய்யுமாறு கட்டளை இட்டார். இதனால் மந்திரம், தந்திரம். பில்லி, சூனியம் போன்றவற்றின் மீதான அச்சம் மக்களிடமிருந்து அகன்றது.

வைகுண்டர் வழங்கிய உணவில்கூட சமத்தவம் காணப்பட்டது. அன்பர்கள் தத்தமக்கு கிடைத்த அரிசி, காய்கள், கனிகள் முதலியவற்றை நிழல் தாங்கலுக்கு கொண்டு வந்தார்கள்.

காய்களும், அரிசியும், பருப்பு வகைகளும் சமைக்கப்பட்ட பின்னர் ஒன்றாக கலக்கப்பட்டது. பின்னர் பரிமாறப்பட்டது; உணவு ஒன்றாய்

கலந்தது. உண்டவர் உள்ளங்களும் கலந்தது. மக்கள்விரும்பி உண்ட அவ்வுணவு 'உண்பான்' எனப் பெற்றது.

அய்யாவின் முன்னிலையில் தலைவனோ, தொண்டனோ இல்லை. அனைவரும் சமம். அய்யாவின் நிழல் தாங்கலில் இன்ன குலத்தவர்கள்தான் பணிவிடை (பூசை) செய்ய வேண்டும் என்று நிபந்தனை இல்லை. எக்குலத்தவரும் பணிவிடை புரியலாம்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கொள்கையை உடைய, சாதி வேறுபாடற்ற, உயர்வு தாழ்வற்ற ஒரு சமதர்மசமுதாயத்தை வைகுண்டர் உருவாக்கினார். அன்பர்கள் ஒருவருக்கொருவர் தங்களை 'அய்யா' என்று அழைத்துக் கொண்டார்கள்.

உயர் பழக்கவழக்கங்களை உருவாக்குதல்

மக்களின் நற்பழக்க வழக்கங்களே அவர் தம் உயர்வுக்கு காரணமாதலால் வைகுண்டர் மக்களை உயர் பழக்கவழக்கங்களை மேற்கொள்ளச் செய்தார்.

ஏழை மக்கள் எளிதாக தங்களுக்கு கிடைத்த மீன் உணவையே பெரும்பாலான நாட்களில் உணவாகக் கொண்டிருந்தனர். இதனால் தூய்மைக் குறைவுடையவர்களாக கருதப்பட்டார்கள்.

அய்யா வழிபாட்டிற்கு வரும் நாட்களில் கட்டாயமாக புலால் உணவை ஒதுக்கும்படி கட்டளையிட்டார். ஞாயிறு, செவ்வாய், வெள்ளி நாட்களிலாயினும் கண்டிப்பாக புலால் உணவைத் தவிர்க்கும்படி அறிவுறுத்தினார்.

ஏழை மக்கள் தங்களுக்கு எளிதாக கிடைத்த அலரி போன்ற மலர்களைச் சூடினார்கள். மேட்டுக்குடிப் பெண்கள் பிச்சி, மல்லிகை போன்ற உயர் ஜாதி மலர்களைச் சூடினார்கள்.

அய்யா பிச்சி, மல்லிகை முதலிய மலர்களே தனது விருப்பத்திற் குரியவை என்றமையால் வழிபாட்டில் அய்யாவுக்குரிய மலர்களே அதிகம் இடம்பெற்றன.

அலரி மலர் முழுவதுமாக ஒதுக்கப்பட்டது. பெண்கள் பிச்சி, மல்லிகை மலர்களையே விரும்பி ஓடினார்கள். உயர் மலர்களைச் சூடி உயர்வு பெற்றார்கள்.

வைகுண்டர் நெறி

வைகுண்டர் காட்டிய புதுமையான சமய நெறி வைகுண்டர் நெறி ஆகும். வைகுண்டர் மக்களால் 'அய்யா' என்று அன்புடன் அழைக்கப்பெற்றார்.

'அய்' என்றால் தலைவன் ஆகும்; 'அய்' என்றால் வியப்புமாகும்; உயிர்களுக்கெல்லாம் தலைவனும், வியப்புக்குரியவனும் ஆகிய இறைவனே 'அய்யா' எனச் சுட்டப்பட்டார். வைகுண்டர் இறைத் தோன்றலாக கருதப்பட்டமையால் அவரை மக்கள் 'அய்யா' என அழைத்தனர்.

அவர் காட்டிய சமய நெறியை 'அய்யா வழி' என்றும், அவ்வழியைப் பின்பற்றியவர்களை 'அய்யா வழியினர்' எனவும் அழைத்தனர். அதுவே அன்புக் கொடிவழி எனவும் பெயர் பெற்றது.

வைகுண்டர் காலத்தில் கிறித்துவ நெறி தமிழ்நாட்டில்பரவியிருந்தது. வைகுண்டர், காலத்திற்கேற்ப புதுமையையும், எளிமையையும், சமத்துவத்தையும் சேர்த்துத் தனது புதுமை நெறியை வகுத்தார்.

இந்து மதத்தில் கட்டுக்கோப்பான கூட்டு வழிபாட்டு முறையைக் கொண்டுவந்தது வைகுண்டரின் பெரும் சிறப்பாகும்.

வைகுண்டர் நெறியே அய்யா வழி, அன்புக் கொடிவழி

அய்யா என்ற சொல், ஐயா, தகப்பன், இறைவன் என்ற பொருள்களைத் தரும். தென் தமிழ்நாட்டில் தந்தையை 'அய்யா'என அழைக்கும் வழக்கம் உண்டு. அகிலம் முழுவதற்கும் தந்தையான இறைவன் இங்கு அய்யா என அழைக்கப்படுகின்றார்.

அய்யா காட்டிய வாழ்க்கை நெறிகளை (வழிகளை) கடைபிடிக்கும் மக்கள் அய்யா வழியினர். அய்யா வழி மக்கள் 'அன்பு' என்னும் கயிற்றினால் பிணைக்கப்பெற்ற சகோதரர்கள். எனவே அன்புக்கொடி வழியினர் எனப்பெற்றனர். அன்புக்கொடி வழியினர் காவி நிறத்தில் வெண் தீப வடிவம் தாங்கிய கொடியை ஏந்தினர். அது அன்புக்கொடி எனப்பட்டது. அன்புக்கொடியை ஏந்திய மக்கள் அன்புக்கொடி வழியினர் எனப்பெற்றனர்.

'அய்யா வழி' அல்லது 'அன்புக்கொடி வழி' தனி ஒரு மதமா? என்றால் இல்லை. அய்யா வழி, அன்புக்கொடி வழி இரண்டும் ஒன்றே. இது இந்து மதத்தினின்று வேறுபட்டதல்ல. இந்து மதத்தின்பாற்பட்டதேயாகும்.

அய்யா வழியில் இந்து மதத் தெய்வங்கள் அனைவரும் பெருமை பெறுகின்றனர். இந்து மத நம்பிக்கைகள் அனைத்தும் பேணப் படுகின்றன. இந்து மதக் கடவுளாகிய திருமாலே இங்கு வழிபடப்பெறும் தெய்வம். எனவே இது தனி ஒரு மதம் அன்று.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல காலவகையினான........."

என்னும் முதுமொழிக்கேற்ப குறைபாடுடைய பழக்கவழக்கங்கள் மாற்றப்பட்டு புதுமையான எளிமையான ஒரு வழிபாட்டு முறை நடைமுறையில் கொண்டுவரப்பட்டுள்ளது. அதுவே அய்யாவழியாகும்.

இறைவன் ஒருவனே. அந்த இறைவனே வைகுண்டர். சிவன், பிரம்மா, விட்ணு ஆகிய முப் பரம்பொருளும் வைகுண்டருள் அடக்கம். அவரே நாராயணர், திருமால், மாயவர் என்றெல்லாம் அழைக்கப்பெறுபவர்.

பகவதி, பார்வதி, பூமாதேவி, இலக்குமி முதலான பெண் தெய்வங்களும் வைகுண்டரைத் திருமணம் புரிந்து அவருள் அடங்கிவிட்டனர்.

எனவே எல்லாத் தெய்வங்களும் வைகுண்டருள் அடக்கம். வைகுண்டராகிய நாராயணனை வணங்குபவர் வேறு தெய்வங்களை வணங்க வேண்டிய அவசியம் இல்லை – என்பது அய்யா வழியின் முதன்மைத் தத்துவமாகும்.

அய்யா வழி மக்கள் அனைவரும் ஒரே குலத்தினர். அவர்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற பொருள்படவே அன்புக்கொடிவழியினர் எனப் பெற்றனர். அய்யா வழி அன்பர்களுக்குள் ஆண்டான்; அடிமை இல்லை. தலைவன், தொண்டன் இல்லை. அனைவரும் சமம்.

ஆக 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற உயரிய கொள்கை உடையது அய்யா வழி.

அய்யா வழியினர் பகுத்தறிவு உடையவர்கள். இவர்கள் மூடநம்பிக்கைகளின்று விடுபட்டவர்கள். அய்யா வழியினர்க்கு பேய், பில்லி, சூன்யம் போன்றவற்றில் நம்பிக்கையில்லை. அவைகள் பற்றிய அச்சம் இல்லை.

எல்லாவற்றிற்கும் மேலான, சர்வ வல்லமை பொருந்திய வைகுண்டப் பரம்பொருள் அவர்களுக்குத் துணையாக உள்ளமையால் அச்சம் அகன்று இருப்பவர்கள் அய்யா வழியினர்.

அனைவரிடமும் அன்புடன் இருக்க வேண்டும்; பொறுமையுடன் இருக்க வேண்டும்; பணிவுடன் வாழ வேண்டும்; இயன்ற வகையில் எல்லாம் தருமம் செய்ய வேண்டும் – என்பன அய்யாவின் போதனைகளில் முக்கியமானவை.

'உயிர்க்கொலை கூடாது; பலியிடுதல் கூடாது; உருவ வழிபாடுகூடாது' என்பது அய்யாவின் போதனைகளாகும்.

"எனக்காகும் பேர்கள்
மாடு மண்ணுருவை வைத்து வணங்கித் திரியார்கள்
ஆடு கடா கோழி பன்றி அறுத்து பலியிடார்கள்"

என்பன அய்யாவின் மொழிகளாகும்.

வழிபாட்டுத்தலம் – நிழல்தாங்கல்

அய்யா வழியினரின் வரிபாட்டுத் தலம் 'நிழல் தாங்கல்'எனப்பெற்றது. இதுவே கொச்சைமொழியாக 'எணத்தாங்கல்' எனப்பெற்றது.

துன்பமுற்று வரும் மக்களுக்குக் கருணை நிழல் தரும் இடம் ஆதலால் நிழல்தாங்கல் என்ற சொற்றொடர் சாலப் பொருத்தமானதாகும்.

கருணை வடிவான இறைவன் நிழலாகத் தங்கி இருக்கும் இடமாதலால் 'நிழல்தாங்கல்' எனப்பெற்றது என்பதும் பொருத்தமுடைய பொருளேயாகும்.

அய்யா ஏற்படுத்திய முதல் நிழல்தாங்கல் கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்திற்கு அண்மையில் தாமரைக்குளம் என்னும் கிராமத்தை ஒட்டி அமைந்துள்ளது. இதுவே அய்யா இருந்து தவம் இயற்றிய இடமாகும்.

இப்பகுதி முதலில் பூவண்டர் என்னும் ஆயர் குலத்தவருக்குஉரியதாக இருந்தது என்பர்; பூவண்டர் அய்யாவின் அன்பர்களில் ஒருவர்; திருவாங்கூர் அரசவையில் பெரும் பதவியில் இருந்தவர்; தன் உயிரையும் பொருட்டாக எண்ணாது அரசனிடம் வைகுண்டருக்காக வாதாடியவர்; அரசனால் தண்டிக்கப்பட்டவர்.

எனவேதான் அய்யா ஒருமுறை "பூவண்டர் என்றால் பெரியதகப்பனல்லோ" எனக் கூறுகிறார். அய்யாவாலேயே தகப்பன் என கருதப்பெற்ற பெருமைக்குரியவர் பூவண்டர். பூவண்டர் தனது தோப்பை அய்யாவுக்குத் தானமாக்கினார் என்பது செவிவழிச் செய்தி. அதுவரை அத்திருவிடம் 'பூவண்டன் தோப்பு' எனப் பெற்றது.

அய்யா உறைந்த கால முதல் 'சாமித்தோப்பு' என்றாயிற்று. சாமித்தோப்பில் அய்யா ஏற்படுத்திய முதல் நிழல் தாங்கலே 'தலைமைப்பதி' எனப்பெறுகிறது.

நாகர்கோவில் மீனாட்சிபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து கன்னியாகுமரி செல்லும் பேருந்தில் ஏறினால் சாமித்தோப்பு செல்லலாம்.

சாமித்தோப்பில் உள்ள அய்யாவின் தலைமைப்பதி முதலில் கூரை வேய்ந்ததாய் இருந்து பின்னர் ஓட்டுக்கட்டிடமாய் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த ஆலயத்தின் கருவறைக்குள் அய்யாவின் திருச்சடலம் வைக்கப்பெற்றுள்ளது. அதன்மீது அமைக்கப்பட்டுள்ள அறையே கருவறை என்றும், பள்ளியறை என்றும் அழைக்கப் பெறுகிறது.

பள்ளியறைக்குள் வைக்கப் பெற்றுள்ள இறை அடையாளச்சின்னமே மக்களால் வணங்கப்பெறுகிறது. இறை அடையாளச் சின்னத்திற்குப் பின்னால் பெரிய கண்ணாடி ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. இவை தவிர தீபங்களே கருவறையில் இடம் பெறுகின்றன.

அய்யாவின் வழிபாட்டுத் தலங்களில் சிலையோ, திரு உருவப்படங்களோ இல்லை. அய்யா வழிபாட்டில் உருவங்கள் இல்லை. உருவமும், அருவமும் அல்லா 'உருவஅருவ' வழிபாடு பின்பற்றப் பெறுகிறது.

தென்னை, மா, பலா முதலிய மரங்கள் நிறைந்த பெரும்சோலையே சாமித்தோப்பாகும்.

சாமித்தோப்பு நிழல் தாங்கலில் கருவறைக்கு முன்னால் வலது பக்கத்தில் வழிபாட்டு மண்டபத்தை ஒட்டி ஒரு வழிபாட்டிடம்உள்ளது. இது பத்ர காளியம்மன் அல்லது உமையம்மை சன்னதிஎனப்பெறுகிறது.

பத்ரகாளியம்மனுக்கும் சிலை இல்லை. அடையாளச் சின்னமும்இல்லை. திருமாலின் உடன் பிறந்தவள் உமை அம்மை. நாராயணரின் குழந்தைகளான ஏழு சான்றோர்களை வளர்த்தவள் பத்ரகாளி. திராவிடர்களின் ஆதி தெய்வம் பத்ரகாளியே. இக்காரணங்களினால் அன்னை பத்ரகாளிக்கு மட்டும் நிழல் தாங்கலில் வழிபடு இடம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

பலர் இவ்வழிபாட்டிடத்தை 'சிவாயிமேடை' எனக் குறிப்பிடுவது அய்யா காட்டிய வழிகளுக்கு முரணானது. அய்யாவின் பூதவுடல் மறைவிற்குப் பின்னர் யாரோ இட்டுக்கட்டிய பெயராக இருக்கலாம். அன்னைக்குரிய வழிபாட்டிடம் இது என்பதே சாலப் பொருத்தமாகும்.

உகப்படிப்பு என்னும் வழிபாட்டுப் பாடலில்

"ஐயா நாராயணர்க்கும் அம்மை உமையாளுக்கும்
தெய்வார் இடுவது முறையோம் முறையோம்"

என்னும் வரிகள் வருகின்றன. இது அம்மை உமையாளுக்கு அய்யா அளித்துள்ள முக்கியத்துவத்தைக் காட்டுவதாக உள்ளது. பெரும்பாலான நிழல் தாங்கல்களில் அம்மைக்கு இடம் உண்டு. சிலவற்றில் இல்லை.

கருவறைக்கு முன்னால் பெரிய வழிபாட்டு மண்டபம் ஒன்றுஅமைந்துள்ளது. அதனை அடுத்து மற்றொரு மண்டபம் உள்ளது. வெளிமண்டபத்தின் நடுவில் கொடிமரம் அமைந்துள்ளது.

மக்கள் கருவறையையும், வழிபாட்டு மண்டபத்தையும் சுற்றி வந்து வழிபடுகிறார்கள்.

கருவறை, வழிபாட்டு மண்டபம், வெளி மண்டபம் ஆகியவற்றை உள்ளடக்கி பெரும் மதில் சுவர் அமைந்துள்ளது. கோட்டைச்சுவருக்கு வெளியே நாற்புறமும் தேரோடும் வீதி அமைந்துள்ளது.

கருவறை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அதன் எதிரே கீழ்க்கோடியில் கிழக்குவாசல் உள்ளது.

தற்போதுள்ள நிழல்தாங்கல் கற் சுவராலும், உறுதியான மரங்களாலும், கொல்லம் ஓடுகளாலும் அமைக்கப்பட்டுள்ளது.

பள்ளியறைக்குள் (கருவறைக்குள்) பிரமிடு போன்று ஆனால் இரண்டே முகங்களுடைய சிறு அமைப்பு ஒன்றுள்ளது. இதனையே இறைச் சின்னமாகக் கொண்டு மக்கள் வணங்குகின்றனர்.

இந்த இறைவன் அடையாளத்தை 'அருவஉருவ' வழிபாட்டு முறை என்கிறார்கள். இறைவனுக்கு வடிவம் இல்லை. எனவே நிழல் தாங்கல்களில் சிலை வடிவ கடவுள் இல்லை. ஆனால் பாமரமக்கள் வணங்குவதற்கு ஒரு பற்றுக்கோல் தேவையாதலால் உருவமும் அல்லாது அருவமும் அல்லாத முக்கோண வடிவ அடையாளச் சின்னம் வழிபடு பொருளாக உள்ளது.

இறை அடையாளத்திற்கு முன் தீபம் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. ஒளி வடிவமான இறைவனை உணர்த்த தீபம் வைக்கப்பட்டுள்ளது எனக் கூறுகிறார்கள். இறை அடையாளச் சின்னத்திற்கு பின்னால் ஒரு கண்ணாடி வைக்கப்பட்டுள்ளது. 'இறைவனை வணங்குபவர் கண்ணாடியில் தன்னைக் கண்டு தன்னில் உறைந்துள்ள இறைவனை உணர்ந்து வழிபடவேண்டும்' என கண்ணாடி வைக்கப்பட்டுள்ளதற்கு காரணம் சொல்கிறார்கள்.

பெரும்பாலான நிழல் தாங்கல்களில் முக்கோண வடிவ சின்னமும், தீபமும் வைக்கப்பெற்றுள்ளது.

சில நிழல் தாங்கல்களில் ஒரு நாற்காலியும், தீபமும் மட்டுமே வைக்கப்பட்டுள்ளது. நாற்காலியில் அய்யா இருப்பதாகக் கருதி மக்கள் வழிபடுகிறார்கள்.

அய்யாவின் அவதார காலத்தில் அவரையே மக்கள் வணங்கினார்கள் என்றும் அவரை பல்லக்கில் வைத்துத் தெருவலம் வந்தார்கள் என்றும் சொல்கிறார்கள்.

அய்யா அருவுருவ வழிபாட்டு முறையை கற்பித்துள்ளார் எனத் தெரிகிறது.

கிழக்கு வாசலுக்கு எதிரே சுமார் முப்பது அடி தொலைவில் புனித நீர்க்கிணறு ஒன்றுள்ளது. இக்கிணற்று நீரே பதியின்

சமையலுக்கும், குடிநீராகவும் பயன்படுகிறது. அன்பர்கள் அங்கு நீராட அனுமதிக்கப்படவில்லை. இக்கிணறு பால்கிணறு எனப் பெறுகிறது.

கோயிலுக்கு வடமேற்கே சற்றுத் தொலைவில் சிறிய கிணறு ஒன்று உள்ளது. இதனை முத்திரி கிணறு என அழைக்கின்றனர்.

இக்கிணறு அன்பர்களுக்காக அய்யாவால் தோண்டப்பெற்றது. இக் கிணற்றின் நீரே புனித நீராகக் கருதப்படுகிறது. பதிக்கு வரும் மக்கள் இக் கிணற்றில் நீராடிய பின்னரே வழிபாட்டிற்குச் செல்கின்றனர்.

முத்திரி கிணற்றில் எப்பொழுதும் தூய்மையான நீர் நிறைவாகக் காணப்படுகிறது. தொடக்க காலத்தில் அழுக்காறு கொண்ட நீசர்களால் இக்கிணற்றில் நஞ்சு ஊற்றப்பட்டதாம். நஞ்சுடைய நீரை மக்கள் பருகியபோதிலும் எத்துன்பமும் ஏற்படவில்லை. இஃது அகிலத்திரட்டு வழியாகவும், செவிவழியாகவும் அறியப்பெற்ற செய்தியாகும்.

அண்மையில் இதுபோன்ற மற்றொரு நிகழ்ச்சி மீண்டும் நடைபெற்றுள்ளது. 18.9.1994 அன்று முத்திரி கிணற்று நீர்கலங்கலாக காணப்பெற்றது. எனினும் மக்கள் நீராடியும், நீரைப் பருகியும் வழக்கம்போல் வலம் வந்து வணங்கினார்கள். ஐயுற்ற அன்பர்கள் பாதாள கொலுசு போட்டு ஆராய்ந்தார்கள். ஐந்து கிலோ எடையுள்ள மூட்டையில் டிம்பட் (Dimpet) என்னும் நஞ்சுத்தூள் வைக்கப்பட்டு ஒரு பை மட்டும் கிழிக்கப்பட்டிருந்தது. நீராடியோர்க்கும், நீரைப் பருகியோருக்கும் எத்துன்பமும் இல்லை. இதனைச் சாமித்தோப்பில் வியப்புடன் பேசிக்கொள்கிறார்கள்.

திருவிழா நாட்களில் பெரும் கூட்டமாக இருந்தபோதிலும் மக்கள் அரிதின் முயன்று முத்திரி கிணற்று நீரினால் தங்களை நனைத்துக் கொள்கின்றனர்.

சாமித்தோப்பு நிழல்தாங்கலுக்கு கிழக்கு வாசல் தவிர, வடக்குவாசல்கள் இரண்டு உள்ளன. அதனை ஒட்டிய சிறு மண்டபமும் உள்ளது. இங்கு வைகுண்டர் அமர்ந்து தவம் செய்ததாககூறுகின்றனர். மக்கள் இவ்விடத்தில் மிக்க ஆவலுடனும், அன்புடனும் வழிபடுகின்றனர். இங்கு இரு சிலைகள் உள்ளன. அவை அய்யா மீது அன்பு கொண்டோரின் சிலைகளாக இருக்கலாம். யாரும் இச்சிலைகளை வணங்குவது இல்லை.

தலைமைப்பதியான சாமித்தோப்பு பதியின் அமைப்பிலேயே ஏனைய நிழல் தாங்கல்களும் அமைந்துள்ளன. இடவசதி பொருளாதார வசதிகளுக்கேற்ப சிறு மாறுதல்கள் இருக்கலாம்.

வைகுண்டர் வாழும் காலத்திலேயே அவர் வழிபாட்டு முறை பரவி அன்பர்கள் ஏராளம் பெருகினர். அன்பர் பெருக்கத்திற்கேற்ப அக்காலத்திலேயே நிழல் தாங்கல்களும் பெருகின. அவற்றுள் பலவற்றை அய்யா வைகுண்டரே தொடக்கி வைத்தார். அய்யாதொடங்கிய பதிகளில் ஐந்து பெருமைக்குரியன.

அவை (1) சாமித்தோப்பு பதி (2) தாமரைக்குளம் பதி (3) அம்பலப்பதி (4) முட்டப்பதி (5) பூப்பதி

இப்பதிகளில் முதல் நான்கு, அய்யா தவம் இயற்றிய இடங்களாகும். "பூப்பதி அய்யா பூமடந்தையை இகனைத் திருமணம் புரிந்துவீற்றிருந்தபோது தேவர்கள் பூமாறி பொழிந்த இடம் எனக்கூறப்பெறுகிறது." இவை தவிர அய்யா வைகுண்டரின் அவதார காலத்திலேயே "பள்ளத்துப்பதி, செட்டிக் குடியிருப்பு பதி, அகத்தீசுரம் பதி, பாலவூர் பதி, சுண்டவிளை பதி, வடலிவிளை பதி, கடம்பன் குளம்பதி ஆகிய நிழல்தாங்கல்களும், இன்னும் ஏராளமான நிழல்தாங்கல்களும் ஏற்பட்டிருந்தன எனத் தெரிகிறது.

தற்பொழுது குமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் ஏராளமான நிழல்தாங்கல்கள் உள்ளன. வ.உ.சி. மாவட்டமும் இதில் அடங்கும்.

சென்னையில் மணலிப்புதூர், எம்.ஜி.ஆர். நகர், அம்பத்தூர் ஆகிய இடங்களிலும், வேறு பல இடங்களிலும் நிழல்தாங்கல்கள் உள்ளன. தவிர பல இடங்களில் கூட்டு வழிபாடு நடைபெறுகிறது.

அய்யா வழியினரின் வழிபாட்டு முறைகளும், பழக்க வழக்கங்களும்

அய்யா வழியினரின் வழிபாட்டு முறைகள் ஏனைய இந்து மதத்தினரின் வழிபாட்டு முறைகளிலிருந்து சற்று மாறுபட்டுள்ளது.

அய்யாவை வழிபடச் செல்பவர்கள் உண்ணா நோன்பு போன்ற கட்டுப்பாடுகள் எதனையும் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஆயினும், உடல் தூய்மையும், உள்ளத் தூய்மையும் வழிபாட்டின்போது அவசியம். ஏதேனும் ஒருவகையில் தூய்மைக் குறைவு இருப்பவர்கள் வழிபாட்டிற்குச் செல்வதில்லை.

வழிபாட்டிற்குச் செல்பவர், தான் செல்லும் நிழல் தாங்கலுக்குரிய நிர்நிலையில் நீராட வேண்டும். இதனைப் பதம் விடுதல் என்பார்கள். பதம் விட்ட பின்னர் சுத்தமான ஆடைஅணிகிறார்கள். பலர் ஈரமான ஆடையுடன் இருக்கிறார்கள். ஆண்கள் மேலாடை அணிவதில்லை. ஆனால் தலைப்பாகை கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். இவ்வாறாக, நிர்நிலையைச் சுற்றி அரகரா சிவசிவா என்று கூறியபடி ஐந்துமுறை வலம் வரவேண்டும். பின்னர் நிழல்தாங்கல் செல்ல வேண்டும்.

நிழல் தாங்கல் செல்லும் போது நெற்றி, தோள், மார்பு, முதுகு ஆகிய இடங்களில் திருநாமம் அணிகிறார்கள். இறைவனுக்கு வெற்றிலை, பாக்கு, தேங்காய், வாழைப்பழம், கனி (எலும்பிச்சம்பழம் கனிகளில் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது), சந்தனம், பன்னீர், பிச்சி மலர் அல்லது மல்லிகை போன்ற பொருள்களை கொண்டு செல்கிறார்கள். இவ்வாறு பொருள்களை கொண்டு சென்று இறைவனுக்கு அர்ப்பணிப்பதை சுருள் வைத்தல்என்கிறார்கள்.

இறவைன் முன்னிலையில் சுருள் பொருட்கள் அழகாக அலங்காரமாக வைக்கப்பட்டுள்ளன. மலர்ச் சரங்களும், தீப அலங்காரமும் இறைவன் கருவறையை அழகு செய்கின்றன.

கற்பூரம், ஊதுவத்தி, சாம்பிராணி போன்ற பொருள்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

தினம் மூன்று வேளைகள் வழிபாடு நடைபெறுகிறது. வழிபாட்டை நடத்த குரு ஒருவர் இருப்பார். அவர் கருவறை அலங்கார வேலைகளைச் செய்வார். தீபம் ஏற்றுவார்.

கனிகள், மலர்களுடன், பாலன்னம் எனப்படும் பச்சரிசி அன்னம், சர்க்கரைப் பொங்கல் ஆகியவையும் படைக்கப்பட்டிருக்கும். தீபங்களுக்குத் தேங்காய் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

தேங்காயை உடைத்து வைத்தல் பலியிடுதலுக்கு ஒப்பாகும் எனக் கருதி முழுத் தேங்காய் வைக்கப்படுகிறது. எலும்மிச்சம் கனியும் அவ்வாறே. கூட்டு வழிபாடே நிழல்தாங்கலில் நடைபெறும்.

பணிவிடைக்காரர் வழிபாட்டிற்கு தயாரானதும் சங்கு, சிகண்டி, நகரா, வெண்கலமணி ஆகியவை ஒலிக்கப்படும். பணிவிடைக்காரர் அய்யாவை வணங்கி நாமம் தரித்துக்கொள்வார். பின்னர் அனைவருக்கும் நாமம் இடுவார்.

நாமம் இட்டுக் கொண்ட பின்னர் அனைவரும் தரையில் விழுந்து வணங்க வேண்டும். ஆண்கள் எட்டு உறுப்புகள் தரையில் படும்படியாகவும், பெண்கள் ஐந்து உறுப்புகள் தரையில்படும்படியாகவும் விழுந்து வணங்க வேண்டும்.

பின்னர் அனைவரும் கைகளைக் குவித்தபடி குனிந்து நிற்க வேண்டும். வழிபாட்டு மண்டபத்தில் ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் நிற்பார்கள்.

குனிந்த நிலையில் ஐந்து முறை வாயில் அடித்துக் கொள்ளவேண்டும். அதன் பின்னர் குருவானவர் பின்கண்ட வழிபாட்டு மொழிகளைக் கூறுவார். குரு கூறுவதை அனைவரும் திரும்பச் சொல்வார்கள். இதனை போதிப்பு என்பார்கள். இதுவழிபாட்டின் தொடக்கம்.

குரு, " அய்யா "

"நாங்கள்"

"அறிந்து அறியாமல் செய்ததெல்லாம்"

"அய்யா பொறுக்க வேண்டும் "

என்று ஐந்துமுறை சொல்வார். அன்பர்களும் ஐந்து முறை திருப்பிச் சொல்லி வாயில் ஐந்து முறை அடித்துக் கொள்ள வேண்டும். பின்னர் நிமிர்ந்து நின்று மீண்டும் குரு சொல்வதை ஒரு முறை மட்டும் திருப்பிச் சொல்ல வேண்டும்.

குருவானவர், "அய்யா பொறுக்கணும்"

"அய்யா பொறுத்து மாப்புதந்து"

"அய்யா வைத்து இரட்சித்துக் கொள்ள வேண்டும்"

"அய்யா பொறுமை தர வேண்டும்"

"அய்யா நாங்கள்"

"ஒன்று சொன்னதை ஒன்று கேட்டு"

"ஒன்று சொன்னதை ஒன்று கேட்டு"

"ஒன்றுக்கொன்று"

"நிரப்பாக இருக்க வேண்டும்"

"அய்யா நல்லபுத்தி தர வேண்டும்"

"அய்யா அன்னமும் வஸ்திரமும் தந்து"

"அய்யா வைத்து இரட்சித்துக் கொள்ள வேண்டும்"

"அய்யா எங்களை"

"யாதொரு நொம்பலும் அல்லாமல்"

"யாதொரு சஞ்சலம் இல்லாமல்"

"அய்யா வைத்துஇரட்சித்துக் கொள்ள வேண்டும்"

என்ற சொல்லச் சொல்ல மற்ற அனைவரும் சேர்ந்து சொல்லவேண்டும்.

போதிப்பு முடிந்த பின்னர் கூற வேண்டிய வழிபாட்டு மந்திரங்கள் மூன்று வகையாக உள்ளது.

அவை (1) உகப்படிப்பு (உகம் – யுகம்) (2) உச்சிப்படிப்பு (3)வாழப்படிப்பு என்பனவாம்.

இம்மந்திர மொழிகள் அய்யா மக்களின் வழிபாட்டிற்கென அருளியதாகும். அவை 'அருள்நூல்' என்னும் நூலில் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளன.

முதலாவது உள்ளது உகப்படிப்பு. உலக மக்கள் அனைவரின் நலனுக்காக ஓதப்படுவது. காலை, மாலை அல்லது இரவுவேளைகளில் வழிபாட்டின்போது போதிப்பிற்குப் பின்னர் உகப்படிப்பினையே ஓத வேண்டும்.

நண்பகலில் உச்சிவேளை (சூரியன் உயர்ந்த நிலையில் இருக்கும்வேளை) படிப்பது மட்டும் உச்சிப்படியாகும். உச்சிப்படிப்பு வழிபாடே சிறப்பானதாகவும், முக்கியமானதாகவும் கருதப்படுகிறது.

அன்னம், கனிகள் முதலானவற்றைத் தானமாக வழங்குவதற்கு முன்னதாக பாடப் பெறுவது வாழப்படிப்பு ஆகும்.

இனி இம்மந்திர மொழிகள் ஒவ்வொன்றினையும் விரிவாக காணலாம்.

உகப்படிப்பு

இதனை உகம் பெருக்குதல் எனவும் கூறுகிறார்கள். உலகம் முழுவதும் ஊழிக்காலம் முழுவதும் நலம்பெற வேண்டும் என்னும் நோக்குடன் ஓதப்படுவதால் உகப்படிப்பு என்றாயிற்று.

உகப் படிப்பின் முதல் பத்தொன்பது வரிகள் இறைவனைப் போற்றித் துதிப்பனவாக உள்ளன.

அரியும், சிவனும் ஒன்று. இறைவன் ஒருவனே என்பதை உணர்த்தும்வகையில், "அய்யா சிவசிவா, அரகரா சிவசிவா' என்ற வரிகள் ஒவ்வொரு சொற்றொடரையும் அடுத்து வருகின்றன.

சிவனும், திருமாலும் ஆகிய அய்யாவே உங்களைப் போற்றுகிறோம், போற்றுகிறோம்.

குருவாகவும், குரு பண்டாரத்தியாகவும் உள்ள அய்யாவே உம்மிடம் முறையிடுகிறோம், முறையிடுகிறோம்.

ஆண்டியும், ஆண்டிச்சியாகவும் உள்ள இறைவனே உம்மிடம் முறையிடுகிறோம், முறையிடுகிறோம்.

அய்யா நாராயணரும், நாட்டிற்கு பெரிய வைகுண்டருமான அய்யாவுக்கு கட்டியம், கட்டியம்.

அய்யா நாராயண சுவாமிக்கு வெற்றி, வெற்றி. தேசம் மற்றும் அண்டங்கள் யாவற்றையும் படைத்த இந்திர நாராயணராகிய அய்யா நிச்சயித்தபடியே எல்லா செயல்களும் நடைபெறும்.மனிதன் எண்ணப்படி எதுவும் நடைபெறுவதில்லை.

எல்லா இடங்களிலும், எல்லா உயிர்களுக்கும் காரணமாகவும், காவலாகவும் இருப்பது எங்கள் அய்யாவே.

அய்யா நாராயணர்க்கும், எங்கள் அம்மை உமைக்கும் முறையிடுகிறோம், முறையிடுகிறோம்.

இனி வருவன அய்யா வைகுண்டரின் பெருமைகளைக் கூறித் துதிக்கும் வரிகளாக உள்ளன.

முக்தி அடைந்த உயிர்களுக்கும், நரகத்தில் உள்ள பாவ உயிர்களுக்கும் செல்வம் உடையோர்க்கும் அல்லாதோர்க்கும், மற்றும் எல்லா உயிர்களுக்கும் காரணமாகவும் காரியமாகவும் இருப்பது எங்கள் அய்யாவே.

முன்னமைந்த இராமர். ஆசைக்குரிய வடிவான கண்ணன் எல்லாம் இப்பொழுது வைகுண்டர் வடிவாய் வந்துள்ள எங்கள் அய்யாவே. எங்கள் அய்யா எங்கும் நிறைந்தவர். தாம் ஒருவரே இறைவன் ஆனவர்.

இடையூறுகளை அகற்றி நமக்கு காவலாக பதியில் அமர்ந்தவர் எங்கள் அய்யா.

நமது துன்பங்களை அகற்றுபவரும், கன்னியாகுமரிக்கு வடக்கே பதியில் அமர்ந்துள்ளவரும் எங்கள் அய்யாவே.

தான் அமர்ந்த பதியில் நாடாளும் மக்களைக் கூட்டுவதும் எங்கள் அய்யாவே.

நல்ல சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிவதும் எங்கள் அய்யாவே.

தேவர்களையும், மக்களையும் அகிலம் உள்ளவரை அரசாளப்போவது எங்கள் அய்யாவே.

திருமாலின் திருப்பதியிலிருந்து எழுந்தருளி நாட்டில் உலா வருவது எங்கள் அய்யாவே.

பலவிதமான படைகளுடன் கோட்டை சுற்றி விளையாடி வருவதும் எங்கள் அய்யாவே.

நமது வருவாயில் இருபத்து நான்கில் ஒரு பாகத்தைத் தர்மமாக ஏற்று, பதினான்கு உலகங்களையும் ஒரு குடையின் கீழ் அரசாள்வதும் எங்கள் அய்யாவே.

கொந்தளப்ப இராசா, கோணாண்டி இராசா போன்ற தீயவர்களையும் அவர்கள் கோட்டைகளையும் அழித்து வைகுண்டராசராக தர்மபதி அரசாள்வது எங்கள் அய்யாவே.

என்றும் வாடா மலராக புதுமையாகவே காட்சி அளிப்பது எங்கள் அய்யாவே.

முடிசூடும் பெருமாளாக வந்து எதிரிகள் இல்லாமல் அரசாளுவது எங்கள் அய்யாவே.

ஆணவக்காரர்களை அழித்து மேக நிறமான பட்டாடை அணிந்து அரசு புரிவது எங்கள் அய்யாவே.

தீயவர்களை அழித்து நடுத்தீர்ப்பு வழங்குவதும் எங்கள் அய்யாவே.

திருமாலின் திருப்பதியில் அமர்ந்து மேகத்தால் சூழப்பட்ட உலகம் முழுவதையும் அரசாளுவது எங்கள் அய்யாவே.

தான் கோயில் கொண்டுள்ள பெருமைமிக்க பதியினில் வைகுண்டராக அரசாளுவது எங்கள் அய்யாவே.

எல்லா உலகங்களிலும் வைகுண்டராக பலவிதமான வடிவங்களைக் கொண்டு தர்ம புவியில் உதித்து அரசாள வருவது எங்கள்அய்யாவே.

உயர் குணங்களை உடைய முனிவர்கள் அய்யாவுக்கு பணிவிடை செய்து வைகுண்டராசராக ஏற்பதும் எங்கள் அய்யாவே.

ஏழைச் சாதிக்களுக்காக சிறையிருப்பது எங்கள் அய்யாவே.

தங்கத்தினால் ஆகிய திருமுடியை அணிவதும் எங்கள் அய்யாவே.

ஆற்றல் மிக்க முனிவராகிய நாராயணர் எம் தகப்பன். ஏழுகன்னியர் எம் தாயார். எமது பெருமை அறியாமல் எம்மை ஒதுக்கி வைத்து, தவம் புரிய விடாதவன் தகுதியை அழிப்பதும்எங்கள் அய்யாவே.

எங்கள் அய்யா தெய்வ கன்னியரைக் கண்டு பூவுலகு மட்டுமின்றி கயிலாசத்தையும் ஆள வருகிறார். எங்கள் அய்யா சிங்கங்களின் முகங்களை இலச்சினையாகக்கொண்டு நீசப் படைகளை அழிக்க வருகிறார்.

செந்தாமரையாள் இலக்குமியுடன் எல்லா தெருக்களிலும் அரசாள வருவதும் எங்கள் அய்யாவே.

கம்பையும், தடியையும் கையில் கொடுத்து கயவர்களை அழிக்க கருடனை அனுப்புவது எங்கள் அய்யாவே.

கொடும் கலியையும், ஆணவத்தையும் அழிக்க தனது வாகனமாகிய கருடனை அனுப்புவது எங்கள் அய்யாவே.

குடத்தில் பால் கொண்டு வந்து தம் அன்பர்கள் குடிக்க வழங்குபவரும் எங்கள் அய்யாவே.

இருபுறமும் கவரி வீச சிம்மாசனத்தில் அமர்ந்து அரசாளுவதும் எங்கள் அய்யாவே.

பல பிறவிகள் எடுத்து உலகப் பகைவர்களின் தகுதியை அழிப்பதும்எங்கள் அய்யாவே. கொடிய கலியை அழித்து முடிப்பதும் எங்கள் அய்யாவே.

பல வண்ணங்களையுடைய தேர் சிறப்படையும் வண்ணம் அதில் அமர்ந்து உலா வருவதும் எங்கள் அய்யாவே.

பெருமையும், நிம்மதியான உறக்கமும் எமக்களித்து, இழிவாக எமைப் பார்த்து நகைத்த பகைவர்களை அழித்து, வெற்றி கொடிகட்டி, பல வரங்களுடன் வீரப் பதியிலேற்றி அரசாள வருவதுஎங்கள் அய்யாவே.

நாட்டை சிறுமைபடுத்திய கலி நீசனின் முடியை இறக்கி எங்கள் அய்யா உலகை ஆள்வார்.

கல்லைப் பிளந்த கணபதி நாராயணன் செப்பைத் திறந்து திருமுடிசூடி வருகிறார் எங்கள் அய்யா.

முற்காலத்தில் அக்கினியால் அழிப்பேன் என்று கூறியதும் உண்மைதான்.

அனல்வந்து உலகை ஐந்தாறு நாள் ஆளப்போவதும் உண்மை தான்.

பலவிதமான ஆபரணங்களை அணிவதும் எங்கள் அய்யாவே.

இத்தகைய பெருமை மிக்க அய்யாவை உணர்ந்து அவரை வழிபடுங்கள் எனப் பின்வரும் சில அடிகள் கூறுகின்றன.

நமது மனத்திரையில் விளையாடும் அய்யாவை பதினைந்து நாழிகைக்குள் உணர்ந்து கொள்ள முடியும்.

அய்யா மனக்கடலில் இருந்து மறையுமுன்னர் அவரை அறிந்துகொள்ளுங்கள்.

பாலன் வடிவுடைய அய்யாவை பணிந்து வணங்குங்கள்.

அய்யாவை உணர்ந்து அவரைச் சரணடைந்தவர்களுக்குக் கிடைக்கும் பலன்களைச் சில வரிகள் உணர்த்துகின்றன.

நம்மைத் தாங்கும் அய்யாவை மலைபோல உயர்வாக எண்ணியவர்கள் பெயரை எங்கள் அய்யா துலங்கச் செய்வார்.

அய்யாவைத் தொழுதவர்களைக் கண்டு, தொழுது பணிந்து நடந்தவர்களுக்கு நாட்டைக் கொடுத்து அவர் மூலம் எங்களை அய்யா ஆட்சி புரிய வருகிறார்.

அய்யாவை வணங்கித் தவம் புரிவதற்குக் கோட்டை தலம்காட்டிக் கொடுக்க வருகிறார் எங்கள் அய்யா.

மீண்டும் அய்யாவின் பெருமைகள் பேசப்படுகின்றன.

இருளை நீக்கி அருளைக் கொண்டு முடிசூடி எங்கள் அய்யா நீசர்படைகளை அறுக்க வருகிறார்.

கொடியோர் ஆதிக்கத்தை எல்லாம் ஒழித்து எங்கள் அய்யா துவரயம் பதியில் ஆட்சி புரிய வருகிறார்.

நாட்டில் முடியாட்சியை ஒழித்து எங்கள் அய்யா அரசு புரியவருகிறார்.

அய்யா நாராணர்க்கும், அம்மை உமையாளுக்கும் அன்பர்கள் முறையிடுகிறோம், முறையிடுகிறோம்.

இந்த வழிபாட்டின் போது இறைவனுக்கு அன்னம் நியமிக்கப்பட்டால் மட்டுமே கருவறை மந்திரம் எனப்படும் பின்வரும் பகுதி ஓதப்படவேண்டும் எனக் கூறுகிறார்கள்.

அய்யா வழியினர் இறந்தால் அடக்கம் செய்யப்படும்போதும் இம்மந்திரம் கூறப்பெறுமாம். எனவே இதனை 'மண்ணறை மந்திரம்' என்றும் கூறுகிறார்கள்.

"பகைமை உணர்வு, சினம், ஆணவம், தானம் இடுதலைக் தடுக்கும் குணம் ஆகிய தீய பண்புகளை அகற்றி மனதைத் தூய்மைப்படுத்துங்கள்.

உயிர்களைச் சமமாக எண்ணுபவன் பிறர் நலன்களைப் பேசி மகிழ்ச்சி அடைவான்.

சகலவிதமான தூதர்களே மகிழ்வடையுங்கள். மகிழ்ச்சியினால் பேரானந்தம் பெறுங்கள். மனமாகிய காட்டில் தீய எண்ணங்கள்பட விடாதீர்கள். ஐம்புலன்களை அடக்கி சடத்தன்மைபெறுங்கள். எல்லையில்லா எண்ணங்களை உடைய மன அழுக்கை அகற்றுங்கள். கலியின் எண்ணங்களை அகற்றி உறுதியான மனதில் உறுதியான சமநிலை பெறுங்கள். பிரம்மன் விதித்த விதிக்கணக்கை உணர்ந்து அதன் மகிழ்ச்சிகரமான மொழிகளைப் பேசாமல் ஆணவ மொழிகளைப் பேசுகின்றவன் தன் நிலை அழிவான். இருவிதமான எண்ணங்களையுடைய மனதை அடக்கத் தெரியாதவர்களுக்குக் கலக்கம் தோன்றியுள்ளது. இக்கருத்துக்களை மறுப்பவர்கள் மாய நினைவுடன் உள்ளார்கள். இப்புனித மொழிகளைக் கேட்ட தாங்கள் அரச பதவியை அடையவேண்டுமல்லவா? கலியின் எண்ணங்களைப் போதிக்கின்றவர்கள் தீயினால் எரிந்து போவார்கள்" என்பது கருவறை மந்திரத்தின் பொருளாகும்.

இப்பகுதிக்கு ஆசாரி பள்ளம் என். விவேகானந்தன் உரை உதவியுடன் இயன்றவரை பொருள் கூறப் பெற்றுள்ளது. இதுவே சரியான பொருள் என்று கூறுவதற்கு இல்லை.

பேராசிரியர். மீ.ப. சோமு அவர்களிடம் இப்பகுதிக்கு பொருள் கேட்ட போது, குண்டலினி சக்தியை மேல்நிலைக்கு கொண்டுவருவதற்கான பல பயிற்சிகளில் உயர்நிலைப் பயிற்சி இதில் கூறப்பெற்றுள்ளது. இதனை ஆன்மீக அனுபவத்தால் தான் உணரமுடியுமேயன்றி பிறர் கூறிப் பொருள் உணரமுடியாது எனகூறினார்கள்.

வைகுண்டரின் பெருமைகளைக் கூறி அவரைத் துதித்துப் போற்றும் உகப்படிப்பு மொத்தம் 197 அடிகளை உடையது. அதன் உண்மை வடிவம் கீழே தரப் பெற்றுள்ளது.

உகப்படிப்பு

"அய்யா சிவ சிவ சிவ சிவ அரகரா அரகரா
சிவசிவ சிவசிவா அரகர அரகரா
சிவசிவா குருவுக்கும் குரு பண்டாரத்திற்கும்

சிவசிவா முறையோம் முறையோம்
சிவசிவா ஆண்டிக்கும் ஆண்டிச்சிக்கும்
சிவசிவா முறையோம் முறையோம்
சிவசிவா அய்யா நாராயணர்க்கும்
நாட்டுக்குப் பெரிய வைகுண்டருக்கும்
சிவசிவா கட்டியம் கட்டியம கடடியம
சிவசிவா அய்யா நாராயணசுவாமி
செயம் செயம் செயம்
சிவசிவா அரகரா செயம் செயம் செயம்
தேசமயம் ஏகம் திட்டித்த இந்திர நாராயணர்
நிச்சயித்தபடி யல்லாது மனிதன்
நிச்சயித்தபடியில்லை அய்யாவே
இங்கு மங்கும் யெங்கும் யெவ்வுயிர்க்கும் எங்கள்
அய்யா சிவசிவா அரகரா அரகரா
அய்யா நாராயணர்க்கும் அம்மை உமையாளுக்கும்
தெய்வார் இடுவது முறையோம் முறையோம் முறையோம்
மோட்ச உயிர்க்கும் நரக உயிர்க்கும்
தீ நரகப் பாவி உயிர்க்கும்
ராச உயிர்க்கும் வள்ளி வாசல் உயிர்க்கும்
வைகுண்ட பதவி உயிர்க்கும்
எவ்வுயிர்க்கும் எங்கள் அய்யா
சிவசிவா சிவசிவா அரகரா அரகரா
முன்னுள்ள ராமர் உயிர்க்கும்
மோக வடிவான உயிர்க்கும்
முகச்சையுள்ள ராமர் உயிர்க்கும்
இப்போவந்த நாராயணர்
எங்கும் நிறைந்தவர் ஏக மயமானவர்
நமக்கு உதவி செய்ய வந்த
நாராயணர் இவர்தான்
எவ்வுயிர்க்கும் எங்கள் அய்யா
சிவசிவா சிவசிவா அரகரா அரகரா
கறடு முறடு தட்டிப் பதியேறினார்
எங்கள் அய்யா காவலர் கிட்டவந்து
சிவசிவா அரகரா அரகரா
கறடு முறடு தட்டுவது எங்கள் அய்யா
கன்னியாகுமரிக்கு வடக்கே
பதியேறுவதும் யெங்கள் அய்யா
சிவசிவா சிவசிவா அரகரா அரகரா

நாடாள்வார் அப்பதியில் கூட்டுவதும் எங்கள் அய்யா
நல்லதொரு சிங்காசனம் இருந்து
அரசாள வருவதும் எங்கள் அய்யா
சிவசிவா சிவசிவா அரகரா அரகரா
வானம் உள்ள தேவரெல்லாம்
பூமியுள்ள நாள்வரைக்கும்
மற்றுமுள்ள தேசமெல்லாம் எங்கள் அய்யா
வைகுண்டராசராக அரசாள வருவதும்
எங்கள் அய்யா சிவசிவா சிவசிவா அரகரா அரகரா
நாகவடமதிலே எங்கள் அய்யா
வைகுண்டராசர் வந்து நாலுவிதமாய்
வடிவு கொள்வதும் எங்கள் அய்யா
சிவசிவா சிவசிவா அரகரா அரகரா
மாயன் திருப்பதிக்குள் இருந்து புக்கு
எங்கள் அய்யாவை குண்டராசர் எழுந்தருளி
தெருச் சுத்தி தேசத்தில் பவனி வருவது
எங்கள் அய்யா சிவசிவா அரகரா அரகரா
கொந்தளத்துடனே வந்து எங்கள் அய்யா
கூண்ட பெரும் படையுடனே
கூடவரும் காளாஞ்சியோடே கோட்டை சுற்றி
விளையாடி வருவதும் எங்கள் அய்யா
சிவசிவா சிவசிவா அரகரா அரகரா
இருபத்து நாலிலொன்று ஏற்பதும் எங்கள் அய்யா
வைகுண்டராசர் வந்து ஈரேழு உலகமெல்லாம்
ஒரு குடைக்குள் அரசாள வருவதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
கொந்தளப்ப ராசாவும் கோனான்டி ராசனுட
கோட்டையெல்லாம் எங்கள் அய்யா அழித்து
வைகுண்டரசர் வந்து தர்மபதி யுதித்து
தர்மயுகம் அரசாள வருவதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
வாடாத பூவதுவாய் எங்கள் அய்யா
வைகுண்டரசர் வந்து திருப்பதிக்குள் புகுவதும்
எங்கள் அய்யா சிவசிவ சிவசிவ அரகர அரகரா
முடிசூடும் பெருமாளாக எங்கள் அய்யா
வைகுண்டராசர் வந்து மறுமன்னர் யெதிரி இல்லாமல்
அரசாள வருவதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா

சரணம் சரணமென்று தாழ்ந்து நடந்த அன்பருக்கு
வைகுண்டப் பதிதனிலே வைகுண்டராசராக
அரசாள வருவதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
முடுக்கன் தலையறுத்து மேக வர்ணப் பட்டும் சூடி
வைகுண்டப் பதிதனிலே வைகுண்டரசராக
அரசாள்வதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
தீத்தறுத்த மாயவனார் எங்கள் அய்யா
வைகுண்டராசர் வந்து நடுத்தீர்த்து
அரசாள்வதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவா அரகர அரகரா
மாயன் திருப்பதிதனிலே எங்கள் அய்யா
வகுண்டராசர் வந்து மேகம் சூழ்ந்த
வையகமெல்லாம் ஒரு குடைக்குள்
அரசாள்வதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவா அரகர அரகரா
படிஉடன் நடைதனிலே பாரப் பதிதனிலே
வைகுண்டப்பதிதனிலே வைகுண்டராசராக
அரசாள்வதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
நாலுயுகம் கொண்டு எங்கள் அய்யா
வைகுண்டரசராக நாற் சொரூபம் கொண்டு
தர்மபதி உதித்து அரசாளவருவதும்
எங்கள் அய்யா சிவசிவ சிவசிவ அரகர அரகரா
குணமான ரிசிமார் வந்து பணிவிடை செய்து
வைகுண்டரசராக ஏற்பதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவா அரகர அரகரா
சாதிக்குச் சிறையிருப்பது எங்கள் அய்யா
தங்கத் திருமுடி சூடுவதும் எங்கள் அய்யா
சிவசிவ அரகர அரகரா
அட்டிச் சரப்பளி அணிவதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவா அரகர அரகரா
சத்தி முனி என் தகப்பன் சத்தி கன்னி என் தாயார்
தள்ளி வைத்துத் தவத்தை அளித்தவன்
தரத்தை அறப்பதுவும், எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
கண்ணு மயிலாளைக் கண்டவர்

கயிலாசம் ஆள வருகிறார் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
சிங்கமுகம் தெரிந்தெடுத்துச் சேர்த்துப்
படையறுக்க வருகிறார் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
செந்தாமரை முகத்தாளுடனே
தெருக்கள் தெருக்கள் தோறும்
சிங்காதனம் முடித்து வருகிறார் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
கம்பு தடியதைக் கையில் கொடுத்து
கருடனை விடுவது எங்கள் அய்யா
வம்பு கலியதை மதத்தை யொடுக்கி
வாகன மிடுவதும் எங்கள் அய்யா
சிவசிவ அரகரா அரகரா அரகரா
கும்பக் குடமதில் பால் கொண்டு வந்து
குடிக்கச் சொல்வதும் எங்கள் அய்யா
சிவசிவ அரகர அரகரா
செம்பொற் கவரி வீசி அசைக்க
சீமை அரசாள வருவதும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவா அரகர அரகரா
ஆரசடலம் எடுப்பது எங்கள் அய்யா
அவனிப் பகைவர் தரம் அறுப்புவதும் எங்கள் அய்யா
பாரகலி முடிப்பதுவும் எங்கள் அய்யா
பஞ்சவர்ணத்தேர் அலங்கரிப்பதுவும் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
உத்தாரமும் துகிலும் உகந்து எனை நகைத்த
சத்திராதியைக் குத்தி தர்மபுவி அரசாள
வெற்றிக் கொடியும் கட்டி வீரப்பதியிலேறி
மற்றும் விடைகள் பெற்று வருகிறார் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
நாட்டை நொடித்த கலிநீசன் முடியை
இறக்கி நாராயணர் பதியாள் வார் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
கல்லைப் பிளந்த கணபதி நாராயணம்
செப்பைத் திறந்து திருமுடிசூடி வருகிறார் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
அக்கினியால் அழிப்பேனென்று சொல்வது மெய்தானப்பா
அனல் வந்து அஞ்சாறு நாளயில் அரசாள்வதும்

மெய்தானப்பா
ஆபரணமாலை அணிவது எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
ஆடிக்குள் ஆடி ஐ மூன்று நாழிகைக்குள்
அறிந்தவர் அறிந்திடுங்கோ அயல் ஓடிப் போகுமுன்னே
தெரிந்தவர் தெரிந்திடுங்கோ எங்கள் அய்யா
திரைகடல் ஓடுமுன்னே அய்யா
சிவசிவா அரகரா அரகரா
பணிந்தவர் பணிந்திடுங்கோ பாலன் பதியேறுமுன்னே
தூணை மலையென்று நம்பினோர்க்கு
தொட்டு நாமம் சாற்றி வருகிறார் எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
தொழுத மதலையைக் கண்டு
தொழுது பணிந்து நடந்தவர்க்கு
நாடு நமக்கென்று யெடுத்துக் கொடுத்து ஆள வருகிறார்
எங்கள் அய்யா சிவசிவ சிவசிவ அரகர அரகரா
கும்பிட்டு தவம் செய்வதற்கு
கோட்டை தலம் காட்டிக் கொடுக்க வருகிறார்
எங்கள் அய்யா சிவசிவா சிவசிவ அரகர அரகரா
அருள்கொண்டு முடிசூடியிருள் கொண்டு
படையறுக்க வருகிறார் எங்கள்
அய்யா சிவசிவ சிவசிவ அரகர அரகரா
ஆயிரம் நாட்டு கொடுமுடியையும் உடைத்து
துவரையம்பதி உதித்து
அரசாள்வது எங்கள் அய்யா
சிவசிவ சிவசிவ அரகர அரகரா
வர்ணமணி மாலைசூடி மாயக் கலியறுக்க வருகிறார்
எங்கள் அய்யா சிவசிவ சிவசிவ அரகர அரகரா
நாட்டு முடியிறக்கி நாராயணர் பதியாள வருகிறார்
எங்கள் அய்யா சிவசிவ சிவசிவ அரகர அரகரா
அய்யா நாராயணர்க்கும் அம்மை உமையாளுக்கும்
தெய்வாரிடுவது முறையோம் முறையோம் முறையோம்
கவந்தலம் வெந்தலம் சிலப்புவான் எடுத்து தான
மறைத்தானை
சமஸ்தானத்தை சுத்தி பண்ணுங்கோ
தித்தியூர் சமன்மா இச்சமயம் ஆத்துவான் அயல்தூக்கி
தித்திப்பார் சகல தூதாதி சந்தோசமா
சந்தோசமான பரமானதை விடுங்கோ காட்டுக்கருவிசாமல்

திருக்கடல் சடலம் உச்சில்லாக் கோட்டை
கக்கறு கறுத்தான் தடங்குலுக்கி படைவாரி மறுவுறுதியான
சமணம் அல்லிப் புலிமன் அகில்பறையான்
சலுப்புவானெடுத்து சிலம்புவானெடுத்து தணலத்து
சங்குரண்டடிமை தேசவாதிக்கு கலகம் வந்திருக்குது
மறுயுகத்தார் இதை மாயமென்று சிரிக்கிறார்
அவர் சற்று மயலடைந்தார் இன்று பாசையால்
அரசு வேண்டாமா சித்திரவாதத் தூதர்கள்
தீயினால் எரிந்து போவார்கள்"

உலகப்படிப்பின் உண்மை வடிவம் மூல நூலில் உள்ளது போலஇங்கு தரப் பெற்றுள்ளது. இதனை அவரவர் வீடுகளில் காலைவழிபாட்டின் போது ஓதுவது சிறப்புடையது எனப் பெறுகிறது.

நண்பகல் இறை வழிபாட்டின் போது அய்யா வழியினர் ஓதுவது உச்சிப் படிப்பாகும். பெரும்பாலும் ஞாயிற்றுக் கிழமை நண்பகல் வேளையில் இதனை ஓதுவது வழக்கம். நாள் ஒன்றுக்கு ஒருமுறைஎனக் கணக்கிட்டு ஞாயிற்றுக்கிழமை ஏழுமுறைகள் ஓதுகிறார்கள்.இது ஒரு வகையான தியான வழிபாடாகும்.

"சிவசிவா அரிகுரு சிவசிவா
சிவசிவா ஆதிகுரு சிவசிவா
மூலகுரு சிவசிவா சிவசிவா சிவமண்டலம்
அல்லா இல்லலா இறைசூல் மசிலல்லா
சிவசிவா சிவமண்டலம்
நாதன் குருநாதனே சிவசிவா சிவமண்டலம்
பரலோகம் அளந்த பச்சைமால் நாராயணரே சிவசிவா
சிவமண்டலம்
திருவுக்கும் சடை குரு சிவசிவா சிவமண்டலம்
செங்கண் திருகுரு சிவசிவா சிவமண்டலம்
சன்னியாசிகுரு சிவசிவா சிவமன்டலம்
மகாகுரு சிவசிவா சிவகுரு சிவமண்டலம்
மண்டலம் குருமன்டலமே மாயன் குருமண்டலம்
குண்டலம் குரு குண்டலமே சிவசிவா குருமண்டலம்
சங்கம் நிதி குண்டலமே தரணி குருகுண்டலம்
தரணியது குண்டலமே தரணி குருகுண்டலம்
தரணியது குண்டலமே தரணி புகழ் கண்டலம்
சிவ:சிவா எங்கும் நிறைந்தவரே
ஏகமயமாய் நின்றவர் சிவசிவா

ஏக குருவாக படைத்து அதில் நிறைந்தவர் சிவசிவா
படைத்து நிறைந்தவரே பாலன் வடிவு கொண்டவர்
பங்காளர் பங்காளரே பாருலோகம் அளந்தவர்
அளந்தவர் திருமாலே ஆதி குரு சன்னியாசி
சிவசிவா சன்னியாசி செந்தில் வேல் வடிவுமவர்
செந்தில் வேல் சன்னியாசி செந்தில் வேலவர்
வடிவும் புகழ் படைத்தவரேமாய நிறமானவரவர் சிவசிவா
கங்கைக் கண்ணானவரே காரணம் நிறைந்தவர்
நிறைந்து நிறைந்தவரே ஏகமெல்லாம் நிறைந்தவர்
எங்கும் நிறைந்தவரே ஏகமாய் நின்றவர்
மண்டலம் புகழ் படைத்த மாயன் குரு சன்னியாசி
சிவசிவா தந்தேனன்னாய் தன்னானாய் தந்தேனன்னாய் தன்னானாய்

சிவசிவா த ம அ சி அரி நன்றாகக் குருவேதுணை
சிவசிவா தெந்தி நன்னாய் தென்னானாய் தெந்தினன்னாய் தென்னானாய்

சிவசிவா தானானோம் தானானோம்
தானானோம்தானானோம்
சிவசிவா நானானோம் நானானோம்
நானானோம்நானானோம்
சிவசிவா தந்தேநன்னம் தந்தேநன்னம்
தந்தேநன்னம்தந்தேநன்னம்

மகாலிங்கம்	அரிலிங்கம்
சிவலிங்கம்	லிங்காலிங்கம்
குருலிங்கம்	சொக்கலிங்கம்
திருலிங்கம்	சுகாலிங்கம்
ஏக்காலிங்கம்	ஆதிலிங்கம்
ஏகலிங்கம்	அருள்லிங்கம்
	அடங்காலிங்கம்

என்பது உச்சப்படிப்பு என்னும் தியான மந்திரம் ஆகும். இதனை ஞாயிற்றுக் கிழமை ஏழுமுறை ஓதி சுமார் ஒரு மணி நேரம் தியானம் செய்யும் வழக்கம் உள்ளது.

இத்தியான மந்திரம் மனிதனால் இறைவனை நோக்கிச் சொல்லப் பெறுவதாகும். இறைவனின் பெருமைகளையும், இயல்புகளையும் பேசுவதாகும்.

சிவமே, சிவபெருமானே, எமக்குக் குருவாகிய நாராயணரே, சிவபெருமானே (சிவனும், நாராயணனும் ஒன்றே என்பது இதனால் பெறப்படுகிறது)

சிவமே, சிவபெருமானே, எல்லாவற்றிற்கும் முதன்மையான குருவே, சிவமே, சிவபெருமானே.

அண்டங்கள் முழுவதற்கும் மூலகாரணமான சிவமே, சிவபெருமானே

சிவசிவா என உன்னைப் போற்றுகிறேன். இந்த மண்டலம் (அண்டசராசரங்கள்) முழுவதும் நிறைந்துள்ளவன் நீயே. என்பது முதல் மூன்று அடிகளின் பொருளாகும். நான்காவது அடி

அல்லா இல்லலா இறைசூல் மகிலல்லா
சிவசிவா சிவமண்டலம் என்பதாகும்.

அல்லல் ஆ அல்லா (எதிர்மறை ஆகாரம் புணரும்போது முதற்சொல்லின் அல் விகுதி கெட்டு அல்லா என ஆயிற்று)

இல்லல் ஆ இல்லலா (முன்போலவே அல் கெட்டு இல்லலா என ஆயிற்று)

அல்லல் ஆ அல்லா (அல்லல் இல்லாதவன் துன்பம் இல்லாதவன்)

இல்லல் ஆ இல்லலா

இல்லல் என்ற சொல் கடத்தல், நடத்தல், போகுதல் என்ற பொருள்களைத் தருகிறது. அதாவது இறப்பு, நிகழ்வு, எதிர் என்றமுக்காலம். இறைவன் இத்தகைய காலவரைய்றைகளுக்கு உட்படாதவன். எனவே இல்லல் ஆ இல்லலா என்பது இறைவன் காலவரையறைக்கு உட்படாதவன். எக்காலத்திற்கும் உரியவன்என்ற பொருளைத் தரும். இவ்வகையில்

அல்லா இல்லலா இறைசூல் மகிலல்லா என்பதை ஆராயும்போது

'மகிலல்லா' என்ற நான்காம் சொல் மகிழ்தல் அல்லாத

என்பதின் சுருக்கமான 'மகிழல்லா' என்னும் சொல்லின் மாற்று வடிவமாகும். இலக்கணத்தில் திரிபு எனப்பெறும்.

எனவே,

அல்லா இல்லலா இறைசூல் மகிலல்லா

சிவசிவா சிவமண்டலம்

என்பதின் பொருள்

துன்பம் இல்லாதவனே, இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்என்ற வரையறைக்கு உட்படாமல் எக்காலத்திற்கும் உரியவனே. இறை மூலமே. மகிழ்தல் இல்லாத சிவனே. சிவபெருமானே, மண்டலமெங்கும் நிறைந்தவன் நீயே என்பதாகும்.

அரியே, நாராயண குருவாகிய சிவமே, சிவபெருமானே. இம்மண்டல மெங்கும் நீயே நிறைந்துள்ளாய்.

தலைவனே, குருவாகிய இறைவனே, சிவனே, சிவபெருமானே இம்மண்டலம் முழுவதும் நீயே நிறைந்துள்ளாய்.

பூமியையும், பிற உலகங்களையும், அளந்த பச்சை நிறமுடைய நாராயணனே நீயே சிவன். இம்மண்டலமெங்கும் நிறைந்தவன்நீயே.

அன்னை இலட்சுமிக்கும் குருவான சிவமே, சிவபெருமானே இம்மண்டலம் முழுவதும் உனக்கே உரியது.

சிவந்த கண்களையுடைய மேன்மைமிக்க குருவே, சிவமேசிவபெருமானே இம்மண்டலமெங்கும் நீயே பரவியுள்ளாய்.

ஆண்டியாகிய குருவே, சிவனே, சிவபெருமானே இம்மண்டலம் முழுவதும் ஆனவன் நீயே.

குருவானவர்கள் அனைவருக்கும் குருவே, சிவனே, சிவபெருமானே உன்னை சிவசிவா எனப் போற்றுகிறேன். இம்மண்டலம் முழுவதும் நிறைந்துள்ள உயிர்கள் அனைத்தும் நீயே.

நாராயணனே, தீமைகளை அழிக்கின்ற குருவே, சிவனே சிவபெருமானே இம்மண்டலமெங்கும் நீயே நிறைந்துள்ளாய்.

மேன்மை தங்கிய குருவே, சிவனே, சிவபெருமானே மண்டலம் முழுவதற்கும் குரு நீயே.

குருவே மண்டலம் முழுவதும் நீயே நிறைந்துள்ளாய். எனவே இம்மண்டலம் முழுவதும் மாய குருவாகிய உன்னுடையதே ஆகும்.

குருவே உருண்டையான இவ்வுலகம்உம்முடையதே ஆகும். சிவனே,சிவகுருவே அண்டங்கள் அனைத்தும் உம்முடையதே ஆகும்.

சிவபெருமானே இவ்வுலகச் செல்வங்கள், வானம், பூமி அனைத்தும் நீயே ஆனாய்.

பூமி, வானம் அனைத்தும் ஆன நீயே பூவுலக மக்கள் அனைவராலும் புகழப்படுபவனும் ஆனாய்.

சிவனே, சிவபெருமானே நீயே எங்கும் நிறைந்துள்ளாய். ஒவ்வொன்றிலும், தனித்திருப்பவனும் நீயே.

சிவனே, சிவபெருமானே தனியொரு குருவாக அனைத்தையும் படைத்து ஒவ்வொன்றிலும் நிறைந்திருப்பவனும் நீயே.

அனைத்தும் படைத்து முழுமை பெற்றவனும் நீ. குழந்தை வடிவம் கொண்டவனும் நீ.

அனைவருக்கும் உறவானவனும் நீ. அனைத்து உலகங்களையும் அளந்து அறிந்தவனும் நீ.

உலகெலாம் அளந்த திருமாலே எல்லோருக்கும் முதல் குருவாகிய ஆண்டியும் நீயே.

சிவனே, சிவபெருமானே, முற்றும் துறந்தவனே செந்தூர்வேலவரின் வடிவம் கொண்டவனும் நீயே.

திருச்செந்தூரில் துறவியானவனும், வேல் தாங்கி நின்றவனும் நீயே.

அழகன் என்னும் முருகன் வடிவம் கொண்டு புகழ் உண்டாக்கியவனும் நீயே. உருவமற்ற மாயத்தன்மை உடையவனும் சிவனே சிவபெருமானே நீயே ஆவாய்.

கங்கைக் கரையில் கண் போன்ற கண்ணனாக வந்தவனும் நீ. எல்லா செயல்களுக்கும் காரணமானவனும் நீ.

எங்கும் நிறைந்துள்ள நீயே ஒவ்வொன்றிலும் தனித்தும் நிற்கின்றாய்.

அகிலம் முழுவதும் புகழை நிலை நிறுத்திய மாயத் தன்மையுடையகுரு சன்னியாசி நீயே.

சிவனே, சிவபெருமானே உன்னிடம் சரணடைந்து என்னை உனக்குத் தந்தேன், தந்தேன், தந்தேன்.

சிவனே, சிவபெருமானே தலைவனாகிய நீயும், மனிதனாகிய நானும் ஒன்றுபட்டு அரியென ஒன்றானோம், சிவனென ஒன்றானோம்.

சிவனே, சிவபெருமானே இப்பொழுது என்னைத் தெரிந்துகொண்டு தெளிவு பெற்றேன். என்னைத் தெரிந்து கொண்டு தெளிவு பெற்றேன்.

சிவபெருமானே முதலில் நீ தனித்திருந்தாய். தனித்திருந்தாய். தனித்திருந்தாய்.

சிவனே, சிவபெருமானே, உன்னருளால் நீயும் நானும் ஒன்றானோம், ஒன்றானோம், ஒன்றானோம்.

சிவனே, சிவபெருமானே உன்னோடு சேர்ந்ததால் உன் ஆற்றலும், அருளும் பெற்று, வலிமை உடையவன் நானானேன்; நானானேன்; நானானேன்.

நீ என்னில் வந்ததால் பெருமை பெற்ற நான் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறேன்; மகிழ்ச்சிக் கூத்தாடுகிறேன்; மகிழ்ச்சிக் கூத்தாடுகிறேன்.

(இறைவனுக்கு அடையாளம் இலிங்கம். அடையாளம் என்பதை மறந்து விட்டுப் பார்த்தால் இலிங்கமே இறைவன். எனவே இலிங்கம் என்றால் இறைவன் என்பது பொருள்.)

உச்சிப்படிப்பில் இறைவன் பெருமைகள்.

மகாலிங்கம் – மிகப்பெரிய தெய்வம்.

சிவலிங்கம் – மங்கலமான தெய்வம்

குருலிங்கம் – குருவாகிய தெய்வம்

திருலிங்கம் – பெருமை மிக்க தெய்வம்

ஏக்காலிங்கம் – உலக இயக்கத்திற்கு காரணமான தெய்வம்

ஏகலிங்கம் – தனித்திருக்கும் தெய்வம்

அரிலிங்கம் – நாராயண தெய்வம்

லிங்காலிங்கம் – தெய்வங்களுக்கெல்லாம் தெய்வம்

சொக்கலிங்கம் – அழகு வடிவான தெய்வம்

சுகாலிங்கம் – இன்பமயமான தெய்வம்

ஆதிலிங்கம் – முதன்மையான தெய்வம்

அருள்லிங்கம் – அருள்தரும் தெய்வம்

அடங்காலிங்கம் – எதற்கும், எதிலும் அடங்காத தெய்வம்.

உச்சிப்படிப்பில் ஓம் எனும் பிரணவ மந்திரம் உட்பட பல மந்திரங்கள் அடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

உச்சிப்படிப்பினை ஓதும்போது யோகிகள் கூறும் மூச்சுப் பயிற்சி இயல்பாக ஏற்படுகிறது. தொடர்ந்து உச்சிப் படிப்பினை ஓதி வருபவர்களுக்கு ஆத்துமா, இருமல், இரத்த அழுத்தம் போன்ற பலநோய்கள் தாமாகவே குணப்படுவதாக பலர் கருதுகின்றனர். தங்கள் அனுபவத்தில் நோய்கள் நீங்கியுள்ளதாகவும் பலர் கூறுகிறார்கள்.

உச்சிப்படிப்பில் ஈடுபட்டிருக்கும் போது தன்னை மறந்திருக்கும் இறை அனுபவம் இயல்பாக ஏற்படுகிறது. ஆழ்நிலை தியானத்திற்கு உச்சிப்படிப்பு உகந்த மந்திரமாகும்.

யுகப்படிப்பு, உச்சிப்படிப்பு ஆகிய வழிபாடுகளுக்குப் பின்னர் வழிபாட்டை நடத்திய குரு அனைவருக்கும் திருநாமம் அணிவார். பூமியிலிருந்து எடுக்கப்படும் வெள்ளை நிறமான கட்டியைத் தூள்செய்து நிழல் தாங்கலில் அய்யா வழியினரால் திருநாமம் அணியப்பெறுகிறது.

இத்திருநாம வடிவம் ஆழ்ந்து, அகன்ற அடிப்பகுதியையும் கூரிய முனையையும் உடையதாகும். இறைவனின் ஆன்மீக தத்துவத்தை திருநாமம் வடிவாகக் கொண்டுள்ளது எனக் கூறுகின்றனர்.

ஆழ்ந்து அகன்ற ஞானவடிவான இறைவனைத் திருநாமம் காட்டுகிறது. தீப வடிவான திருநாமம் ஒளி வடிவான திருநாமம் இறைவனைக் காட்டுகிறது. அய்யாவின் அன்பர்கள் நீயும் நானும்ஒன்று என ஒருவருக்கொருவர் உணர்த்திக் கொள்ள ஒன்று என்னும் எண்ணின் வடிவான திருநாமம் உதவுகிறது – என்றெல்லாம் பெரியோர் திருநாமத்திற்கு பலவிதமான விளக்கம் அளிக்கின்றனர்.

தாமரை மலரின் நடுவண் தீப ஒளி நிற்பது போன்ற அமைப்பை அய்யா வழியினர் தங்கள் இலச்சினையாக கொண்டுள்ளனர். யோகிகள் யோக நிலையில் இதனை ஆயிரம் இதழ் தாமரைஎன்பதோடு, தீபத்திற்கும் நல்விளக்கம் அளிப்பர்.

வழிபாட்டு நூலான அருள்நூலில் மற்றொரு வழிபாட்டுப் பாடல் வாழப் படிப்பு என்பதாகும். இது வழிபாட்டிற்குப் பின்னர் தர்மம் வழங்குவதற்கு முன்னர் பாடப் பெறுகிறது.

இறை அன்பர்களையும், அவர்கள் குலத்தினரையும் வாழ்த்திப் பாடுவதாக வாழப் படிப்பு அமைந்துள்ளது.

வாழப் படிப்பினை ஒட்டிப் பாடப் பெறுவது தான நிறைவுவாசகம் என்பதாகும்.

தானம் செய்பவர் குடும்பம் தழைத்து வாழும்படியாக எங்கள் அய்யா வைத்து அரசாளுவார்.

அய்யா வழியில் நிற்கும் அந்தணத் தன்மைகளுடைய துறவிகளுக்கு காவியும், மலர் மாலையும் கொடுத்து வாழ வைப்பது எங்கள் அய்யா.

ஆண்டி, ஆண்டிச்சி வடிவம் கொண்ட இறைவன் தனது அன்பர்களை ஆல்போல் தழைக்க வைப்பார் என்பது தான நிறைவு வாசகத்தின் பொருளாகும்.

அருள்நூலில் இன்னும் சாட்டு நீட்டோலை, அய்யா சீசருக்கச் சொன்ன பத்திரம், சிவகாண்ட அதிகார பத்திரம், சத்தகன்னிமார் பாடல், திங்கள் பதம், பஞ்ச தேவர் உற்பத்தி, நடுத்தீர்வை உலா, கல்யாண வாழ்த்து என்னும் பகுதிகள் உள்ளன.

இவற்றுள் பல அய்யாவின் வழிகாட்டுதலோடு அய்யாவின் மேற்பார்வையினால் சீடர்களால் எழுதப் பெற்றன எனத்தெரிகிறது.

மற்றும் சில வேறு பலரால் பல காலங்களில் எழுதப் பெற்று அருள்நூலில் தொகுக்கப் பெற்றுள்ளது எனவும் அறியலாகிறது.

புனிதகுரு பாலபிரசாபதி அடிகளாருடனான நேர்முக பேட்டியின்போது பஞ்சதேவர் உற்பத்தி, சத்த கன்னிமார் பாடல்கள் பிற்சேர்க்கையே ஆகும் என அவர்கள் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விரண்டு பாடல்களிலும் காப்பு, விருத்தம் தனித்தனியே பாடப்பட்டுள்ளது. பாடல்களின் யாப்பு அமைதி, பாடற் பொருள் ஆகியவற்றை நுணுகி ஆராயும்போது அடிகளாரின் கருத்துசரியானதே என எண்ணத் தோன்றுகிறது. பஞ்ச தேவர்களின்கதை அய்யா வைகுண்டரின் கொள்கைகளுக்கு முரண்பட்டதாக உள்ளது.

அய்யா சீசருக்குச் சொன்ன சிவகாண்ட அதிகாரப் பத்திரம் அய்யாவுடன் வாழ்ந்து அய்யாவின் உரைகளை நேரடியாகக்கேட்ட ஒருவரால் பின்னர் எழுதப்பட்டதாக இருக்கலாம்.

அய்யா வைகுண்டம் சென்ற பின்னர் மற்றொருவர் மேல் அருளாக வந்து அவர் மூலம் கூற எழுதப்பட்ட பகுதிகளும் அருள்நூலில் இருக்கலாம்.

சாட்டு நீட்டோலை

அய்யா வைகுண்டர் மன்னன் சோதனை முடிந்து திரும்பிய பின்னர் விடுபட்ட தவத்தை மீண்டும் தொடர்ந்தார். அவ்வாறு தவம் புரிந்த நாளில் இச்சாட்டு நீட்டோலை எழுதப்பட்டிருக்க வேண்டும். சாட்டு நீட்டோலை அய்யாவின் மனதில் எழுந்த உணர்வுகளைக் காட்டுவதாக உள்ளது.

அய்யா விஞ்சை பெற்ற விவரம் – கடலில் இருந்து வெளி வந்தபின் நடைபெற்ற நிகழ்ச்சிகள் – அதிசயங்கள் – மன்னன் சோதனையால் அய்யா உற்ற துன்பங்கள் ஆகியன சாட்டு நீட்டோலை மூலம்உணர்த்தப் பெறுகின்றன.

சாட்டு நீட்டோலை அய்யாவை, வைகுண்டர் பரம்பொருளான இறைவனை, சிவனே அய்யா என அழைத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

பல சித்தாந்தச் செய்திகள், வைகுண்டரின் ஆற்றல்கள், காலமாற்றத்தினால் இயல்புக்கு மாறாக நடைபெறக் கூடிய நிகழ்ச்சிகள் ஆகியனவும் கூறப் பெற்றுள்ளன. மக்கள் அடைந்ததுன்பங்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எதிர் காலத்தில் நடக்கக் கூடிய பல நிகழ்ச்சிகளையும் அய்யா சுட்டியுள்ளார். காட்டாக இன்று தோன்றியுள்ள தொலைக்காட்சி பற்றி அய்யா

"ஊசிமுனையதிலே கடலும் மலையுடனே ஊரும்
பதியுங் கண்டேன் சிவனே அய்யா" – எனக் கூறியுள்ளார்.

இன்று தோன்றியுள்ள ஆழ்துளைக் கிணறுகள் பற்றி

"முள்ளு முனையதிலே குளம் வெட்டி வயலும் பாய்ச்சி
முன்மடை பாயக் கண்டேன் சிவனே அய்யா

எனச் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளது. இன்னும் தீயோர் அழிவும் நல்லோர் வாழ்வும் கூறப்பெற்றுள்ளது.

அய்யா சீசருக்குச் சொன்ன பத்திரம்

அய்யா வைகுண்டரின் மனதிற்கு இசையாத வகையில் அன்பர்கள் சிலர் நடந்திருக்கக் கூடும். பொது நிதி தவறாக கையாளப்பட்டிருக்கக் கூடும். இதை அறிந்து அய்யா மனம் உழன்று கோபத்துடன் இட்ட ஆணையாக இப்பத்திரம் தோன்றுகிறது.

இது அய்யா வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்டதாகவும் இருக்கலாம். இப்பத்திரத்தின் சில வரிகளை நுணுகிஆராயும்போது அய்யாவின் பூவுலக வாழ்விற்குப் பின்னர் அவரதுமனதிற்கு உகந்த ஒருவர் மீது அருளாக வந்து விடுத்த ஆணையோஎன ஐயுறத் தோன்றுகிறது.

இப்பத்திரம் அய்யாவின் அன்பர்களுக்கும், அய்யாவின் நிழல்தாங்கல்களை நிர்வகித்த, நிர்வகிக்கின்ற நிர்வாகிகளுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கை, அறிவுரை என்பதில் ஐயம் இல்லை.

அய்யாவின் பெயரால் ஆடிப்பாடுவதை அய்யா விரும்பவில்லை எனத் தெரிகிறது. இன்னும் கடலில் இருந்து துவரயம் பதி தோன்றும் எனவும், தர்மயுக நாட்களில் நடைபெறக் கூடியன பற்றியும்,மீண்டும் அய்யாவின் வருகை பற்றியும் இப்பகுதி கூறுகிறது.

தர்மம் செய்யும் படியாகவும், தவம் செய்யும்படியாகவும் இப்பகுதி அன்பர்களைத் தூண்டுகிறது. அறிவுரைகளைக் கேளாதவர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களைக் இப்பகுதி கூறுகிறது. திருவிழா நடத்த வேண்டிய விவரங்களும் இப்பகுதியில் கூறப்பெற்றுள்ளது. இப்பத்திரங்களின் நகல்களை எந்தெந்தப் பகுதிகளுக்கு கொடுத்தனுப்ப வேண்டும் என்பதும், அக்காலத்தில் இருந்த சில பதிகளின் ஊர்ப் பெயர்களும் கூறப்பெற்றுள்ளன.

அடுத்துள்ள அய்யா சீசருக்குச் சொன்ன சிவகாண்ட அதிகாரப் பத்திரம் என்பது அய்யா சீசரிடம் நேரடியாக வாய்மொழியாக உரைத்தது எனத் தெரிகிறது.

இதனை எழுதி எல்லா மக்களுக்கும் படித்துக் காட்டும்படியாக அறிவுறுத்தப் பெற்றுள்ளது.

தர்மயுகம் தோன்றுவதற்குரிய காலம். அதற்கு முன் ஏற்படக்கூடிய அடையாளங்கள் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன.

சாதிகளை அழிப்பதற்கும் வழி கூறப் பெற்றுள்ளது. தலைமன்னார், கும்பகோணம், கருவூர், கழுகுமலை என்ற ஊர்கள் இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதில் பொதுவாக மக்களுக்குரிய அறிவுரைகளும், இறைவனை உணர வேண்டிய அவசியமும் உணர்த்தப் பெற்றுள்ளன. மக்களின் குற்றங்களும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இங்கும் பல எதிர்கால நிகழ்வுகள் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளன.

திங்கள் பதம்

இப்பகுதியிலும் மக்களுக்கான அறிவுரைகள் கூறப்பெற்றுள்ளன. முன்னர் நடந்த நிகழ்ச்சிகள், நடக்க விருப்பன மறைபொருளாக கூறப்பெறுகின்றன. இறுதிப் பகுதியில் சான்றோர் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இங்கும் துவரம்பதி என்ற தலம் தோன்றும் என்னும் செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது.

'பின்குடுமி முடிந்தவர்கள் பூமியில் இருக்கமாட்டார்கள்.
'சீறிலங்கை மாறியது செந்நெல் விளையுதடா
தீமெழுக நாளாச்சு சொல்லித் தெரியும்படி

என்ற வரிகள் நம்மைக் கவருகின்றன.

நடுத் தீர்வை உலா

அய்யா வைகுண்டர் வந்து நியாயத் தீர்ப்பு வழங்குவது பற்றிய செய்திகளை கூறுவது இப்பகுதி. நடுத் தீர்ப்புக்கு முன்னர் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளாக இவ்வுலகில் இன்று நடைபெறும் பாவச்செயல்கள் பட்டியலிட்டுக் காட்டப்பெறுகின்றன. உலகில் ஏற்படக்கூடிய அழிவுகள், இயற்கையின் சீற்றம் ஆகியன விளக்கப்பெற்றுள்ளன.

கல்யாண வாழ்த்து

அருள் நூலின் கடைசிப் பகுதியில் திருமணத்தின்போது பாடக்கூடிய வாழ்த்துப் பாடல் ஒன்று அமைந்துள்ளது.

அப்பாடல்

"பூலோகம் உள்ளளவும் பொய்யருகி மெய் வாழ
நல்லோரும் வாழ நவில்வோரும் தான் வாழ
எல்லோரும் வாழயிருந்து நீடுழி வாழ்க!"

என முடிவுறும் வாழ்த்துப் பாடலை அய்யா வழித் திருமணங்களில் பாடி வாழ்த்துகிறார்கள்.

மனிதனை வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது வைகுண்டர் நெறியாகும். இந்நெறியில் ஆடம்பரமோ, கொடுந் தவமுறைகளோ இல்லை. எல்லோரும் எளிமையான முறையில் இறைவன் அருள் பெற வைகுண்டர் நெறி வழிகாட்டுகிறது.

இறைவன் அருளைப் பெற மன மயக்கங்கள் நீங்க வேண்டும். உண்மை ஒளி வீச வேண்டும். பணிவும், தன்னடக்கமும் உள்ளத்தில் நிறைந்து அறச் செயல்களில் நாட்டம் கொள்ள வேண்டும்.

தான் பெரிதென்று எண்ணாது உயரிய கடவுளே பெரிது என்ற எண்ணங் கொண்டு எல்லோரையும் சமமாக எண்ணி அன்புகாட்ட வேண்டும் என்பது வைகுண்டர் நெறியாகும்.

உயிர்க் கொலையை வன்மையாக கண்டிக்கும் வைகுண்டர் நெறி சமயங்களின் பெயரால் சுரண்டுதலையும், ஒருவரை ஒருவர் அடக்கி ஆள்வதையும் தவிர்த்துள்ளது. வைகுண்டர் நெறியில் மூட நம்பிக்கைகளுக்கும் இடம் இல்லை.

சமத்துவம் நிறைந்த அன்புடைய, அறம் புரியும் சமுதாயத்தை உருவாக்குவதே வைகுண்டர் நெறியாகும்.

இதற்கெனவே வைகுண்டர் வாழ்ந்தார்.. அன்பர் இதயங்களி லெல்லாம் வாழ்கிறார்.

இச்செய்திகளே அகிலத் திரட்டிலும் அருள் நூலிலும் பரவிக்கிடக்கின்றன.

முடிவுரை

மக்களின் வாழ்க்கை நெறிகளைச் செம்மைபடுத்தி அவர்களை உயர்ந்த வாழ்க்கைக்கு இட்டுச் செல்வன சமயங்கள். இவ்வகையில் மாந்தர்களின் உயர்ந்த வாழ்வுக்கு நல்வழிகாட்டுவது அகிலத்திரட்டாகும்.

அகிலத் திரட்டில் யுகங்களின் வரலாறு முதலில் கூறப்படுகிறது. யுகங்களின் வரலாற்றில் கூறப்படும் அசுரர்களின் வரலாற்றில் யுகங்கள் தோறும் மானிடர்களிடம் ஏற்பட்ட ஆன்மீக வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் காட்டப் பெறுகின்றது. இறையுணர்வு கொண்டு, தீய குணங்களாகிய ஆசை, கோபம், ஈயாமை,மயக்கம், செருக்கு, பொறாமை ஆகியவற்றை விட்டு வாழ்ந்தால் உயர்ந்த இன்ப வாழ்வினை பெற்று நீண்ட காலம் வாழலாம் என்பதை ஆறு யுகங்களின் வரலாற்றுப் பகுதி கூறுகிறது. தீமைகளின் உருவங்களான அசுரர்களின் அழிவு இதற்கு எடுத்துக்காட்டுகளாக அமைகிறது.

ஏழாம் யுகத்தில் கலியின் பிறப்பு நிகழ்கிறது. கலியின் பிறப்பால் உலகில் மானிடர்களிடம் மாசு நிறைகிறது. மாசடைந்த மனம் உடையவர்கள் கலியன் எனவும், நீசன் எனவும் அழைக்கப்படுகிறார்கள். தீய மனம் கொண்டவர்களால் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு, ஒருவரை ஒருவர் ஏமாற்றுதல், ஒழுக்கமின்மை, இதை ஒட்டிய கொடுமைகள் மிகுந்தன. மெலியோரை வலியோர்வாட்டி வதைத்துத் தாங்கள் இன்பம் கண்டனர். வலியோரால் இன்னலுற்று ஏங்கிய ஏழை மக்களுக்காக இறைவனாகிய திருமாலே ஏங்குகிறார். மெலியோரின் துன்பம் போக்க ஒரு வழி தேடமுயலுகிறார்.

அந்த முயற்சியில் இறைவனே அலைந்து திரிந்து துன்பப்படுவதைக் கலியன் பிறப்பு பகுதியில் காண்கிறோம். திருமால் உண்ணாமல், உறங்காமல், மகிழ்ச்சியில்லாமல் கலியை அழிப்பதற்கு வழி தேடி அலைகிறார். தவமும் புரிகிறார். இறுதியில் தானே பூவுலகில் பிறந்து கலியை அழிப்பது என முடிவு செய்கிறார். கலியை அழித்து தர்மயுகத்தை மக்களின் நல்வாழ்வுக்காக தோற்றுவிக்கவேண்டும் என்பது திருமாலின் குறிக்கோள்.

திருமால் மானிட வடிவம் தாங்கி வைகுண்டராக பூவுலகில் வருகிறார். வைகுண்டர் வாழ்ந்து காட்டிய உயர் வாழ்வாலும், நிகழ்த்திய அற்புதங்களாலும் மக்களுக்கு உரைத்த அறங்களாலும், அவர் இறைத் தோன்றலே என்பது புலனாகிறது.

வைகுண்டர், தான் வாழும் சமுதாயத்தை உற்று நோக்குகிறார். தான் சார்ந்த ஏழைச் சமுதாய மக்கள் படும் துன்பம் கண்டு உள்ளம் குமுறுகிறார்.

அந்த உள்ளக் குமுறலில்,

"பூமக்கள் நீதமுடன் போட்ட தோள்சீ லைதன்னை
போடாதே என்றடித்தானே சிவனே அய்யா
என் மக்கள் சான்றோர்கள் இடுப்பிலெடுத்த குடம்
ஏண்டி இறக்கென்றானே சிவனே அய்யா"

என இரங்கிப் பாடுகிறார்.

"............
ஆனாலும் இன்னும் கொஞ்சம் சான்றோர் படும்துயரம்
ஆறுமோ தேறுமோ சிவனே அய்யா"

என்றும்,

"அண்ணார்க்க எந்த பாலை இடிந்தகரை காவல்காரன்
அவிழ்த்துப் பார்க் கலாச்சே சிவனே அய்யா
கனமுடன் முத்தமிடக் கொடுத்த கன்னத்தை நீசன்
கவ்வியிழுத்தானையோ சிவனே அய்யா"

என்றும் மனம் ஏங்கிக் கலங்குகின்றார்.

இவ்வாறு மக்கள் துன்பம் கண்டு துயருற்ற வைகுண்டர் மக்களுக்காக ஊண், உறக்கம் மறந்து தவம் செய்தார். நீசர்களின் இழி மொழிகளைக் கேட்டுக் கொண்டார். கொடூரர்களின் அடியையும், உதைகளையும் வாங்கிக் கொண்டார். மூத்திரப் பிறையில் சிறையிருந்தார். சோதனைகளுக்கு ஆளானார். நஞ்சுண்டார். உயிரையும் கொடுக்க சித்தமானார். எத்தனை துயர் உற்ற போதிலும் தன் ஆற்றலைக் காட்டாது அமைதியாய் பொறுத்திருந்தார்.

ஏழைச் சமுதாய மக்களின் இன்னல் கண்டு அவர் கொண்ட உள்ளக்குமுறலும், அவர்கள் துன்பம் துடைத்து அவர்களை மேம்படுத்த அவர் கொண்ட முயற்சி வேகமும், ஏழை மக்களுக்காக அவர்ஏற்ற துன்பங்களும், உயர் நிலையடைய விழையும் மக்களுக்கு ஏற்ற மகாகுருவாக அவரை நிலை நிறுத்தியது.

இறைவன் ஒருவனே, எல்லா உலகங்களும் பூவுலகுக்குள் அடக்கம். மக்கள் அனைவரும் சமம். கலியிடமிருந்து விடுபட பாவத்தை நீக்குங்கள். உயர்வு பெற வேண்டுமானால் ஒழுக்கமுடன் வாழுங்கள். இயன்ற வகையில் எல்லாம் தருமம் செய்யுங்கள் என்பனவும் இவை போன்ற பிறவும் அய்யா வைகுண்டரின் குறிக்கோளான தீமையே இல்லாத தர்மயுகத்திற்கு இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

எல்லா மதநூல்களும் முக்தியையும், மோட்சத்தையும் காட்ட அகிலத்திரட்டு முக்தி, மோட்சம் பற்றி பேசாது இல்லறத்துடன் கூடிய இன்பம் நிறைந்த தர்மயுகத்திற்கு மக்களை இட்டுச் செல்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது நடைமுறைக்குச் சாத்தியமான மிகச் சிறந்த போற்றத்தக்க கருத்தாகும்.

அதீத கற்பனைச் செயல்களைக் கூறாமல் நடைமுறையில் சாத்திமானவற்றையே உயர்வுக்கு வழியாக வைகுண்டர் காட்டியுள்ளது இன்புறத்தக்கது.

அகிலத்திரட்டு பற்றிய எனது ஆய்வு, எனது சிற்றறிவுக்குட்பட்டு எளிமையாக அமைந்தது. விரிவு அஞ்சி இந்நூலின் பல்வேறு பகுதிகள் சுருக்கமாக தரப்பெற்றுள்ளன. பல்வேறு அறக்கருத்துக்கள் பேசப் பெறவில்லை.

இந்நூலில் ஏராளமான உயரிய சித்தாந்தக் கருத்துக்களும், தவயோகங்கள் பற்றிய செய்திகளும் கூறப்பெற்றுள்ளன. பிழைஅஞ்சி இப்பகுதிகளை இங்கு ஆராயவில்லை. மேலும் இறைத் தோன்றலாம் வைகுண்டரின் பெருமைகளைச் சித்தாந்த,யோகநிலை கருத்துக்களின் மூலம்தான் நிறுவ முடியும் என்றகட்டாயமும் இல்லை.

இன்னும் விரிவான ஆய்வு ஒன்றினாலேயே அகிலத்திரட்டின் அனைத்து கருத்துக்களையும் உட்படுத்த இயலும். சித்த, யோகநூல் வல்லார் அகிலத் திரட்டு பற்றி ஆய்வு மேற்கொண்டு அத்துறை சார்ந்த அகிலத்திரட்டில் உள்ள செய்திகளை வெளிக்கொணர்வார்களாயின் உலகோர்க்கு நலமாக அமையும் என்பது என் விழைவாகும்.

அய்யா வைகுண்டர் எதிர்காலத்தில் நிகழக்கூடிய பல நிகழ்ச்சிகளை அகிலத்திரட்டு, அருள்நூல் வாயிலாக சுட்டியுள்ளார். அவை அனைத்தையும் கூறப்புகின் விரியும். ஒரு சிலவற்றை முன் அத்தியாயத்தில் கூறினோம். இன்னும் சில:

மக்களாட்சியையே வைகுண்டர் தம் ஆட்சியாக சுட்டுகிறார். மக்களாட்சியாகிய இறையாட்சி வரப்போவதைப் பற்றி 18ம் நூற்றாண்டிலேயே வைகுண்டர்

"சிங்கமுகம் தெரிந்தெடுத்துச் சேர்த்துப்
படையறுக்க வருகிறார் எங்கள் அய்யா"

எனக் கூறுகிறார். நமது நாட்டின் இலச்சினையாக தற்பொழுது சிங்க முகங்களே அமைந்துள்ளது என்பதை அறியும் போது வைகுண்டரின் இறையாற்றலை உணர்கிறோம். மேலும் முடியாட்சி ஒழிந்து மக்களாட்சி வரும் என்பதை

"நாட்டை நொடித்தக லிநீசன் முடியை
இறக்கி நாராயணர்பதியாள்வார் எங்கள் அய்யா"

எனக் கூறுகிறார்.

அய்யா வைகுண்டர் தான் மீண்டும் வரும் காலத்திற்கு அடையாளமாக நிகழக்கூடிய சம்பவங்களாக அநேக செய்திகளைக் கூறுகிறார். அவையெல்லாம் விரிவான ஆய்வுக்கு உரியதாகும்.

தென்பால் கடலிலிருந்து துவரயம்பதி என்னும் தலம் துலங்கும் எனப்பல இடங்களில் கூறுகிறார்.

இவ்வாறான ஏராளமான பகுதிகள் ஆய்வுக்கு உரியனவாக அகிலத்திரட்டில் காத்திருக்கின்றன.

ஆன்மீகக் கருத்துக்களையும், அறக்கருத்துக்களையும் கூறி, இனிய புனிதமான வாழ்வுக்கு எளிமையான வழி கூறும் ஒரு நல்ல நூல் அகிலத் திரட்டு. பழைய வரலாறுகளைப் படம் போட்டுக்காட்டும் வரலாற்று நூல் அகிலத் திரட்டு. சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறும் நூல் அகிலத்திரட்டு. எனினும் இந்நூல் நிறைவு தரும் அளவுக்கு நம் நாட்டில் பரவாமல் இருப்பது வருந்தத்தக்க செய்தியே ஆகும்.

முன்னோர்கள் அகிலத் திரட்டைப் பயன்படுத்துவதற்குப் பல கட்டுப்பாடுகளை விதித்தமையே நூல் பரவாமைக்கு ஒரு காரணமாக இருக்கலாம். மக்களுக்குப் புரியும்படியான தெளிவுரையுடன் கூடிய நூல்கள் வெளிவராமையும் மற்றொரு காரணமாக இருக்கலாம்.


அன்பர்களும், அறிஞர் பெருமக்களும் அகிலத்திரட்டு கருத்துகள் பரவ ஆற்றும் நற்பணி நல்லதொரு இறை பணியாக அமைந்து அன்னாருக்கு உயர்வும், பெருமையும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.


இன்றைய சமுதாய சிக்கல்களுக்கு வைகுண்டர் காட்டிய வழியில் நடத்தல் நல்லதொரு மருந்தாகும். அதுவே தர்மயுகம் மலர நல்ல வழியாகும் என்பதிலும் ஐயமில்லை.

அய்யா உண்டு.



அம்பலப்பதி





முட்டப்பதி



ஏழுநூறு குடும்பத்தார் துவையல் தவசு ஆரம்பித்து ஆறு மாதம் நிகழ்த்திய திருவிடம் இதுதான், வாகைபதி



பூப்பதி



சாமிதோப்பு பதி - பள்ளியறை



தவத்திரு
பாலபிரஜாபதி அடிகளார்
அன்பு வனம், சாமிதோப்பு–குமரிகுறுநிலம்